# தமிழரசு

மே 2010

ரூ.10/-

செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு


















# கலைஞர் அரசின் நான்காண்டுச் சாதனை மலர்

தொகுதி - ஒன்று


உடல்ஊனமுற்றோர் சங்கங்களின்










AMBI





# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041
சித்திரை - வைகாசி
மே 2010
மலர் : 41 இதழ் : 11

விலை ரூ.10/-

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :
திரு. **கா.பாஸ்கரன்**, எம்.ஏ.,பி.எல்.,
இயக்குநர் (பொ) மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்
துரை. தாமரைச்செல்வம்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்
க. குமாரவேலு
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ச. ஜெயலலிதா
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்
த.கலைச்செல்வன்
வ.பாலசுப்பிரமணியன்

நிருபர்கள்
கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ. ஜெயசிம்ஹன்

கணினி வடிவமைப்பு
அ. மதன்,
உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
ஆர். பாலாஜி
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை -
தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in

**தொகுதி - ஒன்று**



**பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை யுடைய செயல்.**

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரிய வராவார்கள்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து

1. மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
பொதுத்துறை, உள்துறை, பொதுப்பணி ------------ 3-21

2. மாண்புமிகு நிதி அமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள்
நிதி, திட்டம், தமிழ்வளர்ச்சி ------------ 22-26

3. மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிருவாகம்
மற்றும் குடிநீர் வழங்கல், தொழில்கள் ------------ 27-54

4. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு. **ஆர்க்காடு நா. வீராசாமி** அவர்கள்
மின்சாரம், பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தம் ------------ 55-66

5. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **கோ.சி. மணி** அவர்கள்
கூட்டுறவு மற்றும் புள்ளியியல் ------------ 67-68

6. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு. **வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்** அவர்கள்
வேளாண்மை, தோட்டக்கலை,
வேளாண்மைப் பொறியியல் ------------ 69-75

7. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள்
சட்டம் ------------ 76-78

8. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
முனைவர் **க.பொன்முடி** அவர்கள்
உயர்கல்வி மற்றும் கனிமவளம் ------------ 79-80

9. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு** அவர்கள்
போக்குவரத்து ------------ 81

10. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்** அவர்கள்
மக்கள் நல்வாழ்வு ------------ 82 - 87

11. மாண்புமிகு ஊரகத்தொழில் (ம)
கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. **பொங்கலூர் நா.பழனிசாமி** அவர்கள்
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மற்றும்
கால்நடைப் பராமரிப்பு ------------ 88-92

12. மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு. **இ. பெரியசாமி** அவர்கள்
வருவாய் ------------ 93-95

# நுழைவாயில்



"வாழப்பிறந்தோம்,அதற்கேற்ப இந்த வையத்தை
மாற்றி அமைப்போம் – என்ற நோக்கம் வேண்டும்"

– என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அந்த மாமனிதரின் இதயத்தை இரவலாகப் பெற்ற அவரது அன்புத் தம்பி, செம்மொழிச் செம்மல், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர்** அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த நான்கு ஆண்டுகளில் அடுக்கடுக்கான மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலம் தமிழகத்தையே மாற்றி அமைத்துவிட்டார்கள்.

இதுவரை இந்தியா கண்டிராத எண்ணற்றத் திட்டங்களைத் தமிழகம் கண்டுவருகிறது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோதும் **அதன் சுமை தமிழ்நாட்டு மக்களைப் பாதித்துவிடக்கூடாது** என்ற உயரிய **எண்ணத்தின் அடிப்படையில், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ** அரிசி, மலிவு விலையில் மளிகைப் பொருட்கள் மற்றும் முக்கிய உணவுப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கி தனித்தன்மை வாய்ந்த மாநில அரசாகத் தமிழக அரசு திகழ்ந்து வருகிறது.

உணவுக்கு உத்தரவாதம், அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய ஆக்கப்பூர்வப் பணிகள், மாநிலம் முழுக்க வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றம், உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், அவசர மருத்துவ சிகிச்சைக்கு 108 ஆம்புலன்ஸ், இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம், மகளிர் நலன் காக்கும் திட்டங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு சமூக அங்கீகாரம் வழங்கி தனித் துறை வாயிலாக தன்னிகரற்ற திட்டங்கள், செம்மொழித்தமிழுக்கு உலகம் வியக்க மாநாடு, சமச்சீர் கல்வித் திட்டம் அமலாக்கம் என எல்லாத் துறைகளிலும் எழிலார்ந்த பணிகளை தமிழக அரசு ஆற்றிவருகிறது.

மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இடைவிடாது மக்கள் பணியாற்றும் தமிழக அரசின் இந்த வரலாற்றுச் சாதனைகளை சரித்திர ஏடுகளில் பதிவு செய்யும் முயற்சியே இந்தச் சாதனை மலர்.

தமிழக அரசு படைத்த சாதனைகளைத்
தமிழரசு மலரில் படியுங்கள்.
தரணியெங்கும் பரப்புங்கள்.

**பரிதி இளம்வழுதி**
**செய்தித் துறை அமைச்சர்**



# மாற்றுத் திறனாளிகளுக்கெனத் தனித்துறை உருவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

* முந்தைய அரசு கொணர்ந்து நடைமுறைப்படுத்தி 1,70,000 அரசு ஊழியர்களைப் பணி நீக்கம் செய்திடப் பயன்படுத்தப்பட்ட எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் ரத்து செய்யப்பட்டது.

* கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

* சமூக சீர்திருத்தத் துறை மீண்டும் தனித்துறையாக உருவாக்கப்பட்டது.

* 20% இட ஒதுக்கீடு கோரி, 1987ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினர் நடத்திய போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 இலட்சமும், குடும்ப ஒய்வூதியமாக மாதம் ரூ.1,500ம் வழங்க 1998ஆம் ஆண்டில் அரசு வழங்கிய குடும்ப ஒய்வூதியத்தை, நவம்பர் 2006 முதல் மாதம் ரூ.1,500லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தியது. 21 குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

* பசும்பொன் தேவர் திருமகனார் நூற்றாண்டை முன்னிட்டு, அவரது பிறந்த நாளான 30.10.2007க்கு முன்பு, தென் மாவட்டங்களில் வாழுகின்ற சில சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட குழு மோதல்களைத் (Group clashes) தொடர்ந்து பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் 57 வழக்குகள் அரசால் திரும்பப்பெறப்பட்டு, மேலும், 24 வழக்குகளைத் திரும்பப்பெற நடுவண் அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

* சாதி மோதல்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 11 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. மேலும், ஒரு வழக்கினைத் திரும்பப் பெற நடுவண் அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

* அரசியல் காரணங்களுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள 85 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

* மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள மத நல்லிணக்கம் தொடர்பான வழிகாட்டிக் குறிப்புகளில் உள்ளதற்கிணங்க, மாநிலத்தில் மத நிகழ்வுகளை ஆய்வு செய்யும் பொருட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களது தலைமையின் கீழ் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

* மாதம் ரூ.3,000 என்ற விடுதலைப் போராட்ட வீரர் ஒய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.4,000ஆகவும், ரூ.1,500ஆக இருந்த குடும்ப ஒய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.2,000ஆகவும் 1.5.2007 முதல் உயர்த்தியது. 1,024 விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் 2,251 தியாகிகளின் வாரிசுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.

* மாதம் ரூ.4,000ஆக வழங்கப்பட்டு வந்த விடுதலைப் போராட்ட வீரர் ஒய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.5,000 ஆகவும், ரூ.2,000 ஆக இருந்த குடும்ப ஒய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.2,500ஆகவும் 1.9.2009 முதல் உயர்த்தி இவ்வரசால் வழங்கப்பட்டு வருகின்றது. 721 விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் 2,027 தியாகிகளின் வாரிசுதாரர்கள் பயன்பெறுகிறார்கள்.

* 2008–2009 நிதியாண்டில் வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியர், முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி ஆகியோரின் வழித் தோன்றல்கள் பெற்று வந்த சிறப்பு ஒய்வூதியம் ரூ.500இலிருந்து ரூ.1,000ஆக 1.12.2008 முதல் உயர்த்தப்பட்டது. இதன் மூலம், வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் 7 பேர், மருதுபாண்டியர் வழித்தோன்றல்கள் 132 பேர், முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் 80 பேர் பயனடைந்துள்ளனர்.

* வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித் தோன்றல்களில் ஒருவருக்கு சிறப்பு ஒய்வூதியம் ரூ.500இலிருந்து ரூ.1,000ஆக உயர்த்தப்பட்டு 6.4.2010 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

* நடுவண் அரசினை வற்புறுத்தி, 13.5.2006 முதல் குறிஞ்சி மலர் சிறப்பு அஞ்சல் தலை, வேலூர் ஊரீஸ் கல்லூரி நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல்தலை மற்றும் வேலூர் சிப்பாய் கலகம் 1806–2000ஆம் ஆண்டு நினைவு அஞ்சல்தலை, ம.பொ.சி நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல்தலை, சென்னைப் பல்கலைக்கழகம் – 150ஆவது ஆண்டு விழா நினைவு அஞ்சல்தலை, கோவை தொழில் அதிபர் ஜி.வரதராஜ் அவர்கள் நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல்தலை, தமிழ் மொழியின் புகழை முதன்முதலில் அச்சு மூலம் பரப்பிய பார்த்தலோமியோ சீகன் பால்க் அவர்கள் நினைவு அஞ்சல்தலை, தமிழ்நாடு கிரிக்கெட் வாரியத்தின் 75ஆம் ஆண்டு விழா நினைவு அஞ்சல்தலை, டாக்டர் அழகப்பச் செட்டியார் நூற்றாண்டு விழா நினைவு அஞ்சல்தலை, பரிதிமாற் கலைஞர் நினைவு அஞ்சல்தலை, இராமலிங்க அடிகளார் நினைவு அஞ்சல்தலை, மறைமலைஅடிகளார் நினைவு அஞ்சல்தலை, சர். பிட்டி. தியாகராயர் நினைவு அஞ்சல் தலை, டாக்டர் சி.நடேசன் நினைவு அஞ்சல்தலை, டாக்டர் டி.எம்.நாயர் நினைவு அஞ்சல்தலை எம்.பக்தவச்சலம் நினைவு அஞ்சல்தலை, சதாவதானி செய்குதம்பிப் பாவலர்

நினைவு அஞ்சல்தலை, திரு. ஏ.டி.பன்னீர்செல்வம் நினைவு அஞ்சல்தலை, உடுமலை நாராயணகவி நினைவு அஞ்சல்தலை, ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி நினைவு அஞ்சல்தலை ஆகியன வெளியிடப்பட்டுள்ளன.

* வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் மரணமடைந்ததற்காக, 2008ஆம் ஆண்டிற்கான அண்ணா பதக்கம் பெற்ற மறைந்த திரு. பண்டாரம் அவர்களின் மனைவி திருமதி ப. இந்திரா அவர்கள் பதக்கம் பெற்ற நாளான 26.1.2008ஆம் நாளன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விடுத்த கோரிக்கையின் பேரில் அவருக்கு திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பணியிடம் கருணை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

* வருகின்ற ஜூன் திங்களில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை நினைவு கூறும் வகையில், நினைவுத் தபால்தலை வெளியிட, நடுவண் அரசினை வலியுறுத்தி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

* தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டியதன் ஆயிரமாவது ஆண்டினை நினைவு கூறும் வகையில் நினைவு நாணயம் மற்றும் நினைவு தபால்தலை ஆகியவற்றினை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலங்கைத் தமிழர் நலன்**

* தமிழ்நாடு அரசு ஏற்கெனவே இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கி வந்த பணக்கொடையினை 01.08.2006 முதல் இரட்டிப்பாக்கி, ஒரே தவணையில் மாதம்தோறும் முன் பணமாக வழங்கி வருகிறது.

* இலங்கைத் தமிழர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் போது இதுவரை கொடுத்து வந்த உணவுத் தொகை நாள் ஒன்றுக்கு பெரியவர்களாயின் ரூ.35லிருந்து ரூ.45ஆகவும், சிறியவர்களாயின் ரூ.20இலிருந்து 30 ஆகவும் உயர்த்தி மூன்று வேளையும் சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

* ஒரு குடும்பத்திற்கு இரண்டாண்டிற்கு ஒரு முறை ரூ.150க்கு வழங்கப்பட்டு வந்த அலுமினிய சமையல் பாத்திரங்களின் மதிப்பை ரூ.250ஆக உயர்த்தி இலவசமாக வழங்கப்படுகின்றன.

* முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு நிதி உதவியைப் பெரியவர்களுக்கு ரூ.500 சிறியவர்களாயின் ரூ.300 என்று இருந்ததை ரூ.2,500ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* இலங்கைத் தமிழர்கள் முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், அவர்களது வாழ்க்கைத் தரம் உயர வழிவகுக்கவும் மேலும் சில நல உதவித் திட்டங்களை இலங்கைத் தமிழர்களுக்கு விரிவுபடுத்துவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.

* முதற்கட்டமாக அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் மேலும் சில நலவாழ்வுத் திட்டங்களை முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவுபடுத்தவும் அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடிப்படை வசதிகளை உடனடியாக மேற்கொள்ள ரூ.37.33 கோடி அனுமதி அளித்து, இதில் ரூ.29.51 கோடி மேற்படி பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

* உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம், விளையாட்டு உபகரணங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் போன்ற பொது நலத்திட்டங்களும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

* நான்கு கப்பல்களில் ரூ.40.35 கோடி மதிப்பீட்டில் நிவாரணப் பொருட்களை, பாதிக்கப்பட்ட, இடம் பெயர்ந்த இலங்கை வாழ் தமிழர்களுக்கு உலகச் செஞ்சிலுவைச் சங்கம் வழியாக வழங்க, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு தமிழக அரசு அனுப்பிவைத்தது.

* மேலை நாடுகளில் வாழும் தமிழர்களால் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் அடங்கிய "கேப்டன் அலி" என்கின்ற வணங்காமண் கப்பல், இலங்கை அரசினால் திருப்பி அனுப்பப்பட்டபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மேற்கொண்ட பெருமுயற்சியினால், நிவாரணப் பொருட்களை இலங்கைக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப் பட்டது. இதற்கான சுங்கம், கப்பல் கட்டணம், சுணக்கக் கட்டணம் மற்றும் கொழும்பு துறை முகத்தில் கட்டவேண்டிய இதர செலவினங் களுக்காக செலுத்தப்படவேண்டிய பகுதித் தொகையை ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ்நாடு அரசு புதுதில்லியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ரூ.19.81 இலட்சம் செலுத்தியது.

**முன்னாள் படை வீரர் நலம்**

* பி.பார்ம்., பி.எஸ்சி.(நர்சிங்), மற்றும் பி.பி.பி.டி. ஆகிய பட்டப்படிப்புகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ஓர் இடம் வீதம் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* 8 மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களின் பயன்பாட்டிற்கென மஹிந்திரா வாகனங்கள் வழங்கிட, 2006–2007ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.33.64 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* மாவட்ட அலுவலகங்களிலுள்ள கணினிகளை இயக்கத்துடன் இணைத்திட 2006–2007ஆம்

ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒரு சர்வர் வாங்குவதற்கு ரூ.2.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* மாவட்ட அலுவலகங்களிலுள்ள கணினிகளை இயக்ககத்துடன் இணைத்திட 2007–2008ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒரு சர்வர் வாங்குவதற்கென ரூ.2.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* 2007–2008ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒளிநகல் இயந்திரம் ஒன்று வாங்குவதற்கென ரூ.59,000 ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

* தூத்துக்குடியில் மாவட்ட முன்னாள் படைவீரர் மையக் கட்டடம் கட்டிட நிருவாக அனுமதி வழங்கப்பட்டது.

* கோயம்புத்தூர் மாவட்ட முன்னாள் படைவீரர் மையக் கட்டட வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் பலஅடுக்கு அலுவலகக் கட்டடம் கட்டிட, ரூ.197.60 இலட்சம் செலவிற்கான நிருவாக அனுமதி அளிக்கப்பட்டது.

* முன்னாள் படை வீரர்களின் சிறார்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு 81லிருந்து 150ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

* முன்னாள் படை வீரர்களின் சிறார்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் பிந்தைய நுழைவிற்கான இட ஒதுக்கீடு 8இலிருந்து 15ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

* அதி விஷிட் சேவா மெடல் விருது பெற்ற ஒருவருக்கு ரூ.7,000 ரொக்க மானியமாக வழங்க ஆணையிடப்பட்டது.

* மரணத்திற்குப் பின் கீர்த்தி சக்ரா வீர விருது பெற்ற ஒருவருக்கு, ரூ.12,000 ரொக்க நிதியாக வழங்க ஆணையிடப்பட்டது.

* மரணத்திற்குப் பின் கீர்த்தி சக்ரா வீர விருது பெற்ற ஒருவருக்கு நிலத்திற்குப் பதிலாக ரூ.75,000 ரொக்க நிதியாக வழங்க ஆணையிடப்பட்டது.

* சௌரிய சக்ரா விருது பெற்ற ஒருவருக்கு ரூ.5,000 ரொக்க நிதியாக வழங்க ஆணையிடப்பட்டது.

* சௌரிய சக்ரா விருது பெற்ற ஒருவருக்கு நிலத்திற்குப் பதிலாக ரூ.40,000 ரொக்க நிதியாக வழங்க ஆணையிடப்பட்டது.

* T.A. மெடல் விருது பெற்ற ஏழு பேருக்கு ரொக்க மானியமாக ரூ.14,000 வழங்க ஆணையிடப்பட்டது.

* 13.05.2006 முதல் 31.03.2010 வரை முன்னாள் படை வீரர்கள் 636 நபர்களுக்கும், முன்னாள் படை வீரர்களைச் சார்ந்தோர்கள் 11 நபர்களுக்கும் முன்னாள் படை அலுவலர்கள் 19 நபர்களுக்கு, கிராம நிருவாக அலுவலர்கள் 122 நபர்களுக்கு, உடற்கல்வி ஆசிரியர் 11 நபர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

* பி.டெக். (உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்பம்) படிப்பில் முன்னாள் படை வீரர்களின் குழந்தை களுக்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்து ஆணையிடப் பட்டுள்ளது.

* 15.03.1996 முதல் நிறுத்தி வைக்கப்பட்ட கூடுதல் இயக்குநர் பணியிடம், இணை இயக்குநர் பணியிடமாக நிலை இறக்கம் செய்யப்பட்டுள்ளது.

* 2009–2010 ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ், 5 கணினிகள் முன்னாள் படைவீரர் நல இயக்ககத்திற்கு வாங்குவதற்கு ரூ.2.51 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

* திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல மையக் கட்டடத்தை இடித்து விட்டு, ரூ.32.62 இலட்சம் செலவில் புதியதாக மையக் கட்டடம் கட்டிட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* மாண்புமிகு முதலமைச்சருக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும், மாண்புமிகு அவைத் தலைவருக்கும், மாண்புமிகு அவைத் துணைத் தலைவருக்கும், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருக்கும், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடாவுக்கும் சம்பளம் திங்களொன் றுக்கு ரூ.7,000த்திலிருந்து ரூ.8,000ஆக உயர்த்தப்பட்டது.

* சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் சம்பளம் திங்களொன்றுக்கு ரூ.3,000த்திலிருந்து ரூ.8,000ஆக உயர்த்தப்பட்டது.

* மாண்புமிகு முதலமைச்சருக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும், மாண்புமிகு அவைத் தலைவருக்கும், மாண்புமிகு அவைத் துணைத் தலைவருக்கும், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருக்கும், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடாவுக்கும் ஈட்டுப்படி திங்களொன்றுக்கு ரூ.8,000த்திலிருந்து ரூ.10,000ஆக உயர்த்தப்பட்டது.

* மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஈட்டுப்படி திங்களொன்றுக்கு ரூ.6,000த்திலிருந்து ரூ.7,000மாக உயர்த்தப்பட்டது.

* மாண்புமிகு முதலமைச்சருக்கும் ஏனைய மாண்புமிகு அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும், மாண்புமிகு அவைத் தலைவருக்கும் எதிர்பாராச் செலவுப்படி திங்களொன்றுக்கு ரூ.3,000 த்திலிருந்து ரூ.4,000மாக உயர்த்தப்பட்டது.

* மாண்புமிகு அவைத் துணைத் தலைவருக்கும், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடாவுக்கும் எதிர்பாராச் செலவுப்படி திங்களொன்றுக்கு ரூ.2,500இலிருந்து ரூ.3,500ஆக உயர்த்தப்பட்டது.

* மாண்புமிகு முதலமைச்சருக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும், மாண்புமிகு அவைத் தலைவருக்கும், மாண்புமிகு அவைத் துணைத் தலைவருக்கும், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருக்கும், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடாவுக்கும், மாண்புமிகு

சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தொகுதிப்படி திங்களொன்றுக்கு ரூ.4,000த்திலிருந்து ரூ.5,000மாக உயர்த்தப்பட்டது.

- ✶ மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தொலைபேசிப்படி திங்களொன்றுக்கு ரூ.4,000த்திலிருந்து ரூ.5,000 மாகவும், அஞ்சல்படி திங்களொன்றுக்கு ரூ.1,500லிருந்து ரூ.2,500 ஆகவும் உயர்த்தப்பட்டது.

- ✶ சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஊர்திப்படி திங்களொன்றுக்கு ரூ.5,000த்திலிருந்து ரூ.20,000 மாக உயர்த்தப் பட்டது.

- ✶ அமைச்சர்களுக்கான வீட்டு வாடகைப்படி ரூ.10,000த்திலிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தப் பட்டது.

- ✶ சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தினப்படி ரூ.400த்திலிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான இரயில் பயணப்படி ஆண்டொன்றிற்கு ரூ.15,000த்திலிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் பணிபுரியும் அரசு அதிகாரிகள், மாநிலத்திற்குள் அல்லது வெளியே, ஆனால் இந்திய நாட்டிற்குள், இந்தியன் ஏர்லைன்ஸில் மட்டுமின்றி, ஜெட், சகாரா மற்றும் ஏர் டெக்கான் போன்ற தனியார் வானூர்திகளிலும் பயணம் செய்யலாம் என்று தமிழ்நாடு அமைச்சகப் பயணப்படி விதி, 1951க்கு திருத்தம் செய்யப்பட்டது.

- ✶ முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு நிதியாண்டொன்றிற்கு வழங்கப்பட்டு வந்த மருத்துவப்படி ரூ.3,000லிருந்து ரூ.4,000 ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். நல்லசிவன் அவர்களின் குடும்பத்தின் வறிய நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் குடும்ப வறுமையைப் போக்க அவரின் துணைவியார் திருமதி ந. சரஸ்வதி அவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2,00,000 நிவாரணம் வழங்கப்பட்டது.

- ✶ சட்டமன்றப் பேரவை அல்லது சட்டமன்ற மேலவை ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் திங்களொன்றுக்கு ரூ.8,000த்திலிருந்து ரூ.10,000 மாக உயர்த்தப்பட்டது.

- ✶ சட்டமன்றத்தின் முன்னாள் உறுப்பினர்களால் வழங்கப்பட்ட பணிச்சேவையின் காலஅளவிற்கு இணங்கிய வகையில் வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் வழங்குவதில் நிலவிவந்த வகைப்பாடு நீக்கப்பட்டு முன்னாள் உறுப்பினர்களின் சட்டபூர்வபடியான வாரிசுதாரர்களுக்கு சமச்சீரான வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் திங்களொன்றுக்கு ரூ.5,000ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ மாநில அரசால் பேணப்பட்டுவரும் மருத்துவமனைகளில், சட்டமன்றப் பேரவை அல்லது சட்டமன்ற மேலவையின் இறந்த உறுப்பினர்களின் சட்டபூர்வமான வாரிசுதாரர்களுக்குக் கட்டணமின்றி இலவசமாகத் தங்குவதற்கான வசதியுடன் அவர்கள் மருத்துவ சிகிச்சை செய்துகொள்வதற்கும்கூட தகுதியுடையவராகச் செய்வதென அறிவிக்கை (Gazette Notification) வெளியிடப்பட்டது.

- ✶ முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. முருகையன் அவர்கள் சர்க்கரை நோயால் நடக்க முடியாத நிலையில் உள்ளதாலும், பல நோய்களால் கஷ்டப்படுவதாலும், அதனால் கண் பார்வை பாதிக்கப்பட்டு இடது கண் பார்வைக் குறைவு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொண்டதாலும், அவரின் கோரிக்கையை ஏற்று, அன்னார் மேற்கொண்ட கண் அறுவை சிகிச்சைக்கான தொகை ரூ.9,500 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சிறப்பு நேர்வாகக் கருதி மீள வழங்கப்பட்டது.

- ✶ 2010–2011ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் இயங்கும் என அறிவிக்கப்பட்டது. மேற்குறித்த அறிவிப்பின்படி சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையில் கவனிக்கப்பட்டு வரும் மாற்றுத் திறனாளிகளின் குறித்த பொருள் பிரிக்கப்பட்டு " மாற்றுத் திறனாளிகள் நலத் துறை " என தனியே தலைமைச் செயலகத்தில் உருவாக்கப் பட்டது. அத்துறைக்கு இந்திய ஆட்சிப் பணி உச்ச நிலையில் (SUPER TIME SCALE) செயலர் நியமிக்கப்பட்டு, முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையில் பணிபுரிய ஆணையிடப் பட்டுள்ளது. இத்துறை 27.03.2010 முதல் செயல்படுகிறது.

- ✶ சென்னை மாவட்டத்திற்கு ஓணம் திருநாளையொட்டி, அரசு உள்ளூர் விடுமுறை அறிவித்து, அதனை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட 14.08.2007 அன்று அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது.

- ✶ தேனி மாவட்டம், தேனி தாலுக்காவில் அமைந்துள்ள அருள்மிகு வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயிலில் நடைபெறும் தேர்த் திருவிழாவினையொட்டி ஒவ்வொரு வருடமும் உள்ளூர் விடுமுறை அளித்து அரசு 26.08.2008 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- ✶ 15.09.2008 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி, செலவாணி முறிச் சட்டம் 1881இன் கீழ் 2008ஆம் ஆண்டு அரசு பொது விடுமுறை அறிவித்தது.

- ✶ தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள பரிசுத்த பனிமயமாதா திருவிழாவினையொட்டி 'அவர் லேடி

ஆஃப் ஸ்நோஸ் சர்ச்சில் விருந்து கொண்டாட்டம்' நடைபெறும் நாளான ஆகஸ்ட் 5ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டிற்கும் தூத்துக்குடி மாவட்டம் முழுமைக்கும் உள்ளூர் விடுமுறை அளிக்க 3.12.2008 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

* தமிழ்ப் புத்தாண்டையொட்டி, 2009ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பொது விடுமுறை அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

* சங்கப் புகழ் கடையேழு வள்ளல்களில் ஒருவரான ஓரி மன்னன் கொடைத் தன்மை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் நடைபெறும் வல்வில் ஓரி விழாவினை கொல்லி மலையில் கொண்டாட நாமக்கல் மாவட்டத்திற்கு 2009ஆம் ஆண்டு முதல் அரசு உள்ளூர் விடுமுறை அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

* கன்னியாகுமரி, கோவை, நீலகிரி மாவட்டத்திற்கு ஓணம் திருநாளையொட்டி, ஏற்கெனவே உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது கோவையிலிருந்து திருப்பூர் மாவட்டம் உதயமானதால், புதியதாக உதயமான திருப்பூர் மாவட்டத்திற்கு அரசு ஓணம் திருநாளையொட்டி உள்ளூர் விடுமுறைப் பட்டியலில் சேர்த்து 19.10.2010 அன்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

* விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் மேல்மலையனூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் மாசி மாதம் திருத்தேர் உற்சவத்தையொட்டி, விழுப்புரம் மாவட்டம் முழுமைக்கும் உள்ளூர் விடுமுறை அறிவித்து, 11.01.2010 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* 17.12.2007 தேதியிலிருந்து மதுரையிலும் மற்றும் 14.09.2008 தேதியிலிருந்து கோவையிலும் கடவுச் சீட்டு அலுவலகங்கள் (Passport Offices) புதிதாகத் துவக்கப்பட்டது.

* வரவு, செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி இராணுவம் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களுக்கு போர் மற்றும் உள்நாட்டு அமைதி காக்கும் பணியில் இறந்தால் அவர்கள் குடும்ப நலன் கருதி இவ்வரசு வழங்கி வந்த மானியத் தொகை ரூ.2 இலட்சத்தை ரூ.5 இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டது.

* இராணுவத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து புனேயில் இருக்கும் தேசிய இராணுவ அகாடமியின் வைரவிழா சிறப்பாக நடைபெற ரூ.25 இலட்சத்தை இவ்வரசு அன்பளிப்பாக அளித்தது.

* ஜம்மு-காஷ்மீர் மாநிலம், தோடா மாவட்டத்தில் தீவிரவாதிகளுடனான சண்டையின்போது குண்டடிபட்டு இறந்த லான்ஸ் நாயக் மஞ்சுநாத் அவர்களின் குடும்பத்திற்கு கருணைத் தொகையாக ரூ.5 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது.

* ஜம்மு – காஷ்மீர் மாநிலம், ஸ்ரீநகரில் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மத்திய ரிசர்வ் காவல் படையைச் சார்ந்த படைவீரர் திரு.ஆர்.இராஜசேகர் அவர்களின் குடும்பத்திற்கு சிறப்பு நேர்வாக ரூ.5 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், அவரது மனைவி திருமதி. அமுதா என்பவர், ஜவ்வாதுமலை, கும்லாமரத்தூர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் சத்துணவு அமைப்பாளராகப் பணியமர்த்தப்பட்டார்.

* போரில் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம், கீர்கீ, புனேவில் (Paraplegic Rehabilitation Centre, Kirkee, Pune) அனுமதிக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சார்ந்த வீரர்களின் நலனைக் காக்கும் பொருட்டு 2009–2010 நிதியாண்டில் ரூ.7 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது.

* அசோக சக்ரா விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மேஜர் ஸ்ரீராம்குமார் என்பவருக்கு பணமுடிப்பு மற்றும் நிலத்திற்குப் பதிலாக பணம் ஆகியவற்றுக்குப் பதிலாக ஒட்டுமொத்தத் தொகையாக ரூ.2 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது.

* சத்திஸ்கர் மாநிலம், தண்டேவடா மாவட்டத்தில் நக்சலைட்டுகள் தாக்குதலில் பலியான தமிழகத்தைச் சேர்ந்த 3 மத்திய ரிசர்வ் காவல்படையைச் சார்ந்த காவலர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.15 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன.

* * *



# சட்டம் ஒழுங்கைப் பேணிக்காக்கும் காவல்துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

**காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்**

* சென்னை மாநகர காவல் ஆணையம், சென்னைக் காவல் மற்றும் சென்னைப் புறநகர் காவல் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. சென்னைப் புறநகர் புதிய ஆணையரகம் 21.07.2008 முதல் இயங்கி வருகிறது.

* ரூ.48.23 கோடி செலவில் ஊனமாஞ்சேரியில் கட்டப்பட்ட காவல் உயர் பயிற்சியகம் மற்றும் ரூ.38.98 இலட்சம் செலவில் கட்டப்பட்ட வடக்கு மண்டல காவல் துறைத் தலைவர் அலுவலகம் 15.03.2008 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

* கடலோரப் பாதுகாப்பிற்காக கடலோரப்பகுதிகளில் தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுப்பதற்காகவும் கடலோரக் கண்காணிப்பினைப் பலப்படுத்தும் பொருட்டும் 12 புதிய ஈப்புகளும், 180 சிசி திறன் கொண்ட 36 புதிய மோட்டார் சைக்கிள்களும் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

* மாவோயிஸ்ட் / நக்சலைட் / தீவிரவாதிகளின் எதிர்பாராத தாக்குதலை எதிர்கொள்ள சிறப்பு இலக்குப் படையில் (STF) Motorcycle Rider Commandos என்ற பிரிவை உருவாக்கும் பொருட்டு 150 சிசி திறன் கொண்ட 20 புதிய மோட்டார் சைக்கிள்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

* ரூ.30.80 இலட்சம் செலவில் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் உள்சுற்று இணைப்புத் தொலைக்காட்சி (Closed Circuit TV) நிறுவப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

* காவல் துறையில் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் படையில் மாதாந்திர ஒப்பந்த ஊதியத்தில் நியமிக்கப்பட்ட 42 முன்னாள் இராணுவத்தினர் நிரந்தரமாகப் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

* திருநெல்வேலி மாவட்டத்தில் திருட்டுத்தனமாக மணல் கடத்திய லாரியைத் தடுக்க முயன்றபோது, லாரி மோதி இறந்த என். தர்மராஜ் என்பவரின் மனைவி திருமதி. டி.செல்லம்மாள் என்பவர் கருணை அடிப்படையில் சிறப்பு நேர்வாக, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டார்.

* காவல்துறையில் தொகுப்பூதியமாக மாதம் ரூ.2,500 பெற்றுவந்த 650 கணினி விவரப் பதிவாளர்களுக்கு காலமுறை சம்பள விகிதமாக ரூ.3000–75–3950–80–4590 என்று நிர்ணயம் செய்து வழங்கப்பட்டது.

* திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் மறைந்த தலைமைக் காவலர் திரு.அய்யாசாமி என்பவரின் மகன் திரு.தங்கமுத்து என்பவர் கருணை அடிப்படையில் சிறப்பு நேர்வாக, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டார்.

* திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் மறைந்த தலைமைக் காவலர் திரு. காளிசந்தர் என்பவரின் மகன் திரு.சபரிஷ் என்பவர் கருணை அடிப்படையில் சிறப்பு நேர்வாக, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டார்.

* 225 இல்லப்பணியாளர்கள் அலுவலக உதவியாளர்களாகப் பணி நிரந்தரம் செய்யப்பட்டது.

* கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் காத்திருப்போர் பட்டியலிலுள்ள 121 நபர்களுக்கு அலுவலக உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளது.

* கருணை அடிப்படையில் காத்திருப்போர் பட்டியலிலுள்ள தகுதியுள்ள 35 நபர்களுக்கு தட்டச்சர்களாகப் பணிநியமன ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 36 நபர்களுக்கு இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* திருவள்ளூர் மாவட்ட தலைமைக் காவலர் சந்திரன் என்பவர் திருவண்ணாமலை மாவட்டத்தில் கார்த்திகை தீப திருவிழா பாதுகாப்புப் பணியில் இருக்கும் போது 12.12.2008 அன்று மரணமடைந்தார். அன்னாரின் மகன் திரு. ச. ஜெகதீசன் என்பவர் கருணை அடிப்படையில் சிறப்பு நேர்வாக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டார்.

* திருநெல்வேலி மாவட்ட உதவி ஆய்வாளர் வெற்றிவேல் என்பவர் பணியில் இருக்கும் போது 07.01.2010 அன்று கொலை செய்யப்பட்டார். அன்னாரின் மனைவி திருமதி. வெ. பிச்சியம்மாள் என்பவர் கருணை அடிப்படையில் சிறப்பு நேர்வாக அலுவலக உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டார்.

* 2008ஆம் வருடம் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் விரல்ரேகைப் பிரிவிற்கு 33 காவல் உதவி ஆய்வாளர்கள் (விரல்ரேகை பிரிவு) பணி நியமனம் செய்யப்பட்டனர்.

* "காந்தியடிகள் காவல் விருது" தொகை ரூ.10,000 என்பது ரூ.20,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* காவல்துறை நாய்ப் படைப் பரிவு, காவல்துறை புகைப்பட நிபுணர்கள் மற்றும் காவல் வானொலிப் பிரிவு, தொழில்நுட்பப் பணியாளர்களில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் "தொழில்நுட்பம் மற்றும் சிறப்புப் பிரிவுகளில் உன்னத பணிகட்கான தமிழக முதல்வரின் பதக்கங்கள்" வழங்க 9.11.2006 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

* காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் காவல் நிலையங்கள் மற்றும் காவல் அலுவலகங்கள் ரூ.5650.12 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. ரூ.7,365.83 இலட்சம் செலவில் காவல்துறையினருக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. காவல்துறையினர் சம்பவ இடங்களுக்கு விரைந்து செல்ல ஏதுவாக புதிய வாகனங்கள் ரூ.6,535.60 இலட்சம் செலவிலும், வளர்ந்து வரும் விஞ்ஞான காலத்தில் நவீன தொலைத் தொடர்புக் கருவிகள் ரூ.1,691.07 இலட்சம் செலவிலும், பயிற்சி அளிக்கும் பிரிவு மற்றும் தமிழ்நாடு காவலர் பயிற்சி மையம் இவைகளுக்கான உபகரணங்கள் ரூ.812.17 இலட்சம் செலவிலும், குற்றவாளிகள் மற்றும் குற்றங்களை தடய அறிவியல் மூலம் நிர்ணயிக்க ஏதுவாக தடய அறிவியல் பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் ரூ.1,273.81 இலட்சம் செலவிலும், பொது உபகரணங்கள், படிபெருக்கி, நிகரி உபகரணங்கள் ரூ.2,222.71 இலட்சம் செலவிலும், கணினி மற்றும் அதைச் சார்ந்த உபகரணங்கள் ரூ.781.42 இலட்சம் செலவிலும், ஊர்க்காவல் படையினர் சிறப்புடன் பணியாற்றிட உபகரணங்கள் ரூ.202.60 இலட்சம் செலவிலும் ஊழல் தடுப்பு மற்றும் விழிப்புத் துறையினருக்கான கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.439.70 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டுள்ளன.

* பொருளாதாரக் குற்றப் பிரிவானது 01.01.2000 முதல் இயங்கி வருகிறது. இப்பிரிவானது அனுபவ் பிளான்டேஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தினரால் தொடரப்பட்ட சி.ஏ.எண்.479 மற்றும் 480, 199இன் பேரில், காவல் ஆணையாளர் தகுதிக்குக் குறையாத உயர் அதிகாரியின் தலைமையின் கீழ் தகுதி வாய்ந்த மற்றும் சூழ்நிலை அவசரக்காலத்திற்கு ஏற்ப பணிபுரியும் அதிகாரிகளைக் கொண்டு வங்கி சார் நிதி நிறுவனங்கள் மற்றும் ஒருங்கிணையாத தனியார் நிதி நிறுவனங்களில் பொதுமக்கள் தங்கள் பணத்தினை முதலீடு செய்து, முதிர்வு அடைந்தும் முதிர்வு தொகை கிடைக்கப்பெறாத முதலீட்டாளர் களுக்காக ஒரு தனிப்பிரிவு தொடங்கப்பட வேண்டும் என உத்தரவிட்டதன் பேரில், அரசு ஆணையின்படி உருவாக்கப்பட்டது.

* தமிழக அரசால், வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்த முதலீட்டாளர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்க முதன்முறையாக சிறப்பு சட்டமான, தமிழ்நாடு முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டது.

* இப்பிரிவு சென்னையைத் தவிர காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், வேலூர், திருச்சி, சேலம், நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், கரூர், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 15 மாவட்டங்களில் இயங்கி வருகிறது.

* பொருளாதாரக் குற்றப் பிரிவு சிறந்த முறையில் செயல்பட்டு வருவதால், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் ரூ.477.03 கோடி திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளது.

* பொதுமக்களின் ரூ.35.76 கோடி பணத்தினை பலவிதமான திட்டங்கள் மூலம் (ஜே.பி.ஜே.சிட்டி டெவலப்பர்ஸ்) முதலீடு செய்ய செய்து மோசடி செய்து ஏமாற்றிய எதிரியை குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் அடைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே இது முதல் முறையாகும்.

* கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் கள்ளச்சாராய விற்பனை ஆகியவற்றை ஒழித்தலைக் கொள்கைகளாக கொண்டுள்ள அரசின் இசைவிற்கேற்ப, பிற மாநிலங்களில் இருந்து கடத்தப்பட்டு வரும் போலியான மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு எரிசாராயத்தினைத் தடுக்கும் நோக்கில் மேற்கூறிய அனைத்து மதுவிலக்கு குற்றங்களில் 13.05.2006 முதல் 31.03.2010 வரை மொத்தம் 4,57,911 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு 88,100 பெண்கள் உட்பட மொத்தம் 4,31,915 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

* 2006ஆம் ஆண்டில் 275 நபர்களும், 2007ஆம் ஆண்டில் 497 நபர்களும், 2008ஆம் ஆண்டில் 627 நபர்களும், 2009ஆம் ஆண்டில் 486 நபர்களும் 2010ஆம் ஆண்டு முதல் காலாண்டில் 70 நபர்களும் ஆக மொத்தம் 1,955 தீவிர மது குற்றவாளிகள் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் XIV 1982–இன் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

* 2006, 2007, 2008, 2009 மற்றும் 2010 (மார்ச் மாதம் முடிய) முறையே 23, 46, 619, 383 மற்றும் 90 ஆக மொத்தம் 1,161 மூன்றும் அதற்கு மேலும் தண்டனை பெற்ற நபர்களின் மீது மேற்கண்ட வழக்குப் பதிவு செய்யப்பட்டதன் மூலம், அந்நபர்கள் கிராமத்திற்குள் நுழைய நீதிமன்றம் தடை விதித்துள்ளது. நீதிமன்றத்தின் இச்செயலால் பயனுள்ள விளைவு ஏற்படுத்தப்பட்டு கள்ளச்சாராயம் காய்ச்சுவது அறவே ஒடுக்கப்பட்டுள்ளது.

* அவப்பெயரெடுத்த கரும்புள்ளி கிராமங்களின் மீது எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கைகளால், கள்ளச்சாராயம் காயச்சுவதை அறவே ஒழித்து தமிழகத்தில் 468 ஆக இருந்த கரும்புள்ளி கிராமங்கள் 59ஆக குறைந்துள்ளது.

**போக்குவரத்து**

* இந்த அரசு பொறுப்பேற்றபின் கடந்த காலங்களில் இத்துறையின் வளர்ச்சிக்காக அரசால் ரூ.38.33

கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்கண்ட நிதி ஒதுக்கீடு தொகையானது இத்துறையின் அலுவலகக் கட்டடங்கள் கட்டவும் அலுவலகங்களின் தரம் உயர்த்தவும் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் வழங்கப்பட்டுள்ளன.

* இத்துறையில் புதியதாக 172 பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, நீண்ட நாட்களாக காலியாக இருந்த 366 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

* ஒளிவு மறைவற்ற மற்றும் திறமையான சேவை என்ற இரண்டு நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு போக்குவரத்துத் துறையின் சேவைகள் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. ரூ.17 கோடி செலவில் போக்குவரத்துத் துறையின் அனைத்து 61 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 49 பகுதி அலுவலகங்கள் 8 சோதனைச் சாவடிகளும் கணினிமயமாக்கப் பட்டுள்ளது.

* வாகனப் பதிவு சான்று வழங்குதல், ஓட்டுநர் உரிமம் வழங்குதல், நடத்துனர் உரிமம் வழங்குதல், வரி வசூலித்தல், தகுதிச் சான்று வழங்குதல் ஆகிய சேவைகளைக் கணினி மயமாக்குதல் மூலம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவுச் சான்றுகள் பெறுவதைத் துரிதமாக எளிமையாக மற்றும் வசதியானதாக மாற்ற "ஸ்மார்ட் கார்டு" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதல் கட்டமாக சென்னை(தெற்கு), சிவகங்கை மற்றும் கடலூர் மாவட்டங்களில் இத்திட்டம் டிசம்பர் 2008இல் துவங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான நடைமுறை மற்றும் செயல்பாடு, தற்போதுள்ள ஓட்டுநர் உரிமத்தின் பதிவுச் சான்றைவிட கூடுதல் விவரங்களை சேமிக்க, முந்தைய உரிமையாளர் வரி, செலுத்திய விவரங்கள் காலத்தையும் சேமிக்க, போலி பதிவு சான்றுகள், ஓட்டுநர் உரிமங்கள் முற்றிலும் ஒழிக்க இம்முறை பயன்படுத்தப்படும்.

* மின் நிருவாகத்தின் அடிப்படையில் பொது மக்களுக்கு, வட்டாரப் போக்குவரத்து அலுவலகப் பணிகளுக்கு ஆன் லைன் மூலம் பதிவு செய்தல், புகார்களை ஆன் லைன் மூலம் பதிவு செய்தல், புகார்களை ஆன் லைனில் சரி பார்த்தல் ஆகிய கூடுதல் வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

* தனியார் ஒப்பந்த ஊர்திகளுக்கு ஆம்னிப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்குவதில் இருந்த தடை விலக்கப்பட்டதிலிருந்து 9.6.2009 முதல் 15.04.2010 வரை 113 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் இம்மாநில வாகன உரிமையாளர்கள் வெளிமாநிலத்தில் அனுமதிச் சீட்டு பெற்று இம்மாநிலத்தில் இயக்கி, அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்துவது குறைக்கப்பட்டது.

* சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையில் சாலைப் பாதுகாப்புக் குழு என்ற உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி பாதுகாப்பு குறித்து திட்டங்கள் மற்றும் அரசு ஆணைகள் பிறப்பிக்க நடவடிக்கை மேற்கொள்கிறது.

* ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் கீழ் சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட குழுக்கள் மாதம் ஒருமுறை கூடி சாலைப் பராமரிப்பு, ஓட்டுநர் பயிற்சி, விபத்து குறித்து ஆய்வுகள், விளம்பர முயற்சிகள், போக்குவரத்துத் திட்டமிடல், நெடுஞ்சாலைக் கண்காணிப்பு, பயணிகளுக்கான வசதிகள் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

* போக்குவரத்துத்துறை மற்றும் காவல் துறையினரால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம் மற்றும் அபராதத் தொகைகளை அரசால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு அதில் இருந்து சாலைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்நிதியிலிருந்து 2006–2007இல் ரூ.6 கோடி, 2007–2008இல் ரூ.6 கோடி, 2008–2009இல் ரூ.16.8 கோடி, 2009–2010இல் ரூ.15 கோடி, 2010–2011 இல் ரூ.40 கோடி சாலைப் பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* சாலைப் பாதுகாப்பு குறித்து அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

* இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிவது மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் இருக்கை வார்பட்டை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

* வாகனங்களின் முன்புற முகப்பு விளக்குகளில் கருப்பு வர்ணம் பூச உத்தரவிடப்பட்டுள்ளது.

* ஆண்டுதோறும் வருடத்தின் முதல் வாரத்தில் சாலைப் பாதுகாப்பு வாரம் கொண்டாடி மக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. சாலைப் பாதுகாப்பு வாரம் கொண்டாடுவதற்கு 2006–2007இல் ரூ.47 இலட்சம், 2007–2008 இல் ரூ.65 இலட்சம், 2008–2009 இல் ரூ.55 இலட்சம், 2009–2010இல் ரூ.140 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

* விபத்துகள் நடக்கும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து விபத்தின் காரணங்களை அறியவும் அந்த இடத்தில் மீண்டும் விபத்து ஏற்படாமல் தடுக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க காவல்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளுக்கிடையேயான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

* தேசிய நெடுஞ்சாலைகளுடன் பிற சாலைகள் சேரும் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,283 இடங்களில் ரூ.12.80 கோடி செலவில் தேவையான அளவில்

எச்சரிக்கை பலகைகள் மற்றும் சாலைகளில் பிரதிபலிப்பான்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பள்ளி வாகனங்களை எளிதில் இனம் காண பள்ளி வாகனங்களுக்கு 'மஞ்சள்' வர்ணம் பூச அரசு உத்தரவிட்டுள்ளது.

* மேலும் உச்ச நீதிமன்ற உத்திரவின் அடிப்படையில் இவ் வாகனங்கள் இயக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க சிறப்பு சோதனைகள் நடத்தப்படுகின்றன.

* பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு 5 மாணவர்களை ஆட்டோவில் ஏற்றிச் செல்லலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

* ஆட்டோ ரிக்ஷாக்கள் அனுமதி இன்றி இயங்கு வதை கண்டுபிடிக்க அனுமதிச்சீட்டு இல்லாத தனியார் ஆட்டோ ரிக்ஷாக்கள் 'நீல வர்ணம்' பூச அரசு ஆணை வழங்கி உள்ளது.

* தமிழகம் முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளில் 100 அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு விபத்தினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 66 மையங்கள் முழுவதும் தனியார் மருத்துவ மனைகளாலும் 34 மையங்கள் தனியார் மற்றும் அரசின் பங்களிப்புடனும் செயல்படுகின்றன. 1,073 என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உதவி பெறலாம்.

* விபத்து ஏற்படுத்திய ஓட்டுநர்கள் மற்றும் வாகனங்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஓட்டுநர் உரிமங்கள் முதல் முறை குற்றத்திற்கு ஆறு மாதங்களிலும், தொடர் குற்றங்களுக்கு நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டு வருகின்றது.

**தமிழ்நாடு சிறைத்துறை**

* மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக 6,307 மின் விசிறிகள் 2007ஆம் ஆண்டு பொருத்தப்பட்டது.

* தமிழ்நாட்டின் அனைத்து சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு வாரம் ஒரு முறை 115 கிராம் கோழி இறைச்சி மற்றும் சைவ உணவு விரும்பும் சிறைவாசிகளுக்கு ரவா கேசரி, உருளைக் கிழங்கு மற்றும் வாழைப்பழம், டிசம்பர் 2006ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

* சிறைகளில் உள்ள அனைத்து சிறைவாசிகளுக்கும் காலையில் ஒரு வேளை தேநீர் 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

* இந்திய வரலாற்றிலே முதல் முறையாக பெண் சிறைத்துறை துணைத்தலைவர் என்ற பதவி தமிழ் நாட்டில் மட்டும் தோற்றுவிக்கப்பட்டு, அதில் பெண் பணியாளர் 27.05.2009 முதல் பணிபுரிந்து வருகிறார்.

* தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையக் குழு மூலம் 2006 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை 754 இரண்டாம் நிலைக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

* 64 தற்காலிக பெண் வழித்துணைக் காவலர்கள் விதிமுறைகளைத் தளர்த்தி முறையான இரண்டாம் நிலைக் காவலராகப் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

* மொத்தம் 46 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களில் 3 பேர் மாற்றுத் திறனாளிகள்.

* 9 பெண்கள் கிளைச் சிறைகள் மற்றும் 2 பெண்கள் தனிக் கிளைச் சிறைகளுக்கு மருத்துவ ஊர்தி (மாருதி ஆம்னி வேன்) ரூ.38.64 இலட்சம் செலவிலும், பார்ஸ்டல் பள்ளி மற்றும் மாவட்ட சிறை, புதுக்கோட்டைக்கு இருசக்கர வாகனம் மற்றும் மருத்துவ ஊர்தி ரூ.4.50 இலட்சம் செலவிலும், பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு டிராக்டர் மற்றும் டிரெய்லர் வண்டி ரூ.6 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டது.

* சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் மூலம் ரூ.200 இலட்சம் செலவில் 100 பெண் சிறைவாசிகள் அனுமதிக்கக்கூடிய வகையில் மகளிர் கிளைச்சிறை கடலூரில் கட்டப்பட்டது.

* 500 பெண் சிறைவாசிகள் அடைக்கக்கூடிய வகையில், சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.998 இலட்சம் செலவில் திருச்சியில் பெண்களுக்கான தனிச் சிறை கட்டப்பட்டுள்ளது.

* சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் திண்டுக்கல், நாகர்கோவில், விருதுநகர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், ஆத்தூர் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் கிளைச்சிறைகள் 200 சிறைவாசிகளை அடைக்கும் வகையில் மாவட்ட சிறைகளாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டு, திண்டுக்கல், நாகர்கோவில், விருதுநகர் மற்றும் ஆத்தூர் ஆகிய சிறைகளின் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மாவட்ட சிறைகளாக இயங்கி வருகின்றன.

* 2006–07ஆம் ஆண்டில் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.1,360 இலட்சம் செலவில் 276 குடியிருப்புகள் சிறைப் பணியாளர்களுக்குக் கட்டி வழங்கப்பட்டது.

* மோப்ப நாய்ப் பிரிவு துவங்குதல், புழல் மத்திய சிறை–2க்கு சி.சி.டிவி கருவிகள் கொள்முதல் செய்தல், மத்திய சிறைகளுக்கு நீராவிக் கொதிகலன்களுக்கான பாத்திரங்கள் வாங்குதல், புழல் மத்திய சிறை–1 க்கு நேர்காணல் அறையில் நாரியற் கண்ணாடியுடன் கூடிய உள்ளிருப்பு தொலைபேசி வசதி செய்து கொடுத்தல், புழல்

மற்றும் வேலூர் மத்திய சிறைக் கட்டுப்பாட்டில் உள்ள 18 கிளைச்சிறைகளுக்கு தலா ஒரு எண் மின்னணு எடையிடும் இயந்திரம் கொள்முதல் செய்தல். 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களுக்கு தலா ஒன்று வீதம் 12 கணினிகள் மற்றும் பிற இயந்திரங்கள் கொள்முதல் செய்தல், சிறைத்துறை தலைமை அலுவலகத்திற்கு ஒரு புதிய நவீன ஒளிப்பட படி எடுக்கும் கருவி கொள்முதல் செய்தல் போன்ற திட்டங்களுக்கு ரூ. 88.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மோப்ப நாய் கொள்முதல் செய்வது தவிர மற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்**

* காவல்துறைத் தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் 1.61 இலட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய இணைப்புக் கட்டடம் ரூ.24.50 கோடி செலவீட்டில் கட்டப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.
* சென்னை மாநகரக் காவல் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ஒன்று வேப்பேரி, போக்குவரத்துக் காவல் அலுவலக வளாகத்தில் ரூ.25.46 கோடி செலவீட்டில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.
* ரூ.13.30 கோடி செலவீட்டில் 59 புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. ரூ.53.23 கோடி செலவீட்டில் மீதமுள்ள 160 காவல் நிலையங்களுக்கான புதிய கட்டட கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
* ஆவடியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 2ஆம் அணி நிருவாக அலுவலகக் கட்டடம், பாளையம் மற்றும் கிடங்குக் கட்டடங்கள் ரூ.2 கோடி செலவீட்டில் இக்கட்டுமானப் பணிகள் முடிவடைந்து கட்டடம் காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.
* திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் பெரம்பலூர் மாவட்ட தலைமையிடங்களில் காவலர்களுக்கான ஆறு ஓய்வு இல்லங்கள் ரூ. 42 இலட்சம் செலவீட்டில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டன.
* 25 காவல் நிலையங்களின் தரத்தை ரூ. 1.15 கோடி செலவில் மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு 24 காவல் நிலையங்களில் அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் முடிவடைந்து விட்டன.
* இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கமுதியில் ஆயுதப் படை பிரிவு காவலர்கள் தங்கும் பாளையம் ரூ.30 இலட்சம் செலவில் இக்கட்டுமானப் பணிகள் முடிவடைந்து காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.
* கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஆயுதப் பாதுகாப்பு அறை மற்றும் ஆயுதப் படை வளாகம் ரூ.3.65 கோடி செலவீட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.
* கோவை மாவட்டம் காவலர் பயிற்சிப் பள்ளியில் அமைந்துள்ள காவலர் பாளையத்தின் மேல் 1ஆவது மாடியில் கட்டடம் ரூ.35 இலட்சம் செலவிலும், ரூ.51 இலட்சம் செலவில் இரண்டாவது மாடி கட்டடம் முடிவடையும் நிலையில் உள்ளது.
* மன்னார்குடியில் மறு அஞ்சல் ஒலிபரப்பு நிலையம் ஒன்று ரூ.15 இலட்சம் செலவில் கட்டுவதற்கான அனுமதி 10.9.2007 அன்றும், மேலும் கன்னியாகுமரி மற்றும் நாங்குநேரி ஆகிய இடங்களில் மேற்படி ரிப்பீட்டர் நிலையங்கள் ரூ.17.48 இலட்சம் செலவில் கட்டுவதற்கான அனுமதி 18.1.2008லும் வழங்கப்பட்டன. இக்கட்டுமானப் பணிகள் முடிவடைந்து காவல் துறை வசம் ஒப்படைக்கப் பட்டன.
* சென்னை, மருதம் வளாகத்தில் ரூ.1.44 கோடி செலவீட்டில் மகளிர் அதிரடிப் படையினருக்கான பயிற்சிக் கூடம் மற்றும் பாளையம் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து காவல் துறை வசம் ஒப்படைக்கப்பட்டன.
* உதகையில் ஊர்க்காவல் படை பயிற்சி நிறுவனத்திற்கான பயிற்சிக் கூடம் மற்றும் பாளையம் ரூ.40 இலட்சம் செலவில் பணியானது முடிவடைந்து ஊர்க்காவல் படை வசம் ஒப்படைக்கப்பட்டன.
* காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தனிப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கான அலுவலகக் கட்டடங்கள் 18 இடங்களில் கட்டுவதற்கு ரூ.1.80 கோடி செலவில் 13 அலுவலகங்கள் கட்டி முடித்து ஒப்படைக்கப்பட்டு விட்டன.
* ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கென 16 காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.3,77,40,000 செலவில் அனுமதி வழங்கப்பட்டு, அவற்றில் ரூ.2.15 கோடி செலவில் 10 இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
* ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவலர் பயிற்சியகம் ரூ. 48.23 கோடி செலவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, முதல்கட்ட கட்டுமானப் பணிகள் முடிவடைந்து காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.
* ஆவடியில் மாநில ஆயுதக் கிடங்கு மற்றும் மருதம் வளாகத்தில் அதிரடிப் படையினருக்கான ஆயுதக் கிடங்கு ஆகியன ரூ.201 இலட்சம் செலவில் முடிவடைந்து காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டன.
* கடந்த நான்கு ஆண்டுகளில் 7,455 குடியிருப்புகள் ரூ. 353 கோடியே 5 இலட்சத்து 23 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம் இரண்டாம் நிலைக்காவலர்(ஆண்/பெண்), சார்பு ஆய்வாளர், தீயணைப்பாளர் 2007 போன்ற பல்வேறு பணியிடங்களுக்கு 16,077 பேர் நியமிக்கப்பட்டனர்.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

* வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, வடமேற்கு மண்டலம் 19.9.06 முதல் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

* தென்சென்னை கோட்டம் மற்றும் வடசென்னை கோட்டம் ஆகியவற்றினை மூன்றாகப் பிரித்து புதியதாக மத்திய சென்னை கோட்டம் ரூ. 7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

* 3 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் சென்னை நகரில் திருவொற்றியூரிலும், சேலம் மாவட்டம் சூரமங்கலத்திலும் மற்றும் வேலூர் மாவட்டம் கலவையிலும் முறையே 7.2.2009, 15.2.2009 மற்றும் 22.3.2009 தேதிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

* ரூ.8.28 இலட்சம் செலவினத்தில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 78 தீயணைப்பு ஊர்திகளில், ஊர்திகள் நடமாட்டத்தினையும் மற்றும் ஊர்தி இருக்கும் பகுதியினைக் காட்டும் அமைப்பு (Global Positioning System) அறிமுகப்படுத்தி நவீனப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம், பதில் செயல்பாடு நேரமானது சென்னையில் 7 நிமிடத்திலிருந்து 6 நிமிடங்களாகவும், மற்ற இடங்களில் 15 நிமிடங்களிலிருந்து 13 நிமிடங்களாகவும் முன்னேற்றம் கண்டுள்ளது.

* ரூ. 24.20 இலட்சம் செலவில் விருதுநகரில் உள்ள கோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்டப்பட்டது.

* பல்லடம், பேட்டை, பெண்ணாகரம், இராஜபாளையம், கள்ளக்குறிச்சி, ஆரணி, பொன்னேரி, பொன்னமராவதி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, ஈரோடு மற்றும் சிதம்பரம் ஆகிய நிலையப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் ரூ.988.24 இலட்சம் செலவில் கட்டித் தர அரசு ஒப்பளிப்பு செய்தது. இவற்றுள் பேட்டை, பெண்ணாகரம், இராஜபாளையம், கள்ளக்குறிச்சி, ஆரணி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. பல்லடம், உடுமலைப்பேட்டை, ஈரோடு, பொன்னமராவதி மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

* ஓமலூர், கம்பம், தக்கலை, திருத்துறைப்பூண்டி, ஒட்டன்சத்திரம், தண்டாரம்பட்டு, ஆரணி மற்றும் குத்தாலம் ஆகிய 8 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு தலா ரூ. 25 இலட்சம் வீதம் ரூ. 2 கோடி செலவில் கட்டடம் கட்ட அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இவற்றுள் ஓமலூர், கம்பம், தக்கலை, ஆரணி மற்றும் குத்தாலம் ஆகிய நிலையங்களுக்கான கட்டடம் கட்டப்பட்டுவிட்டது. தண்டராம்பட்டு மற்றும் திருத்துறைப்பூண்டி நிலையங்களுக்கு கட்டடம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

* 2008–09ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம், திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் மற்றும் குடவாசல் மற்றும் விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை ஆகிய 5 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு மொத்தத்தில் ரூ.196.63 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்ட ஒப்பளிக்கப்பட்டு இந்நிலையங்களுக்கு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

* 2008–09ஆம் ஆண்டில் ஸ்கைலிப்ட் என்றழைக்கப்படும் மூன்று நீட்டிப்பு ஏணி ஊர்திகளும், ஹஸ்மத் என்றழைக்கப்படும் அதிநவீன ஊர்தி ஒன்றும், அதிக கொள்ளளவு நீர்த்தொட்டி கொண்ட பவுசர் என்றழைக்கப்படும் ஊர்திகள் இரண்டும் மற்றும் பத்து அவசரகால மீட்பு ஊர்திகளும் ரூ.21 கோடி செலவில் வாங்கிட அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. இவற்றுள் 10 அவசர கால மீட்பு ஊர்திகள் கட்டுமானம் செய்வதற்கான வண்டி அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஊர்திகளில் பொருத்தப்பட வேண்டிய மீட்பு உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

* தாம்பரத்தில் உள்ள மாநிலப் பயிற்சி மையத்தில் 6 மோப்ப நாய்கள் கொண்ட மோப்ப நாய்கள் பிரிவு ரூ.1.52 இலட்சம் தொடர் செலவினத்திலும் மற்றும் ரூ.6 இலட்சம் தொடரா செலவினத்திலும் 30.10.2009 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* கட்டட இடிபாடுகளில் கண்ணுக்குப் புலப்படாத இடங்களில் சிக்குண்டவர்களையும் மற்றும் அல்லது உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களையும் கண்டறிந்து காப்பாற்றுவதற்காக மோப்பநாய்கள் பிரிவு அமைத்தது இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதல் மாநிலமாகும்.

* திருப்பூரில் ஒரு புதிய கோட்டம் ரூ.24.19 இலட்சம் தொடர் செலவினத்திலும் மற்றும் ரூ.8.34 இலட்சம் தொடரா செலவினத்திலும் 30.12.2009 அன்று நிறுவப்பட்டுள்ளது.

* சேலம் மாவட்டம், வாழப்பாடி என்ற இடத்தில் ரூ. 28.45 இலட்சம் தொடர் செலவினம் மற்றும் ரூ. 23.16 இலட்சம் தொடரா செலவினத்தில் ஒரு புதிய தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் 5.2.2010 அன்று ஏற்படுத்தப்பட்டது.

* திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்கா, வல்லூர் கிராமம், என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின் வல்லூர் அனல் மின் திட்டம்

இடத்தில் ரூ. 37.66 இலட்சம் தொடர் செலவினம் மற்றும் ரூ.24 இலட்சம் தொடரா செலவினத்தில் ஒரு புதிய தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் 7.4.2010 அன்று ஏற்படுத்தப்பட்டது.

* பழைய ஊர்திகளுக்கு பதிலீடு வழங்கிட ஏதுவாக, 2009–2010 ஆம் நிதியாண்டில் 60 நீர்த்தாங்கி வண்டிகள், 8 தண்ணீர் லாரிகள் மற்றும் 1 அவசரகால மீட்பு ஊர்தி ரூ.1,410.50 இலட்சம் செலவினில் வாங்கிட அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இவ்வூர்திகளைக் கட்டுமானம் செய்ய, 69 வண்டி அடிச்சட்டங்கள் கட்டுமானத்திற்காக ஒப்புவிக்கப் பட்டுள்ளது.

* மேலும், 2009–2010ஆம் ஆண்டில், 1 சீருந்து, 1 ஈப்பு, 3 விசை மிதிவண்டிகள் மற்றும் 1 பண்டகசாலை ஊர்தி ரூ.19.10 இலட்சம் செலவினத்தில் பழைய ஊர்திகளுக்குப் பதிலாக வாங்கப்பட்டுள்ளன.

* 2009–2010ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் பதிலீடாக 5 தண்ணீர் லாரிகள் ரூ.76.82 இலட்சம் செலவினத்தில் வாங்கிட அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இதற்கான வண்டி அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு கட்டுமானத்தில் உள்ளன.

* ஏற்கெனவே உள்ள உபகரணங்களை அதிகப்படுத்தும் வகையில் 70 மூச்சுக் கருவிகள் உபரி சிலிண்டருடன் ரூ.80 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. மூச்சுக் கருவிகளுக்கு வாயு நிரப்பும் கருவிகள் இரண்டு ரூ.14.45 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும் காலங்களில் உபயோகப் படுத்துவதற்காக 44 மிதவைப் படகுகள் அதற்குரிய உபகரணங்களான, 176 உயிர்காக்கும் மிதவைகள் மற்றும் 264 உயிர்காக்கும் மேலங்கிகள் ரூ. 53.76 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

* இத்துறையானது நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தினை "விபத்தின்மையே நிரந்தர பாதுகாப்பு" என்ற கொள்கையுடன் தீப்பாதுகாப்பு குறித்தான பிரச்சாரங்கள் மூலம் மேற்கொண்டு வருகிறது.

* அமைச்சுப்பணிகளில் 129 பேரும், தீயணைப்போர், நிலைய கோட்ட அலுவலர்களாக 66 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வழக்குத் தொடர்பு இயக்ககம்

* வழக்குத் தொடர்பு இயக்ககம் அரசின் உள் துறையின் நிருவாகக்கட்டுபாட்டின் கீழ் இயங்கி வருகிறது. மேலும் உள்துறைதான் இத்துறைக்குத் தேவையான வரவு செலவுகளை ஒதுக்கீடு செய்து வருகிறது.

* கூடிய விரைவில் இத்துறையின் அனைத்து செயல்களையும் கணினிமயமாக்க தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் இத் துறையின் சட்ட அலுவலர்களுக்கு மடிக் கணினிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

## தடய அறிவியல் துறை

* தடய அறிவியல் துறை பகுப்பாய்வுகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் முன்னணியில் உள்ளது. ஆகையால் எந்த ஒரு சவாலையும் சந்திக்க ஏற்ற வகையில் தடய அறிவியல் துறையின் பகுப்பாய்வுத் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு 1,95,815 மாதிரிகள், 2007ஆம் ஆண்டு 2,06,115 மாதிரிகள், 2008ஆம் ஆண்டு 2,11,130 மாதிரிகள், 2009ஆம் ஆண்டு 2,39,510 மாதிரிகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தடய அறிவியல் துறை மாநிலம் முழுவதும் குற்ற நிகழ்விடப் பார்வையில் புலனாய்வு அதிகாரி களுக்கு, புலனாய்வில் உரிய அறிவியல் தடயங்களை சேகரிப்பதில் பெரிதும் உதவிபுரிந்து வருகின்றது.

* தடய அறிவியல் துறை 30.07.2008 அன்று முதல் புதிய கட்டட வளாகத்தில் இயங்கி வருகிறது. மேலும், 111 இலட்சம் ரூபாய் செலவில் நவீன நூலகம், கலந்தாய்வுக் கூடம் மற்றும் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கான கட்டடப் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது.

* 01.12.2007லிருந்து இவ்வாய்வகத்தில் கணினி சம்பந்தப்பட்ட குற்றங்களை கண்டுபிடிப்பதற்கான தடய கணினியில் என்ற புதிய ஆய்வகப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது .

* சில கொலை வழக்குகளில் சந்தேகப்படும் நபர் குற்றம் புரிந்துள்ளாரா இல்லையா என நிரூபிக்க குற்றவாளியின் குரல் ஒரு முக்கிய சாட்சியாக அமைகிறது. தடய அறிவியல் துறையின் இயற்பியல் பிரிவில் சம்பந்தப்பட்ட குரல் தடயங்களை ஒப்பிட உதவும் அதிநவீன கருவி மூலம் குற்றவாளி அடையாளம் காணப்பட்டு அறிக்கைகள் வழங்கப் பட்டு வருகின்றன. இதற்காக இயற்பியல் பிரிவிற்கு ஒலிநாடா பரிசோதனைக்கென ரூ.10 இலட்சம் செலவில் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

* அரசின் ஆணைப்படி தென் மாவட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திட மதுரை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தில் புதிதாக ஆவணப் பிரிவு ஒன்று 01.12.2007இல் தொடங்கப்பட்டு வழக்கு தடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

* 13.05.2006 முதல் 31.03.2010 வரை 26 நபர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

* * *



# வரலாற்றில் முத்திரை பதித்த சட்டப்பேரவைக் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

★ 12.05.2007 அன்று வெளியான அறிவிப்பைத் தொடர்ந்து சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்டுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்தது. இக்கட்டடம் 2 மாடி பணிகள் முடிவுற்ற நிலையில் 13.03.2010 அன்று திறக்கப்பட்டுள்ளது. 2009–2010 கொள்கை விளக்கக் குறிப்பில் உறுதியளித்தவாறு 2010–2011 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புதிய சட்டப்பேரவைக் கட்டடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் தொகுதி "ஏ" எனப்படும் புதிய சட்டமன்றப் பேரவைக் கட்டடமும், தொகுதி "பி" எனப்படும் தலைமைச் செயலகக் கட்டடமும் அமைகின்றன. தொகுதி ஏ – கட்டடத்துக்கு அரசு ரூ.426 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளித்தது. தொகுதி – பி கட்டடம் கட்டுமானத்துக்காக அரசு ரூ.280 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

★ சேலத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை ரூ.116 இலட்சத்தில் கட்டும் பணி முடிவுற்றது.

★ கோவையில் மிக மிக முக்கியப் பிரமுகர்களுக்கு கூடுதலாக இரண்டு அறைகள் சுற்றுலா மாளிகை வளாகத்தில் ரூ.44 இலட்சத்தில் கட்டும் பணி முடிவுற்றது.

★ ரூ.100 இலட்சம் மதிப்பில் தஞ்சாவூரில், கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

★ சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 'சி' பிரிவு அரசு ஊழியர் குடியிருப்பு (4 பிளாக்) மூன்று







*ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள புதிய சட்டப்பேரவை, தலைமைச் செயலக வளாகத் திறப்பு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.*

*உடன் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி.சோனியா காந்தி அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளனர் (13.3.2010)*

தளக்கட்டடம் (24 எண்ணிக்கை) ரூ.118.30 இலட்சம் மதிப்பில் கட்டும் பணி முடிவுற்றது.

★ சென்னை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் தலா ரூ.20 இலட்சம் செலவில் கட்டும் பணி முடிவுற்றது.

★ சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில், அரசு ஊழியர்களுக்கு 2 தொகுதிகளாக "சி" பிரிவு குடியிருப்புகள் (12 எண்ணிக்கை) கட்டும் பணிக்கு ரூ.65 இலட்சம் செலவில் கட்டும் பணி முடிவுற்றது.

★ சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில், அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் (126 எண்ணிக்கை) கட்டும் பணிக்கு ரூ.15 கோடி செலவில் கட்டும் பணி நடைபெறுகிறது.

★ சென்னையில் கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெறுகிறது.

★ 2007–2008 வரவு செலவு கூட்டத் தொடரில் சென்னையில் சர்வதேச தரத்துடன் நவீன மாநில நூலகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பணிக்கு அரசு ரூ.171.78 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் ஐந்து மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவற்றில், இரண்டு மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் திறக்கப் பட்டுள்ளன.

★ ரூ.91.26 கோடி செலவில், தருமபுரியில் மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டம்–1 பணிகள் முடிக்கப்பட்டு, கட்டடங்கள் 19.01.2010இல் திறக்கப்பட்டுள்ளன.

★ ரூ.98.81 கோடி செலவில், விழுப்புரத்தில் மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புறநோயாளிகள் கட்டடம் மற்றும் நிருவாகக் கட்டடம் ஆகியவற்றின் பணிகள் முடிவுற்று, கட்டடங்கள் 07.03.2010இல் திறக்கப் பட்டுள்ளன.

★ ரூ.92.87 கோடி செலவில், திருவாரூரில் மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மருத்துவமனைக் கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

★ ரூ.97.70 கோடி செலவில், சிவகங்கையில் மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டம்–1 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ பெரம்பலூரில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

★ மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனையை ரூ.22.06 கோடி செலவில் விரிவுபடுத்தும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

★ சேலத்தில் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் ரூ.14.66 கோடி செலவில் புதிய மருத்துவக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னை எழும்பூரில் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் ரூ.56.32 கோடி செலவில் சிறப்பு மையக் கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ சென்னை திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் ரூ.16.65கோடி செலவில் சிறப்பு மையக் கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் ரூ.13.66 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ எழும்பூரில் குழந்தைகள் மருத்துவமனையில் ரூ.13.83 கோடி செலவில் கூடுதல் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னை இராயப்பேட்டை மருத்துவமனைக்கு ரூ.13.83 கோடி செலவில் அறுவை சிகிச்சை அரங்கு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு ரூ.16.68 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் (விரிவுரையாளர்கள் கட்டடம், தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், இரத்தவங்கி கட்டடம், புற நோயாளிகளுக்கான கட்டடம்) கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னை ஸ்டான்லி கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.14.75 கோடி செலவில் இளங்கலை (250 மாணவர்கள்) மற்றும் முதுகலை (250 மாணவர்கள்) பயிலும் மருத்துவ மாணவர்களுக்கான விடுதிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.14.50 கோடி செலவில் அறுவை சிகிச்சைக்கான கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தேனி, வேலூர், ஆசாரிப்பள்ளம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மருத்துவமனைகள் மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் கட்டடங்கள் ரூ.205 கோடியில் கட்டப்பட்டுள்ளன.

★ ரூ.196.97 கோடி செலவில், உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சுகாதார முறைகள் திட்டம், கட்டம்–2இன் கீழ் 191 அரசு வட்ட / மாவட்ட மருத்துவமனைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 170 மருத்துவமனைப் பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்படும்.

**நீதிமன்றக் கட்டடங்கள்**

★ சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் களுக்கான கட்டடம் ரூ.5.70 கோடி செலவில் அமைய உள்ளது.

★ ரூ.24.75 கோடி செலவில் மதுரை கிளை உயர்நீதிமன்றம் ஊழியர்களுக்கான 272 குடியிருப்புக் கட்டடப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

★ குடியாத்தத்தில் ரூ.4.40 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ தாம்பரம், பெரம்பலூர் மற்றும் கொடைக்கானலில் ரூ. 13.84 கோடியில் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

★ வேடசந்தூரில் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள், முக்கிய விருந்தினர் தங்கும் விடுதி மற்றும் குடியிருப்புகள் ரூ. 2.25 கோடி செலவில் கட்டும் பணி முடிவுற்றது.

★ வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ரூ.4.97 கோடி மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம், தேனியில் ரூ.3.57 கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ நாமக்கல், கரூர், அருப்புக்கோட்டை, சிவகங்கை, ஈரோடு, அறந்தாங்கி, பூந்தமல்லி, பரமக்குடி, கடலூர், கும்பகோணம், ஆலந்தூர் ஆகிய 11 இடங்களில் ரூ.72.97 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ தூத்துக்குடி, உத்தமபாளையம், சங்ககிரி, திருமயம், பவானி, ஆத்தூர், கள்ளக்குறிச்சி, திருச்செந்தூர், ஆம்பூர், அரக்கோணம், வள்ளியூர், பத்மநாபபுரம், திருவையாறு உள்பட 19 இடங்களில் ரூ.88.37 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

★ சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ரூ.25 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றது. தற்பொழுது நான்காவது தளப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ அரியலூரில் ரூ.12.88 கோடி செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருச்சியில் ரூ.12.01 கோடி செலவில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தருமபுரியில் ரூ.2.39 கோடி செலவில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருத்தணி, தண்டாரம்பட்டு, வேலூர், கடலூர், திட்டக்குடி, திருச்சி, தரங்கம்பாடி, சிவகங்கை, திருப்பத்தூர், ஆத்தூர், சங்கரன்கோவில் ஆகிய 11 இடங்களில் ரூ.19.22 கோடி செலவில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ 29 இடங்களில் ரூ.4.52 கோடி செலவில் வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 16 இடங்களில் ரூ.1.32 கோடி செலவில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ (2007–2008) 11 இடங்களில் ரூ.15.57 கோடி செலவில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இளுப்பூர், கங்கவல்லி, தொட்டியம், வீரகேரளம்புதூர், குளித்தலை, கல்குளம், பந்தலூர் ஆகிய 7 இடங்களில் பணிகள் முடிவுற்று கட்டடங்கள் ஒப்படைக்கப்பட்டன. பரமக்குடி, காரியாப்பட்டி ஆகிய 2 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. குந்தாவில் பணி தொடங்கப் பட்டுள்ளது. வாழப்பாடியில் பணித்தளம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன.

★ 4 இடங்களில் ரூ.1.40 கோடி செலவில் மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் பணிகள் முடிவுற்றன. நாகபட்டினத்தில் இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. உதகமண்டலத்தில் ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ கோட்ட வருவாய் அலுவலர் குடியிருப்புகள் ரூ.1.19 கோடி செலவில் கட்டும் பணி திண்டுக்கல், பழனி, லால்குடி, ஆத்தூர், திருச்செந்தூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் பணிகள் முடிவுற்று, மதுராந்தகத்தில் அடித்தளப் பணி நடைபெற்று வருகின்றது.

★ கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலியில் ரூ16.60 கோடி செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டப்பட்டுள்ளது.

★ திருக்கழுக்குன்றம், கீழ்வேலூர், ஆலங்குளம், ஸ்ரீரங்கம், மணச்சநல்லூர், காட்டுமன்னார்கோயில், திருக்குவளை, காட்பாடி மற்றும் மணமேல்குடி ஆகிய இடங்களில் ரூ.8.90 கோடி மதிப்பில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றன.

**நபார்டு திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டடப் பணிகள்**

★ நபார்டு வங்கியின் கடன் உதவியால் அரசின் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளான கூடுதல்

வகுப்பறைகள் கட்டுதல், பரிசோதனைக் கூடம், குடிநீர் மற்றும் கழிவறை போன்ற இன்றியமையாத பணிகளை மேற்கொள்ளும் திட்டத்தை கடந்த நான்கு ஆண்டுகளில், கட்டம்–6 முதல் கட்டம்–10 வரை படிப்படியாக மேற்கொண்டு வருகிறது.

★ இத்திட்டத்தின் கட்டம்–6இன் கீழ், ரூ.161.32 கோடி செலவில், 232 பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இவற்றில் 223 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்படும்.

★ கட்டம்–7இன் கீழ், ரூ.131.69 கோடி செலவில், 194 பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 172 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்படும்.

★ கட்டம்–8இன் கீழ், ரூ.63.36 கோடி செலவில், 59 பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 1 பள்ளியில் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்படும்.

★ கட்டம்–9இன் கீழ், ரூ.410.74 கோடி செலவில், 362 பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 11 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்படும்.

★ மேலும், கட்டம்–10இன் கீழ், ரூ.247.06 கோடி செலவில், 303 பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் கட்டம் ஆறிலிருந்து கட்டம் ஒன்பது வரை 847 பள்ளிகள் மேம்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டு 407 பள்ளிகளில் பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் இவ்வாண்டில் நிறைவுறும்.

★ 416 பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் ரூ. 131.04 கோடி செலவில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 340 பணிகள் முடிவுற்றன.

★ 50 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் ரூ. 32.15 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. 9 பணிகள் முடிவுற்றன.

★ 25 பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் ரூ. 13.685 கோடி செலவில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## நீர்வள ஆதாரத்துறை

### மேட்டூர் அணை

★ 2006ஆம் ஆண்டு மேட்டூர் அணை ஜூன் மாதம் 12ஆம் நாள் பாசனத்திற்காகத் திறக்கப்பட்டது. மேட்டூர் அணை 2007ஆம் ஆண்டு 52 நாட்கள் அதன் முழு கொள்ளளவாகிய 120 அடியை அடைந்து நிரம்பியது. 2008ஆம் ஆண்டு மொத்தம் 216 நாட்களும், 2009–10ஆம் ஆண்டு மொத்தம் 185 நாட்களும் பாசனத்திற்காகத் திறக்கப்பட்டது.

### பாசனத் திட்டங்கள்

★ 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் ரூ.30 கோடி செலவில் காவிரி டெல்டா பகுதிகளில் கால்வாய்கள், வாய்க்கால்கள், வடிகால்கள் போன்றவற்றில் 511 தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2009ஆம் ஆண்டு காவிரி டெல்டா பகுதிகளில் கால்வாய்கள், வாய்க்கால்கள், வடிகால்கள் போன்றவற்றில் 322 தூர்வாரும் பணிகள் ரூ.10 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன.

★ 2010ஆம் ஆண்டு காவிரி டெல்டா பகுதிகளில் கால்வாய்கள், வாய்க்கால்கள், வடிகால்கள் போன்றவற்றில் 378 தூர்வாரும் பணிகள் ரூ.12 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு முதற்கட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ நீண்ட காலமாக நிலுவையிலிருந்த 12 திட்டப்பணிகள் ரூ.396.47 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலமாக 19,303 எக்டர் ஆயக்கட்டிற்கு பாசனம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

★ ரூ.259.12 கோடி மதிப்பீட்டில் 6 பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 190 ஊரக சட்டப் பேரவைத் தொகுதிகளின் சட்டப் பேரவை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட பொதுப்பணித்துறையின் 365 முறைசாரா ஏரிகள் ரூ.34.81 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டன.

★ ரூ.12.43 கோடி மதிப்பீட்டில் 5 பாசனத் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

★ ரூ.27.60 கோடி மதிப்பீட்டில், ஈரோடு மாவட்டம், கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மைல் 26/5.420–இல் உள்ள பாலத்தின் மறு கட்டுமானப் பணி, கடலூர் மாவட்டத்தில் வெலிங்டன் நீர்த்தேக்கத்தை புனரமைத்து பலப்படுத்தும் பணி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெருங்குடி கண்மாயினை புனரமைத்தல், சேலம் மாவட்டம் மேட்டூரில் உள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் பவள விழாவினை கொண்டாடுதல் மற்றும் மேட்டூர் அணையின் பவள விழா நினைவுக் கட்டடம் அமைத்தல், சேலம் மாவட்டத்தில் பூலாவாரி அணைக்கட்டின் பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்துதல், திண்டுக்கல் மாவட்டத்தில் சங்குலியான்கோயில் ஓடை–சின்னாத்து ஓடையின் குறுக்கே கண்மாய் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ இடுக்கி மாவட்டத்தில் தேக்கடி தலை மதகில் உள்ள சுரங்க நுழைவாயிலின் மேல்புறம் 130 மீட்டரில் புதிய கூளம் தடுக்கும் அமைப்பு (Trash Rack) அமைத்தல் 0.60 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**பகுதி II திட்டங்கள்**

★ 2006–2007ஆம் ஆண்டு முதல் 2009–2010 வரை ரூ.60.48 கோடியில் 88 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM)**

★ உலக வங்கி நிதியுதவியுடன், ரூ.2,547 கோடி மதிப்பீட்டிலான நீர்வள நிலவளத் திட்டம், 63 உப வடிநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நீர்வள ஆதாரத் துறையின் சார்பில் ரூ.1,570 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 6.17 இலட்சம் எக்டர் பாசனப்பரப்பு பயன்பெறும்.

★ இதுவரை 1,443 ஏரிகள் மற்றும் 279 அணைக்கட்டுகள் புனரமைக்கும் பணியும், 2,992 கி.மீ. நீளமுள்ள வரத்து வாய்க்கால்களை தூர்வாரி செப்பனிடும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டத்தின், துவக்கத்திலிருந்து விவசாயிகள் கலந்து ஆலோசிக்கப்பட்டு திட்ட வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், நீர்வள ஆதாரத் துறையின் பொறியாளருக்கும் அலுவலகங் களுக்கும் 330 மடிக்கணினிகள், 252 நவீன புகைப்பட கருவிகள், 146 நிகரிகள், 158 நகல் எடுக்கும் கருவிகள், 1,565 கணினிகள், 1,137 கணினி அச்சுப்பொறிகள் மற்றும் 49 ஊடுருவி படம் எடுக்கும் கருவிகள் வழங்கினார்கள்.

**பங்கேற்பு பாசன மேலாண்மை**

★ நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பாசன பகுதிகளில் 161 பகிர்மானக் குழுக்கள் 2008ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன.

★ மேலும் 9 பெரிய பாசன அமைப்புகளில் 9 திட்டக் குழுக்கள் 2008ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. இந்தியாவில், பங்கேற்பு பாசன மேலாண்மை செயல்படுத்தப்படும் மாநிலங்களில் இது ஒரு முன்னோடியான முயற்சியாகும்.

★ நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதங்கள் நீட்டிக்க தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மை (திருத்தம்) சட்டம், 2009 இயற்றப்பட்டுள்ளது.

★ ஜூன் 2009இல் இச்சங்கங்களின் 5½ ஆண்டு பதவிக்காலம் முடிவுற்றதால் 2009இல் தேர்தல் நடத்தப்பட்டு 1,536 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் மீண்டும் அமைக்கப்பட்டன.

★ இதேபோன்று 157 பகிர்மானக் குழுக்கள் மற்றும் 9 திட்டக் குழுக்களும் மீண்டும் அமைக்கப்பட்டன.

★ நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் 2,271 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டன.

★ தேர்ந்தெடுக்கப்பட்ட 2,050 நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர்களுக்கு திருச்சி, பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தின் வாயிலாக திறனாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**நபார்டு வங்கியின் உதவி பெறும் பணிகள்**

★ RIDF IX முதல் XV வரை ரூ.208.27 கோடி மதிப்பீட்டில் 157 முறைசாரா ஏரிகள் உட்பட 171 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

★ RIDF X இன் கீழ் ரூ.155.22 கோடி மதிப்பீட்டிலான 250 முறைசாரா ஏரிகள் உட்பட 285 பணிகளில் 30 பணிகள் மற்றும் 248 முறைசாரா ஏரிகளின் பணிகள் முடிக்கப்பட்டன. 1 பணி நடைபெற்று வருகின்றது. 2 முறைசாரா ஏரிகள் உட்பட 6 பணிகள் கைவிடப்பட்டன.

★ RIDF XIஇன் கீழ் ரூ.92.87 கோடி மதிப்பீட்டிலான 96 முறைசாரா ஏரிகள் உட்பட 114 பணிகளில் 15 பணிகள் மற்றும் 95 முறைசாரா ஏரிகளின் பணிகள் முடிக்கப்பட்டன. 1 பணி நடைபெற்று வருகின்றது. 1 முறைசாரா ஏரி உட்பட 3 பணிகள் கைவிடப்பட்டன.

★ RIDF XII – இன் கீழ் ரூ.24.04 கோடி மதிப்பீட்டிலான 32 பணிகளில் 26 செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன. 6 பணிகள் கைவிடப்பட்டன.

★ RIDF XIII – இன் கீழ் ரூ. 387.17 கோடி மதிப்பிலான 55 பணிகளில் ரூ.224.19 கோடி, 25 நிரந்தர வெள்ளப் பாதுகாப்புப் பணிகளுக்கும், ரூ.37.68 கோடி இரண்டு நீர்ப்பாசனத் திட்டப் பணிகளுக்கும், ரூ. 119.67 கோடி கல்லணைக் கால்வாயினைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் ரூ. 5.63 கோடி சிவகங்கை மாவட்டதில் 27 கண்மாய்களைச் சீரமைப்பதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

★ RIDF XV – இன் கீழ் ரூ. 129.85 கோடி மதிப்பிலான 7 நீர்ப்பாசனத் திட்ட பணிகளும் மற்றும் 1 குடமுருட்டி வெள்ள பாதுகாப்புப் பணி உட்பட 8 திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 2 நீர்ப்பாசன திட்ட பணிகளும் 1 நிரந்தர வெள்ள பாதுகாப்புப் பணியும்

நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 5 பணிகளும் விரைவில் துவங்கப்படவுள்ளது.

★ பொதுப்பணித்துறையின் ஏரிகளைப் பாதுகாத்திட "தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம் 2007 (தமிழ்நாடு சட்டம் 8/2007) இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் 01.10.2007 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டு இதுவரை 2,805 ஏரிகள் முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளன.

★ 2007–2008ஆம் ஆண்டு அணைக்கட்டுகள், வரத்து வாய்க்கால்கள், கால்வாய்களைப் புனரமைத்தல், கால்வாய்களில் சிமெண்ட் காரைபூசுதல் ஏரிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள பதினோரு பாசனத் திட்டங்களுக்கு ரூ.12.08 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 10 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டு ரூ.5.39 கோடி மதிப்பீட்டில் 1 பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

★ 2009–2010ஆம் ஆண்டு 2 பணிகள் ரூ. 1.50 கோடிக்கு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

★ நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட நீர்வள ஆதார உள் கட்டமைப்புகளைப் புனரமைப்பதற்கு உலக வங்கியின் உதவியுடன் 10 பணிகள் ரூ.22.23 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

**மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைத்தல்**

★ இவ்வரசு மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதன் அடிப்படையில் காவிரி – அக்னியாறு – தெற்கு வெள்ளாறு – மணிமுத்தாறு – வைகை – குண்டாறு; தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு; பெண்ணையாறு – செய்யாறு ஆகிய 3 இணைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, இதில் காவிரி குண்டாறு இணைப்பின் ஒரு பகுதியான காவிரியின் குறுக்கே கட்டளை கதவணை கட்டும் பணிக்கான ரூ.189 கோடி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தாமிரபரணி கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்காக ரூ.369 கோடி அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கருத்துரு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

★ பெண்ணையாற்றுடன் செய்யாற்றை இணைக்கும் திட்டத்திற்கான ரூ.174 கோடிக்கான கருத்துரு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**கடலரிப்புத் தடுப்புப் பணிகள்**

★ 33 கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்கு ரூ.50 கோடி மானியம் தமிழ்நாட்டிற்கு பெறப்பட்டு 32 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ 2007ஆம் ஆண்டு மாநில நிதி ஆதாரத்துடன் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் 3 புதிய கடலரிப்பு தடுப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ "திறந்த வெளிக் கிணறுகளின் மூலமாக செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டல்" என்ற திட்டத்தை செயல்படுத்தும் 7 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் சென்னை, அரியலூர், நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர, இதர மாவட்டங்களைச் சார்ந்த அதிநுகர்வு, அபாயகரம் மற்றும் மிக அபாயகரம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள 232 ஒன்றியங்களில் இத்திட்டம் ரூ.509 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை நடைபெற்ற 5 மாநில அளவிலான வழிநடத்தும் குழுமக் கூட்டங்களின் 35,3212 கிணறுகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 19,510 செயற்கை முறை நீர்ச்செறிவு கட்டுமான அமைப்புகள் பயனாளிகளால் கட்டப்பட்டுள்ளன.

**கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்**

★ சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம் வசதியளிக்கிறது. 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் முறையே 5.184 டி.எம்.சி. மற்றும் 4.604 டி.எம்.சி. நீர் ஆந்திர மாநிலத்தில் இருந்து பெறப்பட்டது. கண்டலேறு பூண்டி கால்வாயில் புனரமைப்புப் பணிகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக 2009–10 ஆம் ஆண்டில் 7.016 டி.எம்.சி. நீர் பெறப்பட்டுள்ளது.

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புக் குழுமம் (JNNURM)**

★ சென்னை மாநகரில் வெள்ளப் பாதிப்பினைத் தணிக்க, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரிநல்லா, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் வடிகால், கூவம் மற்றும் அடையாறு ஆகிய நீர்வழித்தடங்களை சீரமைக்க, ஒருங்கிணைந்த விரிவான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இது ஒரு மத்திய மாநில அரசுகளின் கூட்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 1,447. 91 கோடியாகும். இதில் நீர்வள ஆதார துறைக்கு ரூ.633.03 கோடியும், சென்னை மாநகராட்சிக்கு ரூ.814.88 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் துவங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



நெய்வாசல் தென்பாதி வாய்க்கால், கீழவஸ்தாச்சாவடி, தஞ்சாவூர் மாவட்டம்

**மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்**

★ நிலத்தடி நீரின் நிரந்தர மேம்பாட்டிற்கு 1,774 தெரிவு செய்யப்பட்ட கிணறுகளிலும் 1,165 ஆழ்துளைக் கிணறுகளிலும் நிலத்தடி நீர் மட்டம் கண்காணிக்கப்படுகிறது. ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் 4,148 நிலத்தடி நீர் மாதிரிகளை சேகரித்தும் ஆய்ந்தும் அதன் தன்மைகளைப் பொறுத்து அவை குடிநீர், தொழில் துறை மற்றும் பாசனங்களுக்கு உகந்தவையா என அறியப்படுகிறது. 2,800 கிராமங்களில் நில நீரியல், புவி பௌதீகவியல் விவரங்களை தெரிந்து கொள்ள ஏதுவாக சிறிய நீர் பிரிவு முகடுகள் (Mini Watershed) அமைக்கப்பட்டன. கடலோரப் பகுதிகளில் உள்ள 188 திறந்த வெளிக் கிணறுகளிலும் 180 ஆழ் துளைக் கிணறுகளிலும் உப்பு நீர் ஊடுருவல் தொடர்பான கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

**நீரியல் திட்டம் – II (Hydrology Project - II)**

★ இத்திட்டமானது ரூ.25.47 கோடியில் உலக வங்கி நிதியுதவியுடன் 2006ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து ஆற்று வடிநிலங்களிலும் நீர்வள ஆதாரத்துறையின் மேலாண்மையைக் கண்டறியும் நீரியல் வடிவமைப்பு இதில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் காலம் ஏப்ரல் 2006 – ஜூன் 2012 ஆகும். நீரியல் திட்டம் 1இன் மூலம் உருவாக்கப்பட்ட நீரியல் விவரங்கள் இத்திட்டத்தில் பயன்படுத்தப் படும்.

**பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்**

★ திருச்சி, துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், பொதுப்பணித்துறை, வேளாண்மைத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பாசன மேலாண்மை மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது. 2006 –07ஆம் ஆண்டில் 55 பயிற்சிகளும் 2007–08ஆம் ஆண்டில் 45 பயிற்சிகளும், 2008–09ஆம் ஆண்டில் 48 பயிற்சிகளும், 2009–10ஆம் ஆண்டில் 52 பயிற்சிகளும் நடத்தப் பட்டன.

**மணல் குவாரி**

★ 13.05.2006 முதல் 31.03.2009 வரை மணல் விற்பனையின் மூலம் அரசுக்கு ரூ.374.24 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 01.04.2009 முதல் 31.03.2010 வரை மணல் விற்பனையின் மூலம் அரசுக்கு ரூ.142.29 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

★ ★ ★



# சமூகப் பாதுகாப்புறுதித் திட்டங்களுக்கு கூடுதல் நிதி

மாண்புமிகு நிதியமைச்சர்
பேராசிரியர் **க.அன்பழகன்** அவர்கள்

★ **2010–2011** வரவுசெலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்புறுதித் திட்டங்களுக்கு முன் எப்போதும் இல்லாத உயரளவாக ரூ.17,858 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ **2010–2011** வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மூலதனச் செலவுத் திட்டங்களுக்கு முன் எப்போதும் இல்லாத உயரளவாக ரூ.12,285 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ **2007–2008, 2008–2009,** மற்றும் **2009–2010** ஆம் ஆண்டுத் திட்டச் செலவு இலக்கினை மாநில அரசு எய்தியுள்ளது. **2010–2011** ஆம் ஆண்டுத் திட்டம் ரூ.20,000 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

★ 2010–2011 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடர் துணைக் கூறு திட்டத்திற்கான ஒதுக்கீடு 19 சதவீதத்தை கடந்துள்ளது. இது 'மத்திய திட்டக் குழுவின் வழிகாட்டு'QP நெறிமுறைகளை நிறைவு செய்துள்ளது.

★ திருத்திய ஊதிய விகிதங்கள் / ஒய்வூதியம் 1.1.2006 முதல் நடைமுறைப்படுத்தியும் 1.1.2007 முதல் பணப்பயன் அளித்தும் வெளியிடப்பட்டுள்ளதன் விளைவாக ஆண்டொன்றுக்கு கூடுதல் தொடர் செலவினமாக ரூபாய் 5,155.79 கோடி அரசு அனுமதித்துள்ளது. அரசு அலுவலர்களுக்கும் ஒய்வூதியர்களுக்கும் திருத்திய ஊதிய நிர்ணய நிலுவைத் தொகை மற்றும் ஒய்வூதிய நிலுவைத் தொகை வழங்கும் வகையில் இவ்வரசு ரூ.11,093 கோடி கூடுதல் செலவு மேற்கொள்ளவுள்ளது.

★ அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஒய்வூதிய தாரர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப் படியை 01.01.2010 முதல் 27 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக மத்திய அரசுக்கு இணையாக உயர்த்தி வழங்கப்பட்டது.

★ அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு 2008–2009ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் சிறப்பு மிகை ஊதியம் (Special Adhoc Bonus) 2010 ஆண்டின் பொங்கல் பரிசாக வழங்கிட ஆணை வெளியிடப்பட்டது.

★ அனைத்து ஒய்வூதியதாரர்கள் / குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கும், 2009ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசாக ரூ.300 வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டு, இது 2010ஆம் ஆண்டின் பொங்கல் திருநாளுக்கு ரூ.500ஆக உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

★ தமிழக அரசு ஊழியர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் 15.07.2007 அன்று அறிவித்ததையொட்டி அரசுப் பணியாளர்கள், வரையறுக்கப்படாத ஊதிய ஏற்ற முறையில் பணிபுரியும் சத்துணவுப் பணியாளர்கள், கிராம உதவியாளர்கள் போன்றோரும், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள், மாநில அரசின் கீழ் வரும் பல்கலைக்கழகங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்கள் ஆகியவற்றின் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் நான்காண்டு காலகட்டத்தில் உயரளவாக ரூ.2 இலட்சம் அளவிற்கு மருத்துவக்காப்பீடு பயன்பெறும்படியான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 11.06.2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 76,611 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள சிகிச்சைகளுக்கு ரூ 234.90 கோடி அளவிற்கு காப்புறுதிப் பயன் பெற்றுள்ளனர்.

☆ புதிய அரியலூர் மாவட்டக் கருவூலம் 5.4.2010 முதலும், புதிய திருப்பூர் மாவட்டக் கருவூலம் 1.4.2010 முதலும், புதிய பாப்பிரெட்டிபட்டி சார் கருவூலம் 3.2.2009 முதலும் செயல்பட்டு வருகிறது.

☆ சங்கராபுரம் சார் கருவூலம் 13.10.2008 முதல் புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. கமுதி சார் கருவூலம் 23.2.2009 முதல் புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

☆ ☆ ☆



# விரைந்து செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள்

மாண்புமிகு நிதியமைச்சர்
பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள்

* 2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.12,500 கோடி. இது, 2005–2006ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை விட 37 விழுக்காடு அதிகமாகும். 2007–2008ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.14,000 கோடி. இது, 2006–2007ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டை விட 12 விழுக்காடு அதிகமாகும். 2008–2009ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.16,000 கோடி. இது, 2007–2008ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டை விட 14 விழுக்காடு அதிகமாகும். 2009–2010ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.17,500 கோடி. இது, 2008–2009ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டை விட 9 விழுக்காடு அதிகமாகும்.

* 2010–2011ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்ட ஒதுக்கீடு ரூ.20,000 கோடி. இது மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவர்–முதலமைச்சர் நிலையில் புதுடெல்லியில் நடைபெறவுள்ள கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இறுதி செய்யப்படும்.

* தமிழ்நாட்டிற்கான பதினோராவது ஐந்தாண்டுத் (2007–2012) திட்டத்திற்கு ரூ.85,344 கோடி அளவில் மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டக் காலத்தில், மாநிலப் பொருளாதாரத்தை ஆண்டொன்றிற்கு சராசரியாக 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அரசு, திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

* நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2006–2007 மற்றும் 2007–2008ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு ரூபாய் 35.50 கோடியும், 2008–2009 மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுகளுக்கு முறையே ரூபாய் 42.93 கோடியும் சிறப்பு மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப் பட்டது. 2010–2011 ஆம் ஆண்டிற்கு ரூ.42.93 கோடிக்கு திட்டங்களை செயல்படுத்த மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

* 413 நீர் சேகரிப்புக் கிணறுகள் அமைத்தல், 1,325 தடுப்பணைகள், நீர் அறுவடை அணைகள் மற்றும் வெற்றுக்கல் தடுப்பணைகள் அமைத்தல், 20,785 மீட்டர் நீளப்பகுதி கால்வாய் அகலப்படுத்தி ஓரத்தில் மரங்கள் நடுதல், கம்பி வலையுடன் கூடிய கல் தடுப்பணைகள் அமைத்தல், 705 ஹெக்டேர் பரப்பளவில் படிமட்டத்தில் புல் வளர்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* 964 ஹெக்டேர் பரப்பளவிற்கு சோலை மற்றும் இதர காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* 1,155 கி.மீ. நீளத்திற்கு வனத் தீ தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* நகர்ப்பகுதிகளில் 16,000 எண்ணிக்கையில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

* 2,50,000 எண்ணிக்கையிலான சில்வர் ஒக் மற்றும் சோலை மரக்கன்றுகள் உற்பத்தி செய்து வினியோகிக்கப்பட்டது.

* 9,120 எக்டேர் பரப்பளவில் பயிரிட உயர்ரக இறக்குமதி செய்யப்பட்ட காய்கறி விதைகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டன.

* 390 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின் மற்று பவர் டில்லர்கள் வழங்கப்பட்டன.

* 12 எண்ணிக்கையிலான உலர் நிலையம் மற்றும் மழைக்கான தங்கும் அறைகள் அமைக்கப்பட்டன.

* 47 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* நீலகிரி மாவட்டத்திலுள்ள 4 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், 35 ஊராட்சிகள் மற்றும் 1 கண்டோன்மண்ட் பகுதிகளில் ஒய்வு அறை, அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம், சமையலறை, கூடுதல் அறைகள் கட்டும் பணிகளும், பொதுக் கழிப்பிடங்கள், சாலைகள் அமைத்தல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், குடிநீர்ப் பணிகள், பாலங்கள் அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* ரூ.1,751.02 இலட்சத்தில் தெரு விளக்குகள், நடைபாதைகளை மேம்படுத்துதல், சாலை வசதிகள், கழிவுநீர் மற்றும் மழைநீர்கால்வாய்கள் போன்ற அடிப்படை கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக குறைந்த செலவிலான 1,279 தொகுப்பு வீடுகள் கட்டுதல் மற்றும் 400 எண்ணிக்கை கச்சா வீடுகள் பழுதுபார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

* மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் ஆண்டொண்டிற்கு ரூ.17.04 கோடியும், 2008–2009 மற்றும் 2009–2010ஆம் ஆண்டிகளில் ஆண்டொண்டிற்கு ரூ.20.61 கோடியும் மத்திய அரசின் சிறப்பு மத்திய நிதியுதவியுடன் செயல் படுத்தப்பட்டது. 2010–2011ஆம் ஆண்டிற்கும் ரூ.20.61 கோடி சிறப்பு மத்திய நிதியுதவி வழங்கியுள்ளது.

* 4,583 ஹெக்டேர் பரப்பளவில் 7,290 மண்வள பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
* 529 ஹெக்டேர் பரப்பளவில் பல்வேறு தோட்டக்கலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
* 1,191 ஹெக்டேர் பரப்பளவில் உயிரின வாழ்க்கைச் சூழல் சீரமைப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் நிலைப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
* 49.36 கி.மீ. தூரத்திற்கு சாலைத் தடுப்புச் சுவர் கட்டுதல் மற்றும் சாலைப் பணிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
* ரூ.1,278.83 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், உயிரியல் பண்ணைத் திட்டம், சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் குழாய்களை விரிவு படுத்துதல், சிறு பாலம் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

* சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் வழித்தடம் வண்ணாரப்பேட்டையிலிருந்து சென்னை விமான நிலையம் வரையிலும், இரண்டாவது வழித்தடம் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் புனித தோமையார்மலை வரையிலும் அமைக்கப்படுகிறது.
* கோயம்பேடு முதல் அசோக்நகர் வரையிலான 4.5 கி.மீ. நீளத்திலான உயர்த்தப்பட்ட வழித்தடக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர அசோக்நகர் முதல் புனித தோமையார்மலை வரையிலும் மற்றும் சைதாப்பேட்டையிலிருந்து இராணுவ அலுவலர் பயிற்சி மையம் வரையிலும் 9.6 கி.மீ. நீளத்திற்கான உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் அமைப்பதற்கான பணி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.
* சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் வழித்தடத்தை வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் வரை நீட்டிப்பது குறித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
* திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள துறைத் தலைமை அலுவலகங்களில் மாநிலத் திட்டக்குழு உள்பட, 13.05.2006 முதல் இதுநாள் முடிய மொத்தம் 149 புதிய பணி நியமனங்கள் (மாற்றுத் திறனாளிகள் உட்பட) செய்யப்பட்டுள்ளன.

✶ ✶ ✶



# செம்மொழிக்குச் சிம்மாசனம்

மாண்புமிகு நிதியமைச்சர்
**பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள்**

* தை முதல் நாளைத் தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்துத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டு, அறிவிக்கையும் உரிய அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் நடவடிக்கைகளாலும் வலியுறுத்தலாலும் மத்திய அரசு தமிழ் மொழியைச் "செம்மொழி" என அறிவித்தது. செம்மொழி நிறுவனத்தின் உயர்குழுக்களாக எண்பேராயமும், ஐம்பெருங் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

* செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் விருதுகள் அறிவிக்கப்பட்டன. விருதாளர்களுக்கு 28.3.2010 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பொற்கிழிகள் வழங்கப்பட்டன.

* மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் தம்முடைய சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கித் தமது பெயரில், 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை' எனும் பெயரில் அறக்கட்டளை ஒன்றை நிறுவி இதன் சார்பில், பண்டைய தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் பற்றிய புதிய கருத்துகளை ஆராய்ந்து செம்மொழித் தமிழாய்வுக்குச் சீரிய முறையில் பங்காற்றியுள்ள அறிஞர் அல்லது நிறுவனத்திற்குக் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' ஆண்டுதோறும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

* ஆட்சிமொழித் திட்டத்தினை முனைப்புடன் செயற்படுத்தும் நோக்கில் சிறப்பாய்வுத் திட்டத்தின் கீழ்த் தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

* தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டல / மாவட்ட நிலை அலுவலகங்களுக்கு இணைய வசதி மற்றும் விரிந்த அலைவரிசை வசதி செய்யப்பட்டு மின் ஆளுகைக்கு வழியமைக்கப்பட்டுள்ளது.

* இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் 31.3.2010 வரையிலான காலத்தில் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் மொத்தம் 43 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

* 88 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, இவர்களில் சான்றாவணம் அளித்த 81 தமிழ் அறிஞர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகையாக மாண்புமிகு முதல்வர் அவர்களால் 5.43 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டுமென்று நூறாண்டுகளுக்கு முன்பே முதற் குரல் கொடுத்தவரும், சூரிய நாராயண சாஸ்திரி என்ற தம் பெயரைத் தனித் தமிழில் மாற்றிக் கொண்டவருமாகிய பரிதிமாற் கலைஞர் அவர்கள் பிறந்த வீடு அரசு நினைவில்லமாக மாற்றப்பட்டுள்ளது.

* தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்களின் பெயர்த்தி திருமதி. சுந்தரத்தம்மை வயதான நிலையில் இன்னலுற்று வந்த நிலையைப் போக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவியாகவும் மருத்துவச் செலவிற்காகவும் ரூ.1.50 இலட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2.12.06 அன்று வழங்கப்பட்டது.

* திருமதி. சுந்தரத்தம்மை அவர்களின் மகள் செல்வி. சொ.கலைச்செல்வி அவர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் முதுநிலை ஒப்பச்சராக நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

* கடந்த 4 ஆண்டுகளாக திருவள்ளுவர் திருநாளில் திரு.வி.க. விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, திருவள்ளுவர் விருதுகள் உள்ளிட்ட விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

* அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் வகையில் ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்குக் 'கணியன் பூங்குன்றனார்' பெயரில் பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. 2007–08ஆம் ஆண்டிற்கான பரிசுக்கு "பனேசிய டீரீம் வீவர்ஸ் சாப்ட்வேர் (பி) லிமிடெட்" என்ற நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

* அறிவியல் தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

* அறிவியல் தமிழ் மன்றத்தின் முன்னாள் தலைவர் திரு. மணவை முஸ்தபா அவர்களின் மருத்துவச் சிகிச்சை தொடர்பாக அவருக்கு ஏற்பட்ட செலவினம் ரூ.1,00,191 சிறப்பு நேர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

* தமிழ் மாநிலம் அமைந்த பொன்விழா, 1.11.06 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது.

* திருக்குறளின் 1,330 குறட்பாக்களை முற்றோதல் செய்த 24 மாணவ, மாணவியரின் திறமையைப் பாராட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.1.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

* சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.10,000லிருந்து, ரூ.20,000ஆகவும் பதிப்பகத்தாருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.2,000லிருந்து, ரூ.5,000ஆகவும் உயர்த்தப்பட்டு பணப்பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

* உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்குமொழியாகப் பயன்படுத்தப்படக் குறிப்பிடத்தக்க வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* 2006–07ஆம் ஆண்டு முதல் இதுவரை 168 எல்லைக் காவலர்களுக்கும், 81 எல்லைக் காவலர்களின் மரபுரிமையாளர்களுக்கும், 999 தமிழறிஞர்களுக்கும் 582 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கும் நிதியுதவி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

* அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.500லிருந்து ரூ.1,000ஆக 1.9.2006 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2006–07இல் 16 தமிழறிஞர்களுக்கும், 2007–08இல் ஆண்டில் 12 தமிழறிஞர்களுக்கும், 2008–09இல் 15 தமிழறிஞர்களுக்கும் 2009–10இல் ஆண்டில் 23 தமிழறிஞர்களுக்கும் நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் நூல்கள் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

* ஆய்வறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியைக் கூர்ந்தாய்வு செய்து புதுக்கியும், பெருக்கியும் வெளியிடும் பணிக்காக ரூ.10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது..

* திராவிடப் பல்கலைக்கழகத்தில் பிற திராவிட மொழிகளுடனான ஒப்பாய்வுத் திட்டப் பணிகளுக்கும், தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளிலும் பிற திராவிட மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்திடும் திட்டப்பணிகளுக்காக, குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

* குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு பேராசிரியர், ஒரு இணைப் பேராசிரியர் மற்றும் இரு உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்களுக்குரிய செலவுகளுக்காக ஆண்டுதோறும் 12.15 இலட்சம் ரூபாய் வழங்கிட அரசு ஆணையிட்டு, இப்பல்கலைக்கழகத்திற்கு 2009–10ஆம் ஆண்டிற்கான நல்கை 15.15 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுக்காக 2008–09 ஆம் ஆண்டில் நிதியுதவியாக ரூ.1.86 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவினை நடத்தியதின் தொடர்பில் அரசு பங்களிப்பாக வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.50,000 ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

* ஆசியவியல் நிறுவனத்திற்கு 2001–02 முதல் 2006–07 வரையிலான ஆண்டுகளுக்கு நல்கையாக ரூ.49.40 இலட்சமும் 2007–08 ஆம் ஆண்டு நல்கையாக ரூ.20.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2008–09ஆம் ஆண்டு நல்கையாக 12.71 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* ஒரிசா மாநிலத்திலுள்ள புவனேஸ்வர் தமிழ்ச்சங்கம், கட்டடம் கட்டுவதற்கு நிதியுதவியாக 15 இலட்சம் ரூபாய் வழங்கிட அரசாணை ஒப்பளிப்பு செய்யப்பட்டு தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

* அறிவியல் தொழில்நுட்ப நூல் வரிசையை வெளியிட துணை செய்யும் வகையில் தமிழ் வளர்ச்சி கழகத்திற்கு 15 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

* கருநாடக மாநிலம் பெங்களூரில் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தால் நிறுவப்பட்டுள்ள ஐயன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் போது மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக 10 இலட்சம் ரூபாய் சிறப்பு மானியமாக வழங்கப்பட்டது.

* * *



# உள்ளாட்சிகளில் உயர் பணிகள்

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

**ஊராட்சி நிருவாகம்**

★ தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் 2006இல் நடத்தப்பட்டன.

★ பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சிகளுக்கு அக்டோபர் 2006இல் வெற்றிகரமாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தலில் புதிதாக வெற்றி பெற்ற கிராம ஊராட்சித்தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் கிராம சமுதாய தலைவர்களையும் அழைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில் 13.11.2006 அன்று 'சமத்துவப் பெருவிழா' நடத்தி கௌரவித்தார்.

**உயர்நிலைக் குழு**

★ உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட வேண்டி, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குதல் குறித்து அமைக்கப் பட்டுள்ள உயர்நிலைக் குழுவின் அறிக்கை, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில், 10.12.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டது. இக்குழு, 39 பொருள்களில் அளித்துள்ள 99 பரிந்துரைகளில், இதுவரை 61 பரிந்துரைகளின் மீது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதர பரிந்துரைகளின் மீது நடவடிக்கைகள்



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, சிந்தாதிரிப்பேட்டை கூவம் ஆற்றங்கரையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி சீரமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள் உடன் உள்ளார். (8.12.2009)

மேற்கொள்ளப்பட்டு அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

★ ஊரக உள்ளாட்சிகளின் எல்லைகளை வரையறை செய்தல் – பொதுமக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவற்றின் எல்லைகளை மாற்றியமைத்தல், அவைகளை பிரித்தல் சம்பந்தமாக மக்களின் கருத்தறிந்து, அரசு அவற்றினைப் பரிசிலனை செய்து பரிந்துரைகளை தகுதியின் அடிப்படையில் உரிய முடிவுகளை அறிவிக்கும்.

★ 2009–10ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது அரசு விவசாயிகளின் பேரில் வரிச் சுமை ஏற்றாமல் தற்போதுள்ள தலவரி மற்றும் தலமேல் வரி வசூல் முறையினை எளிதாக மாற்றியமைக்கப்படும் என்று அறிவித்து, திருத்தம் செய்யப்பட்டு தலவரி மற்றும் தலமேல் வரி வசூலிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ கிராம ஊராட்சிகளில் மட்டும் பல உறுப்பினர்கள் வார்டுகள் நடைமுறையில் உள்ளது. ஆனால் இதர ஊரக உள்ளாட்சி மற்றும் நகர்புர உள்ளாட்சிகளில் இது போன்று இல்லை. இது தேர்தல் நேரத்தின் போது வாக்காளர்கள் வாக்கு அளிப்பதில் பல இன்னல்களை உருவாக்குகிறது. மேலும் பல உறுப்பினர் வார்டுகளில் உள்ள உறுப்பினர்களுக்கான தெளிவான பொறுப்புகள் தற்போதுள்ள முறையில் இல்லாமல் உள்ளது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட மூன்றாவது உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின்படி, கிராம ஊராட்சிகளில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ வழக்கமாக சிறு குளங்களை ஊராட்சிகளே பராமரித்து வந்தன. சட்ட ரீதியான பொறுப்புகள் ஏதுமின்றி பெரிய குளங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்தன. இந்த முரண்பாட்டை சட்டப்படி சரிசெய்யவும் குட்டைப் பராமரிப்புப் பணிகளை கிராம ஊராட்சிகளுக்கு சட்டரீதியாக ஒப்படைத்திடவும் மேலும் குளங்களின் பராமரிப்புப் பணிகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைத்திடவும் அதனை மேற்பார்வையிட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் அளித்து சட்டத் திருத்தம் 2009ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

★ மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி 2007–08ஆம் ஆண்டில் 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் இது நடப்பு நிதியாண்டில் 2009–2010இல் 9 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

★ ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி 2006–07ஆம் ஆண்டில் ரூ.1,225 கோடியிலிருந்து 2007–08ஆம் ஆண்டில் ரூபாய் 1,583.58 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது 358 கோடி ரூபாய், அதாவது 30 சதவீதம் கூடுதலாகும். 2008–09ஆம் ஆண்டில் ரூபாய் 1,716.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 133 கோடி ரூபாய் கூடுதலாகும். அதாவது 2007–08ஆம் ஆண்டு ஒதுக்கீட்டை விட 8 சதவீதம் கூடுதலாகும். 2009–10ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,926.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ரூபாய் 210.13 கோடி அதாவது 2008–09ஆம் ஆண்டு ஒதுக்கீட்டை விட 12% கூடுதலாகும்.

★ தலவரி, தலமேல் வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் கேளிக்கை வரி இவை மூலமான வருவாய் 2007–08லிருந்து மாநில அளவில் ஒருமுகப் படுத்தப்பட்டு ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் பிரித்தளிக்கப்படுகிறது. அதன்படி, 2007–08ஆம் ஆண்டில் ரூ.270 கோடியும், 2008–09ஆம் ஆண்டில் ரூ.541.77 கோடியும், 2009–10ஆம் ஆண்டில் ரூ.359.49 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளைப் பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதித் தேவைகளுக்காக 2007–08ஆம் ஆண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

★ மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து அனைத்து ஊராட்சிகளுக்கும் தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் சமமாக வழங்கவும், மீதமுள்ள தொகையை மக்கள்தொகை அடிப்படையில் வழங்கவும் ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

★ அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் சமச்சீர் நிதி கிடைக்க 2008–09ஆம் ஆண்டு முதல் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து விடுவிக்கப்படும் நிதியில் தலா ரூ.30 இலட்சம் வீதம் நிதி விடுவிக்கப் படுகிறது.

★ மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண்டாவது நிதிக் குழு மானியம் முழுமையையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இது 2006–07ஆம் ஆண்டு இரண்டாவது அரையாண்டு ஒதுக்கீடு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு, ஊராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி பயிற்சியளித்திட, முதன்முறையாக இந்த அரசால், 'பயிற்சித் தொகுப்பு நிதி' (Training Corpus Fund) ஏற்படுத்தப் பட்டுள்ளது. மற்ற ஊராட்சிகளில் மேற்கொள்ளப் பட்டுள்ள புதுமையான மற்றும் சிறப்பான

நடவடிக்கைகளைக் கண்டறியும் பொருட்டு, ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு பட்டறிவுப் பயண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ 900 கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்களுக்கு கட்டடத் தொழில்நுட்பம் மற்றும் தரமான கட்டுமானங்கள் சம்பந்தமான பயிற்சி சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. 2009–10ஆம் ஆண்டில் 12 அணிகளாக கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு இரண்டு சுற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ தேசிய கிராம தன்னாட்சித் திட்டம் (ஆர்ஜிஎஸ்ஒய்) இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி நிருவாகத்தை மேற்கொள்பவர்களுக்கு திறன் மேம்பாடு குறித்து 1,647 பயிற்சிகள் மூலம் 57,883 ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் (ம) ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ கிராம ஊராட்சிகளின் ஆண்டுச் செலவினத்தில் 70 சதவீதம் மின்சாரக் கட்டணத்திற்காக மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மின்வாரியம் தொடர்புடைய நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு கீழ்க்கண்ட தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

★ ஊரகப் பகுதிகளுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 3.40 லிருந்து ரூபாய் 3ஆக குறைக்கப்பட்டுள்ளது.

★ ஊராட்சிகள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராத வரி 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.

★ 13.03.2007க்கு முன்பு நிலுவையிலிருந்த அபராத வரி ரூ. 18.46 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

★ மின்கட்டணம் செலுத்துவதற்கான கால அளவு 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப் பட்டுள்ளது.

★ ஊராட்சிகளிலுள்ள மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தாது பட்டியல் அளிப்பதைத் தவிர்க்க, அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தி, மீட்டர் அளவுகள் அடிப்படையில் பட்டியல் வழங்குவது நடைமுறைபடுத்தப் பட்டுள்ளது.

★ புதிய மின் கம்பங்கள் அமைப்பதில் அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்படுவதைத் தவிர்க்க, ஒரு மின் கம்பம் நிறுவ நிலையான கட்டணமாக ரூபாய் 9,500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

★ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டங்களின் மூலம் பிற துறைகளின் பயன் பாட்டிற்காகக் கட்டித் தரப்படும் கட்டடங்களுக்கான மின் இணைப்பு பெறுவதற்காக தமிழ்நாடு மின் வாரியத்திடம் அளிக்கும் அனைத்து விண்ணப்பங் களுக்கும் "தடையின்மைச் சான்று" வழங்கப் பட்டதுடன், எந்தத் துறைகளுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வளர்ச்சித் திட்டங்களின் மூலம் கட்டடங்களை கட்டித்தந்ததோ அத்துறைகளே மின் கட்டணத்தை செலுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது. இதன்மூலம் அத்துறைகளே மின் இணைப்புகளை கோரிப் பெற்று மின் இணைப்புகளுக்கான கட்டணத்தை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்குவதற்கு இது ஏதுவாகிறது. மேலும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதனால் எவ்வித நிதிச்சுமையும் இல்லை. மேற்கண்ட நடவடிக்கைகளினால், தமிழ்நாடு மின்வாரியம் தொர்பான நீண்ட காலமாக இருந்த இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, கிராம ஊராட்சிகளின் நிதி நிலை மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ ஆண்டுதோறும் சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் 15 கிராம ஊராட்சிகளை கௌரவிக்கும் வகையில், அரசால் "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2006–07ஆம் ஆண்டுக்கான 'உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்கு' தெரிவு செய்யப்பட்ட 15 கிராம ஊராட்சிகளுக்கு கேடயமும், ரூபாய் 5 இலட்சம் ரொக்கப் பரிசும் பதவி வகித்த கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 10.10.2007 அன்றும் வழங்கப்பட்டது. 2007–08ஆம் ஆண்டுக்கான 'உத்தமர் காந்தி ஊராட்சி விருதுகள்' 19.12.08 அன்றும் வழங்கப்பட்டது.

★ ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான நிரந்தர பயணப்படியினை அரசு உயர்த்தியுள்ளது. கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு ரூ.330லிருந்து ரூ.500 ஆகவும், ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவருக்கு ரூ.550லிருந்து ரூ.750 ஆகவும், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.220லிருந்து ரூ.400 ஆகவும், மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு ரூ.1,100லிருந்து ரூ.1,500 ஆகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு ரூ.330லிருந்து ரூ.500 ஆகவும் உயர்த்தி வழங்கப் படுகிறது.

★ 12,613 ஊராட்சித் தலைவர்களுக்கும், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

★ ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று "உள்ளாட்சிகள் தினவிழா" கொண்டாடுவதற்கு அரசு உத்தரவிடப்பட்டு, அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

★ உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, கிராம ஊராட்சிகள், பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 1 இலட்சத்திற்கும் மிகாமல் நிருவாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி ரூபாய் 2 இலட்சம் வரை ஒரு பணிக்கு நிருவாக அனுமதி வழங்கலாம். அதேபோல் ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 5 இலட்சத்திற்கும் மிகாமல் நிருவாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி, ரூபாய் 10 இலட்சம் வரை ஒரு பணிக்கு நிருவாக அனுமதி வழங்கலாம். மாவட்ட ஊராட்சி ஒரு பணிக்கு ரூபாய்10 இலட்சத்திற்கும் மிகாமல் நிருவாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி ரூ.20 இலட்சம் வரை ஒரு பணிக்கு நிருவாக அனுமதி வழங்கலாம்.

★ அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு கணினி, பிரிண்டர்கள் மற்றும் மின் சேமிப்பு இயந்திரங்கள் (Power Inverters) வழங்கப்பட்டுள்ளன.

★ கிராம ஊராட்சிகளில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

★ சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களின் நடவடிக்கைகளை கண்டறிந்து, இந்நிறுவனங்களை ஊக்குவித்து சிறப்பிக்கவும், 2007–08ஆம் ஆண்டு முதல் தகுதிவாய்ந்த 5 நிறுவனங்களுக்கு, தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி 2007–08 மற்றும் 2008–09ஆம் ஆண்டுக்கு 9 நிறுவனங்கள் சமூக பொருளாதார பொறுப்புணர்வு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 19.10.2009 அன்று விருதுகள் வழங்கப்பட்டன.

★ கிராம ஊராட்சித் துணைத் தலைவர் அல்லது ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிபாதி என்பதை குறைந்தபட்சம் ஐந்தில் மூன்று பங்கு எனவும், தீர்மானத்தை நிறைவேற்ற தற்போது மூன்றில் இரண்டு பங்கு என்பதை ஐந்தில் நான்கு பங்கு எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளின் துணைத் தலைவர்கள் அல்லது தலைவர்கள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள்ளாகவோ, பதவிக்காலம் முடியும் இறுதி ஆண்டிலோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இயலாது.

**ஊரக வளர்ச்சித் திட்டங்கள்**

★ 13.05.2006 அன்றைய தேதியில் நிலுவையிலிருந்த 1,540 இலட்சம் பணிகளில் 1,539 இலட்சம் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 2007ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், 2006–07ஆம் ஆண்டில் 72,739 பணிகள், 2007–08ஆம் ஆண்டில் 64,058 பணிகள், 2008–09ஆம் ஆண்டில் 52,367 பணிகள் என எடுக்கப்பட்ட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன. 2009–10ஆம் ஆண்டில் 45,843 பணிகள் எடுக்கப்பட்டு, அவற்றில் 42,261 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இதர துறைகளில் குறிப்பாக வேளாண் துறை, கல்வித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, முதலிய பிற துறை திட்டங்களின் நிதி ஆதாரங்களை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இதர திட்டங்களுடன் இயன்றளவு ஒருங்கிணைத்து, ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

★ **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு :** இத்திட்டம் 2.2.2006 முதல் ஆறு மாவட்டங்களில் முதல் கட்டமாகவும் 1.4.2007 முதல் இத்திட்டம் நான்கு மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்டமாகவும், 1.4.2008 முதல் இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள இதர அனைத்து 20 மாவட்டங்களிலும் மூன்றாம் கட்டமாக விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது. பிப்ரவரி 2006இல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 13.05.2006 வரையில் 3 கோடி ரூபாயாக இருந்த செலவினம், ஜனவரி 2007இல் ரூபாய் 111 கோடியாகவும், தற்போது ரூபாய் 3,352.58 கோடிக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 41.02 கோடி மனித நாட்கள் உருவாக்கப்பட்டு, 41,416 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெறுவோரில், 76 சதவீதம் பெண்கள் ஆவர். மேலும், 56 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களை சார்ந்த பயனாளிகள் ஆவார்கள். ஊரகப் பகுதிகளில் பெண் தொழிலாளர்களுக்கான ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது. தேசிய அளவில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதில் சிறந்த 22 மாவட்டங்களில் கடலூர், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் இடம் பெற்று 2.2.2009 அன்று புதுடில்லியில் 2007–08ஆம் ஆண்டிற்கான விருதைப் பெற்றுள்ளன. நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைப் போன்று 26 மாவட்டங்கள் தேசிய அளவில் 2008–09ஆம் ஆண்டிற்கான விருதினை 2.2.2010 அன்று புது டில்லியில் பெற்றுள்ளன.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

- ★ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்படி, குறைந்தபட்ச கூலித் தொகை ரூ.80லிருந்து ரூ.100ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது ஒரு பணியாளர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்படி 50 சதவிகிதம் பணியை விட குறைவாகவே ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் ஊரகப் பகுதியில் அடர்ந்த புதர்கள் மற்றும் வனப்பகுதிகளை சீரமைக்க தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியமானது 100 சதவிகிதம் பொதுப்பணித் துறையால் வழங்கப்படுகின்ற ஊதியத்தை விட அதிகமானது. அதாவது இவ்வுயர்வானது 150 விழுக்காடு அதிகமாகும்.

- ★ ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவீதம் குடும்பங்களைப் பதிவு செய்திட வலியுறுத்தப்பட்டது. முதல் மற்றும் இரண்டாவது கட்ட மாவட்டங்களில் சராசரி பதிவுகள் 72 சதவிகிதத்திற்கும் மேற்பட்டுள்ளது. மூன்றாவது கட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களிலும் பதிவுகள் 54 சதவிகிதத்தை கடந்துள்ளது. இது இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு பரவலாக உள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது. மொத்தத்தில் 61 விழுக்காடு பதிவாகியுள்ளது.

- ★ ஏற்கெனவே நடைமுறையில் இருந்த வேலை அடையாள அட்டை மற்றும் தினக்கூலிப் பணியாளர்கள் வருகைப் பட்டியல் ஆகிய ஆவணங்கள் தெள்ளத் தெளிவாகவும் கூடுதல் விவரங்களுடனும், இத்திட்டம் செயல்படுத்தும் போது விவரங்களை மாற்ற இயலாத வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- ★ இத்திட்ட செயல்பாட்டினை முனைப்போடு கண்காணிக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய வாகனத்திற்கும் கூடுதலாக மாதம் 50 லிட்டர் எரிபொருள் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் உதவி செயற்பொறியாளர் (ஊ.வ.) வாகனத்திற்கும் கூடுதலாக 75 லிட்டர் எரிபொருள் அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

- ★ கிராம ஊராட்சி அளவில் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்துவதற்கு மக்கள் நலப் பணியாளர்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

- ★ இத்திட்டம் முறையான செயல்பாட்டினை உறுதிசெய்யவும், உன்னிப்பாகக் கண்காணிக்கவும், கிராம ஊராட்சி, வட்டாரம், கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் கூடுதலாக அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் கணினி உதவியாளர்களை அனுமதித்து ஆணையிடப் பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள இதர 20 மாவட்டங்களுக்கு மூன்றாம் கட்டமாக 1.4.2008 முதல் விரிவுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கூடுதல் நிருவாகப் பணியாளர்கள் மற்றும் வட்டார வாகனங்களுக்கு கூடுதல் எரிபொருள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- ★ தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தில், இத்திட்டப்பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளதால், அவர்கள் நுழைவதைத் தடுத்திட 100 சதவீதம் முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

- ★ இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் பணிகள் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிற்குக் குறையாமல் உள்ள பெரிய பணிகளாக இருக்க வேண்டுமென பின்வரும் காரணங்களுக்காக வலியுறுத்தப் படுகிறது. அ) ஒரே இடத்தில் போதுமான எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு. ஆ)உருவாக்கப்படும் சொத்துகள் கண்களுக்குப் புலப்படுகின்றதாகவும், நிலைத்திருக்கக் கூடியதாகவும், சமுதாயத்திற்கு பயன்தரத் தக்கதாகவும் இருத்தல். இ) பரவலாக சிறிய பணிகளுக்கு நிதி ஆதாரங்கள் வீணாக்குவதைத் தவிர்த்தல். ஈ) பணிகளை நெருக்கமாக கண்காணித்தல் மூலம் முறையற்ற செலவினங்களை குறைத்தல்.

- ★ இத்திட்டத்தின் கீழ் பணிகளில் ஈடுபடும் வேலையாட்களுக்கு ஊதியம் வெளிப்படையாகவும் நியாயமாகவும் வழங்க தினக் கூலியானது, குழுவில் இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் குறைந்தபட்சம் 4 நபர்களின் முன்னிலையில் வழங்கப்படல் வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

அ) கிராம ஊராட்சித் தலைவர்,

ஆ) கிராம ஊராட்சித் துணைத் தலைவர்,

இ) வேலை நடைபெறும் பகுதியின் வார்டு உறுப்பினர்,

ஈ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வார்டு உறுப்பினர் (வரிசை எண் அ, ஆ மற்றும் இ—ல் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்த நபர் இல்லாதிருப்பின்)

உ) தரம் பிரிக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களிலிருந்து இரண்டு ஊக்குநர்கள்,

ஊ ) ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக் கூட்டமைப்பின் பிரதிநிதி.

- ★ தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தும் அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், இத்திட்டம் வெளிப்படையாக செயலாக்கத்தினை உறுதி செய்யும் பொருட்டு, ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய தினங்களில் நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் ஒவ்வொரு ஆண்டும்

இத்திட்டத்தினை சமூக தணிக்கை செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 2008–09 மற்றும் 2009–10ஆம் ஆண்டில் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறும் போது இத்திட்டத்திற்கான சமூக தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக தணிக்கையை மேம்படுத்துவதற்காக ஜனவரி 2010இல் அனைத்து கிராம ஊராட்சிகளில் 6 நபர்கள் அடங்கிய சமூக தணிக்கைக் குழு உருவாக்கப் பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் சமூக தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு முழுமையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

★ சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும் மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களின் கொள்கையைப் பரப்பவும், இந்த அரசு 1997–98 ஆம் ஆண்டு முதல் 145 சமத்துவபுரங்களை அமைத்துள்ளது. மக்கள் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும் ஒருமித்து வாழ்கின்ற வகையில் இத்திட்டத்தை மீண்டும் அறிமுகப் படுத்தி, புதிதாக 95 சமத்துவபுரங்களை அமைக்க அரசு முடிவு செய்தது. மேலும், புதிதாக கட்டப்படும் 95 சமத்துவபுரங்கள் மற்றும் ஏற்கெனவே கட்டப்பட்ட 145 சமத்துவபுரங்களின் நுழைவாயிலிலும் தந்தை பெரியாரின் திருவுருவச் சிலை அமைக்க முடிவு செய்தது. முதற்கட்டமாக, 2008–09ஆம் ஆண்டில் 29 சமத்துவபுரங்கள் (நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக) அமைக்கப்பட்டன. ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகள் மற்றும் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் தேவையின் அடிப்படையில் பொது விநியோகக் கடையும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் முழுவதும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. 29 சமத்துவபுரங்களும் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டுள்ளது. தந்தை பெரியாரின் திருவுருவச் சிலை 29 சமத்துவபுரங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே கட்டப்பட்ட 145 சமத்துவ புரங்களில், இதுவரை 122 சிலைகள் நிறுவப் பட்டுள்ளன. 2009–2010ஆம் ஆண்டில் 30 சமத்துவபுரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளது.

**இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்**

★ இத்திட்டத்தின் கீழ் புதிய வீடுகளுக்கான கட்டுமானச் செலவுகள் அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, இவ்வீடுகளுக்கான மதிப்பீடு கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது,. இவ்வீடுகளுக்கான மதிப்பீட்டை, வீடு ஒன்றுக்கு ரூ.25,000லிருந்து ரூ.35,000ஆக மைய அரசு அதன் 2008–09ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் உயர்த்தியுள்ளது. இதைபோல, கான்கிரீட் கூரை அமைப்பதற்கான செலவினங்களில் ஏற்பட்டுள்ள உயர்வையும் கருத்தில் கொண்டு, மாநில அரசும் கான்கீரிட் கூரை அமைக்க வழங்கும் மானியத்தை 2008–09ஆம் ஆண்டிலிருந்து ஒரு வீட்டிற்கு ரூ.12,000லிருந்து ரூ.20,000ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தில் மாநில அரசின் பங்குத் தொகைக்கும் கூடுதலாக கான்கீரிட் கூரை அமைப்பதற்காக இந்த ஒதுக்கீடு வழங்கப் படுகிறது. கடந்த நான்காண்டுகளில் 1,34,014 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றில் 1,20,661 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**ஊராட்சி ஒன்றியப் பள்ளி சீரமைப்புத் திட்டம்**

★ 2007– 08 முதல் இவ்வரசால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக இம்மாநிலத்தில் பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையிலிருந்த சுமார் 22,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 4,500 நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. 2007–08ஆம் ஆண்டில், ரூ.104.25 கோடி மதிப்பீட்டில் சுமார் 9,547 பள்ளிகள் பராமரிப்பிற்காக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. 2008–2009ஆம் ஆண்டில் ரூ.69.30 கோடி மதிப்பீட்டில், 4,432 பள்ளிக் கட்டடங்கள் சீரமைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ரூ.14.34 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் உள்ள 495 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும், மூன்றாம் நிலை நகராட்சிகளிலும் இத்திட்டத்தின் கீழ் சீரமைப்பதற்காகவும் அவற்றில் 248 கழிப்பறைகள் கட்டுவதற்கும் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 2009–10ஆம் ஆண்டில் ரூ. 67.56 கோடி மதிப்பீட்டில் 4,124 பள்ளிக் கட்டடங்கள் இத்திட்டத்தின் கீழ் சீரமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பேரூராட்சிகளிலும் 3–ஆம் நிலை நகராட்சிகளிலும் உள்ள 445 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுடன் 168 கழிப்பறைகளும் ரூ.10.62 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**நமக்கு நாமே திட்டம்**

★ 2007–08ஆம் ஆண்டு முதல் நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முடிவு செய்து 2009–10ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**ஊரக கட்டமைப்புத் திட்டம்**

★ 1.4.2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டது.

★ 2008–09ஆம் ஆண்டு ஊரக கட்டமைப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் ரூ.350 கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்காக ஒதுக்கப்படும் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து, 4:2:1 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி ஒதுக்கீட்டு தொகை ரூ. 350 கோடியில், பிப்ரவரி 2010 முடிய ரூ.350 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 33,533 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டில் இதுவரை விடுவிக்கப்பட்டு 40,284 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 34,325 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

★ **சாலைகள் :** 13.05.2006க்குப் பிறகு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XII & XIII, XIV , XV மற்றும் 12ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ், 3,065.197 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22,113.05 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 2008–09ஆம் ஆண்டு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் பகுதி–7இல் ரூ.859 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட 3,032 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும் அடங்கும்.

★ **சிமெண்ட் :** 2007–08இல் ஏற்பட்ட சிமெண்ட் பற்றாக்குறையினால், ஊரக வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துவதில் மிகவும் பாதிக்கப்பட்டதால், தனியார் நிறுவனங்களிலிருந்து, டான்சம் நிறுவனம் மூலம் சிமெண்ட் கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ஒரு மூட்டை சிமெண்ட் ரூ.250 முதல் ரூ.260 வரை வெளிச் சந்தையில் விற்கும் நிலையில், தனியார் நிறுவனங்கள், மூட்டை ஒன்றுக்கு 220 ரூபாய் வீதம் ஊரக வளர்ச்சித் துறைப் பணிகளுக்கு விற்பனை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளன. இதன்படி 2008–09ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சித் துறைப் பணிகளுக்கு இதே விலையில் சிமெண்ட் பெறப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் 2009–10ஆம் ஆண்டிற்கு சிமெண்ட் விலை ஒரு மூட்டைக்கு ரூபாய் 215 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

★ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதி 2009–10ஆம் ஆண்டு முதல் ரூபாய் 1.50 கோடியிலிருந்து ரூபாய் 1.70 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ முழு சுகாதார இயக்கம் திருப்திகரமான செயல்பாட்டினால், 2007–08ஆம் ஆண்டு 1,474 கிராம ஊராட்சிகள் மற்றும் 5 வட்டார ஊராட்சிகள் (கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டாறு, முன்சிறை, கிள்ளியூர் & தக்கலை மற்றும் திருச்சி மாவட்டத்தில் உள்ள தாத்தையங்கார்பேட்டை வட்டாரம்) 'நிர்மல் கிராம் புரஸ்கார்' விருதுகள் பெற்றன. 2006–07ஆம் ஆண்டில் 296 கிராம ஊராட்சிகள் 'நிர்மல் கிராம் புரஸ்கார்' விருதுகள் பெற்றன. இந்த ஆண்டு அதிக அளவில் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுகள் பெற்றதில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் பெற்றுள்ளது. 2008–09ஆம் ஆண்டில் 196 கிராம ஊராட்சிகள் 'நிர்மல் கிராம் புரஸ்கார்' விருதுகள் பெற்றுள்ளன.

★ தமிழ்நாட்டிலுள்ள 6 பின் தங்கிய மாவட்டங்களின் (ஏற்கெனவே ராக்ஷ்ட்ரிய சம்விகாஸ் யோஜனா திட்டம் செயல்படுத்தப்பட்ட கடலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களும், கூடுதலாக விழுப்புரம் மாவட்டமும்) செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை சம்பந்தப்பட்ட மாவட்ட திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் மாநில அளவில் உள்ள உயர்மட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு மேற்கண்ட 6 மாவட்டங்களில் 2007–08ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்களையும் அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் நடப்பு நிதியாண்டில் 2009–10ஆம் ஆண்டு ரூ.205.25 கோடி அனுமதித்துள்ளது. 2008–09ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை.

**பணியமைப்பு மற்றும் பணியாளர் நலன்**

★ உதவி இயக்குநர் முதல் மக்கள் நலப்பணியாளர்கள் பணியிடம் வரை 17,819 காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவற்றில் 17,503 காலிப்பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 316 காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் / வேலைவாய்ப்பகம் மூலம் விரைவில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

★ 2006–07க்கென தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 223 உதவிப் பொறியாளர்களை தேர்வு செய்ய அரசு கேட்டுக் கொண்டதில் இதுவரை 223 உதவிப் பொறியாளர் களை நியமனம் செய்ய தமிழ்நாடு தேர்வாணையம் பட்டியல் அனுப்பியுள்ளது. இதில் 179 உதவிப் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) இதுவரை மாவட்டங்களில் பணியேற்று, பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் 2007–08ஆம் ஆண்டுக்கு 264 உதவிப்பொறியாளர்களைத் (ஊரக வளர்ச்சி) தேர்வு செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளதில் 255 உதவிப் பொறியாளர்களை தமிழ்நாடு தேர்வாணையம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 241 பணியாளர்கள் உதவிப் பொறியாளர்களாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் பணியேற்றுள்ளனர்.

- ★ ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதிநேர எழுத்தர்களுக்கு காலமுறை ஊதியம் அளித்தல் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் முழு நேர ஊராட்சி உதவியாளர்களுக்கு ரூ.1300–20–1500–25–2000 என்ற கால முறை ஊதியத்தையும், பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களுக்கு ரூ.625–10–725–20–925 என்ற கால முறை ஊதியத்தையும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் நிலை 2 பணியிடங்களை நிலை உயர்த்தி அனைத்து பணியிடங்களையும் ரூ.2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500 தரஊதியத்துடன் ஊராட்சி உதவியாளர் பணியிடங்களாக அறிவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் சுமார் 11,000 ஊராட்சி உதவியாளர்கள் நிலை2 பயன் அடைந்துள்ளனர்.
- ★ **வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)க்கு ஊதியம் வழங்கும் தற்சார்பு அலுவலராக அதிகாரம் வழங்குதல் :** வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சிகள்) தங்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கருவூலத்திலிருந்து ஊதியம் மற்றும் இதர சில்லறை செலவினங்களை மேற்கொள்ளுவது போன்று, செலவினங்களை மேற்கொள்ள அலுவலகத் தலைவராக தனியே செயல்பட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- ★ மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 16.04.2008 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததின் அடிப்படையில், 2,544 விரிவாக்க அலுவலர் பணியிடங்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.
- ★ இரவுக் காவலர், அலுவலக உதவியாளர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு மக்கள் நலப் பணியாளர்களுக்கு பதவி அளித்தல் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 16.04.2008 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததின் அடிப்படையில், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 50 சதவிகிதம் மக்கள் நலப் பணியாளர்களை ஈர்த்துக் கொள்ளுதல் குறித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை 282 அலுவலக உதவியாளர் பணியிடங்களும், 46 இரவுக் காவலர் பணியிடங்களும் மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.
- ★ 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு புதிதாக ஈப்பு ஓட்டுநர் பணியிடங்கள் தோற்றுவிக்க 385 ஓட்டுநர் பணியிடங்களில் இதுவரை 384 பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் மற்றும் பதிவறை எழுத்தர்/அலுவலக உதவியாளர்/இரவுக் காவலர் ஆகிய பிரிவுகளிலிருந்து பதவி உயர்வின் மூலமாகவும் நிரப்பப்பட்டுள்ளன.
- ★ கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/விசைபம்பு இயக்குபவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு 2007–08 ஆம் ஆண்டு முதல் இடைக்கால போனஸ் தொகையாக ரூ. 300லிருந்து ரூபாய் 1,000ஆக உயர்த்தி இடைக்கால போனசாக வழங்கப்பட்டுள்ளது.

**மக்கள் நலப் பணியாளர்களுக்கு கால முறை ஊதியம்**

- ★ மக்கள் நலப் பணியாளர்கள் ரூ.950 தொகுப்பூதியமாகவும், ரூ.50 பயணப்படியாகவும் பெற்று வந்தனர். இவர்கள் 1.6.2009 முதல் ரூ.2500–5000 மற்றும் ரூ.500 தர ஊதியம் என்ற கால முறை ஊதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். அரசின் சிறப்பான நடவடிக்கை மூலம் சுமார் 12,719 மக்கள் நலப் பணியாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைத்தல்**

- ★ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிருவாகத் திட்டத்திற்கான மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளுக்கிணங்க மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. உதவி திட்ட அலுவலர் (ஆர்), உதவித் திட்ட அலுவலர் (வேஉதி), உதவித் திட்ட அலுவலர் (டோக்ரா), உதவித் திட்ட அலுவலர் (தொழில்கள்), உதவித் திட்ட அலுவலர் (கால்நடை பராமரிப்பு), உதவித் திட்ட அலுவலர் (கூட்டுறவு) மற்றும் உதவித் திட்ட அலுவலர் (கணிப்பாய்வு) ஆகியப் பணிகள் நீக்கப்பட்டு, புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுள் உதவித் திட்ட அலுவலர் (ஊதிய வேலை வாய்ப்பு), உதவித் திட்ட அலுவலர் (உள்கட்டமைப்பு), உதவித் திட்ட அலுவலர் (சுய வேலைவாய்ப்பு) மற்றும் உதவித் திட்ட அலுவலர் (வீட்டு வசதி மற்றும் சுகாதாரம்) ஆகியப் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.
- ★ சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவைகளின் தொழில்நுட்ப கண்காணிப்பினை வலுவூட்டவும் மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ) மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் (ஊ.வ) ஆகிய அலுவலகங்களின் தொழில்நுட்பப் பிரிவினை வலுப்படுத்தவும் உதவி செயற்பொறியாளர் (ஊ.வ – பிஎம்ஜிஎஸ்ஒய்) மற்றும் உதவி செயற் பொறியாளர் (ஊ.வ–குடிநீர் விநியோகம்) ஆகியப் பணியிடங்களை உதவி செயற்பொறியாளர் (ஊ.வ–சாலைகள் மற்றும் பாலங்கள்) என மாற்றியமைக்கப் பட்டுள்ளது.
- ★ 2007–08ஆம் ஆண்டு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் (ஊராட்சி), உதவி இயக்குநர்கள் (தணிக்கை) ஆகியோர்களுக்கு 121 புதிய ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2007–08ஆம் ஆண்டு,

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு 385 புதிய ஈப்புகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட உட்கோட்ட உதவி செயற்பொறியாளர்களுக்கு 409 ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பகுதி II திட்டத்தின்கீழ் 24 புதிய ஈப்புகள் வாங்க ரூ. 112.50 இலட்சம் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டில் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களுக்கு 416 படிப்பெருக்கி இயந்திரங்கள் மற்றும் 385 நிகரி இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

★ 2008–09ஆம் ஆண்டு ரூ.43.50 இலட்சம் மதிப்பீட்டில் 29 மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சியரக ஊரக வளர்ச்சிப் பிரிவு அலுவலகங்களுக்கு தலா 3 கணினிகள் வீதம் கூடுதல் கணினிகள் மற்றும் இதர உபபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)கள், உதவி இயக்குநர் (ஊராட்சி)கள் மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை)களுக்கு மொத்தம் 90 லேசர் பிரிண்டர் (Laser Printer) வாங்க அரசு ரூ.19.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு தலா ஒரு லேசர் பிரிண்டர் வழங்கப்பட்டுள்ளது.

★ 2009–10ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திலுள்ள கூட்ட அரங்கினை மின்மாற்றி வசதிகளுடன் மேம்படுத்த அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மேம்படுத்தப் பட்டுள்ளது.

★ 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கும் தங்கும் விடுதி, வகுப்பறை மற்றும் சமையலறை இவற்றை மேம்படுத்த 2007–08ஆம் ஆண்டில் ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு நிகரி இயந்திரங்கள் வாங்கிட அரசு ரூ. 1.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒவ்வொரு மண்டல வளர்ச்சி நிறுவனங்களுக்கும் நவீன சமையலறையுடன் கூடிய புதிய விடுதிக் கட்டடங்களைக் கட்ட தலா ரூ.50 இலட்சம் நிதியை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

★ மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் விடுதிகளுக்கு மரச் சாமான்கள், படுக்கைகள் மற்றும் சமையலறைப் பாத்திரங்கள் ஆகியவை வாங்கிட தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.25 இலட்சம் நிதியை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தினை மறு சீரமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்

★ மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பல்வேறு மேம்பாட்டிற்கான திட்டங்களை சிறப்பாகவும் நல்ல ஒருங்கிணைப்புடனும் செயல்படுத்தும் வகையில் ஜூலை 2006 முதல் இந்நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் நிருவாக கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு கள வல்லுனர்களை உள்ளடக்கும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன ஆளுமைக்குழு திருத்தியமைக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது. சிறந்த வகையில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தலைமை அலுவலகத்தில் மூன்று கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. மாவட்ட அளவில் கண்காணிப்பு அமைப்பை வலுப்படுத்தும் வகையில் 60 உதவித் திட்ட அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப் பட்டனர்.

★ மகளிர் திட்டச் செயல்பாட்டை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் பிற வட்டார அலுவலர் ஆகியோரை ஈடுபடுத்த உத்தரவிடப்பட்டது.

★ வட்டார அளவில் சுயஉதவிக் குழுக்களுக்கான திட்டச் செயலாக்கத்தை மேலும் வலுப்படுத்த 2008–09ஆம் ஆண்டில் மகளிர் திட்டம் மற்றும் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள் துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்குப் (தணிக்கை) பதிலாக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சிறு சேமிப்பு மற்றும் பொது தொடர்புக்கு), மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது.

★ தமிழ்நாடு சுயஉதவிக்குழு நலச் சங்கத்தினை, சுயஉதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

### மகளிர் திட்டம்

★ மகளிர் திட்டத்தின் கீழ் 31.03.2010 வரை 69.91 இலட்சம் மகளிரை உறுப்பினராகக் கொண்ட 4,41,311 சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இவர்களின் மொத்தச் சேமிப்பு ரூபாய் 2,568 கோடி ஆகும். இவற்றுள் 18,92,467 மகளிரை உறுப்பினராகக் கொண்ட 1,25,493 புதிய சுயஉதவிக் குழுக்கள் ஜூலை 2006க்குப்பின் உருவாக்கப் பட்டது.

★ இதுவரை, சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படாத பகுதிகளில் குழுக்கள் அமைப்பதும் சுயஉதவிக் குழுவில் இதுவரை இணைக்கப்படாத மகளிரை குழுக்களில் இணைப்பதும் அரசின் குறிக்கோளாக உள்ளது. மேலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்துப் பெண்களையும் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஒதுக்கப் பட்டவர்கள் ஆகியோரை சுயஉதவிக் குழுவில் சேர்ப்பதே முக்கிய நோக்கமாகும்.

★ அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிக்கு முன்னுரிமை அளித்து

2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**2008–09 முதல்**

★ 2008–09 முதல் குழுக்களில் சேராத தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களைக் கொண்டு புதிய குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

★ குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிப் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மற்றும் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களைக் கொண்டு நகர்ப்புரத்திலும் புதிய குழுக்கள் அமைக்கப்படுகின்றது.

★ தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் 25,304 சுய உதவிக் குழுக்கள் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களைக் கொண்டு புதிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 19,696 சுயஉதவிக் குழுக்கள் கிராம ஊராட்சியிலும் 30,000 சுயஉதவிக் குழுக்கள் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களைக் கொண்டு நகர்ப்புரத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

**கடன் இணைப்பு**

★ 31.03.2010 அன்றைய அளவில் சுயஉதவிக் குழுக்களுக்கு 1989ஆம் ஆண்டு முதல் ரூபாய் 8,129.61 கோடி வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 6,364.37 கோடி ஜூன் 2006 க்குப் பின் வழங்கப்பட்டுள்ளது. இது, இதுவரை வழங்கப்பட்ட மொத்த கடனில் 78 விழுக்காடாகும்.

★ சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் கடன் சுமையினைக் குறைக்கும் வண்ணம் சுய உதவிக் குழுக்களுக்குப் போதுமான கடன் வசதி கிடைக்க 2009–10 ஆம் ஆண்டில் அரசு சிறப்பு முன்னுரிமை அளிக்கிறது.

★ மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 12.04.08 அன்று நடத்திய வங்கித் தலைவர்கள் கூட்டத்தில் 2008–09 ஆம் ஆண்டு சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.1,600 கோடி கடனுதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் தொகையாக போதுமான அளவு உயர்த்தி வழங்க தீர்மானிக்கப்பட்டு 2009–10ஆம் ஆண்டு சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2,400 கோடி கடனாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

★ அரசின் முயற்சியினால் 25.03.2008 அன்று கூடிய மாநில அளவிலான வங்கியாளர்களின் குழுமம் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கும் போது மானியம் நீங்கலாக கீழ்க்கண்ட அளவு கடன் தொகையினைப் பின்பற்ற வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

| | | |
|---|---|---|
| முதல் இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.50,000 |
| இரண்டாவது இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,00,000 |
| மூன்றாவது இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,50,000 |
| நான்காவது மற்றும் பிந்தைய கடன் இணைப்புகள் | : | சுய உதவிக் குழுக்களின் தேவையின் அடிப்படையில் அதிக அளவுத்தொகை |

★ இம்மாநிலத்தின் வரலாற்றில் முதன் முறையாக சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்க மாநில அளவில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முறையாகக் கண்காணிக்கப்படுகிறது.

★ மகளிர் திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 2007–08 ஆம் ஆண்டு வரை சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையான ரூ. 3,163.39ஐ ஒப்பிடுகையில் 2008–09 ஆம் ஆண்டில் மட்டும் 2,174.57 கோடி ரூபாய் வங்கிகளில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ 2009–10ஆம் ஆண்டில் ரூ.2,791.65 கோடி ரூபாய் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனாக வங்கிகளால் 31.03.2010 வரை வழங்கப்பட்டுள்ளது.

**சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

★ பொதுவாக ஊரகப்பகுதிகளில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு மட்டுமே சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டு வந்ததால், நகர்ப்புர சுய உதவிக் குழுக்கள் வங்கிக்கடன் இணைப்புப் பெறுவதில் சிரமங்கள் இருந்தன. எனவே அரசு 2006–07 ஆம் ஆண்டு முதல் நகர்ப்புர சுயஉதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அரசு அறிவித்தது. 4 வருடங்களில் 87,939 நகர்ப்புர சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 87.94 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டது.

★ பொதுவாக சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.25,000 முதல் ரூ.30,000 வரை வருடத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் 2008–09ஆம் ஆண்டு இதுவரை சுழல் நிதி பெறாத தகுதி வாய்ந்த 1.50 இலட்சம் சுயஉதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்க அரசு தீர்மானித்தது.

★ 2008–09ஆம் ஆண்டில் தகுதியான அனைத்து சுயஉதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்கும் வண்ணம் ரூ.150 கோடியினை அரசு அனுமதித்தது. 1,50,000 சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடனுடன் கூடிய சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ 2009–10ஆம் ஆண்டில் சுழல் நிதி மானியமாக ரூபாய் 70 கோடியை அரசு அனுமதித்துள்ளது.

70,000 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மானியமாக வழங்க அனுமதி தந்துள்ளது. அதில் 31.03.2010 வரை 64,296 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

★ சுயஉதவிக் குழுக்களுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு 1.4.2008 முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

★ இத்திட்டத்தின் கீழ் 2006–07, 2007–08 மற்றும் 2008–09 ஆம் ஆண்டில் 93,587 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 93.59 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் 14,274 சுய உதவிக் குழுக்கள் தொழில் தொடங்க ரூபாய் 139.13 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ 2009–10 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 128 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ரூபாய் 55 கோடி சுழல் நிதி மானியமாக 55,000 சுயஉதவிக் குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 6,000 சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க ரூபாய் 60.52 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 26.03.2010 வரை ரூபாய் 50.01 கோடி சுழல் நிதி மானியமாக 50,010 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 58.28 கோடி மானியமாக 5,719 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க வழங்கப் பட்டுள்ளது.

**சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துதல் – பொருட்காட்சிகள்**

★ சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக மாவட்ட அளவிலான 60 பொருட்காட்சிகள் மற்றும் வட்டார அளவிலான 130 பொருட்காட்சிகள் 2009–10ஆம் ஆண்டில் நடத்த அட்டவணைப்படுத்தப்பட்டது.

★ 2009–10ஆம் ஆண்டில் 60 மாவட்ட அளவிலான பொருட்காட்சியும், 125 வட்டார அளவிலான பொருட்காட்சியும் நடைபெற்றன. இதில் மொத்த சுயஉதவிக் குழு தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை தொகை ரூ.10.78 கோடி மாவட்ட அளவிலும், ரூ.3.75 கோடி வட்டார அளவிலும் விற்பனை செய்யப்பட்டது. மேலும் மாநில அளவில் 2 சுயஉதவிக் குழு பொருட்காட்சி நடத்தப்பட்டு அதில் ரூ.2.99 கோடி அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் ரூ.15.33 கோடி செலவில் சுயஉதவிக் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுவத்துவதற்கு நிரந்தர சந்தை வளாகம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இதைப்போல சுயஉதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு சிறந்த முறையில் ஊரகப் பகுதியில் ஒரு மாவட்டத்திற்கு மூன்று என்ற விகிதத்தில் 90 கிராம விற்பனை மையங்கள் ரூ.13.50 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

**பயிற்சித் தொகை**

★ 2006–07ஆம் ஆண்டில், பயிற்சிக்கு வருகை தரும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 7.50லிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப் பட்டுள்ளது.

★ அதே போல் ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சிக்கு வருகை தரும் பயிற்சியாளர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 20இலிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**தொண்டு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்**

★ மகளிர் திட்ட செயலாக்கத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கான அங்கீகார விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு அந்நிறுனங்களின் செயல்பாட்டுத் திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

★ புதிய விதிகளின் கீழ் தொண்டு நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 2008–09 ஆம் ஆண்டு முதல் 469 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளன. ஊராட்சி அளவிலான சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்பை வலுப்படுத்துதல்

★ 2006–07ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

★ சிறப்பாக செயல்படும் 6,912 கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூபாய் 10,000 வழங்கி உள்ளது.

★ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் குழு அமைப்பு நிதி, கண்காணிப்பு மற்றும் பயிற்சித் தொகை பெறுவதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சான்று அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

★ சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகள், தொண்டு நிறுவனங்களுக்கு இணையாக மகளிர் திட்டத்தில் இணைந்து புதிய குழு அமைத்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளை செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி சனநாயக முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தியமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் இக்கூட்டமைப்புகளை தமிழ்நாடு சங்கங்கள்

பதிவுச்சட்டம், 1975இன் கீழ் பதிவு செய்வதன் மூலம், அவைகள் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறவும் வங்கிகள் மூலம் எளிதாக கடன் பெறவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975இல் விதிகள் 25 மற்றும் 42இன் செயல்பாட்டில் இருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த விலக்களிப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகுக்கிறது.

★ மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் வரும் 3 ஆண்டுகளில் தரமாக மறுசீரமைக்க செயல்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதுவரை மகளிர் திட்டத்தின் கீழ் 1,407 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

★ ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில், தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் ஒரு இலட்சம் அளிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதற்காக 2009–10 ஆம் ஆண்டில் 1,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2010 வரை 1,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

★ நிதி இடையீட்டாளர் பணி என்பது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் அடிப்படைப் பணிகளில் ஒன்றாகும். மேலும் கூட்டமைப்புகள் சமுதாய அளவில் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான கடன் வசதிகளைப் பெற்றுத் தரும் நிதி நிறுவனமாக வளரும் என நம்பப்படுகிறது. இந்த வகையில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இணைப்புப் பெறுவதற்கும் வங்கிகள் மூலம் பெருங்கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடனாகக் கொடுப்பதற்கு தகுதி பெறுகிறார்கள். 2009–10 ஆம் ஆண்டு 102 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 27.52 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.

**மணிமேகலை விருதுகள்**

★ சிறப்பாக செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் ஐந்து சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுயஉதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஒரு சிறந்த சுயஉதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் 3 சிறந்த சுயஉதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

★ 2006–07, 2007–08ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கப்பட்டன. 2008–09ஆம் ஆண்டிற்கான விருதுகள் 16.11.2009 அன்று சென்னையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

★ 2009–10ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருதுத் தொகையினை அரசு உயர்த்தியுள்ளது, மாநில அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாகவும், சிறந்த சுயஉதவிக் குழுக்களுக்கான விருதுத்தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாகவும் உயர்த்தியுள்ளது. மாவட்ட அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுத்தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாகவும், சிறந்த சுயஉதவிக் குழுக்களுக்கான விருதுத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியுள்ளது.

**வங்கியாளர்களுக்கான விருது**

★ வங்கியாளர்கள் மகளிர் மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். வங்கிகள் மூலம் பெருமளவில் நிதி உதவி கொடுத்து அதை பொருளாதார காரணத்திற்காகவோ அல்லது ஏனைய செலவிற்காகவோ பயன்படுத்தும் அளவிற்கு கொடுத்து உதவுகின்றனர். அவர்களின் இதர தேவைகளை கடன் வழங்கி பூர்த்தி செய்கின்றனர். எனவே வங்கியாளர்களை கௌரவிக்கும் விதமாக அரசு சிறந்த வங்கியாளர் விருது, வங்கிக் கிளைகளுக்கான விருது மாநில மற்றும் மாவட்ட அளவில் நிறுவி உள்ளது.

★ மாநில அளவில் 3 சிறந்த வங்கிகளுக்கான விருது, 3 சிறந்த பிற வங்கிக் கிளைக்கான விருது மற்றும் 2 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான நுண்கடன்/ மற்றும் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிக் கிளைகளுக்கான விருது போன்றவை நிறுவப் பட்டுள்ளது. மாவட்ட அளவில் ஒரு சிறந்த வங்கிக்கான விருது (இதில் 200 வங்கிக் கிளைகளுக்கு மேல் உள்ள மாவட்டங்களில் 2 விருதுகள்) மற்றும் 3 சிறந்த வங்கிக் கிளைகளுக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன.

★ மேற்கண்ட விருதுகள் நிறுவப்பட்டதனால் வங்கிகள் மற்றும் வங்கி மேலாளர்களுக்கிடையே ஒரு நல்ல போட்டி உருவாகி அவர்களை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட 3 வங்கிகளுக்கு பாராட்டு சான்றிதழுடன் கூடிய விருதும், 3 சிறந்த பிற

வங்கிக்கிளைகள் மற்றும் 2 சிறந்த சுயஉதவிக் குழுக்களுக்கான நுண்கடன் மற்றும் மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிக் கிளைகளுக்கான காசோலை விருதுகளும் **16.11.2009** அன்று வழங்கப்பட்டது.

**சுயஉதவிக் குழுக்களுக்கிடையே போட்டிகள்**

★ சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் குழு உணர்வை உருவாக்கும் நோக்கத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் நடத்த **2007–08** முதல் ஆண்டுதோறும் ரூபாய் **1.60** கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இப்போட்டிகள் சுயஉதவிக் குழுக்களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

**சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்**

★ மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகிப் பயன்பெறவும், மகளிர் திட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு படிப்படியாக அடையாள அட்டை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

★ சுயஉதவிக் குழு அடையாள அட்டைகள் **11** மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **21** மாவட்டங்களிலும் சுயஉதவிக் குழு அடையாள அட்டைகள் நடப்பு ஆண்டில் வழங்கப்படும்.

**இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி**

★ தமிழ்நாட்டில் இதற்கு முன் கண்டிராத வகையில் பெரும் வளர்ச்சியை தொழில் துறை கண்டு வருகிறது. இவ்வளர்ச்சியின் பயனாக பொருத்தமான தொழிற் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறலாம். இதனைக் கருத்திற் கொண்டு, **2006–07** ஆம் ஆண்டு முதல் இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்க அரசு அனுமதித்துள்ளது.

★ **2008–09** ஆம் ஆண்டு **25,000** இளைஞர்கள் பயிற்சி பெறுவதற்காக ரூ.**20** கோடி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், நோக்கியா, டி.வி.எஸ், மற்றும் ஐ. எல். அண்டு எப். எஸ். போன்ற சிறந்த நிறுவனங்கள் மூலம் இதுவரை **40,123** இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளித்துள்ளது.

★ **2009–10** ஆம் ஆண்டு **25,000** இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க உத்தேசித்து **31.03.2010** வரை **25,386** இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்று வருகின்றனர்

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கி உதவியுடன் ரூ.**717** கோடி செலவில் **6** ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் ஓர் ஆற்றலளிப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டம் **16** மாவட்டங்களில் (புதிதாக துவக்கப்பட்ட திருப்பூர் மாவட்டம் உள்ளடங்கியது) மிகவும் பின்தங்கிய **70** வட்டாரங்களிலுள்ள **2,515** ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் நவம்பர் **2005**இல் தொடங்கப்பட்டிருப்பினும், அக்டோபர் **2006** முதல் தான் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது.

★ இத்திட்டம் மொத்தம் நான்கு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. அக்டோபர் **2006** முதல் **15** வட்டாரங்களில் உள்ள **578** கிராம ஊராட்சிகளில் முதற்கட்டமாகவும், ஏப்ரல் **2007** முதல் **15** வட்டாரங்களில் உள்ள **585** கிராம ஊராட்சிகளில் இரண்டாம் கட்டமாகவும், நவம்பர் **2008** முதல் **20** வட்டாரங்களில் உள்ள **635** கிராம ஊராட்சிகளில் மூன்றாவது கட்டமாகவும், பிப்ரவரி **2009** முதல் நான்காம் கட்ட **717** கிராம ஊராட்சிகளில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**பணியமைப்பு**

★ மாநில, மாவட்ட மற்றும் பகுதியளவில் தேவையான பணியாளர்கள் அறிமுகப்பயிற்சிக்குப் பின் பணியிலுள்ளனர். **14** மாநில வல்லுனர்கள், **18** மாவட்ட திட்ட மேலாளர்கள், **104** உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் **890** திட்ட ஒருங்கிணைப்பு அணி உறுப்பினர்களும் பணியில் உள்ளனர்.

★ திட்டப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் முகத்தான், பணியாளர்களின் பணி மதிப்பீட்டின் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்குவதற்கான ஒரு உன்னதமான திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் பலனாக பணியாளர்கள் பணிவிலகும் எண்ணிக்கை மிகமிகக் குறைந்துள்ளதோடு பணியாளர்களும் ஊக்கம் பெற்று பணித்திறன் மேம்பட்டுள்ளது.

**மக்கள் ஆய்வு மூலம் இலக்கு மக்களைக் கண்டறிதல்**

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் மக்கள் பங்கேற்புடன் மக்களே ஆய்வு செய்து இலக்கு மக்களை கண்டறிகின்றனர். இந்த ஆய்வுப் பணி **2,476** கிராம ஊராட்சிகளில் முடிவடைந்துள்ளது. மேற்கண்ட ஆய்வுப் பணியின் மூலம் இது வரை **5.07** இலட்சம் குடும்பங்கள் இலக்காக கண்டறியப் பட்டுள்ளன.

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்கள் உருவாக்குதல்**

★ இலக்கு மக்கள் கண்டறியப்பட்டப்பின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கைக்

குழுக்கள் போன்ற மக்கள் அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

★ கிராம அளவில், திட்டச் செயல்பாடுகளை செயல்படுத்தும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு திட்ட நிதி நேரடியாக விடுவிக்கப்படுகிறது.

★ கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்கள் 2,451 கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ மேலும் 130 பழங்குடியினர் குடியிருப்புகளில் சிறப்பு பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ இதுவரை கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு நிதியாக ரூ.301.44 கோடி நேரடியாக வழங்கப் பட்டுள்ளது.

**சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்**

★ இத்திட்டத்தின் மூலம் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டும், ஏற்கெனவே உள்ள சுயஉதவிக் குழுக்களை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் இணைத்தும் தக்க திறன் வளர்ப்புப் பயிற்சிக்குப் பின் வங்கி இணைப்பு செய்து தரப்படுகிறது.

★ இதுவரை பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டு 11,783 சுயஉதவிக் குழுக்களும் மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு 6,144 சுயஉதவிக் குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இத்திட்டத்தில் இதுவரை 17,927 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ வறுமை ஒழிப்பு சங்கங்களில் இதுவரை 31,489 சுயஉதவிக் குழுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

★ இதுவரை உருவாக்கப்பட்ட புதிய சுயஉதவிக் குழுக்களை 10,741 சுயஉதவிக் குழுக்களுக்கு இதுவரை ரூ.60.68 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது; மற்றும் 1,322 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.14.73 கோடி இரண்டாம் தடவை கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ வறுமை ஒழிப்புச் சங்கங்களில் இணைக்கப்பட்ட குழுக்களில் 9,756 குழுக்களுக்கு ரூ.47.25 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது; மற்றும் 3,573 குழுக்களுக்கு ரூ.57.18 கோடி இரண்டாம் தடவை கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சுயஉதவிக் குழுக்கள் சமூகத்திலிருந்து உருவாக்கப்பட்ட பயிற்றுநர்களால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் 7,311 சமூக சுயஉதவிக் குழு பயிற்றுநர்கள் உருவாக்கப்பட்டு, சுயஉதவிக் குழுக்களுக்கு அனைத்து உதவிகளையும் அளித்து வருகின்றனர்.

**மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான சிறப்புத் திட்டங்கள்**

★ இத்திட்டம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு மறுவாழ்வு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவிகள் அளிப்பதோடு, அவர்களின் உரிமைகளைப் பெறுவதற்கும் உதவுகிறது.

★ இத்திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட 72,123 மாற்றுத் திறனாளிகளில் 81 சதவிகிதத்தினருக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 94,496 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தொழில் தொடங்குவதற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன

★ மாற்றுத் திறனாளிகளுக்காக உருவாக்கப்பட்ட 3,348 சுயஉதவிக் குழுக்கள் வங்கிகளுடன் இணைக்கப்பட்டு ரூ.18.70 கோடி வங்கி கடன் பெறப்பட்டுள்ளது. வங்கிகள் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்காக குறிப்பிடத்தக்க அளவில் கடன் பெற்றுள்ளது. இதுவே முதன் முறையாகும்.

★ கடுமையாக ஊனமுற்ற 4,290 நபர்கள் பராமரிப்பு உதவியும் 20,833 வயதானோர் முதியோர் உதவித் தொகையும் இத்திட்டத்தின் மூலம் பெற்றுள்ளனர்.

★ 9,727 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.2.62 கோடி செலவில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**இளைஞர் மேம்பாடு**

★ இத்திட்டம் இளைஞர்களை வளர்ச்சிப் பணிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தவும், அவர்களின் திறன்களை வளர்த்து வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் சிறப்பு முயற்சிகள் எடுத்து வருகிறது.

★ புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் உதவியுடன் 46,356 இளைஞர் களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு 37,831 இளைஞர்கள் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவை தவிர 16,130 இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர்.

★ இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளித்திட நோக்கியா, பாக்ஸ்கான், எம்.ஆர்.எப்., அசோக் லேலாண்ட், இன்டிமேட் பேஷன்ஸ் போன்ற புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களுடன் இத்திட்டம் தொடர்பு வைத்துள்ளது.

★ 2,581 கிராம ஊராட்சிகளில் இளைஞர் துணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியில் 20 சதவிகிதம் இளைஞர் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியினைப் பயன்படுத்தி இளைஞர்களை ஈடுபடுத்தி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் பயனுள்ள செயல்பாடுகளைத்

தொடங்கியுள்ளன. கல்வி மையங்கள், வேலைவாய்ப்பு ஆலோசனை மையங்கள், கிராம தகவல் மையங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் ஆகியவை இந்த செயல்பாடுகளில் அடங்கும்.

**ஊராட்சி அளவிலான சுயஉதவிக்குழு கூட்டமைப்புகள் மறு சீரமைப்பு செய்தல்**

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில், அரசின் கொள்கைப்படி ஊராட்சி அளவிலான சுயஉதவிக் குழு கூட்டமைப்புகள், அனைத்துக் குழுக்களும் இணைந்து ஜனநாயக ரீதியாக பங்கேற்கும் வண்ணம் மறுசீரமைப்பு செய்யப்படுகின்றன. மறுசீரமைப்பு செய்யப்பட்ட பின் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–இன்கீழ் பதிவு செய்யப்படுகிறது. சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அமுதசுரபி எனும் வாழ்வாதார நிதி ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு வழங்கப்படுகிறது. இதுவரை 1,489 ஊராட்சிகளில் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் மறு சீரமைக்கப்பட்டு சங்கங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. 944 ஊராட்சிகளுக்கு வாழ்வாதார நிதி ரூ.66.6 கோடி இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, வங்கி மூலமாக ரூ.34.69 கோடி அளவிற்கு 149 ஊராட்சிகள் அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிப் பெருங்கடன் வழங்கப்பட்டது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இந்த வங்கிப் பெருங்கடனைப் பயன்படுத்தி சுயஉதவிக் குழு அங்கத்தினர்களுக்கு தேவையான வாழ்வாதார நடவடிக்கைகளுக்கும் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் உபயோகப்படுத்த வழங்கப்படும்.

**வாழ்வாதார மேம்பாடு**

★ ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இத்திட்டம் தனிநபர் மற்றும் சிறு குழுக்களின் தொழில் நடவடிக்கைகளை வங்கிகள் மூலம் பெறப்படும் நிதி உதவியுடன் மேற்கொள்ள உதவுகிறது.

★ மேலும் அதிக அளவில் இலக்கு மக்கள் ஈடுபட்டுள்ள தொழில்களில், தொழில் கூட்டமைப்புகளை உருவாக்கவும் துணை புரிகிறது.

★ மொத்தம் 2,757 உறுப்பினர்களைக் கொண்ட 66 தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பால்பண்ணை, ஆயத்த ஆடை உற்பத்தி, பூ சாகுபடி, செங்கல் சூளை, ஆடு வளர்ப்பு போன்றவை கூட்டமைப்புகளால் மேற்கொள்ளப் படும் சில தொழில்கள். ஆகும். மார்ச் 2009 வரை ரூ. 2.22 கோடி திட்ட நிதியாக இக்கூட்டமைப்பு களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மக்கள் கற்றல் மையம் (மகமை)**

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் பெற்ற அனுபவம் மற்றும் ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு தளமாகவும், மக்கள் வழியாக மக்கள் கற்றுக் கொள்ளும் ஒரு மையமாக மகமை திகழ்கின்றது.

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டம், மகமையை உருவாக்கத் தேவையான தொடக்க நிதியை (Initial Seed Money) வழங்குகிறது. முன்மாதிரியாக நாமக்கல், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருவாரூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சேலம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்ட 8 மகமைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. மகமைகளின் உறுப்பினர்கள் அதாவது சமூக வல்லுநர்கள் 3ஆவது மற்றும் 4ஆவது வட்டாரங்களிலும் மற்றும் பலவீனமாக உள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும் பயனுள்ள சேவைகளை அளித்து வருகின்றனர்.

**மக்கள் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம்**

★ சமூகப் பாதுகாப்பிற்கான இத்திட்டம் முன்மாதிரியாக விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் வட்டாரத்தில் செயல்படுகிறது. இத்திட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 25.11.2008 அன்று துவக்கப்பட்டுள்ளது. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் கூட்டமைப்பு இத்திட்டத்தை நிருவகிக்கும் அமைப்பாக (Third Party Administrator) செயல்படுகிறது. முன்மாதிரித் திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் எல்லாபுரம் வட்டாரத்திலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் வட்டாரத்திலும், வேலூர் மாவட்டத்தில் குடியாத்தம் வட்டாரத்திலும் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம் வட்டாரத்திலும் விரிவுப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 17,188 ஏழைக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**நிதிச் செலவின சாதனை**

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் மார்ச் 2010 வரை ரூ. 388.44 கோடி திட்ட நிதி செலவிடப்பட்டுள்ளது.

**சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்**

**ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)**

★ இத்திட்டம் 06.04.2005இல் தொடங்கப்பட்டது. எனினும் 13.5.2006 வரை 4.95 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. ஆனால் இத்திட்டம் 31.10.2009 அன்று நிறைவு பெற்ற போது ரூ.292.94 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநிலத்தின் 12 ஊரகக் கடலோர மாவட்டங்களில் 1,602 குடியிருப்புகள் அடங்கிய 257 கடலோர கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் அனைத்துத் துறைகளினாலும் இதுவரை 620 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் செலவிடப் பட்டுள்ள 292.94 கோடி ரூபாய் மொத்த செலவில் சுமார் 47 விழுக்காடு ஆகும்.

**வாழ்வாதாரத் திட்டங்கள்**

★ வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி, பொருளாதார

மேம்பாட்டு உதவி மற்றும் மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் தொடங்க மானிய உதவி ஆகியவை வழங்குவதில் இலக்கீடு 100 விழுக்காடு எய்தப்பட்டுள்ளது.

★ மாற்றுத் திறனாளிகள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வங்கிகளில் கடன் பெறுவது கடினமானதாக உள்ளது. கடலோர மாவட்டங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகள் ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாய் மானியமாக அளித்து அதன்மூலம் தொடர் வருமானம் தரக் கூடிய ஒரு சுய தொழிலை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. 34,634 மாற்றுத்திறனாளிகளுக்கு சுமார் 34.63 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**திறன் வளர்ப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகள்**

★ கடலோர மாவட்டங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்கள், மீனவர்கள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினர்களுக்கும் தேவையான திறன் வளர்ப்புப் பயிற்சி அளித்திடவும், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் 7 திட்டங்கள் 26.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுகின்றன.

★ 15.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் சுய உதவிக் குழுக்களுக்கென ஒரு வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஜூன் மாதம் 2010க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ கடல் பாதுகாப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கடல் பாதுகாப்பு முறைகளில் ரூ.112.87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சிகள் துவங்கப்பட்டு இதுவரை 31,959 மகளிருக்கும், 36,890 மீனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

★ ஏழு கடலோர மாவட்டங்களில் உள்ள 93 மீனவர் சங்கங்களுக்கு 2.96 கோடி ரூபாய் நடைமுறை மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு மூலம் வங்கிக் கடனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன் பெறுவது தடுக்கப்பட்டு, இச்சங்கங்கள் சுயமாகச் செயல்பட வழிவகுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 5,000 மீனவர் சங்க உறுப்பினர்கள் நேரடியாகவும் சுமார் 20,000 மீனவர்கள் பயனாளிகளைச் சார்ந்தும் பயன் பெற்றுள்ளனர்.

★ தஞ்சாவூர் மாவட்டத்தில் 4 நேரடி கொள்முதல் நிலையங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு அவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

★ 4.06 கோடி ரூபாய் செலவில் 11 கடலோர மாவட்டங்களில் 9 பால் குளிரூட்டும் நிலையங்கள், 37 பால் விநியோகிக்கும் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இந்தத் தொழிலில் ஈடுபடும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 3,645 நபர்களுக்கு பால் உற்பத்தி மற்றும் கறவை மாடுகள் பராமரித்தல் குறித்த பயிற்சியும், 400 நபர்களுக்கு பால் மற்றும் பாலிலிருந்து தயார் செய்யப்படும் பொருட்கள் விற்பனை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 160 பால் கூட்டுறவுச் சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 250 நெசவாளர்களுக்கு 61.09 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் திறன்வளர்ப்புப் பயிற்சி மற்றும் அவர்களது கைத்தறிகளை மேம்பாடு செய்து புதுப்பித்தல், மற்றும் பொதுவான பணி மையம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 250 கைத்தறிகளை மேம்படுத்தி இத்தறிகளில் நெசவாளர்களுக்குத் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 8 பணி மையக் கட்டடங்களில் சீரமைப்புப் பணிகள் முடிவுற்றன.

★ விழுப்புரம் மாவட்டத்தில் 67.49 இலட்சம் ரூபாய் செலவில் 1,000 கைவினைஞர்கள் பயன்பெறும் கைவினைஞர் கிராமம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

**சாலைகள் மற்றும் வடிகால்கள்** (Roads and Drainages)

★ கடலோர ஊராட்சிகளில் சுமார் 699 கி.மீ. நீளத்திற்கு 610 சாலைப் பணிகள் 89 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

★ கடலோர ஊராட்சி மன்றக் கட்டடங்களைப் புதுப்பித்தல், கூட்ட அரங்குகள் கட்டுதல், ஆகிய 196 பணிகள் 5 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

★ ஊரக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தனிநபர் கழிப்பறை பயன்பாடு, தன் சுத்தம், சுகாதாரம் குறித்த 21 விழிப்புணர்வு விளம்பரப் படங்கள் ரூ.67.28 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)**

★ தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்.

★ இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும்

தூத்துக்குடி மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய 2,687 வீடுகள் கட்டும் பணி சுமார் 65.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு 2,687 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், பொதுக் கட்டடங்கள், வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குதல் ஆகியவை சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன

**தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டியப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்தல்**

★ தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் அரசின் மூலம் இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் 57.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 40.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 133 உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், 5.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,495 சுகாதார கழிப்பறை வசதிகளும், 2.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாழ்வான நிலப்பகுதிகளில் மண் நிரப்பும் பணிகளும், 5.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெரு விளக்குகள் மற்றும் வீடுகளுக்கு மின் இணைப்புகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

**எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்**

★ 11 கடலோர மாவட்டங்களில் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள எளிதில் பாதிப்புக் குள்ளாகும் வீடுகள், 1,000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் மற்றும் மீனவர் குடியிருப்புத் திட்டங்களின் கீழ் அரசால் கட்டப்பட்ட 01.01.2006இல் 10 ஆண்டுகள் பழமையான வீடுகள் உட்பட சுமார் 18,302 வீடுகளை இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.499.22 கோடி செலவில் மீளக் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதுவரை, 12,665 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 5,637 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. நிலுவையில் உள்ள அனைத்து வீடுகளும் செப்டம்பர் 2010க்குள் முடிக்கப்படும்.

★ மேற்கண்ட வீடுகள் கட்டும் பகுதிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நெறிமுறைகளின்படி அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், குளம் சீரமைத்தல், மயானம் சீரமைப்பு, அங்கன்வாடி மையங்கள்/ சமையல் கூடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் 68.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,238 பணிகள் எடுக்கப்பட்டு அதில் 3,138 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்துப் பணிகளும் மே மாதம் 2010க்குள் முடிக்கப்படும்.

**உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் –**

**கடலோர சமுதாயத்தின் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறைக்கும் திட்டம் (ETRP-VRCCP)**

★ தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மீளப் பெறவும், பாதிப்படைந்த வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு உலக வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தொண்டு நிறுவனங்கள் சுனாமியால் நேரடியாக பாதிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டித் தர தாங்களாகவே முன்வந்ததால், உலக வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் கணிசமான சேமிப்பு ஏற்பட்டது.

★ அரசு, இத்திட்டத்தின் கீழ் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1,000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிக்கக் கூடியவையாக அறியப்பட்ட வீடுகளை எதிர் காலத்தில் சுனாமி போன்ற பேரிடர்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் மீண்டும் கட்டித் தர முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசும் உலக வங்கியும் 13.8.2009இல் கையொப்பமிட்டுள்ளன.

★ உலக வங்கி நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின்கீழ் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1,000 மீட்டர் வரையிலுள்ள கடலோரப் பகுதிகளில் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட சுமார் 17,000 வீடுகளை மீளக் கட்டித் தருதல்.

★ அவசர காலத்தில் எளிதாக வெளியேறித் தப்பித்துச் செல்லத் தேவையான வெளியேறும் சாலைகளை அமைத்தல். மேலும் வெளியேறும் சாலைகளில் பாதுகாப்பான பகுதியினை சென்றடைய ஏதுவாக வழிகாட்டுப் பலகைகள் அமைத்துத் தருதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

★ 11 கடலோர மாவட்டங்களில் வருவாய்த் துறையினரால் கணக்கெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் மூன்றாம் நிலை எளிதாக்குநர்களாக நியமனம் செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலம் மறு ஆய்வு செய்யப்பட்டனர். அதன்படி 15,056 வீடுகள் மீளக் கட்ட தகுதியுடையவைகளாகக் கண்டறியப் பட்டுள்ளன. கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 500 மீட்டர் வரை உள்ள 6,145 வீடுகளுக்கு இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் / மாநில கடலோரப் பகுதி மேலாண்மை அமைப்பின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன. வீடுகள் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.

★ ★ ★



# குடிநீர் வசதிகளை அளிக்கும் புதிய திட்டப் பணிகள்

மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

- ✶ 2006ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 5 மாநகராட்சிகள் மற்றும் 152 நகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / பழங்குடியினருக்கு ஒதுக்கீடு மற்றும் பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 28.10.2006 அன்று பதவியேற்றனர்.

- ✶ உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகள், அதிகாரங்கள் வழங்குவது குறித்து விரிவாக ஆராய்ந்து, தக்க பரிந்துரைகள் அளிக்க வல்லுனர்கள் குழு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டது. உயர்நிலைக்குழு பரிந்துரை செய்த 68 பரிந்துரைகளில் 42 பரிந்துரைகளுக்கு அரசு உரிய ஆணை பிறப்பித்துள்ளது. ஏனைய பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

- ✶ கடந்த நான்கு ஆண்டுகளில், மொத்தம் 7,535 காலிப் பணியிடங்கள் நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படியும், தினக்கூலிப் பணியாளர்களை காலமுறை ஊதிய ஏற்றமுறையில் வரன்முறைப்படுத்தியும் நிரப்பப்பட்டுள்ளன.

- ✶ நேரடி நியமனம் மூலம் 2,799 பேர், கருணை அடிப்படையில் 1,528 பேர், தினக்கூலிப் பணியாளர்களை காலமுறை ஊதிய ஏற்றமுறையில் பணி வரன்முறைப்படுத்துதல் மூலம் 3,074 பேர், அரசு பொதுத் துறையில் பணிபுரிந்து பணியிழந்தவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கியதில் 134 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- ✶ நகர்ப்புரப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மையை செம்மையான முறையில் செயல்படுத்திட 283 புதிய வாகனங்கள் வாங்க நகர்ப்புர உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. வழக்கமாக வாங்கிப் பயன்படுத்தப்படும் வாகனங்களாகிய டிராக்டர் மற்றும் லாரிகள் தவிர, இம்முறை காம்பேக்டர், டம்பர் பிளேசர், மண்தோண்டி அள்ளும் இயந்திர வாகனம் மற்றும் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் இயந்திரங்கள் போன்றவை வாங்குவதற்கு அனுமதியளிக்கப் பட்டது.

- ✶ திருப்பூர் மற்றும் ஈரோடு நகராட்சிகளை மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தியதன் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் போன்றவற்றை செயல்படுத்திட இயலும். அரசு 17.11.2007ஆம் நாளிட்ட அவசரச் சட்டங்கள் 6 மற்றும் 7இன் மூலம் திருப்பூர் மற்றும் ஈரோடு நகராட்சிகள், மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு 29.12.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

- ✶ மேலும் 2008–09 நிதியாண்டில், வேலூர் மற்றும் தூத்துக்குடி நகராட்சிகள் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு முறையே 01.08.08 மற்றும் 05.08.08 ஆகிய நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

- ✶ புதியதாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ள நான்கு மாநகராட்சிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொள்வதற்கு ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தலா ரூ.5 கோடி மானியமாக அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. வேலூர் மாநகராட்சியில் ரூ.14.44 கோடியிலும், தூத்துக்குடி மாநகராட்சியில் ரூ.16.49 கோடியிலும் உள்கட்டமைப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

- ✶ நிலுவையில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட அரசுக் கடனுக்குண்டான அசல் மற்றும் வட்டித் தொகையுடன் சேர்ந்து பிற கடன் பொறுப்புகளும் நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு பெரும் சுமையாக இருந்தது. மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அரசுக் கடனின் அசல் நிலுவை மற்றும் மிகு வட்டி ஒரு தடைக்கல்லாக உள்ளதாகக் கருதப்பட்டதால், 31.03.2007 அன்று வரை நிலுவையிலிருந்த அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடனுக்குண்டான அசல் தொகை ரூ.429.84 கோடியும் அதற்கான வட்டித் தொகை ரூ.357.58 கோடியும் தள்ளுபடி செய்யப்பட்டது.

- ✶ நகராட்சிகளிலுள்ள தகனமேடைகள் மற்றும் சுடுகாடுகளில் இயற்கை எய்தியவர்களை மரபுவழி முறைகளில் 2006–07 முதல் 2008–09 ஆண்டுகளில் பகுதி–II திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றின் கீழ் ரூ. 29.17 கோடி மதிப்பீட்டில் 59 நவீன எரிவாயு தகனமேடைகள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் பத்தொன்பது இடங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. மற்ற இடங்களில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. அவை விரைவில் முடிக்கப்படவுள்ளன. இந்த எரிவாயு தகனமேடைகளை பராமரிக்க அங்கீகரிக்கப்பட்ட சேவை நிறுவனங்கள் மூலம்

அறக்கட்டளைகள் அமைக்க வேண்டுமென அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகளை ஏற்படுத்தும் இச்சேவை நிறுவனங்கள் அவற்றின் சேவைகளுக்காக சேவை நிதி ஒன்றினைப் பராமரிப்பதும், பொதுமக்களிடமிருந்து நியாயமான சேவைக் கட்டணம் வசூலிப்பதும் தேவைப்படுகிறது. இந்த நிதியானது எரிவாயு தகனமேடைகளைப் பராமரிக்க பயன்படுத்தப்படும். இயற்கை எய்தியவர்களின் உடலை எடுத்து வர இந்த அறக்கட்டளைகளே ஊர்திகளை இயக்கும்.

* ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள எரிவாயுத் தகன மேடைகளுக்கு பன்னாட்டுத் தரச்சான்று நிறுவனத்தால் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

* நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையங்கள் கட்டுவதற்கும், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள பேருந்து நிலையங் களை மேம்படுத்துவதற்கும், அரசால் கொள்கை முடிவெடுக்கப்பட்டு அதன்படி கிருஷ்ணகிரி, இராஜபாளையம், உள்ளகரம்–புழுதிவாக்கம், நெல்லிக்குப்பம், கொடைக்கானல், அனகாபுத்தூர், பூவிருந்தவல்லி (பகுதி–1), கோவில்பட்டி, பொள்ளாச்சி, பழனி, நாகர்கோவில் (வடசேரி), திருவண்ணாமலை மற்றும் ஈரோடு ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் பேருந்து நிலையப் பணிகள் ரூ.34.03 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் ஓசூர், வந்தவாசி, மறைமலைநகர், வெள்ளக்கோயில், குழித்துறை, தேவகோட்டை, சத்தியமங்கலம், கோயம்புத்தூர் மாநகராட்சி–மேட்டுப்பாளையம் சாலை மற்றும் பூவிருந்தவல்லி (பகுதி–II) ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.27.09 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

* தாம்பரம், சாத்தூர், மணலி, திண்டிவனம், வாணியம்பாடி, திண்டுக்கல், ஆரணி மற்றும் நாகர்கோவில் போன்ற நகராட்சிகளில் ரூ.24.44 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

* 2008–09 மற்றும் 2009–10ஆம் ஆண்டுகளில் நிதி நிலையில் நலிவுற்ற முப்பது நகராட்சிகளில் தலா ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'' செயல்படுத்தப்படும் என ஏப்ரல் 2008இல் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, இந்நகராட்சிகள் தேர்வு செய்யப் பட்டு, குடிநீர் வழங்கல் மேம்படுத்துதல், அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல், சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், பொதுக்கழிப்பிடங்கள் கட்டுதல், தெருவிளக்குகள் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் அமைத்தல் மற்றும் மயானங்களுக்கு அணுகுச்சாலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள ரூ.22.50 கோடி மானியம் அரசால் வழங்கப்பட்டது,

* இந்நகராட்சிகளில் ரூ.24.02 கோடி மதிப்பீட்டில் (அரசு மானியம் ரூ.22.50 கோடி மற்றும் நகராட்சி நிதி ரூ.1.52 கோடி) மொத்தம் 208 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 31.03.2010 அன்றைய நிலவரப்படி 198 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 10 பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

* உள்ளாட்சிகளில் புராதன நகராக உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஏற்கெனவே உள்ள உள்கட்டமைப்புகள் மேம்படுத்த, புராதன நகர் மேம்பாட்டுத் திட்டப் பணி நகர் ஊரமைப்புத் துறை நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 2006–07, 2007–2008 ஆண்டுகளில் 7 நகரங்களில் ரூ.3.25 கோடி நிதி உதவி பெறப்பட்டு சிமெண்ட் சாலை, உயர் மின் கோபுர விளக்கு பொருத்துதல், சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி, பேருந்து நிழற் குடைகள் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மொத்தம் 17 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு இதுவரை 13 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 4 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பேரூராட்சிகளின் இயக்குநரகம்**

* நிருவாகப் பொறியாளர் மற்றும் அனைத்து மண்டல உதவி செயற்பொறியாளர்களின் கண்காணிக்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டு 21 ஈப்புகள் 16.07.2008ஆம் தேதியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

* திருச்செந்தூர் – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.14.48 கோடி செலவில் திருச்செந்தூர் பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த மாநில அளவிலான அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 12.4.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட தொடர் நடவடிக்கையில் உள்ளது.

* போரூர் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தினால் தயாரிக்கப்பட்ட ரூ.38.29 கோடி மதிப்பீட்டிற்கான விரிவான திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 25.03.2010 அன்று சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* 21.10.2008இல் செவிலிமேடு பேரூராட்சிக்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (UIDSSMT) ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட நிருவாக அனுமதி வழங்கப்பட்டது. 18.12.2009இல் ரூ.9.18 கோடிக்கு அரசினால் திருத்திய நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்ட செயலாக்கம் தொடர் நடவடிக்கையில் உள்ளது

* மேலும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குட்பட்ட 19 பேரூராட்சிகளில் திருமழிசை மற்றும் பெருங்குடி பேரூராட்சிகளுக்கு கழிவுநீரகற்றுத் திட்டத்திற்கு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 14.1.2009 அன்று மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. திருமழிசை பேரூராட்சியில் 30.12.2009 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு இதுவரை 112 மனித நுழைவாயில் கட்டுமானப் பணிகளும் 334 மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியும் முடிவுற்றுள்ளது.

* பெருங்குடி பேரூராட்சிக்கு 22.4.2010 அன்று மறு ஒப்பந்தப் புள்ளிகள் சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலமாக கோரப்பட்டுள்ளது.

* மாடம்பாக்கம், சிட்லப்பாக்கம், செம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை மற்றும் பள்ளிக்கரணை ஆகிய 6 பேரூராட்சிகளுக்கு 30.1.2009இல் மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

* மேற்படி பேரூராட்சிகளில் கழிவுநீரகற்று திட்டம் செயல்படுத்த 28.4.2010 அன்று சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

* மேற்கண்ட 8 பேரூராட்சிகளிலும் கழிவுநீரகற்று திட்டம் செயல்படுத்த ரூ.312.03 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* திருநின்றவூர், மாங்காடு மற்றும் நந்தம்பாக்கம் ஆகிய மூன்று பேரூராட்சிகளுக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

* மீஞ்சூர் மற்றும் சின்னசேக்காடு ஆகிய இரண்டு பேரூராட்சிகளுக்கு மதிப்பீடுகள் கூர்ந்தாய்வு செய்து திருத்தங்கள் மேற்கொள்ள கலந்தறிதற்குரியரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* நாரவாரிக்குப்பம், புழல், குன்றத்தூர், மீனம்பாக்கம், திருநீர்மலை மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 6 பேரூராட்சிகளுக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

* கடந்த நான்காண்டுகளில் காலியாக இருந்த பணியிடங்கள் 7,647இல் பூர்த்தி செய்யப்பட்ட பணியிடங்கள் 6,431.

**சென்னை மாநகராட்சி**

* 2006 மே மாதம் முதல் சென்னை மாநகராட்சியில் 5,421 தார் சாலைகள் 1,472.58 கி.மீ. நீளத்திற்கு ரூ.237.60 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டன.

* சென்னை மாநகராட்சி குடிசைப் பகுதி மக்களின் வசதிக்காக 2,051 சாலைகள் சிமெண்ட் கான்கிரிட் சாலைகளாக 467.75 கி.மீ. நீளத்திற்கு ரூ.136.62 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

* 974 நடைபாதை பணிகள் 606.05 கி.மீ. நீளத்திற்கு ரூ. 55.62 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

* இதுவரை 151.29 கி.மீ. நீளத்திற்கு ரூ.74.80 கோடி செலவில் பேருந்து சாலைகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

* 138 கட்டடப் பணிகள் ரூ.39.92 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* 86 கழிப்பிடங்கள் ரூ.5.02 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 190 சத்துணவுக் கூடங்கள் ரூ. 16.55 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 47 உடற்பயிற்சிக் கூடங்கள் ரூ.5.98 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 366 பூங்கா பணிகள் ரூ. 29.24 கோடி செலவில் முடிக்கப் பட்டுள்ளன. 72 விளையாட்டு மைதானங்கள் ரூ. 4.66 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 17 கலையரங் கங்கள் ரூ. 2.23 கோடி செலவில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 39 சமையற்கூடங்கள் ரூ. 3.98 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 41 மயான பூமி பணிகள் ரூ.3.05 கோடி செலவில் முடிக்கப் பட்டுள்ளன.

* ஆய்வு வாகனங்கள் 5 எண்ணிக்கைகள் ரூ.24.4 இலட்சம் செலவிலும், ஒரு நடமாடும் பல் மருத்துவ வாகனம் பழைய ஆம்புலன்ஸ் வாகனத்தில் மாற்றம் செய்து பொருத்தி வழங்குவதற்கு ரூ.5.95 இலட்சம் செலவிலும், மழைக்காலங்களில் தேங்கும் மழை நீரை அகற்றுவதற்கு 7 எண்ணிக்கைகள் 50 HP திறன் கொண்ட மோட்டார் பொருத்திய பம்பு செட்கள் மண்டல உபயோகத்திற்காக ரூ.40.42 இலட்சத்திலும், மெரினா நீச்சல் குளத்திற்கு டிக்கட் வழங்கும் இயந்திரம் ரூ.1.7 இலட்சத்திலும், மெரினா கடற்கரைப் பூங்காக்களை அழகுபடுத்தும் பணிக்காக உபயோகப்படுத்தப்படும் உபகரணங்கள் ரூ.1.29 இலட்சத்திலும், மண்டலங்களில் அமைந்துள்ள பூங்காக்களை அழகுபடுத்தும் பணிக்காக உபயோகப்படுத்தப்படும் உபகரணங்கள் ரூ.9.87 இலட்சத்திலும், மெரினா கடற்கரை நடைபாதைகளை சுத்தப்படுத்தும் பணிக்காக ஒரு எண்ணிக்கையில் அமர்ந்து இயக்கும் (Ride-on) சிறிய இயந்திரப் பெறுக்கி ரூ.6.60 இலட்சத்திலும்,

தலைமைச் செயலகம் எதிரில் அமைந்துள்ள பூங்கா நடைபாதைகளை சுத்தப்படுத்தும் பணிக்காக ஒரு எண்ணிக்கையில் அமர்ந்து இயக்கும் (Ride-on) சிறிய இயந்திரப் பெருக்கி ரூ.6.60 இலட்சத்திலும், மெரினா கடற்கரை நடைபாதைகளில் படிந்துள்ள அழுக்கைத் தேய்த்து உலர்த்தி சுத்தப்படுத்தும் இயந்திரம் (Scrubber Drier) ஒன்று ரூ.1.43 இலட்சங்கள் செலவிலும், அமர்ந்து இயக்கும் ஹெவி ட்யூட்டி லான் மோவர் ஒன்று ரூ.2.74 இலட்சத்திலும், பொதுத்துறைக்காக காகிதக் கழிவுகளை அழிக்கும் 2HP திறன் கொண்ட இயந்திரம் ஒன்று ரூ.0.49 இலட்சத்திலும், சிறிய சந்துகளில் கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்காக சிறிய வகை அள்ளும் இயந்திரம் (Skid Steer Loaders) 9 எண்ணிக்கைகளில் ரூ.81.34 இலட்சம் செலவிலும், 10 எண்ணிக்கைகளில் மாருதி ஆம்னி அமரர் ஊர்திகள் ரூ.23.43 இலட்சத்திலும், மாவட்ட குடும்ப நலத்துறைக்காக 7 எண்ணிக்கைகளில் ஆய்வு வாகனங்கள் ரூ.17.02 இலட்சங்கள் செலவிலும், ஹைட்ராலிக் முறையில் இயங்கும் ஏணி பொருத்திய தெரு விளக்கு பழுதுபார்க்கும் வாகனம் (7 மீ. உயரம்) 5 எண்ணிக்கைகளில் ரூ.57.57 இலட்சம் செலவிலும், நவீனமயமான தண்ணீர் உபயோகப்படுத்தாத சிறுநீர் கழிப்பிடங்கள் 7 எண்ணிக்கைகளில் ரூ.114 இலட்சம் செலவிலும், மெரினா கடற்கரை மணல் ஜலித்து சுத்தம் செய்யும் இயந்திரம் ஒன்று ரூ.32.68 இலட்சம் செலவிலும் கொள்முதல் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

* நேப்பியர் பாலத்தில் ஒளிரும் மின் விளக்குகள் அமைத்து அழகூட்டுவதற்கு கலந்தாய்வாளர் தேர்வு செய்யப்பட்டு, அலங்கார விளக்குகள் அமைக்கும் பணிக்காக ரூ.1.59 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இப்பணியை ஒப்பந்ததாரர் மூலம் நிறைவேற்ற, ரூ.1.62 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்ப ஆணை வழங்கப்பட்டுள்ளது.
* சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகைக்கு அருகிலுள்ள பழம்பெருமைவாய்ந்த விக்டோரியா பொதுக் கூடத்தை (VICTORIA PUBLIC HALL ) புதுப்பிக்கும் பணியில் ஒரு பகுதியாக ரூ.3 கோடி மதிப்பில் ஒளி மற்றும் ஒலி அமைப்பு (LIGHT AND SOUND SHOW) நிறுவப்பட உள்ளது. சென்னை மாநகரின் வரலாற்று நிகழ்ச்சிகள், பார்வையாளர் களைக் கவரும் வண்ணம் பலவகை ஒலி மற்றும் ஒளி விளக்கு காட்சிகள் இதில் இடம் பெறும்.
* சென்னை மாநகராட்சியில் காலியாக இருந்த வெவ்வேறு காலிபணியிடங்கள் 2007–2010 வரை நேரடி நியமனம் மூலம் 326 பணியிடங்களும் கருணை அடிப்படையில் 1,043 பணியிடங்களும் ஆக மொத்தம் 1,369 பணியிடங்கள் நிரப்பப் பட்டுள்ளன.
* சென்னை மாநகராட்சியில் தற்காலிகமாகப் பணியாற்றி வந்த 51 மின்தொழிலாளிகள், 48 தொழில்நுட்ப உதவியாளர்கள், 2,025 துப்புரவுப் பணியாளர்கள், 16 நேரக்காப்பாளர்கள் ஆக 2,140 தொழிலாளிகள் 2008–2009இலும் 59 தொழில்நுட்ப உதவியாளர்கள் 2009–2010இல் பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.
* சென்னை மாநகராட்சி அமைச்சுப் பணியில் பணியாற்றும் அலுவலர்களில் 2007–2008இல் 282 அலுவலர்களுக்கும் 2008–2009இல் 175 அலுவலர்களுக்கும் 2009–2010இல் 206 அலுவலர்களுக்கும் பதவி உயர்வு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

* இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – முத்தரசநல்லூர் மற்றும் கடியாகுறிச்சி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களைச் சார்ந்த 3,163 ஊரகக் குடியிருப்புகளைச் சார்ந்த 15.75 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.616 கோடி செலவில் பெருமைக்குரிய இத்திட்டம் மூன்றாண்டுகளில் முடிக்க இலக்கிடப்பட்ட போதிலும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கீட்டிற்கு ஓராண்டு முன்னதாகவே முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.06.2009 அன்று ஊடகத்தின் (Video Conference) வாயிலாக சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. அதேநாளில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் இராமநாதபுரத்தில் இத்திட்டம் பயனுக்குக் கொண்டுவரப்பட்டது. அனைத்துப் பயனாளிகளுக்கும் சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்கள் பெரிதும் பயனடைந்துள்ளன.
* தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட, குடிப்பதற்கு உகந்த குடிநீர் வழங்கும் நோக்கத்தில் தமிழக அரசு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்புக் குறைப்பு திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.1,928.80 கோடி அமைப்பு செலவிற்கு ரூ.63.67 கோடி பராமரிப்புச் செலவிற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டம் இவ்விரு மாவட்டங்களில் 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களைச் சார்ந்த 6,755 குடியிருப்புகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தினால் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.
* கட்டம்–1 பணிகளுக்கான கடன் ஒப்பந்தம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்திற்கும் மற்றும் இந்திய அரசிற்கும் இடையே 10.03.2008இல் ரூ.899.10 கோடிக்கும், கட்டம்–2 பணிகளுக்கான

கடன் ஒப்பந்தம் 31.03.2009இல் ரூ.686.50 கோடிக்கும் கையெழுத்தானது. மேலும் 307.48 கோடி குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின்கீழ் தமிழக அரசின் நிதியாகவும் ரூ.35.72 கோடி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் பங்களிப்பாகவும் பெற்று செயல்படுத்தப்பட உள்ளது.

* இத்திட்டத்தினை செவ்வனே செயல்படுத்தும் வகையில் 5 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொகுப்பு 1–க்கான பணி உத்தரவு ஐ.வி.ஆர்.சி.எல். இன்ப்ராஸ்ட்ரக்சர் ப்ராஜக்ட் லிமிடெட், ஐதராபாத் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, ஒகேனக்கல் தலைமைப் பணியிடத்தில் தரைமட்டத் தொட்டியின் (24x16 மீ.) கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மடத்தில் உள்ள பெரிய சமநிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொகுப்பு 2–க்கான விலைப்புள்ளி பட்டியல் பரிசீலனையில் உள்ளது. தொகுப்பு 4–க்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒப்புதலுக்காக 13.01.2010 அன்று அனுப்பப்பட்டுள்ளது. தொகுப்பு 3 மற்றும் 5–க்கு திருத்தப்பட்ட வரைவு முன்தகுதிகாண் விண்ணப்பங்கள் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒப்புதலுக்காக 07.04.2010 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2012ஆம் ஆண்டில் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

* 1,049 பணியாளர்கள் கீழ்நிலைப் பணியிலிருந்து பதவி உயர்வு பெற்றனர். 1,036 தொகுப்பூதியப் பணியாளர்கள் காலமுறைப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டது மற்றும் மதிப்பூதியம் பெற்றவர்கள் தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றியது. 227 உதவிப் பொறியாளர் / இளநிலை உதவியாளர் / ஓட்டுநர் ஆகியோர் கீழ்நிலைப் பணியிலிருந்து பணியமர்வு வழங்கப்பட்டது. 52 உதவிப் பொறியாளர் / உதவி நிலநீர் வல்லுநர் நேரடி பணி நியமனம் 33 இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர் ஆகியோர் கருணை அடிப்படையில் பணி நியமனம். ஆக மொத்தம் 2,397 பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

### கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

* சென்னைக் குடிநீர் வாரியம் மீஞ்சூரை அடுத்த காட்டுப்பள்ளியில் வடிவமைத்து சொந்தமாக நிறுவி, இயக்கி மற்றும் திருப்பித்தரும் (DBOOT) அடிப்படையில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை அமைத்து வருகின்றது. சென்னைக் குடிநீர் வாரியம் திருவாளர்கள் ஐ.வி.ஆர்.சி.எல். (M/s. IVRCL) மற்றும் பெஃபசா, ஸ்பெயின் (BEFESA) மற்றும் கன்ஸ்ட்ரக்ஷன் டெக்னாலஜியா ஆம்பியன்டல் லிமிடெட், ஸ்பெயின் அடங்கிய கூட்டு நிறுவனம் ஏற்படுத்திய சி.டபிள்யூ.டி.எல் (CWDL) நிறுவனத்துடன் மொத்தக் குடிநீர் கொள்முதல் ஒப்பந்தம் (BWPA) செய்துள்ளது. இந்த ஒப்பந்தமானது, நிலையம் செயல்பாட்டிற்கு வரும் நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். இந்த 25 ஆண்டு காலங்களில் மொத்தக் குடிநீர் கொள்முதல் ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, வாரியம், M/s.CWDL நிறுவனத்திடமிருந்து குடிநீரை விலைக்கு வாங்கும். ஒப்பந்தத்தின்படி, நிலையத்தை வடிவமைத்து, நிறுவி, செயற்படுத்தி இயக்குவது நிறுவனத்தின் பொறுப்பாகும். கடல்நீரை உள் கொணரும் மற்றும் அதிக உப்புத் தன்மைக் கொண்ட கழிவுகளை வெளியேற்றும் குழாய்கள் பதிக்கும் பணிகள் தவிர பெரும்பாலான பணிகள் முடிவுற்றுள்ளன. இந்த குழாய்கள் பதிக்கும் பணிகளை சில தொழில்நுட்ப காரணங்களால் M/s. CWDL நிறுவனத்தால் செயல்படுத்த இயலவில்லை. எனவே, இந்நிறுவனம் இந்த குழாய்கள் பதிக்கும் பணியினை மாற்று முறையில் மேற்கொள்ள முடிவு செய்தது. மாற்று முறையில் குழாய்களைப் பதிப்பதற்கு சில நிபந்தனைகளுடன் வாரியம் நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கியது. அதன்படி இந்த நிறுவனம் இப்பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. பணிகள் முடிவுற்றபின், நிலையம் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

* சென்னை நகரின் நீண்ட கால குடிநீர் தேவைக்குத் தீர்வு காணும் வகையிலும், சென்னை நகரை வறட்சியிலிருந்து பாதுகாப்பதற்கெனவும் கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்துள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு நிலையத்தை அமைக்க தமிழக அரசு முடிவு செய்தது. இந்நிலையம், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், இரண்டு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் சிப்பம், கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்தல் மற்றும் 7 ஆண்டுகளுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணி ரூ.1,033.68 கோடிக்கு (கட்டுமானப் பணி ரூ.533.38 கோடி + 7 வருடம் இயக்கம் மற்றும் பராமரிப்பு ரூ.500.30 கோடி) வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது சிப்பம் நகரின் பகிர்மான அமைப்பிற்கு குடிநீரைக் கொண்டு செல்லும் குழாய் பதித்தல் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு அமைக்கும் பணி ரூ. 122.50 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. 7 வருடங்கள் உள்கட்டமைப்பு இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிக்கான செலவு ரூ.1.02 கோடியும் இதில் உள்ளடங்கும். சிறப்புத் தன்மை வாய்ந்த பணி என்பதைக் கருத்தில் கொண்டு திட்ட மேலாண்மை மற்றும் கட்டுமானப் பணியை மேற்பார்வை செய்வதற்காக வாரியம் ஒரு கலந்தறிதற்குரியவரை ரூ.13.46 கோடி ஒப்பந்தம் மதிப்பில் நியமித்துள்ளது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இந்நிலையத்தின்

கட்டுமானப்பணியை 23.02.2010 அன்று துவக்கி வைத்தார்கள். தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை டிசம்பர் மாதம் 2011இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

✶ சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய மொத்தத் திறன் நாள் ஒன்றுக்கு 486 மில்லியன் லிட்டர் ஆகும். பெருங்குடி, நெசப்பாக்கம் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்புத் திறனுக்கு அதிகமாக கழிவுநீர் பெறப்படுகிறது. எனவே, சுத்திகரிப்புத் திறனை அதிகரிக்கவும், எதிர்காலத் தேவையைக் கருத்திற் கொண்டும், வாரியம், நாள் ஒன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கூடுதலான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பெருங்குடியில் அமைக்கும் பணிகளை ரூ.61.19 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் மார்ச் 2011இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

✶ அவ்வாறே நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட மற்றொரு கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையத்தை நெசப்பாக்கத்தில் அமைக்கும் பணிகள் ரூ.58.87 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் பிப்ரவரி 2012இல் முடிவுறும்.

✶ சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியச் செயல்பாடுகளின் வளர்ச்சிக்கேற்பவும், உள்கட்டமைப்பு விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டும், பொறியியல் மற்றும் இதர துறைகளில் கூடுதல் பணியாளர்களை நியமித்தல் மிக அவசியமாகிறது. எனவே வாரியம் படிப்படியாக பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

✶ கடந்த 4 ஆண்டுகளில் 354 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்** (TUFIDCO)

✶ மத்திய அரசு 03.12.2005 அன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் என்னும் ஓர் சீர்திருத்தத்தை உள்ளடக்கிய திட்டத்தைத் துவங்கியது. இது நாடு முழுவதும் 65 நகரங்களில் 7 ஆண்டுகளில் (2005–2006 முதல் 2011–12 வரை) அமல்படுத்தக்கூடிய திட்டமாகும்.

✶ தமிழகத்தில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரம் மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புரப் பகுதிகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றன.

✶ மத்திய அரசு 52 திட்டங்களுக்கு ரூபாய் 5,565.66 கோடி சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

✶ 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக்கான கணக்கெடுப்பின்படி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்பு திட்டத்தின் கீழ் வரும் 65 நகரங்கள் தவிர, அனைத்து நகரங்களுக்கும், இத்திட்டத்தில் தகுதி பெற்றவையாகும்.

✶ இத்திட்டத்தின் நிதிக் கூறு மத்திய அரசின் பங்கு 80%, மாநில அரசின் பங்கு 10% உள்ளாட்சிகளின் பங்கு 10% ஆகும். இத்திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குதல், சாலைகள், வடிகால்கள், திடக்கழிவு மேலாண்மை, பாதாளச் சாக்கடை போன்ற கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியுதவி பெறலாம். மத்திய அரசு இத்திட்ட காலத்திற்காக (2005–2006 முதல் 2011–2012 வரை) ஒதுக்கீடு ரூபாய் 705.97 கோடியாகும். மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழு ஒப்பளிப்பு அளித்த 142 திட்டங்களில் (திட்ட மதிப்பீடு ரூபாய் 1802.17 கோடி மதிப்பு), மத்திய அரசு 123 திட்டங்கள் (ரூபாய் 882.72 கோடி) அனுமதி அளித்துள்ளது.

✶ இத்திட்டத்தின் கீழ் 2007–08 ஆண்டு ரூபாய் 643.20 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ரூபாய் 143.24 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2008–09ல் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 1666.93 கோடி மதிப்புள்ள 19 திட்டங்களுக்கு ரூபாய் 416.73 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

✶ டுபிட்கோ அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் ரூ.345.07 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம்**

✶ 2006–07இல் அடையாறு ஓடைப்பகுதி மற்றும் அதன் கழிமுகத்துவாரப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிகளைச் சேர்த்து அடையாறு பூங்கா என்னும் ஓர் உலகத்தரம் வாய்ந்த பூங்கா ரூ.100 கோடி செலவில் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பூங்காவினை அமைப்பதற்காக அடையாறு பூங்கா என்னும் ஒரு பொறுப்பாட்சியை அரசு ஏற்படுத்தியது. இது இந்திய பொறுப்பாட்சி சட்டம் 1882இன் கீழ் 11.10.2006 அன்று பதிவு செய்யப்பட்டது. இந்த பொறுப்பாட்சியை தமிழக அரசின் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு நிருவாகிக்கும்.

✶ அடையாறு மற்றும் தமிழ்நாட்டின் வேறு இடங்களிலும் அடையாறு பூங்கா என்ற பெயரில் உயிரின வாழ்க்கைச் சூழல் பூங்கா ஒன்றை உருவாக்குவது, பராமரிப்பது மற்றும் அழியாது பாதுகாப்பது ஆகியவற்றை ஏதுவாக்குவதும், சர்வதேசத் தரத்திற்கு ஒப்ப ஒரு செய்முறை மற்றும் மாதிரித் திட்டத்தினை உருவாக்குவதற்காக சிறந்த நடைமுறைகளைக் கொண்டுவருவதும், சர்வதேச அளவில் ஆர்வத்தை உருவாக்கக்கூடிய ஒரு புதிய முக்கிய இடத்தை உருவாக்குவதன் வழியாக, மாநகரின் ஓய்வு மற்றும் திறந்தவெளிக்கான தேவைகளை நிறைவேற்றுவது மற்றும் அடையாறு முகத்துவாரத்தின் இயற்கையான நிலையை மீண்டும் நிர்மாணம் செய்வது மற்றும் சென்னை அல்லது பிற இடங்களைச் சேர்ந்த குடிமக்களை

இயற்கையோடு உறவாட ஏதுவாக்குவது மற்றும் நீடித்து வாழ்தல் குறித்து அவர்கள் அறிந்துகொள்ளச் செய்வது ஆகியவையே இந்த அறக்கட்டளையின் நோக்கமாகும்.

* மேலும் இந்தத் திட்டத்தினைச் செம்மையாக நிருவகிக்கும் பொருட்டு, இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1956, பிரிவு 25–இன் கீழ் அடையாறு பூங்கா என்னும் நிறுவனம் தொடங்க அரசு ஆணையிட்டது. அரசின் ஆணைப்படி இந்த நிறுவனம் அக்டோபர் 30, 2008இல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 இலட்சமாகும். மேலும் அது முழுவதும் அரசின் பங்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் இயக்குநர் குழு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் செயல்படும்.

* அடையாறு பூங்கா அறக்கட்டளையானது, அடையாறு பூங்காவைத் தவிர சென்னையில் இருக்கும் இதர ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் நீர்வழிகளைப் பாதுகாப்பது, மாசுபடுதலைக் குறைப்பது மற்றும் நீக்குவது, தாவர இனங்களைப் பாதுகாத்தல் போன்றவற்றில் ஒருங்கிணைந்த முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் தலைமையில் 11.12.2009 அன்று நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அவ்வாறே இந்த அறக்கட்டளையானது, அடையாறு மட்டுமல்லாது சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள அனைத்து ஆறுகள் மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக அதன் பெயரை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை என பெயர் மாற்றம் செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. அதன்படி, அடையாறு பூங்கா அறக்கட்டளை என்னும் பெயரை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை எனப் பெயர் மாற்றம் செய்து உத்தரவிட்டது.

* அடையாறு பூங்காவில் 58 ஏக்கரில் சுற்றுப்புறச் சூழல் சீரமைப்புத் திட்டம், அடையாறு பூங்காவில் 300 ஏக்கருக்கான சுற்றுப்புறச் சூழல் சீரமைப்புக்கான திட்டம் தயாரித்தல், அதிவிரைவு சுற்றுவட்ட போக்குவரத்துப் பாதை, சென்னையில் உள்ள நதிகள் மற்றும் நீர்வழிகளில் சீரமைக்கும் பணிகள், கோயம்புத்தூரில் செம்மொழிப் பூங்கா அமைத்தல் போன்றவை மேற்கொள்ளப்படும்.

* கோயம்புத்தூரில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை வரவேற்கும் விதமாகவும் அதனை நினைவு கூறும் விதமாகவும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை அமைந்துள்ள இடத்தில் ஒரு பெரிய தாவரவியல் பூங்கா அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார். கடந்த 7.1.2010 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஏற்கெனவே இதேபோன்ற பூங்காவினை அடையாற்றில் அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை (முன்னாள் அடையாறு பூங்கா அறக்கட்டளை) வசம் இதற்கான பணிகளை ஒப்படைப்பது என முடிவு செய்யப்பட்டது. மேலும், முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு செம்மொழிப் பூங்கா அறக்கட்டளை அமைப்பது பற்றியும் முடிவு செய்யப்பட்டது.

* கோவை மத்திய சிறைச்சாலைக்குச் சொந்தமான சுமார் 165.4 ஏக்கர் நிலம் செம்மொழிப் பூங்கா அமைப்பதற்குத் தேர்வு செய்யப்பட்டது. இவற்றில் சிறைச்சாலை அமைந்துள்ளது சுமார் 72.3 ஏக்கர் மட்டுமே. மீதமுள்ள 93.2 ஏக்கர் நிலத்தில் சில கட்டடங்கள் மற்றும் பெரும்பாலும் காலியிடங்கள் உள்ளன. முதலாவதாக, சில கட்டடங்கள் மற்றும் காலியிடங்கள் அமைந்துள்ள 49.4 ஏக்கர் பரப்பளவில் பூங்கா அமைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

* இயற்கைத் தாவர வளங்களைப் பாதுகாத்தல், சுற்றுப்புறச் சூழல் பற்றிய கல்வியறிவு, ஆய்வுகள், இயற்கையை விரும்புவோருக்கு ஒரு பொழுது போக்காக ஆகியவற்றினை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு இந்த செம்மொழிப் பூங்கா அமையவுள்ளது.

* இந்த நவீன தாவரவியல் பூங்கா மூலமாக பொதுமக்கள் இயற்கையுடன் இயைந்து வாழ்வதற்கு ஏதுவாகிறது. பொதுவாக மாற்றத்தக்க தாவர வளங்களின் நீடித்த உபயோகத்தினை முன்னேற்றுதல் குறிப்பாக தாவர இனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அரிதான, பாதுகாக்கப்பட வேண்டிய தாவர வகைகளைப் பாதுகாத்தல். குறிப்பாக நீலகிரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ளவைகள், இந்தப் பகுதியில் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குதல் மற்றும் வளர்த்தல்.

* கோவையில் செம்மொழிப் பூங்கா அமைப்பதற்கான முழு திட்ட அறிக்கையைத் தயாரிக்குமாறு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு ஆணையிடப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 165.4 ஏக்கர் நிலத்திலும் செம்மொழிப் பூங்கா மற்றும் அதன் கட்டமைப்புகளுக்கான முழு திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். ஆனால் அதன் நில அமைப்புகளைப் பொறுத்து சுமார் 49.40 ஏக்கருக்கு முதலில் அறிக்கை தயார் செய்யப்படவிருக்கிறது. 165.4 ஏக்கருக்கான முழு திட்ட அறிக்கை மற்றும் 49.40 ஏக்கருக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்ட பின்னர் பூங்கா அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும்.

* அனைத்துத் தாவர வகைகளையும் ஒரே இடத்தில் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் சுமார் ரூ.20 கோடி செலவில் இந்தப் பூங்கா அமைக்கப்படும். பூங்கா அமைப்பதற்கான முழு வேலைகளும் 22 மாதங்களில் முடிக்கப்படும்.

* * *



# உலகின் முன்னணித் தொழிற்சாலைகள் தமிழகத்தில் தொடக்கம்

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

★ கடந்த நான்கு ஆண்டுகளில் 37 புதிய தொழிற்சாலைகளை ரூ.46,097 கோடி முதலீட்டில் தமிழகத்தில் நிறுவ தொழில் முனைவோர்கள் முன்வந்துள்ளது இந்த அரசின் தொழிற்கொள்கைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

★ சிறந்த கட்டமைப்பு வசதிகளும், நிருவாகமும் ஒருங்கே பெற்றுள்ளதால் இந்தியாவில் முதலீடு செய்யும் அயல்நாட்டு நிறுவனங்களைத் தமிழ்நாடு பெரிய அளவில் ஈர்த்துள்ளது.

★ முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழ்நிலையும் முடிவுகள் மேற்கொள்வதில் வெளிப்படையான தன்மையை கடைப்பிடிப்பதாலும் தமிழ்நாடு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பெரும் முதலீட்டாளர்களைக் கவர்வதில் முன்னிலை வகிக்கிறது. எனவே, ஏராளமான தொழில் முதலீட்டை ஈர்க்கும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

★ இந்திய அரசின் வணிகம் மற்றும் தொழில்துறையின் கீழ் இயங்கும் தொழில் கொள்கை மற்றும் முன்னேற்ற அமைப்பின் அறிக்கையின்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டின் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை ரூ.1,06,189 கோடியாகும். இது ஆகஸ்ட் 1991 முதல் மே 2006 வரையிலான காலத்துடன் ஒப்பிடுகையில் 73.31 விழுக்காடு அதிகமாகும்.

★ இந்தியப் பொருளாதார ஆய்வு மைய அறிக்கையின்படி ஜூன் 2006 டிசம்பர் 2009 வரை தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் பிரேரணைகள் 3.57 மடங்கு உயர்ந்துள்ளது.

★ மே 2006 முதல் தமிழ்நாடு, உற்பத்தித் துறையில் ரூ.46.091 கோடி முதலீட்டை ஈர்த்து இதன் மூலம் சுமார் 2.21 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

★ தோஷிபா—ஜே.எஸ்.டபிள்யு.டர்பைன்ஸ் அண்ட் பாய்லர்ஸ் புராஜக்ட் (ரூ.800 கோடி). ஃபோர்டு எக்ஸ்பேன்ஷன் திட்டம் (ரூ.1,500 கோடி), மிஷலின் டயர்ஸ் (ரூ.4,000 கோடி) மகேந்திரா அண்ட் மகேந்திரா ஆட்டோமொபைல் பிளாண்ட் (ரூ.1,800 கோடி), வீடியோகான் கன்ஸ்யூமர் டியுரபில்ஸ் புராஜக்ட் (ரூ.1,600 கோடி) போன்ற பல நிறுவனங்கள் 2009ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொழிற் சாலைகளை நிறுவி வருகின்றன.

★ இந்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வரிசையில் தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் 3ஆவது இடத்தை வகிக்கிறது. தமிழகத்தில் 69 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 57 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவப்பட்டுள்ளது.

★ செயல்திறன்மிக்க மாநிலமென எல்லோராலும் பாராட்டப்படுகிற மாநிலம் தமிழகம். இந்தியாவின் வளர்ச்சி நட்சத்திரமாகவும் இது திகழ்கிறது.

★ உலகளாவிய 500 முதன்மைத் தொழில் முதலீட்டு நிறுவனங்களில் 30க்கும் அதிகமான நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் அப்பல்லோ டயர்ஸ், எம்.ஆர்.எப். நிறுவனம், ஏ.டீ.சி. டயர்ஸ் மற்றும் பிரான்சு நாட்டின் டயர் தயாரிப்பு நிறுவனமான மிஷலின் ஆகிய நிறுவனங்கள், தமிழ்நாட்டில் டயர்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவி வருவதைத் தொடர்ந்து அண்மையில் ஜே.கே. டயர்ஸ் நிறுவனமும் ரூ.1,500 கோடி முதலீட்டில், ஒரு டயர் தயாரிப்புத் தொழிற்சாலையைத் திருப்பெரும்புதூர் அருகில் அமைக்க முன்வந்துள்ளது. டயர் தயாரிப்புத் தொழிலில் தமிழகம் ஒரு முன்னணி மாநிலமாக மாறியுள்ளதை இந்த முதலீடுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

★ வாகன உற்பத்தி போலவே, டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், மோசர் பேயர், சிக்நெட் சோலார் போன்ற பல முன்னணி நிறுவனங்கள் தமிழகத்தில் நிறுவப்பட்டு வருவதைத் தொடர்ந்து கணினி மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தியிலும் நமது நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழகம் மாறியுள்ளது.

**அரசு ஊக்க நிதியுதவி**

★ சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ரூ.350 கோடிக்கு மேலும் மற்ற மாவட்டங்களில் ரூ.250 கோடிக்கு மேலும் தகுதியுள்ள நிலையான சொத்துக்களில் முதலீடு செய்து அமைக்கப்பட்டுள்ள புதிய உற்பத்தி தொழிற்கூடங்கள், அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவியைப் பெறத் தகுதியுடையவையாகும். இது ஏற்கெனவே தொடங்கப்பட்ட உற்பத்தித் தொழிற்கூடங்களின் விரிவாக்கத் திட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது.

★ இந்நிதி உதவியில், மதிப்புக்கூட்டு வரியின் மீதான மென்கடன், முதலீடு மேம்பாட்டு மானியம், மூலதன அடிப்படையிலான மானியம், அத்தியாவசியமான அடிப்படைக் கட்டமைப்பு வசதி மானியம், பயிற்சி உதவி மானியம் அடங்கும். இவை தகுதியான தொழிலகங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

★ தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க சிறப்புச் சலுகைகளாக, இம்மாவட்டங்களில் தகுதியுள்ள நிலையான சொத்துக்களின் முதலீடு ரூபாய் 50 கோடியிலிருந்து ரூபாய் 250 கோடி வரை உள்ள தொழில்களுக்கு மென்கடன் (அரசுக்குச் செலுத்தியுள்ள மதிப்புக் கூட்டு வரிக்குச் சமமாக) 0.1 சதவீத வட்டியில் வழங்கப்படும். ரூ.250 கோடியிலிருந்து ரூ.1,500 கோடி வரையிலான முதலீடுகளுக்கு சிறப்புச் சலுகையாக இது மானியமாக வழங்கப்படும்.

**சமூக உட்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்**

★ கடந்த நான்காண்டுகளில் சுமார் ரூபாய் 20 கோடி செலவில் சாலை வசதி, கல்வி மேம்பாடு, பாதிக்கப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு மாற்றுப் பள்ளிக்கான கல்விக் கட்டணம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, பெண் தொழிலாளர்கள் தங்குமிட வசதி, குழந்தைகள் காப்பகம், பயிற்சி மையம், மாற்றுக் குடியிருப்பு வசதி போன்ற பல்வேறு சமூக உட்கட்டமைப்பு வசதிகள் நில எடுப்புப் பகுதிகள் உட்பட பல்வேறு பகுதிகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

★ நடப்பாண்டில் (2010–2011), சுமார் ரூபாய் 25 கோடி செலவில் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னைக்கு அருகில் உள்ள திருப்பெரும்புதூரில் ஹுண்டாய் மோட்டார் இந்தியா தொழிற்சாலையின் புதிய உற்பத்திப் பிரிவினை 2.2.2008 அன்று துவக்கி வைத்து, தொழிற்சாலையினைப் பார்வை யிட்டார்கள்.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 17.3.2008 அன்று தலைமைச் செயலகத்தில், திருப்பெரும்புதூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 300 மெகா வாட் திறன் கொண்ட சிலிகான் தின் ஃபிலிம் ஃபோட்டோவோல்டிக் உற்பத்தியகத்தைக் கட்டமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசிற்கும் சிக்னட் சோலார் நிறுவனத்திற்குமிடையே கையெழுத்தானது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் டெல் தொழிற்சாலையினை 22.4.2008 அன்று தொடங்கிவைத்தார்கள்.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழக அரசுக்கும், எம்.ஆர்.எப். நிறுவனத்திற்கும் இடையே தொழிற்துறையில் பின்தங்கிய பெரம்பலூர் மாவட்டத்தில் 900 கோடி ரூபாய் முதலீட்டில் அமையவுள்ள புதிய ரேடியல் டயர் தொழிற்சாலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2.5.2008 அன்று கையெழுத்தானது.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னனிலையில், தலைமைச் செயலகத்தில் 3,000 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை ஒரகடத்தில் புதிய வாகனத் தொழிற்சாலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசிற்கும் டெய்ம்லர் – ஹீரோ வணிக வாகனங்கள் நிறுவனத்திற்குமிடையே 7.7.2008 அன்று கையெழுத்தானது.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், 4,150 கோடி ரூபாய் முதலீட்டில் வணிக வாகனங்கள் தயாரிக்கும் புதிய தொழில் திட்டங்கள் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.எம்.எஃப். பாரூகி அவர்களும், அசோக் லேலண்டு நிறுவனத்தின் சார்பில் அதன் மேலாண்மை இயக்குநர் திரு.சேஷசாயி அவர்களும், நிசான் நிறுவனத்தின் சார்பில் அதன் துணைத் தலைவர் டாக்டர் ஆன்ட்ரூ பால்மர் அவர்களும் 8.9.2008 அன்று கையெழுத்திட்டனர்.

★ திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலத்தினை மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் குத்துவிளக்கேற்றி 30.8.2009 அன்று திறந்து வைத்தார்கள்.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் ஃபோர்டு மோட்டார் கார் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசிற்கும், ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு மிடையே 24.9.2009 அன்று கையெழுத்தானது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில், 2008–2009ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் ஈவுத் தொகை ரூபாய் 11 கோடியே 2 ஆயிரத்து ஐம்பதிற்கான காசோலையைத் தொழில்துறை முதன்மைச் செயலாளரும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவருமான திரு.எம்.எஃப்.பாரூகி அவர்கள் 24.9.2009 அன்று வழங்கினார்.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், கும்மிடிபூண்டி அருகே ரூபாய் 4 ஆயிரம் கோடி முதலீட்டில் பிரான்ஸ் நாட்டு மிச்சலின் நிறுவனத்தின் புதிய டயர் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்படுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசிற்கும்,

மிச்சலின் இந்தியா தமிழ்நாடு டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே 16.11.2009 அன்று கையெழுத்தானது.

★ தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்கள் நீடித்த நிலையான சிமெண்ட் உற்பத்திக்கான தொழில்நுட்பவியல் குறித்த தேசிய கருத்தரங்கினை 23.1.2010 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

★ மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் இருங்காட்டுக்கோட்டை – சிப்காட் வளாகத்தில் தெற்காசியாவிலேயே முதன்முறையாக அதிநவீன டிரிவிட்ரான் மருத்துவத் தொழில்நுட்பப் பூங்காவை 25.1.2010 அன்று தொடங்கி வைத்தார்.

★ ஒரகடத்தில் உள்ள சிப்காட் தொழில்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள ரெனால்ட் நிசான் மோட்டார் வாகனத் தொழிற்சாலையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் ஆகியோர் 17.3.2010 அன்று துவக்கி வைத்தனர் .

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோர் ஒரகடத்தில் உள்ள சிப்காட் தொழில் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள ரெனால்ட்–நிசான் மோட்டார் வாகனத் தொழிற்சாலையினை 17.3.2010 அன்று துவக்கி வைத்து தொழிற்சாலையில் தயாரிக்கப்படவுள்ள மாதிரி காரை பார்வையிட்டனர்.

★ மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஒரகடத்தில் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்யும் சான்மினா–எஸ்.சி.ஐ. நிறுவனத்தினை 28.3.2010 அன்று துவக்கி வைத்தார்.

★ மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 22.4.2010 அன்று சிங்கப்பூர் அரசின் மாண்புமிகு தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு.எஸ்.ஈஸ்வரன் அவர்களை சந்தித்து, சென்னை கூவம் நதி சீரமைப்பு, சென்னையில் நிதி நகரம் அமைப்பது மற்றும் வானூர்தி பூங்கா அமைப்பது குறித்து ஆலோசனை செய்தார்கள்.

★ மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 10.4.2010 ஒரகடத்தில், நோக்கியா–சீமன்ஸ் தொழிற்சாலையின் மூன்றாம் தலைமுறைக்கான (3G) தொழில்நுட்பத்துடன் கூடிய விரிவாக்கத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

★ மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 17.4.2010 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு சிமெண்ட் ஆலைக்கு சொந்தமான 1,600 ஏக்கர் தரிசு நிலத்தில் கூழ்மரச் சாகுபடி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)**

★ சிப்காட் நிறுவனம் 2006–2007ஆம் ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு சராசரியாக 350 கோடி ரூபாய் தொடர்ந்து மூன்றாண்டு காலமாக வருவாய் ஈட்டி அதில் ரூ.90 கோடிக்கு மேல் நிகர இலாபத்தை எட்டியுள்ளது. ஆதாயப்பங்குத் தொகை 2006–07ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2006–2007ஆம் ஆண்டிற்கான ஆதாயப்பங்குத் தொகையாக ரூ.11.58 கோடி (20 சதவீதம்)யும், 2007–2008 மற்றும் 2008–2009இல் ஆதாயப்பங்குத் தொகையாக ஆண்டொன்றுக்கு தலா ரூ.14.48 கோடி (25 சதவீதம்)யும் அரசுக்கு வழங்கப் பட்டுள்ளது.

**சிறப்பு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்**

★ சிப்காட் வளாகங்களில் கடந்த நான்காண்டுகளாக சுமார் ரூ.350 கோடி செலவில் சாலை, வடிகால் வசதி, தண்ணீர் வசதி, தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

★ சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ரூ.27.68 கோடி செலவில் 2.17 கி.மீ. நீள பிரதான சாலை மற்றும் 2.25 கி.மீ. நீள இடைநிலைச் சாலைகள் உறுதிப்படுத்தப்பட்டு மேம்படுத்தப் பட்டதோடு, ஏற்கெனவே இருந்த 4.70கி.மீ. நீள இடைநிலைச் சாலைகள் உலகத்தரத்திற்கு ஈடாக சீரமைக்கப் பட்டது.

**பெண் தொழிலாளர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்துதல்**

★ 123.83 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் இருங்காட்டுக் கோட்டை தொழிற்பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆயத்த ஆடைப் பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளோடு, சிறப்புக் கட்டமைப்பு வசதிகளாக அங்கு பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதி மற்றும் குழந்தைகள் காப்பகம், மருத்துவ விடுதி, வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், சிற்றுண்டிச் சாலை போன்ற வசதிகள் சுமார் ரூ.7 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் பெண்களுக்கான தங்கும் விடுதியினை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக நடத்தி பராமரிக்கவும் பயிற்சி மையத்தினை புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மூலமாக நடத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது.

**உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு**

★ மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, ஒரகடம் சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் நிறுவப்பட்டுள்ள சான்மினா–எஸ்.சி.ஐ. நிறுவனம் மூலம் ஒரு புதிய முயற்சியாக ஒரகடம் பகுதியில் உள்ள வல்லக்கோட்டை, வல்லம், வடகால், வைப்பூர், மாத்தூர் மற்றும் சென்னாகுப்பம் கிராமங்களில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் 12ஆம் வகுப்பு படித்த 10 மாணவிகளையும் மற்றும் 9 மாணவர்களையும் அவர்கள் படித்த பள்ளி

வளாகங்களிலேயே நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுத்து வேலைவாய்ப்பளிக்கப்பட்டது. இந்த 19 பேரும் தங்கள் மேற்படிப்பைத் தொடர முடியாத ஏழ்மை நிலையிலுள்ளவர்கள். இவர்கள் அனைவருக்கும் சான்மினா நிறுவனத்தில் இளநிலை இயக்குபவர் (Junior Operator)ஆக பணிபுரிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் 1.5.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. இம்மாணவ, மாணவியர் உயர்கல்வி படிக்க விரும்பினால் அதற்கான கால அவகாசமும் மற்றும் படிப்புக்குத் தேவையான அனைத்து நிதி உதவிகளையும் சான்மினா நிறுவனம் செய்துதர உள்ளது.

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)**

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், தரமணியில் தகவல் தொழிநுட்பம் மற்றும் அதன் தொடர்பான பணிகள் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தினை கூட்டு முயற்சியில் அமைப்பதற்காக டிட்கோ நிறுவனத்திற்கும் டாட்டா ரியாலிட்டி இன்ஃப்ராஸ்டரக்சர் லிட்., நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தம் தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், தலைமைச் செயலகத்தில் திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் அருகே காட்டுப்பள்ளியில் கப்பல் கட்டுமானம் மற்றும் சிறு துறைமுக வளாகத்தினைக் கூட்டு முயற்சியில் ஏற்படுத்த டிட்கோ நிறுவனத்திற்கும் லார்சன் & டோப்ரோ நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

★ மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சென்னைக்கு அருகே தரமணியில் டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா – II அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

**தமிழ்நாடு செய்திதாள் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்)**

★ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுற்றுச்சூழல் தரத்தினை உயர்த்துவதற்கும் காகிதக்கூழ் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் ஆலை மேம்பாட்டுத் திட்டத்தினைத் துவக்கி செயல்படுத்தியது. சுமார் ரூ.612 கோடி மூலதனத்தில் 2008 ஆம் ஆண்டு மே மாதம் ஆலை மேம்பாட்டுத்திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப் பட்டது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அக்டோபர் 3, 2009 அன்று இத்திட்டத்தை நாட்டிற்கு அர்ப்பணம் செய்தார்.

★ தமிழக அரசின் பேராதரவோடு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அடுத்தகட்ட வளர்ச்சித் திட்டமாக, ரூ.1,000 கோடி முதலீட்டில் உற்பத்தித் திறனை ஆண்டொன்றிற்கு 2,45,000 மெ. டன்னிலிருந்து 4,00,000 மெ. டன்னாக உயர்த்த ஆலை விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அக்டோபர் 3, 2009 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டம் ஆகஸ்ட் 2010இல் நிறைவுபெறும்.

★ தமிழக அரசால் நிறுவப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது வெள்ளிவிழாவை அக்டோபர் 3, 2009இல் கொண்டாடியது. மாண்புமிகு துணை முதலமைச்சர் இவ்விழாவினை சிறப்பித்து ஆலை நிரந்தர பணியாளர்களுக்கு தலா 6 கிராம் தங்க நாணயமும், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு தலா 3 கிராம் தங்க நாணயமும் அளித்தார்கள்.

★ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ஆலையைச் சுற்றியுள்ள பகுதியில் சமுதாய மேம்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. 2009ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் நாள், நிறுவனத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் அருகாமையிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதியளிக்கும் திட்டத்தை நிறைவேற்ற, தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு ரூ.96.76 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

**தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்**

★ கரும்புப் பதிவு மற்றும் வெட்டு முன் உரிமை போன்ற செயல்களில் வெளிப்படையான ஒளிவுமறைவற்ற தன்மையை உருவாக்கும் பொருட்டு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் கரும்பு உதவியாளர்களுக்கு கைக்கணினித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் கரும்பு உற்பத்தியை பெருக்குவதில் விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகள் ஆகிய இரு தரப்பினரும் பயன்பெறுவார்கள். கைக்கணினி ஒரு நடமாடும் அலுவலகம் போன்று பயன்படுத்தப்படுகிறது. கைக்கணினி உதவியுடன் கரும்பு பதிவு செய்வது மட்டுமின்றி விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய சாகுபடிக் குறிப்புகள், பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றை விவசாயிகள் இருப்பிடத்திலேயே தெரிந்து கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது. 2007–08 முதல் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தில் 751 கரும்பு உதவியாளர்களுக்கு ரூ.1.16 கோடி செலவில் கைக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ★ ★



# மின் உற்பத்தித் திட்டங்கள் புதுப்பிப்பு

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு. ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள்

* நீர் மின் உற்பத்தி நிலையங்கள் எந்த ஆண்டும் இல்லாதவகையில் 2006–07இல் 6,292 மில்லியன் யூனிட்டுகள், 2007–08இல் 6,455 மில்லியன் யூனிட்டுகள், 2008–09இல் 5,382 மில்லியன் யூனிட்டுகள், 2009–2010இல் 5,629 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்துள்ளன.
* தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் அலகு III 16.01.2007 அன்றுடன் 25 ஆண்டுகள் வெற்றிகரமாக இயங்கி உள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையம், தூத்துக்குடி துறைமுகம் வழியாக அதிக இறக்குமதியின் பேரில் சிறந்த போக்குவரத்திற்கான விருதை 2006–07, 2007–08 மற்றும் 2008–09 ஆகிய ஆண்டுகளுக்கு இந்திய அரசிடம் பெற்றுள்ளது.
* 2007–08இல் ஐந்து அலகுகளும் 26 நாட்களுக்கு தொடர்ந்து இயங்கியுள்ளது. 2007இல் நான்கு மற்றும் ஐந்தாம் அலகுகள் முதல் முறையாக 100 நாட்களுக்கு தொடர்ந்து இயங்கியுள்ளது. (நான்காம் அலகு 17.01.2007 முதல் 27.04.2007 வரை மற்றும் ஐந்தாம் அலகு 25.01.2007 முதல் 05.05.2007 வரை).

**மேட்டூர் அனல் மின் நிலையம்**

* மேட்டூர் அனல் மின் நிலையத்தின் மூன்றாவது அலகு அதிகபட்ச உற்பத்தியாகிய 1761.523 மில்லியன் யூனிட்டுகளையும் கிடைக்கக்கூடிய கூறு 97.21 சதவீதமாகிய உச்ச வரம்பை 2007–08இல் அடைந்துள்ளது.
* நான்காம் அலகு 01.10.2009 வரையில் தொடர்ந்து 300 நாட்கள் மின் உற்பத்தி செய்து மூன்றாவது அலகின் முந்தைய சாதனையான 272 நாட்களை கடந்தது. இந்த சாதனை, அந்த அலகு வருடாந்திர தேர்வாய்விற்குப் பிறகு கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட தேதியான 05.12.2008லிருந்து தொடர்ந்து இயக்கத்தில் உள்ளது. நான்காவது அலகு செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து 20ஆவது வருடத்தில் இச்சாதனை புரியப்பட்டுள்ளது.
* மேட்டூர் அனல் மின் நிலையத்தின் அக்டோபர் 2009க்கான மின் பளு கூறு 91.52 ஆகும். இது மிகவும் உயர்ந்தது. இந்நிலையத்தில், வரையறுத்து குறிக்கப்பட்ட எண்ணெய் நுகர்வு (specific oil consumption) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் குறித்துள்ள 1 யூனிட் உற்பத்திற்கு 2 மில்லி லிட்டருக்கு மாறாக 1 யூனிட் உற்பத்திற்கு 0.31 மில்லி லிட்டராக உள்ளது.

**வடசென்னை அனல் மின் நிலையம்**

* வடசென்னை அனல் மின் நிலையத்தின் முதலாவது அலகு 2006 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து 214 நாட்கள் (26.11.06 முதல் 28.06.07 வரை) மின் உற்பத்தி செய்து மூன்றாவது அலகின் முந்தைய சாதனையான 169 நாட்களை (29.11.2003 முதல் 17.05.2004 வரை) கடந்தது.
* முதலாவது அலகு 2007–2008 ஆம் ஆண்டில் 25.03.2008 அன்று அதிகபட்ச உற்பத்தி 1,707.94 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். இதன் முந்தைய சாதனையான 2006–2007 அதிகபட்ச உற்பத்தியாகிய 1706.795 மில்லியன் யூனிட்டுகளை கடந்தது. வடசென்னை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது அலகு 2007–2008 ஆம் ஆண்டில் 16.03.2008 அன்று வருடத்தின் உச்ச உற்பத்தியான 1,621.720 மில்லியன் யூனிட் ஆகும். இது அதன் முந்தைய சாதனையான 2003–2004ஆம் ஆண்டின் உச்ச மின் உற்பத்தியான 1,617.805 மில்லியன் யூனிட்டுகளை கடந்தது.
* வடசென்னை அனல் மின் நிலையத்தின் அனைத்து அலகுகளும் 15.02.2009 முதல் 27.04.2009 வரை தொடர்ந்து 70 நாட்களுக்கு இயக்கத்தில் இருந்தது. இது, இதன் கடந்த சாதனையான 14.03.2006 முதல் 16.05.2006 வரை 62 நாட்களுக்கான தொடர்ச்சியான இயக்கத்தை முறியடித்தது.

**என்னூர் அனல் மின் நிலையம்**

* புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்குதலின் வேலைகள் முடிவடைந்தபின், அனைத்து ஐந்து அலகுகளும் இயக்கத்திற்குக் கொண்டுவரப் பட்டது. 12.01.2008 அன்றைய தின உற்பத்தியான 9.0054 மில்லியன் யூனிட்டுகள் 12 வருடம், 7 மாதங்களுக்குப் பிறகு அடைந்த அதிக உற்பத்தியாகும்.
* ஜனவரி 2008இல் ஐந்து அலகுகளும் 70.24 சதவீதம் மின் பளு கூறுடன் 235.1787 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்துள்ளன. இது 12 ஆண்டுகள், 11 மாதங்களில் அடைந்த அதிக உற்பத்தியாகும்.
* 22.02.2008 அன்று 85 சதவீதம் மின் பளு கூறுடன் 9.1796 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்துள்ளது. இது 29.01.1995 அன்றைய உற்பத்தியான முந்தைய சாதனையான 9.140 மில்லியன் யூனிட்டை முறியடித்தது.

* புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்குதலின் வேலைகள் முடிவடைந்தபின், 2007–08ஆம் ஆண்டில் 51.42 சதவீத மின் பளு கூறுடன் வருடாந்திர உற்பத்தியான 2,032.4087 மில்லியன் யூனிட்டை எட்டியது. இது கடந்த 12 ஆண்டுகளிலேயே உயர்ந்தது. இதற்கு முன்னர் 1997–1998 ஆம் ஆண்டில் 48.8 சதவீத மின்பளுக் கூறை எட்டியுள்ளது.

* புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மூலம் 2006–07 மற்றும் 2007–08 ஆண்டுகளில் காற்றாலை மின் உற்பத்தி திறன் 813 மெகாவாட் அளவிற்கும், இணைமின் உற்பத்தி 137 மெகாவாட் அளவிற்கும் தாவர சக்தி மின் உற்பத்தி மூலம் 64 மெகாவாட் அளவிற்கும் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

* 2008–2009இல் காற்றாலை மின் உற்பத்தி திறன் 583 மெகாவாட் அளவிற்கும், இணைமின் உற்பத்தி 40 மெகாவாட் அளவிற்கும் தாவர சக்தி மின் உற்பத்தி மூலம் 42.7 மெகாவாட் அளவிற்கும் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

* 2009–10 இல் காற்றாலை மின் உற்பத்தித் திறன் 602 மெகாவாட் அளவிற்கும், இணைமின் உற்பத்தி 93.4 மெகாவாட் அளவிற்கும் தாவர சக்தி மின் உற்பத்தி மூலம் 27.5 மெகாவாட் அளவிற்கும் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

* இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வழுதூரில் 92 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் எரிவாயு மின் திட்டம் 17.02.2009 அன்று இயக்கி வைக்கப் பட்டுள்ளது.

* வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையமானது அகில இந்திய அளவில் மின் காரணியில் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் செயல்பாட்டிற்காக 2006–இல் மத்திய அரசின் எரிசக்தி துறை அமைச்சரிடமிருந்து வெண்கலப் பதக்கம் பெறப்பட்டது.

* பிள்ளை பெருமாள் நல்லூர் மின் உற்பத்தி கம்பெனி, இந்துஸ்தான் ஆயில் எக்ஸ்ப்லோரேஷன் கம்பெனி லிமிடெட் மற்றும் கேஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு இடையே 18.09.2009 அன்று ஒரு எரிவாயு வழங்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. எரிவாயு வழங்குதல் துவங்கப்பட்டு மின் உற்பத்தி நிறுவனம் 82 சதவீதம் எரிவாயு மற்றும் 18 சதவீதம் நாப்தா பயன்படுத்தி வருகிறது. இவ்வாறு எரிபொருள் நாப்தாவிலிருந்து இயற்கை எரிவாயுவாக மாற்றியமைத்ததால் 2009–2010இல் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இதனால் கிடைத்த சேமிப்பு சுமார் ரூபாய் 300 கோடியாகும்.

* வடசென்னை அனல் மின் நிலையம் (அலகு 1–600 மெகாவாட்) திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.2,475 கோடி பாரத மிகு மின் கழகத்திற்கு இப்பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதற்கான வேலைகள் 18.02.2008 அன்று துவக்கப்பட்டது. இத்திட்டம் பிப்ரவரி 2011இல் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு மே 2011 முடிவிற்குள் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும்.

* வடசென்னை அனல் மின் நிலையம் – (அலகு 2–600 மெகாவாட்) திட்டத்திற்கான மதிப்பீடு ரூ 2,175 கோடியாகும். இப்பணிக்கான ஒப்பந்தம் பாரத மிகு மின் கழகத்திற்கு அளிக்கப்பட்டு பணிகள் 16.08.2008 அன்று துவக்கப்பட்டது. இத்திட்டம் ஆகஸ்ட் 2011இல் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு நவம்பர் 2011 முடிவிற்குள் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும்.

* மேட்டூர் அனல் மின் நிலையம் (அலகு 1 – 600 மெகாவாட்) திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.3,100.06 கோடி இப்பணிக்கான ஒப்பந்தம் பி.ஜீ.ஆர். எனர்ஜி சிஸ்டம் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வேலைகள் 25.06.2008 அன்று துவக்கப்பட்டது.

* 1,500 மெகாவாட் (3x500 மெகாவாட்) அனல் மின் நிலையம் தேசிய அனல் மின் நிலைய கழகத்துடன் திருவள்ளூர் மாவட்டத்தில் வல்லூரில் கூட்டு முயற்சியில் ரூபாய் 8,000 கோடி மதிப்பீட்டில் அலகுகள் 1, 2 மற்றும் 3 முறையே அக்டோபர் 2011, டிசம்பர் 2011 மற்றும் நவம்பர் 2012இல் செயலாக்கத்திற்குக் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது.

* தூத்துக்குடியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் 1,000 (2x500 மெகாவாட்) அனல் மின் நிலையம் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூபாய் 4,909.54 கோடி உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* அதிமிகு நுணுக்கம் வாய்ந்த தொழில்நுட்பத்தின் பலனை கையகப்படுத்த மற்றும் மிக உய்ய மின் திட்டத்தின் தரத்தை அடைய ஒரு 2x800 மெகாவாட் அனல் மின் நிலையம் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள உடன்குடியில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* ரூபாய் 11,25.63 கோடி செலவில் 183 மெகாவாட் மொத்த கொள்திறனுடன் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்தும், இரண்டு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலிருந்தும் இணைமின் உற்பத்தியைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

* 600 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் இணைப்பு அனல் மின் நிலையம், திருவள்ளூர் மாவட்டத்தில் காட்டுப்பள்ளியில் 2x800 மெகாவாட் அனல் மின் நிலையம். 4,000 மெகாவாட் செய்யூர் மிக உய்ய மின் ஆற்றல் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

* 34,04,600 புதிய மின் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன. 251 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 24,849 மின் மாற்றிகள்

அமைக்கப்பட்டன. 4921 சுற்று கி.மீ. மிக உயரழுத்த மின் கம்பிகள் போடப்பட்டன. 11,194 கி.மீ. உயரழுத்த மின் கம்பிகள், 40,021 தாழ்வழுத்த மின் கம்பிகள் போடப்பட்டன.

* புதிய குடியிருப்புகளுக்கு 24 மணி நேரத்திற்குள்ளும் 5 குதிரை திறனுக்குள் இருக்கும் சிறு தொழில் அலகுகள் ஒரு வாரத்திற்குள்ளும் 5 குதிரை திறனுக்கு மேல் இருக்கும் தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு ஒரு மாதத்திற்குள்ளும் மின் இணைப்பு வழங்க அரசு ஆணையிட்டு, 2006–10ஆம் ஆண்டு காலத்தில் மொத்தம் 2,051,076 வீட்டு மின் இணைப்புகளும் 4,69,157 தாழ்வழுத்த வணிக மின் இணைப்புகளும் 58,817 தாழ்வழுத்த தொழிற்சாலைக்கான மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாட்டில் உள்ள மின் உற்பத்தியாளர்கள் உயரழுத்த மின் பயனீட்டாளர்களுக்கு மாநிலத்திற்குள் திறந்த நுழைவு மூலம் மின்சாரத்தை விற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு இடையே மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவு மூலம் உயரழுத்த மின் தொழிற்சாலை பயனீட்டாளர்கள் மின்சாரம் கொள்முதல் செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

* மின் கட்டணம் செலுத்த தமிழ்நாடு மின்சார வாரியம், ''24 மணி நேரமும் பணம் செலுத்தும் இயந்திரத்தை'' சென்னையில் நான்கு இடங்களிலும் இணையதளத்தின் மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதியையும், தபால்துறை மூலமாக மின் நுகர்வோர்கள் தங்களது மின் கட்டணத்தை செலுத்தும் வசதியையும் கொண்டு வந்துள்ளது. வாரத்தின் அனைத்து நாட்களிலும் வசூல் செய்யும் வசதி ஒரு முன்னோடித் திட்டமாக சென்னையில் உள்ள அண்ணாசாலை கோட்டத்தில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு, மயிலாப்பூர், கே.கே.நகர், அண்ணா நகர் மற்றும் பெரம்பூர் கோட்டங்களில் 2010 ஆம் ஆண்டில் பிப்ரவரி முதல் தேதியிலிருந்து நீட்டிக்கப்பட்டுள்ளது.

* 2007இல் 2,500 மஸ்தூர்களின் தொகுப்பூதியம் ரத்து செய்யப்பட்டு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது 3.4.2007 அன்று சட்டப்பேரவையில் 6,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் என அறிவிக்கப்பட்டது.

* தொழில் தகராறுச் சட்டம், 1947இன் பிரிவு 12(3)ன் கீழ் 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்களை வாரியத்தில் படிப்படியாக பணி நிரந்தரம் செய்வதற்கான வரலாறு காணாத தீர்வு 10.08.2007 அன்று தொழிற் சங்கங்களுக்கும் தமிழ் நாடு மின் வாரியத்திற்கும் இடையே தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் கையெழுத்தானது. அதை தொடர்ந்து 19,890 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செயப்பட்டுள்ளார்கள்.

* 2007–2008இல் மொத்தம் 300 உதவி பொறியாளர்கள் / மின்னியல், 25 உதவிப் பொறியாளர் / இயந்திரவியல் மற்றும் 10 உதவிப்பொறியாளர்/ சிவில் மற்றும் 2008–2009 ஆம் ஆண்டு 300 உதவி பொறியாளர்/மின்னியல், 25 உதவிப் பொறியாளர் / இயந்திரவியல் நேரடி ஆளெடுப்பு பணி நியமனம் செயப்பட்டுள்ளார்கள்.

* 2008–2009ஆம் ஆண்டு 2,500 கள உதவியாளர்கள், 50 தட்டச்சர்கள், நேரடி ஆளெடுப்பு மூலம் பணி நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள். நடப்பாண்டில் 1,100 தொழிற்நுட்ப உதவியாளர்களையும், 1,811 கணக்கீட்டாளர்கள் இரண்டாம் நிலை, 4,620 மஸ்தூர்கள் மற்றும் 154 உதவியாளர் மற்றும் மின்னளவு எடுப்பவர்கள் நேரடி நியமனத்தின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

* இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் பெற்ற 4,62,625 வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

* நிலமற்ற ஏழை விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த இலவச மின்சாரம், இதுவரை 22 மாவட்டங்களில் மொத்தம் 211 மின் இணைப்புகள் இலவசமாக வழங்கப்பட்டன.

* தமிழக அரசு பல்வேறு வகைப்பட்ட மின் பயனீட்டாளர்களுக்கு சலுகைகளை அளிக்கும் பொருட்டு கடந்த ஆண்டுகளில் விவசாயத்திற்கு (சுயநிதி திட்டத்தை தவிர்த்து) ரூ.829.56 கோடியும், குடிசைகளுக்கு ரூ. 54.43 கோடியும், வீடுகளுக்கு ரூ.4556.43 கோடியும், விசைத்தறி நெசவாளர்கள் ரூ.152.50 கோடியும், கைத்தறி நெசவாளர்கள் ரூ.36.40 கோடியும், தொழுவதற்கான இடங்கள் ரூ.19.03 கோடியும், தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் ரூ.144.51 கோடியும், விவசாயம் (சுயநிதி திட்டத்தின் கீழ்) ரூ. 53 கோடி மானியமாக அளிக்கப்படும்.

* தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபைனான்ஸ்) முற்றிலும் தமிழக அரசுக்கு சொந்தமான வங்கி சாரா நிதி நிறுவனமாக 1991ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாட்டிலுள்ள மின் விசைத் திட்டங்களுக்கு தேவையான நிதியைக் கடனாக வழங்குவதுடன் தொடக்கத்திலிருந்து இலாபம் ஈட்டி வருகிறது.

* 2006 மே மாதம் முதல் 2010 மார்ச் மாதம் முடிய ரூ.2,739.07 கோடிகளை நிகர வைப்பீட்டுத் தொகையாக திரட்டி, புதிதாக 2,36,120 வைப்பீட்டாளர்களை இந்நிறுவனத்தின் வைப்பீட்டுத் திட்டங்களின் கீழ் கொணர்ந்துள்ளது.

* 31.03.2010 அன்று ரூ.4,766.00 கோடி மொத்த நிகர வைப்பீட்டுத் தொகையாகவும், 4,15,211 வைப்பீட்டாளர்களையும் கொண்டு இயங்கி வருகிறது.

* சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.448.47 கோடிகளை 2,94,484 குழந்தைகள் பயன்பெறும்

வகையில் வைப்பீட்டுத் தொகையாக வரப் பெற்றுள்ளது.

* ஒரு கால பூஜைத் திட்டத்தின் கீழ் 10,357 திருக்கோயில்களுக்காக ரூ.25.89 கோடிகளை வைப்பீட்டுத் தொகையாக பெறப்பட்டுள்ளது.1

* பள்ளி மாணவ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்களது கல்வி மற்றும் பராமரிப்பு செலவிற்காக நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.8.25 கோடி வைப்பீட்டு நிதியாக பெறப்பட்டுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட 171 பெற்றோரை இழந்த மற்றும் திருமணமாகாத வளரிளம் பெண்களின் பெயரில் வைப்பீடு செய்ய அரசிடமிருந்து ரூ.5.59 கோடி பெறப்பட்டுள்ளது.

* இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை நிகர இலாபமாக ரூ.309.90 கோடிகளை சேர்த்துள்ளது.

* 2008–2009 நிதியாண்டில் இந்நிறுவனம் வரிக்குப்பின் இலாபமாக ரூ.37.61 கோடிகளை ஈட்டியுள்ளது.

* புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மூலம் தமிழ்நாட்டில் 31.03.2010 வரை மொத்தம் 5445.95 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் காற்று சக்தியிலிருந்து 4889.7 மெகாவாட்டும், சர்க்கரை ஆலைகளில் இணைமின் திட்டம் மற்றும் தாவர சக்தியிலிருந்து மின் உற்பத்தி செய்யும் 467.05 மெகாவாட் சிறுபுனல் 89.2 மெகாவாட் திறனும் அடங்கும்.

* தாவர சக்தியிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மொத்தம் 12 திட்டங்கள் (104 மெகாவாட்) தனியார் துறையில் கடந்த 4 ஆண்டுகளில் 2006–07 முதல் 2009–10 வரை செயலாக்கப்பட்டது.

* முதல் முதலாக, சூரியசக்தி மூலம் மொத்தம் 6 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் (5 மெகாவாட் சூரிய ஒளி சக்தி மற்றும் 1 மெகாவாட் சூரிய வெப்ப சக்தி) திட்டங்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் தமிழ்நாட்டில், மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு வருகிறது.

* தற்பொழுது, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கும் விலையை அதிகரித்துள்ளது. அவை காற்றுசக்திக்கு, ஒரு யூனிட்டிற்கு ரூ.3.39 வரையிலும், தாவர சக்திக்கு, ஒரு யூனிட்டிற்கு ரூ.4.50 வரையிலும் ஆகும். ஆனால் 2003–04 வரை, இவை முறையே ரூ.2.70 மற்றும் ரூ.3.15 அளவிலேயே இருந்தது.

* சூரியசக்தி சாதனங்கள் தயாரிப்பாளர்களைக் கவர சிறப்பு ஊக்கத்தொகை வழங்க இவ்வியக்கத்தில் வழிவகை காணப்பட்டுள்ளதால் சூரியசக்தி சாதனங்கள் தயாரிப்பிற்கான சாதகமான சூழ்நிலை நிலவுகிறது. இந்த சூரிய இயக்கத்துடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையும் சேர்ந்து தமிழ்நாட்டில் சூரியசக்தியை மேம்படுத்த முனைப்புகள் எடுக்க உள்ளது.

* தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின் வசதி அளிக்க இயலாத இந்த தொலைதூரக் குக்கிராமங்களுக்கு சூரிய சக்தி மூலம் மின் வசதி அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. பொது மக்களுக்கு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் தொடர்பான பல தகவல்களை அறிவிக்கும் விதமாக, சென்னை கோட்டூர்புரத்திலுள்ள தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிலையத்தில் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது பூங்காவில் இடம்பெறும் சாதனங்களுக்காக மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ரூ.89.00 இலட்சமும் கட்டடச் செலவிற்காக மாநில அரசு ரூ.52.00 இலட்சமும் வழங்குகின்றன. இத்திட்டமும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் மார்ச் 2006–இல் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு புதிய திட்டமாகும். ஜூன் 2010 ஆம் ஆண்டில் இப்பூங்கா செயலாற்றத் தொடங்கும்.

* உலகத்திலேயே மிக பெரிய சூரியசக்தி சாய் மாலை வட்ட ஒருமுனைப்படுத்தப்பட்ட 110 டிஷ்கள் (சூரியசக்தி அமைப்புகள்) கொண்ட தொழில்நுட்ப அமைப்பு சென்னையிலுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதுபோன்ற மற்றொரு அமைப்பு தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில் 16 சதுரமீட்டர் பரப்பளவுள்ள 14 டிஷ்கள் கொண்டது. ஒரு நாளைக்கு சுமார் 500 நபர்களுக்கு மதியம் மற்றும் இரவு உணவு தயாரிக்கும் திறன் கொண்ட, வகையில் நிறுவப்பட்டுள்ளது.

* மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரசின் நிதி ஒதுக்கீட்டில், (2006–2007) மொத்த ரூ.21.34 இலட்சம் செலவில் 71 சூரியஒளித் தெரு விளக்குகள் 8 மாவட்டங்களில் நிறுவப்பட்டது . 2007–08 ஆம் ஆண்டு மற்றும் 2008–09 ஆம் ஆண்டுகளில் மேலும் 99 சூரியஒளித் தெரு விளக்குகள், ஒவ்வொரு ஆண்டிலும் மொத்தம் ரூ29.70 இலட்சம் (ஆண்டு ஒன்றிற்கு) செலவில் நிறுவப்பட்டுள்ளது.

✶ சூரியசக்தி பயன்பாட்டில் இந்தியாவை உலக அளவில் முதன்மையாக்கும் குறிக்கோளுடன் மைய அரசு ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய இயக்கத்தை நடைமுறைப்படுத்தி உள்ளது. இதன்மூலம் மின் கட்டமைப்புடன் இணைக்கப்படக்கூடிய சூரிய மின்உற்பத்தி மற்றும் தனித்து இயங்கும் சூரியசக்தி சாதனங்கள் நிறுவுவது தொடர்பான மூன்று நிலைகளுக்கான இலக்குகள் மொத்த இந்தியாவிற்கு கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

| வ. எண் | பயன்பாடு | | இலக்கீடு | |
|---|---|---|---|---|
| | | பகுதி – 1 (2010 – 13) | பகுதி – 2 (2013 – 17) | பகுதி – 3 (2017 – 22) |
| 1. | சூரிய சக்தி சேகரிப்பான்கள் | 7 மில்லியன் சதுர மீட்டர்கள் | 15 மில்லியன் சதுர மீட்டர்கள் | 20 மில்லியன் சதுர மீட்டர்கள் |
| 2. | மின்கட்டமைப்புடன் இணைக்கப்படாத அமைப்புகள் | 200 மெகாவாட் | 1000 மெகாவாட் | 2000 மெகாவாட் |
| 3. | மின் கட்டமைப்புடன் இணைக்கப்படக்கூடிய சூரியசக்தி மின் உற்பத்தி (மேற்கூரை அமைப்புடன் அடங்கும்) | 1000–2000 மெகாவாட் | 4000–10000 மெகாவாட் | 20000 மெகாவாட் |

**தமிழ்நாடு அரசு மின் ஆய்வுத்துறை**

✶ 1.5.2006 முதல் 31.3.2010 வரை மின் ஆய்வுத் துறையில் 1,321 உயர் மின்னழுத்த நிறுவனங்கள் புதியது விதி 63 ஆய்வு மேற்கொண்டு நன்னிலைச் சான்றும், 2,507 காற்றாலைகள் நன்னிலைச் சான்றும் மேலும், 351 திரைப்படக் கருவி இயக்குநர் உரிமங்களும் வழங்கப்பட்டது.

✶ மின் உரிமம் வழங்கும் வாரியம் மூலம் 1,744 புதிய உரிமங்களும், (EA, ESA, EB, ESB), சான்றிதழ்களும் (Wireman Helper, Wireman, Supervisor & Power Generating Operator ) வழங்கப்பட்டது.

✶ அரசு மின்தரநிர்ணய ஆய்வுக்கூடத்தை மேபடுத்தும் பொருட்டு ரூபாய் 18.05 இலட்சம் செலவில் தானியங்கு மின் மாற்றி கருவி கொள்முதல் செய்யப்பட்டது. ரூபாய் 22 இலட்சம் செலவில் NABL தரச் சான்று பெறும் வகையில், கூடுதல் வசதிகள் செய்து முதற்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

✶ மாநில அளவில் எரிசக்தியை அதிக அளவில் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கிடையே எரிசக்தி சேமிப்பினை ஊக்குவிக்கும் வகையில் எரிசக்தி சேமிப்பில் சிறந்த நிறுவனங்களுக்கான விருது வழங்கப்பட்டது.

✶ தொழிற்சாலைகளில் பணிபுரியும் பொறியாளர் களுக்கு எரிசக்தி சேமிப்பு குறித்த கருத்தரங்கம் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டது.

✶ எரிசக்தி சேமிப்பு விழிப்புணர்வு குறித்து மின் ஆய்வுத்துறை மற்றும் பிற துறைகளையும் சார்ந்த அரசு பொறியாளர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

✶ மாதிரி செயல் திட்டமாக, தமிழ்நாடு மின் ஆய்வுத் துறை தலைமை அலுவலக கட்டட வளாகத்தில், எரிசக்தி சேமிப்பு குறித்த பல்வேறு வழிமுறைகளை செயலாக்கி, மின்சார உபயோகத்தில் 15 சதவீதம் மிச்சப்படுத்தி சேமிப்பு ஏற்படுத்தப்பட்டது.

✶ ✶ ✶



# 4.65 இலட்சம் பேருக்கு அரசு வேலைவாய்ப்பு

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு. ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள்

**அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

★ பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கியதுடன், தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003 (டெஸ்மா) திரும்பப் பெறுதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், பணியாளர்கள் வேலை நிறுத்தத்தினால் பணிக்கு வராமல் இருந்த நாட்களை பணிக்காலமாகக் கருதி வரன்முறை செய்தல், முழு ஓய்வூதியம் பெற பணியாளர் 33 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும் என்றிருந்ததை 30 ஆண்டு பணிக்காலமாக குறைத்தல், பொங்கல் போனஸ் / கருணைத் தொகை வழங்கல், மூன்று மாத ஊதியத்தை இடைக்கால நிவாரணமாக தற்காலிகப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கியது, 6ஆவது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையை மூன்று தவணைகளில் வழங்கல், அகில இந்தியப் பணியைச் சாராத பணியாளர்கள் வீடுகட்ட / வீடு வாங்குவதற்கான முன் பணத்தின் உச்சவரம்பினை ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாக உயர்த்தியது மற்றும் பண்டிகைக்கால முன்பணத்தை ரூ.1,000லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தியது போன்ற சலுகைகளை வழங்கியது.

★ பணி தொடர்பான குறைகளைக் களைய சிறந்த குறைதீர்ப்பு வழிமுறை இருந்தால் அரசுப் பணியாளரின் மனக்குறை அகற்றப்படும் என்றும், மேலும் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை செவ்வனே செய்ய முடியும் என்று அரசு கருதியது. ஆகையால், அரசுப் பணியாளர்களின் ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான மனு தவிர, மற்ற பணி தொடர்பான விண்ணப்பம், மேல்முறையீடு, மறுஆய்வு (அல்லது) சீராய்வு மனுக்களில் அரசுக்கு அதிகாரம் உள்ள நேர்வுகளில் மனுக்களை ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனை வழங்க பல்வேறு உறுப்பினர்களைக் கொண்ட மேல்முறையீட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

★ வெளிப்படையான மற்றும் ஊழலற்ற நிருவாகத்தினை தலைமைச் செயலகம் முதல் கிராமம் வரை உறுதி செய்திட, சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் முனைவர். ஏ.கே.இராஜன் அவர்களின் தலைமையில், பத்து உறுப்பினர்கள் மற்றும் ஒரு உறுப்பினர்–செயலர் கொண்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை அரசு அமைத்தது. இக்குழு தனது முதல் அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 25.04.2008 அன்றும், தனது இரண்டாவது அறிக்கையினை 03.10.2008 அன்றும் சமர்ப்பித்துள்ளது.

**கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு**

★ பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலுள்ள இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தலா 3.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க ஆணையிடப்பட்டது. ஏற்கெனவே நடைமுறையிலிருந்த 100 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறை மாற்றியமைக்கப்பட்டு, 200 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறை புகுத்தப்பட்டு, ஆணைகள் வெளியிடப்பட்டன. பிற்படுத்தப்பட்ட கிறித்தவர்களுக்கான 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை அவர்களின் வேண்டுகோளின்படி திரும்பப் பெற்ற பின்னர், பிற்படுத்தப்பட்ட கிறித்தவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குரிய இட ஒதுக்கீட்டில் போட்டியிட ஏதுவாக, மேற்சொன்ன இனச் சுழற்சி முறை மாற்றியமைக்கப்பட்டது. மேலும், வேலைவாய்ப்பகங்கள் மூலம் பணி நியமனங்கள் மேற்கொள்ளும்போது, இனச்சுழற்சி முறையுடன் உடன் நிகழ்வாக முன்னுரிமை பெற்றவருக்கும், முன்னுரிமை அல்லாதாருக்கும் இடையேயான விகிதாச்சாரம், இனவாரியாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறை குறித்தும், ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், சட்டம் எண். 4/2009 மற்றும் அதற்குக் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி, மேற்சொன்ன இனச்சுழற்சி முறை பட்டியல்படி 2, 32, 66, 102, 132 மற்றும் 166 ஆகிய இடங்கள் அருந்ததியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், 29.04.2009 அன்று முதல் வழங்கப்பட வேண்டும். மேலும், அருந்ததியர்களுக்கான முன்னுரிமை அடிப்படையிலான ஒதுக்கீட்டை நிரப்பிய பின்னரும் தகுதிவாய்ந்த அருந்ததியர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தால், அவர்களை அருந்ததியர்கள் அல்லாத பட்டியல் இனத்தவருடன் அவர்களுக்கிடையில் அமைந்த தகுதியின்பேரில் தேர்வு செய்யப்படவேண்டும். மேலும், அருந்ததியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நியமனங்கள் அல்லது பதவிகள், அவர்களில் தகுதி வாய்ந்தவர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாமல் இருக்குமிடத்து, அந்த இடங்களை அருந்ததியர்கள் அல்லாத பிற பட்டியல்

இனத்தவரால் நிரப்பப்பட வேண்டும். இது தொடர்பாக, மாற்றியமைக்கப்பட்ட இனச்சுழற்சி முறை, அரசாணை வெளியிடப்பட்டு, அரசாணையில் அறிவிக்கப்பட்ட இனச்சுழற்சி முறைதான் தற்போது நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகிறது.

**காலியிடங்கள் மதிப்பீடு**

★ 2001ஆம் ஆண்டிற்கு முன்னர், மாநில மற்றும் சார்நிலைப் பணித் தொகுதிகளின் கீழ் உள்ள, அனைத்துப் பதவிகளுக்கான காலியிட மதிப்பீட்டானது, சம்பந்தப்பட்ட பணி நியமன அலுவலர் / அதிகார ஒப்படைப்பு செய்யப்பட்ட அலுவலர்கள் அளவிலேயே நிர்ணயிக்கப்பட்டது. இம்மதிப்பீட்டினைக் கணக்கீடு செய்வதற்கு, விடுப்பினால் ஏற்படும் காலியிடங்கள் மற்றும் எதிர்பாராமல் ஏற்படும் காலியிடங்களையும் கணக்கிட வழிவகை செய்யப்பட்டிருந்தது. 2001ஆம் ஆண்டில், காலியிட மதிப்பீடு செய்வதற்கு சில மாற்றங்கள் செய்யப்பட்டு, அதன்படி உள்ளபடியான பணி ஒய்விடங்கள் மட்டுமே, காலியிட மதிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும், விடுப்பு மற்றும் எதிர்பாராமல் ஏற்படும் காலியிடங்களுக்கு, எவ்வித ஒதுக்கீடும் செய்யக் கூடாது என்று ஆணைகள் வெளியிடப் பட்டன. மேலும், நேரடி நியமனங்கள் அல்லது பதவி உயர்வு அனைத்திற்கும், காலியிட மதிப்பீடு பணியாளர் குழுவினால் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. அரசு மட்டத்தில், காலியிட மதிப்பீட்டிற்கு பணியாளர் குழுவின் அனுமதி பெற வேண்டியிருப்பதால், காலியிட மதிப்பீடு மற்றும் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயார் செய்வதில் தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டது. விடுப்பு மற்றும் எதிர்பாராமல் ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்கு வழிவகை ஏதும் செய்யப்படாததால், தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கான வருடத்தில் விடுப்பு காலியிடங்கள் மற்றும் எதிர்பாராமல் ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதில், சிக்கல்கள் ஏற்பட்டன. இந்த இடர்களைக் களைவதற்காக, 2001ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த காலியிட மதிப்பீடு நிர்ணயம் செய்யும் முறையையே மேற்கொள்ளலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இதனால், காலியிட மதிப்பீட்டிற்கு பணியாளர் குழுவின் ஒப்புதல் பெறுவது தேவையற்றதாகி விட்டது. நேரடி நியமனத்திற்கான நேர்வுகளில், நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்கு மேற்படும் இனங்களில் மட்டுமே, பணியாளர் குழுவின் ஒப்புதல் பெறுவது அவசியமானதாகும். இந்த நடைமுறை, பதவி உயர்வுக்கான இடங்களைத் தகுதியானவர்களைக் கொண்டு நிரப்புவதற்கான வழிவகைகளை எளிதாக்கியுள்ளது.

**நிருவாகத் துறைச் செயலாளர்களுக்கு அதிகார ஒப்படைப்பு**

★ தலைமைச் செயலகத்தில் ஒரலகுத் துறைகளில் பணியாற்றும் அரசு சார்புச் செயலாளர்கள் விண்ணப்பிக்கும் ஈட்டிய விடுப்பு / மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு / சொந்தக் காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு / ஊதியமில்லா அசாதாரண விடுப்பு போன்ற விடுப்புகளைப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையும், அரசு துணைச் செயலாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி வகிப்போருக்கு, (இந்திய ஆட்சிப் பணி அல்லாத) மேற்குறிப்பிட்ட விடுப்புகளைப் பொது (சிறப்பு அ) துறையும் ஒப்பளிப்பு செய்து வந்தன. இந்நிலையை மாற்றி மேற்குறிப்பிட்டுள்ள அலுவலர்களுக்கு 30 நாட்கள் மற்றும் அதற்குக் குறைவான எவ்வகையான விடுப்புகளுக்கும் ஒப்பளிப்பு அளிக்கும் அதிகாரம், சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைச் செயலாளர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**கடவுச்சீட்டு பெறுவதற்கான ஆளறிச் சான்று வழங்குதல்/ கடவுச் சீட்டு புதுப்பித்தல் / வெளிநாடு செல்வதற்கான தடையின்மைச் சான்று வழங்குதல்**

★ முன்னதாக, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அரசு சார்புச் செயலாளர்களுக்கு கடவுச் சீட்டு பெறுவதற்கான ஆளறிச் சான்று / கடவுச் சீட்டு புதுப்பித்தல் மற்றும் வெளிநாடு செல்வதற்கான தடையின்மைச் சான்றினையும் வழங்கி வந்தது. தற்பொழுது, சம்மந்தப்பட்ட நிருவாகத் துறைகளுக்கு இதுதொடர்பான ஆணைகள் வெளியிடும் அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

**ஊதியக்குழு**

★ மைய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அவ்வரசு அலுவலர்களுக்கு, 1.1.2006 முதல் திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்களை வழங்கியுள்ளது. அவ்வாறே, இம்மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அதனை நீட்டிக்கும் வகையில் தேவையான பரிந்துரைகள் செய்ய அலுவலர் குழு ஒன்றை இந்த அரசு அமைத்தது. அக்குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படுவதை எதிர்நோக்கி, 01.01.2009 அன்று அரசுப் பணியாளர்கள் பெற்ற ஊதியம் + அகவிலை ஊதியம் + அகவிலைப்படி மற்றும் அதேபோல் ஓய்வூதியதாரர்கள் பெற்று வந்த அடிப்படை ஓய்வூதியம் + அகவிலை ஊதியம் + அகவிலைப்படியைக் கணக்கிட்டு மூன்று மாதத் தொகை இடைக்கால நிலுவைத்தொகையாக 2009இல் வழங்கப்பட்டது. இதனால் அரசுக்கு 2009ஆம் ஆண்டு சனவரி மாதத்திற்கு மட்டும் ஏற்பட்ட கூடுதல் செலவு ரூ.4,247 கோடி ஆகும். இதற்கிடையே அலுவலர் குழு, திருத்திய ஊதிய விகிதம் வழங்குவது தொடர்பாக தனது அறிக்கையினை 27.05.2009 அன்று அரசுக்குச் சமர்ப்பித்தது. அரசுப் பணியாளர்கள், ஓய்வூதிய தாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன்களைக் கருத்திற் கொண்டு, அலுவலர் குழுவின் பரிந்துரைகளை இவ்வரசு

ஏற்றுக்கொண்டது. அதற்கிணங்க, திருத்திய ஊதிய விகிதம் மற்றும் படிகள் வழங்குவது தொடர்பாக உரிய அரசாணைகள் 01.06.2009 அன்று வெளியிடப்பட்டன. பொருளாதார மந்த நிலை காரணமாக, அரசின் வரி வருவாய் குறைந்து கொண்டே செல்கின்ற போதிலும், அரசின் நலத்திட்டங்களினால் கூடுதல் நிதிச்சுமை அதிகரித்துக்கொண்டே செல்கின்ற போதிலும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இவ்வரசு கருத்திற்கொண்டு திருத்திய ஊதியம் வழங்குவது தொடர்பான அலுவலர் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, 01.01.2006 முதல் கருத்தியலாகவும், 01.01.2007 முதல் பணப்பயன் கிடைக்கும் வகையிலும் நடைமுறைப்படுத்தப் பட்டது. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதிய விகிதம், மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட திருத்திய ஊதிய விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப் பட்டுள்ளது. அதாவது, "ஊதிய விகிதத்திற்கு இணையான ஊதிய விகிதம்" என்ற அடிப்படையில், திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுப் பணியாளர்களுக்கு திருத்திய ஊதியம் வழங்கியது போல, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் திருத்திய ஊதியத்தை நடைமுறைப்படுத்தியதில் முதல் தென்னக மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மேற்படி திருத்திய ஊதியம் / ஓய்வூதியங்களை நடைமுறைப்படுத்துவதால் ஆண்டொன்றுக்கு அரசுக்குக் கூடுதலாக ரூ.5,155.79 கோடி தொடரும் செலவினமாக ஏற்படும்.

**மின்னணு ஆளுகை**

★ வெளிப்படையான மற்றும் திறமையான ஆளுகையினை உறுதி செய்யும் வகையில், இதுவரை செய்யப்பட்ட திருத்தங்களுடன், இத்துறையில் நிருவகிக்கப்படும் சட்டங்களும், விதிகளும் மின்னணு முறைக்கு மாற்றப்பட்டு, அரசு வலைதளம் "www.tn.gov.in" இல் வெளியிடப் பட்டுள்ளன.

★ இத்துறையில் வெளியிடப்படும் அனைத்து அரசு ஆணைகளையும் உள்ளடக்கிய மின்னணுத் தொகுப்பு (Electronic Compendium) சரிபார்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

★ மின்னணுக் கோப்பு கையாளும் முறையின் கீழ், கணினிமயமாக்கப்பட்ட அஞ்சல் பகிர்வு முறை, முதன்முதலில் இத்துறையில் 01.02.2007 அன்று ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறை 01.01.2008 முதல் அனைத்து செயலகத் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தன் பதிவேடு பதிவு செய்தல் / கண்காணித்தல் ஆகியவையும் இத்துறையில் மின்னணுக் கோப்பு கையாளும் முறையில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையானது, 2009–ஆம் ஆண்டில் தலைமைச் செயலகத்திலுள்ள 11 துறைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

★ அனைத்துத் தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது பணி தொடர்பான விவரங்கள், பணியாளர் தகவல் முறையில் (Personnel Information System - PINFOSYS) பராமரிக்கப்பட்டு வருகிறது.

★ மின்னணு (Electronic) அஞ்சல் பகிர்வு முறை பல மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

★ 2009–2010 ஆம் ஆண்டில், பிப்ரவரி 2010 வரை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 8,906 காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்வதன் பொருட்டு, 22 அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு, சற்றேறக்குறைய 6,68,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேற்குறிப்பிடப் பட்டுள்ள காலத்தில், 21 பணித்தொகுதிகளில் நேரடி நியமனங்களுக்கு, 15,807 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிடப் பட்டுள்ள ஆண்டில், 931 அலுவலர்களுக்கு துறை பதவி உயர்வுக்குழு மூலம் பதவி உயர்வுக்காக அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

★ இவ்வரசு 13.05.2006இல் பொறுப்பேற்றபின், அரசு, அரசு சார்ந்த மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் காலியாகவுள்ள அனைத்துப் பணியிடங்களையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் / ஆசிரியர்கள் தேர்வு வாரியம் / சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் / வேலைவாய்ப்பகம் / பணிநியமன தேர்வுக்குழுக்கள் மூலம் விரைந்து நிரப்பிடத் தேவையான ஆணைகளை வெளியிட்டுள்ளது. 31.12.2009 வரை, 4,65,748 காலிப் பணியிடங்கள் அரசுத் துறைகள், அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நிரப்பப் பட்டுள்ளன.

★ அரசுப் பணியாளர்களது அறிவுத் திறன் மற்றும் செயல் திறனைத் தொடர்ந்து உயர்த்தி, அவர்களது திறமைகளை மேம்படுத்துவதற்கு 'பயிற்சி' ஒரு முக்கிய பங்காற்றுகிறது. பொதுமக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அரசின் சேவைகள் மக்களுக்கு முழுப்பயன் விளைவிக்கும் வகையில் சென்றடைய, அரசுப் பணியாளர்களுக்கு நிருவாக மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

**தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்**

★ தலைமைச் செயலகத் துறைகளில் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் முழுநிறைவாகக் கோப்புகளைக் கையாளும் வண்ணம் அவர்களுக்கு தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் பொது நிருவாக நடைமுறை மற்றும் நிதி நிருவாக நடைமுறையில் 60 வேலை நாட்களுக்கு அடிப்படைப் பயிற்சி

அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றி பெறுதல், நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்களின் தகுதிகாண்பருவத்தை அவர்கள் திருப்திகரமாக முடிப்பதற்கும், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் உதவிப் பிரிவு அலுவலர் பதவிக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலில் இடம் பெறுவதற்கும் உரிய முன் தகுதியாகும். தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அறிவுத்திறன் மற்றும் ஆற்றலை இன்றைய நிலைக்கேற்ப உயர்த்தி ஒழுங்கு நடவடிக்கை குறித்த நிகழ்வுகளைக் கையாளுதல், நீதிமன்ற மற்றும் நடவடிக்கைகள் தொடர்புடைய கோப்புகளைக் கையாளுதல் தொடர்பான நடைமுறைகள் குறித்த இதர பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. இதுவரை 65 அணிகளில், இப்பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

**அண்ணா மேலாண்மை நிலையம்**

★ அண்ணா மேலாண்மை நிலையமானது, இன்றைய நிலைக்கு ஏற்ப நவீன முறைகளைப் பயன்படுத்தும் பயிற்சிகளுக்குத் தேவையான வசதிகளையும், உபகரணங்களையும் உள்ளடக்கி நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் வசதி, நூலகம், கணிப்பொறி மையம், வகுப்பறைகள் மற்றும் கலையரங்கம் முதலிய வசதிகளைக் கொண்டுள்ளது. இந்நிலையமானது மாநில அரசுத்துறை, மாநில அரசு சார்பு நிறுவனங்கள், மத்திய அரசுத் துறை மற்றும் பிற மாநில அரசுத் துறைகளின் அலுவலர்களுக்கு பொது நிருவாகம், தகவல் தொழில்நுட்பம், நடத்தை இயல், தர மேலாண்மை, திட்ட மேலாண்மை மற்றும் ஆளுமை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சிகளை அளித்து வருகின்றது.

★ அண்ணா மேலாண்மை நிலையமானது மைய அரசின் உதவியுடன் பேரிடர் மேலாண்மைப் பிரிவை உருவாக்கி, பேரிடர் மேலாண்மைப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

★ இந்திய அரசின் உதவியுடன் கூடிய திட்டங்களான "தகவல் பெறுவதற்கான திறனை மேம்படுத்துதல்" (Capacity Building for Access to Information) மற்றும் "வறுமைக் குறைப்பு நடவடிக்கைத் திறனை மேம்படுத்துதல்" (Capacity Building for Poverty Reduction) போன்றவைகள் அண்ணா மேலாண்மை நிலையத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ மேலும், அண்ணா மேலாண்மை நிலையத்தில், மேலாண்மையியலில் முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சி மேற்கொள்ள சென்னைப் பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது.

★ அண்ணா மேலாண்மை நிலையமானது 2009–2010ஆம் ஆண்டில் பயிற்சி வகுப்புகள் நடத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போதைய ஆண்டில் இந்நிலையம் 31.03.2010 வரை 301 பயிற்சி வகுப்புகளை நடத்தி மொத்தம் 7,891 அரசு அலுவலர்களுக்கு, பொது நிருவாகம், தகவல் தொழில்நுட்பம், நடத்தையியல், பேரிடர் மேலாண்மை, தரமேலாண்மை மற்றும் 2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளித்துள்ளது.

★ மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் மற்றும் தலைவர், அண்ணா மேலாண்மை நிலையம் அவர்கள் முன்னிலையில், அண்ணா மேலாண்மை நிலையம் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் 30.7.2009 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முதன்மை நோக்கம் அரசுப் பணியாளர்களுடைய பயிற்சி முறைமையை வலுப்படுத்துவதும், அதற்கேற்ப அறிவுப் பகிர்தலை வசதிப்படுத்தி, பணித்திறனை மேம்படுத்த அவர்களுக்கேற்ற கல்விசார் படிப்பினை உருவாக்குதலும் ஆகும்.

★ அண்ணா மேலாண்மை நிலையத்தில் ஆண்டுதோறும் வழக்கமாக நடத்தப்படுகின்ற பயிற்சி வகுப்புகள் தவிர, கீழ்க்கண்ட சிறப்பான பயிற்சிகளும் 2009–2010இல் நடத்தப்பட்டன.

★ அண்மையில் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, மூன்று நாட்கள் கொண்ட சிறப்பு பயிற்சி வகுப்புகள், இரண்டு தொகுதிகளாக, 17.6.2009 முதல் 19.6.2009 வரையிலும் மற்றும் 8.7.2009 முதல் 10.7.2009 வரையிலும் நடத்தப்பட்டது. இவற்றில் ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்கள், நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் திட்டங்கள், மின் ஆளுமை மற்றும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் முதலிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ 17.4.2009 அன்று அண்ணா மேலாண்மை நிலையத்தில், அண்மையில் பதவி உயர்வு பெற்ற இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கட்கு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் திறம்பட செயல்பாட்டுக்கான ஒரு நாள் சிறப்பு விரிவுரைப் பயிற்சி நடத்தப்பட்டது. தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் அவர்கள் இப்பயிற்சியில் விரிவுரை யாற்றினார்.

★ பேரிடர் புள்ளி விவரம் மற்றும் இடர்ப்பாடுகளைக் கையாளும் மேலாண்மை என்ற ஐந்து நாட்களுக்கான பயிற்சி 14.12.2009 முதல் 18.12.2009 வரை, இந்தியப் புள்ளியியல் துறையினைச் சார்ந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த முதுநிலை அலுவலர்களுக்காக நடத்தப்பட்டது. புதுதில்லியிலுள்ள, தேசியப் பேரிடர் மேலாண்மை நிலையத்தின் செயல் இயக்குனர் அவர்கள் இப்பயிற்சியினைத் தொடங்கி வைத்து விரிவுரையாற்றினார்.

* 2008–ஆம் ஆண்டு (தமிழகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட) இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களுக்காக, 16.6.2009 மற்றும் 17.6.2009 ஆகிய இரண்டு நாட்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

* சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்காக, இரண்டு நாள் சிறப்புக் கணினிப் பயிற்சி வகுப்புகள் ஆறு தொகுதிகளாக நடத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகளில் பயிற்சியாளர்களுக்கு கணினியின் அடிப்படை இயக்கங்கள், எம். எஸ். விண்டோஸ், எம். எஸ். வேர்டு, எம். எஸ். எக்செல், இணையவலைப்பின்னல் (Internet), மின் அஞ்சல், கணினி மூலம் பொதுமக்கள் குறைதீர்க்கும் வழிமுறைகள் (PGRS) ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் முதல் பயிற்சி வகுப்பு 28.11.2009 அன்று சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மாநகர மேயர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

* வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் பணியாளர்களுக்காக மூன்று நாட்கள் "கணினிப்" பயிற்சி வகுப்புகள் அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடத்தப்பட்டன. இதில் 5 தொகுதிகளில் 100 பணியாளர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர்.

* அண்ணா மேலாண்மை நிலையத்திலுள்ள பேரிடர் மேலாண்மை பிரிவில் 2010 மார்ச் மாதம் முடிய 36 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இப்பயிற்சியில் வெள்ளம் மற்றும் புயல் மேலாண்மை, பூகம்பம், நிலச்சரிவு, தொழிற்சாலைப் பேரிடர், சுற்றுச்சூழல் ஆகிய தலைப்புகளில் பயிற்சியளிக்கப்பட்டது. அடிப்படை மற்றும் தொகுதி வாரியான பேரிடர் மேலாண்மைப் பயிற்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பூகம்ப இன்னல்களைத் தணித்தல் மற்றும் மேலாண்மை எனும் தலைப்பில் 8.6.2009 முதல் 12.6.2009 வரையில் அண்ணா மேலாண்மை நிலையமும் புதுதில்லியில் உள்ள தேசிய பேரிடர் மேலாண்மை நிலையமும் இணைந்து நடத்தியது

* 2009 டிசம்பர்த் திங்களில் அண்ணா மேலாண்மை நிலையமானது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை ஆட்சியர்களுக்காக பத்து நாட்கள் கொண்ட அறிமுகப் பயிற்சியை (முதல் கட்டம்) நடத்தியது. 26 துணை ஆட்சியர்களுக்கு மாவட்ட நிருவாகம், பணி விதிகள், ஒழுங்குமுறை நடவடிக்கைகள், நிதி மேலாண்மை, நிருவாக தலைமைப் பண்பு, அலுவலக நடைமுறை, செயல் நீதிபதியின் பங்கு, 2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், வருவாய்த் துறைச் சட்டம் மற்றும் விதிகள், யோகா மற்றும் மன அழுத்த மேலாண்மை, செயலாக்கத்திறனை மதிப்பிடல் மற்றும் பொது விநியோக முறை முதலிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

* 2009 செப்டம்பர்த் திங்கள் அண்ணா மேலாண்மை நிலையத்தில், "குடும்ப வன்முறைப் பாதுகாப்புச் சட்டம், 2005" என்ற தலைப்பில் சமூக நலத்துறையின் நன்னடத்தை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி 16.9.2009 அன்று தமிழக அரசின் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு நீதித்துறையின் உறுப்பினர்கள் மற்றும் பல முதுநிலை அலுவலர்கள் இப்பயிற்சியில் விரிவுரையாற்றினர்.

* 6.10.2009 முதல் 12.10.2009 வரை கொண்டாடப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட வாரத்தின் ஒரு பகுதியாக, 2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் குறித்து ஒரு நாள் புத்தறிவுப் பயிற்சி 7.10.2009 அன்று அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடத்தப்பட்டது. மொத்தம் 125 பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் உதவிப் பொதுத் தகவல் அலுவலர்கள் இதில் கலந்து கொண்டனர். இது தவிர, 2009–2010–இல், 71 பயிற்சி வகுப்புகள் "2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம்" குறித்து 2,522 அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

* அக்டோபர் 2009–இல், இந்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறை "தகவல் பெறுதல்" என்ற திட்டத்தை மைய நிதியுதவித் திட்டத்தின் கீழ் (Centrally Sponsored Scheme) அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு அளித்திட ஒப்புதல் அளித்தது. இதன் ஒரு பகுதியாக, அண்ணா மேலாண்மை நிலையம் தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களில், 2,550 அலுவலர்கட்கு (பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் உதவிப் பொதுத் தகவல் அலுவலர்கள்) பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது. இதனடிப்படையில், 2005ஆம் ஆண்டின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிற்சி வகுப்புகள் சனவரி முதல் மார்ச் 2010 கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சென்னை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கடலூர், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் உதவிப் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு நடத்தப்பட்டது. மேலும், அந்தந்த மாவட்டங்களிலுள்ள தகவல் வேண்டுவோர் என்ற பிரிவின் கீழ் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 200 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படுவார்கள்.

* அண்ணா மேலாண்மை நிலையத்தில் இரண்டு நாள் தேசிய மறுபுத்தறிவுப் பயிற்சியாக "2005ஆம் ஆண்டின் தகவல் பெறும் உரிமைச் சட்டம்" என்ற பயிற்சி வகுப்பினை 11.02.2010 மற்றும் 12.2.2010 ஆகிய நாட்களில் நடத்தியது. நாட்டின் பல்வேறு அரசு நிருவாகப் பயிற்சி நிலையங்களிலுள்ள 22 செயல்திறன் உறுப்பினர்கள் / பயிற்றுநர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். இப்பயிற்சியாளர்கள், 2005ஆம் ஆண்டின் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம், தகவல்களை மக்கள் பெறுவது தொடர்பான

தங்களது அனுபவங்களையும், திறனை மேம்படுத்துவதிலும் மற்றும் தகவல் உரிமைச் சட்டத்தை அமல்படுத்துவதிலும் ஏற்படும் குறிப்பிட்ட இடர்பாடுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

★ அண்ணா மேலாண்மை நிலையத்தில் மிகப்பெரிய அளவில் இந்து சமய அறநிலையத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. நான்கு தொகுதிகளில் 100 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 22.2.2010 அன்று தொடங்கப்பட்ட பயிற்சியில், பணி விதிகள், ஒழுங்குமுறை நடவடிக்கைகள், பொதுமக்கள் தொடர்பு, நிகழ்வு மேலாண்மை, கொள்முதல் நடைமுறை மற்றும் தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம், 2005ஆம் ஆண்டின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், நில நிருவாகம், நில பதிவுருக்கள் பராமரித்தல், அடிப்படைக் கணினித் திறன், மின் ஆளுமை ஆகியவற்றை உள்ளடக்கி பயிற்சி அளிக்கப்பட்டது.

★ அண்ணா மேலாண்மை நிலையமானது முதல் கட்டமாக, 2009ஆம் ஆண்டு மே மாதத்தில், 343 முதுநிலை மருத்துவ அலுவலர்களுக்கான (முதல் நிலை மருத்துவ அலுவலர், இணை இயக்குனர், துணை இயக்குனர்) மருத்துவமனை மேலாண்மைப் பயிற்சியினை உலக வங்கியின் உதவி பெற்ற தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் வெற்றிகரமாக நடத்தி முடித்தது. அண்ணா மேலாண்மை நிலையம், இப்பயிற்சியின் இரண்டாம் கட்டமாக 15 தொகுதிகளில் 450 முதுநிலை மருத்துவ அலுவலர்களுக்கு, மே 2010 முதல் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

★ சுற்றுலா வளர்ச்சித் துறைக்காக அண்ணா மேலாண்மை நிலையத்தால் ''சுற்றுலா வழிகாட்டி'' என்ற தலைப்பில் பட்டதாரிகட்கு 10 நாட்கள் கொண்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. பயிற்சியில் வெற்றிபெற்றவர்கட்கு தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை இயக்குநர் அவர்களால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இதுவரையில், இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் 235 சுற்றுலா வழிகாட்டிகள், பத்து தொகுதிகளில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

**'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம்**

★ இந்நிலையத்தில் நேரடியாகவும் மற்றும் பதவி உயர்வின் மூலமாகவும் நியமனம் செய்யப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்காக அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 'அ' பிரிவு அலுவலர்களுக்கு 5 வார அடிப்படைப் பயிற்சியும், 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு 3 வார அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

★ 2009–2010–ஆம் ஆண்டில், அண்ணா மேலாண்மை நிலையத்தின் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையத்தில், 17 பயிற்சி அணிகளில் 449 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2010–2011–ஆம் ஆண்டில் 'அ' பிரிவு அலுவலர்களுக்கு 5 தொகுதிகளிலும், 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு 10 தொகுதிகளிலும் பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையம்**

★ நாட்டிலேயே மிக உயர்ந்த குடிமைப் பணியில் நுழைவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு, தங்குமிடம், உணவு, நூலகம் மற்றும் கணினி வசதிகளுடன் கூடிய சீரிய பயிற்சியினை ஒரே கூரையின் கீழ் இப்பயிற்சி மையம் வழங்குகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000 வரை உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர் ஆகியோருக்கு இலவசப் பயிற்சி, இலவச தங்கும் வசதி மற்றும் இலவச உணவு ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினரால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பூர்வாங்கத் தேர்வு எழுதும் 300 பயிற்சியாளர்களுக்கும், முதன்மைத் தேர்வு எழுதும் 200 பயிற்சியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப் படுகின்றது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நேர்காணலினை எதிர் கொள்ளும் வகையிலான மாதிரி நேர்காணல் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. புதுதில்லியில் நடைபெறும் நேர்காணலில் கலந்து கொள்வதற்காக பயிற்சியாளர்கள் அங்குள்ள தமிழ்நாடு இல்லத்தில் சலுகை வீதத்தில் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றது.

★ விடுதியில் தங்கிப் பயிலும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் உணவு மானியத்தை பயிற்சியாளர் ஒருவருக்கு / மாதம் ஒன்றுக்கு ரூ.600லிருந்து ரூ.800ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ 2000ஆம் ஆண்டிலிருந்து 2008ஆம் ஆண்டு வரையில் அகில இந்திய குடிமைப்பணிகளுக்கு தமிழக அரசால் சென்னை அண்ணா நகரில் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயின்ற 239 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2008ஆம் ஆண்டு நடைபெற்ற மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப்பணித் தேர்வில், இப்பயிற்சி மையத்தில் முதன்மைத் தேர்வுக்கும், மாதிரி நேர்காணலுக்கும் பயிற்சி அளிக்கப் பட்டவர்களில், 46 பயிற்சியாளர்கள் அகில இந்திய குடிமைப் பணிகளுக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். 2009ஆம் ஆண்டிற்கான அகில இந்திய குடிமைப் பணிக்கான முதன்மைத் தேர்வில் 72 நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

★ கூடுதலாக இரண்டு குடிமைப்பணி தேர்வு பயிற்சிக் கழகங்களை, ஒவ்வொரு கழகத்திற்கும், பல்கலைக்கழகத்தின் சார்பாக ரூ.10 இலட்சம் தொடராச் செலவு மற்றும் அரசுக்கு ரூ.10.80 இலட்சம் தொடர் செலவு என்ற மதிப்பீட்டில், “அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சிக் கழகம்” என்ற பெயரில், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை மற்றும் பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் துவங்க ஆணைகள் வெளியிடப் பட்டன.

★ இத்திட்டத்தின் மூலமாக, ஒவ்வொரு ஆண்டும் மைய அரசு தேர்வாணையம் நடத்தும் முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்கு, ஒவ்வொரு பயிற்சிக் கழகத்திலும் 100 மாணவர்கள் வீதம் பயிற்சி அளிக்கப்படுவர். ஒவ்வொரு கழகமும், பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் தலைமையில், ஒரு நிருவாகக் குழுவைப் பெற்றிருக்கும்.

**அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

★ பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையமானது தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கு (இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்கள்) 60 நாட்களுக்கான அடிப்படைப் பயிற்சிகளை, பல்வேறு வகையான நிருவாகச் செயல் முறைகளில் அளிப்பதற்காக, 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும், துணை வட்டாட்சியர்களுக்கும் அவர்களது அறிவாற்றலை செம்மைப்படுத்துதலுக்கான 28 நாள் பணியிடைப் பயிற்சிகளும் இந்நிலையத்தில் அளிக்கப் படுகின்றன. ஒலி மற்றும் ஒளி சாதனங்கள் மூலமும் தொலைதூர ஒளிக்காட்சிக் கலந்துரையாடல் மூலமும் பயிற்சிகளின் பாடத்திட்டங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ ★ ★



# கூட்டுறவுச் சங்கங்கள் - கூட்டுறவுக் கடன் வழங்கல் அதிகரிப்பு

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கோ.சி.மணி அவர்கள்

★ 2005–2006ஆம் ஆண்டில், கூட்டுறவு வங்கிகள் ரூ.7,513.36 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கி இருந்தன. 2009–10 ஆம் ஆண்டில், இவ்வங்கிகள் வழங்கிய கடன் தொகை ரூ.20,639.80 கோடியாக உயர்ந்துள்ளது.

★ 2005–2006ஆம் ஆண்டில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் ரூ.14,963.96 கோடியாக இருந்த இட்டு வைப்புகள், 2009–10ஆம் ஆண்டில், ரூ.23,792.74 கோடியாக உயர்ந்துள்ளது.

★ கலைத்தல் அறிவிப்பு வழங்கப்பட்ட 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் புத்துயிரூட்டப்பட்டு, 2006–07ஆம் ஆண்டில் ரூ.16.52 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டது. இச்சங்கங்கள் 2009–10ஆம் ஆண்டில் வழங்கிய கடன்கள் 11 மடங்குக்கும் மேலாக அதிகரித்து, ரூ.184.55 கோடியாக உயர்ந்துள்ளது.

★ ரூபாய் ஒரு கோடிக்கு மேலாக, உறுப்பினர்கள் அளவில் கடன் வழங்கியிருந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 31.3.2006 அன்று 852 ஆக இருந்தது 28.2.2010 அன்று இது 2,886ஆக அதிகரித்துள்ளது.

★ 2005–06 ஆம் ஆண்டில், 475 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டு வந்தன. நான்கு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள் காரணமாக 2009–10 ஆம் ஆண்டில், 3,519 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இலாபத்தில் செயல்பட ஆரம்பித்துள்ளன.

★ 2005–06ஆம் ஆண்டில், 10 மத்தியக் கூட்டுறவு வங்கிகளே இலாபத்தில் செயல்பட்டு வந்தன. திறமையான நிருவாகத்தால், 2009–10ஆம் ஆண்டில் அனைத்து 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

★ தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2008–09ஆம் ஆண்டில் ரூ.3.58 கோடி இலாபம் ஈட்டியுள்ளது.

★ 2005–06 ஆம் ஆண்டில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் விற்பனை ரூ.82.36 இலட்சமாக இருந்தது. 2009–10ஆம் ஆண்டில் விற்பனை ரூ.784.73 இலட்சமாக உயர்ந்து, ரூ.86.27 இலட்சத்தை இலாபமாக ஈட்டியுள்ளது.

★ மொத்தமுள்ள 110 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2005–06ஆம் ஆண்டில், ரூ.205.27 கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்து, 73 சங்கங்கள் இலாபம் ஈட்டியிருந்தன. பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக 2009–10ஆம் ஆண்டில் வேளாண் விளைபொருட்கள் விற்பனை ரூ. 458.91 கோடியாக உயர்ந்து 110 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

★ 2005–06ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 34 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில், 21 பண்டகசாலைகள் மட்டும் இலாபத்தில் செயல்பட்டு வந்தன. பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் காரணமாக தற்போது 33 பண்டகசாலைகள் இலாபத்தில் இயங்கி நுகர்வோர் நலனைக் காப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

★ மொத்தமுள்ள 26 கூட்டுறவு அச்சகங்களில் 2005–06 ஆம் ஆண்டில், ரூ.21.09 கோடி அளவிற்கு அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 8 கூட்டுறவு அச்சகங்கள் மட்டுமே இலாபத்தில் செயல்பட்டன. 2009–10ஆம் ஆண்டில், 26 கூட்டுறவு அச்சகங்களின் அச்சுப் பணிகள் ரூ.33.04 கோடி அளவிற்கு உயர்ந்து, அனைத்து 26 கூட்டுறவு அச்சகங்களும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

★ ரூ.7,000 கோடி அளவிற்கு விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. நபார்டு வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு மத்திய, மாநில அரசுகளின் பங்காக ரூ.1,239.16 கோடி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

★ கூட்டுறவு வங்கிகளில் 2006–2007ஆம் ஆண்டில் 6,31,283 விவசாயிகளுக்கு ரூ.1,250.62 கோடியும், 2007–2008ஆம் ஆண்டில் 6,48,397 விவசாயி களுக்கு ரூ.1,393.97 கோடியும், 2008–2009ஆம் ஆண்டில் 6,91,192 விவசாயி களுக்கு ரூ.1,570.99 கோடியும், 2009–2010ஆம் ஆண்டில் 8,98,540 விவசாயிகளுக்கு ரூ.2,169.48 கோடியும் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2008–09ஆம் ஆண்டு முதல் 2009–10ஆம் ஆண்டு வரை 22,145 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு கூட்டுப் பொறுப்புக் குழுவுக்கும் ரூ.10,000 வீதம் 20,000 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு பொதுவான வேளாண் பணிகளை மேற்கொள்ள இவ்விரண்டு

ஆண்டுகளில் ரூ.20 கோடி சுழல் நிதியாக, தமிழக அரசு வழங்கியுள்ளது. 2008–09 ஆம் ஆண்டு 9,776 குழுக்களுக்கு ரூ.106.67 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2009–10ஆம் ஆண்டில், 14,302 குழுக்களுக்கு ரூ.178.19 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ 2006–07ஆம் ஆண்டில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.138.63 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டன. 2009–2010ஆம் ஆண்டில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ.397.75 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

★ 2006–07ஆம் ஆண்டில், ரூ.2.55 கோடி அளவிற்கு வழங்கப்பட்ட சிறு வணிகக் கடன்கள் ஆண்டுதோறும் அதிகரித்து 2009–2010ஆம் ஆண்டில் ரூ.83.45 கோடியாக உயர்ந்துள்ளது.

★ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 2005–06 ஆம் ஆண்டில் ரூ.19.47 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கியிருந்தன. இது 2009–10ஆம் ஆண்டில், ரூ.133.62 கோடியாக உயர்ந்துள்ளது.

★ 2005–06ஆம் ஆண்டில் 1,96,607 டன்களாக இருந்த இரசாயன உர விற்பனை 2009–10ஆம் ஆண்டில், 9,16,888 டன்களாக உயர்ந்துள்ளது.

★ 2005–06ஆம் ஆண்டில், ரூ.2.43 கோடியாக இருந்த விதைகள் விற்பனை, 2009–10ஆம் ஆண்டில் ரூ.20.67 கோடியாக உயர்ந்துள்ளது.

★ விளைநிலங்களின் மண் பரிசோதனை செய்தல், பாசன நீர்ப்பரிசோதனை செய்தல், விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளை அளித்திடும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் இதுவரை 172 பயிர் மருத்துவப் பயன்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் எடை துல்லியமாக இருக்கவும் எடைக் குறைவு புகார் எழாமல் இருக்கவும் அனைத்து கூட்டுறவு நியாயவிலைக் கடைகளிலும் மின்னணுத் தராசுகள் (Electronic Weighing Machine) நிறுவப்பட்டுள்ளன.

★ 2008–09 ஆம் ஆண்டில் 137 பொதுச் சேவை மையங்களும் 2009–10 ஆம் ஆண்டில் 100 பொதுச் சேவை மையங்களும் அமைக்கப்பட்டன.

★ கூட்டுறவு நிறுவனங்களில் பணியாளர்களே நியமனம் செய்யப்படாதிருந்த நிலையை மாற்றி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 710 பணியாளர்களும், கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் 2,710 பணியாளர்களும், கருணை அடிப்படையில் 699 பணியாளர்களும், புதியதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ நியாயவிலைக் கடைப் பணியாளர்கள் ரூ.900 மட்டுமே தொகுப்பு ஊதியமாகப் பெற்றுவந்தனர். 28.9.2007 முதல் இவர்கள் காலமுறை ஊதியம் பெறுகின்றனர். இதன்படி, நியாயவிலைக் கடைப் பணியாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் ரூ.4,200ஆக உள்ளது. இதனால் குறைந்த அளவே தொகுப்பு ஊதியம் பெற்று வந்த நியாயவிலைக் கடைப் பணியாளர்கள் ரூ.3,200 வரை கூடுதலாக ஊதியம் பெற்று வருகின்றனர்.

★ கூட்டுறவு நிறுவனங்களில் நீண்ட நாட்களாகத் தற்காலிகமாகப் பணிபுரிந்துவந்த 27,510 பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு அவர்களின் நல்வாழ்விற்கு வழி வகுக்கப்பட்டது.

★ 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொகுப்பூதியம் பெற்று வந்த 10,156 பணியாளர்களின் வாழ்க்கைத் திறன் உயரும் வகையில் அவர்களுக்குக் காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது.

★ திருச்சி சிந்தாமணி நுகர்வோர் மொத்த விற்பனைப் பண்டகசாலையில் கடந்த 15 ஆண்டுகளாகத் திருப்பி அளிக்க முடியாமல் இருந்த ரூ.5 கோடி வைப்புத் தொகை, வைப்புதாரர்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டது.

★ 31.3.2010 அன்றுள்ளபடி 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 736 கிளைகளில் 650 கிளைகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளில் 293 கிளைகளில் 224 கிளைகளும் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.

★ 2005–2006ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள மலைவாழ் மக்களுக்கான 19 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.19.44 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கி 10 சங்கங்கள் மட்டுமே நடப்பு இலாபத்தில் செயல்பட்டு வந்தன. கூட்டுறவுத் துறையின் சிறப்பு முயற்சிகளின் பலனாக, 2009–10ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் வழங்கியுள்ள கடன்கள் ரூ.50.38 கோடியாக அதிகரித்து, 16 சங்கங்கள் தற்போது நடப்பு இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும், மலைவாழ் மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, 13 சங்கங்களின் வளாகங்களில் ரூ.125.50 இலட்சம் மதிப்பில் சிறு பல்பொருள் சிறப்பங்காடிகள் அமைக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றன.

★ மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக, கூட்டுறவு வங்கிகள் மூலம் 2005–06ஆம் ஆண்டு, ரூ.64 இலட்சம் அளவிற்குக் கடன் வழங்கப்பட்டது. 2009–10 ஆம் ஆண்டில் ரூ.545 இலட்சம் அளவிற்கு கூட்டுறவு வங்கிகளினால் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2008–09 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்கியமைக்காக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு தேசிய விருது, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் 3.12.2009 அன்று வழங்கப்பட்டது. ★



# உணவு உற்பத்தி உயர்வு

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள்

* மத்திய அரசு சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2006-2007 இல் ரூ.580, 2007-2008 இல் ரூ.745, 2008-2009 இல் ரூ.900, 2009-2010இல் ரூ.1,000 என ஆதார விலையை நிர்ணயம் செய்தது. தமிழக அரசு அதனை முறையே, 2006-2007இல் ரூ.620, 2007-2008இல் ரூ.795, 2008-2009இல் ரூ.1,000, 2009-2010இல் ரூ.1050 என உயர்த்தி வழங்கியது.

* அதேபோல் மத்திய அரசு நிர்ணயித்த சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2006-2007 முதல் 2009-2010 வரை முறையே ரூ.610, ரூ.775, ரூ.930, ரூ.1,030 என்ற ஆதார விலையை தமிழக விவசாயிகளின் நலன் கருதி, 2006-2007இல் ரூ.650, 2007-2008இல் ரூ.825, 2008-2009இல் ரூ.1050, 2009-2010இல் ரூ.1,100 என உயர்த்தி வழங்கியது.

* 2008 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் 5.77 இலட்சம் எக்டேரில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக, 2 எக்டேர் என்ற உச்சவரம்பைத் தளர்த்தி, பாதிக்கப்பட்ட பரப்பு முழுவதற்கும் 8.62 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.404.41 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

* பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் தமிழக விவசாயிகள் அதிக அளவில் பயனடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன், காப்பீட்டுத் தொகையில் 50 விழுக்காடு தொகையை அரசே ஏற்கும் திட்டம் 2006-2007முதல் நடைமுறைப்படுத்தப் பட்டது. 2007-2008 முதல் கடன்பெறா விவசாயிகளுக்கும் 50 விழுக்காடு மானியத்தொகையை அரசே ஏற்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக, 2006இல் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகள் எண்ணிக்கை 1 இலட்சம் என்பது 2009இல் 8.76 இலட்சமாக உயர்ந்தது. நடப்பு ஆண்டில் 15 இலட்சம் விவசாயிகள் பயிர்களைக் காப்பீடு செய்வதற்கு வசதியாக 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவு தானிய உற்பத்தியில் சாதனை**

* 2005-2006இல் உணவு தானிய உற்பத்தி 61.17 இலட்சம் டன், 2006-2007ல் உணவு தானிய உற்பத்தி 82.63 இலட்சம் டன், 2007-2008இல் உணவு தானிய உற்பத்தி 65.82 இலட்சம் டன், 2008-2009இல் உணவு தானிய உற்பத்தி 74.93 இலட்சம் டன், 2009-2010இல் உணவு தானிய உற்பத்தி 95.60 இலட்சம் டன் என உயர்ந்து சாதனை படைத்தது.

**தமிழ்நாடு நீர்வளம் மற்றும் நிலவளம்**

* வேளாண்மைத் துறை மூலம் இத்திட்டம் 63 உபஆற்றுப் படுகைகளில் ரூ.691.42 கோடி ஒதுக்கீட்டில் 2007-2013 ஆகிய 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படுகிறது. 2007-2008ஆம் ஆண்டு 9 உபஆற்றுப் படுகைகளில் ரூ.52.13 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2008-09ஆம் ஆண்டு இத்திட்டம் கூடுதலாக 16 உபஆற்றுப்படுகைகளில் 104.06 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2009-2010ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு ரூ.54.61 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோல் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.32.58 கோடி செலவில் செயல்படுத்த அரசாணை வெளியிடப்படவுள்ளது.

**துல்லியப் பண்ணையம்**

* இத்திட்டம் 2007-2008ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 10,360 எக்டரில் துல்லிய பண்ணையத் திட்டம் ரூ.4,146.022 இலட்சம் செலவினத்தில் 10,360 விவசாயிகள் பயனடையும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2009-2010ஆம் ஆண்டில் இத்திட்டம் 2,061 எக்டரில் ரூ.533.756 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 3,111 விவசாயிகள் பயனாளிகளாகத் தேர்வு செய்யப்பட்டனர். பயனாளிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் கரையும் உரமிடும் கருவி எக்டருக்கு ஒன்று வீதமும் (ரூ.11,200) நீரில் கரையும் உரங்கள் எக்டருக்கு ரூ.15,000 வீதமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற நபர் ஒருவருக்கு ரூ.1,000மும் வழங்கப்பட்டுள்ளது.

**வேளாண் ஆலோசனை மையங்கள்**

* சிறிய அளவிலான மண் பரிசோதனை கூடத்துடன் வேளாண் ஆலோசனை மையங்கள் வட்டாரத்துக்கு ஒன்று வீதம் செயல் இலக்கான 385 வட்டாரங்களுக்கு 346 வட்டாரங்களில் அமைக்கப்பட்டு நிதி இலக்கான ரூ.1,193.50 இலட்சத்திற்கு சாதனையாக ரூ.1,062.40 இலட்சம் செலவிடப்பட்டது. ஆலோசனை மையங்களை நடத்துபவருக்கு பயிற்சி அளிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வாயிலாக ரூ.38.50 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டத்தின் கீழ், வேலையில்லா விவசாயப் பட்டதாரி / தோட்டக்கலைப் பட்டதாரி மற்றும் துறையிலிருந்து சமீபத்தில் பணி ஓய்வு பெற்றுள்ள அதிகாரிகளின் விருப்பத்தின் பேரில்

ஆலோசனை மையம் அமைக்க தலா ரூ.3 இலட்சம் பின் முடிவுறும் மானியமாக வழங்கப்படுகிறது.

**தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்**

✶ இத்திட்டம் மத்திய அரசின் 100 சதவீதம் நேரடி நிதியுதவியுடன் 2007–2008ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்பு அரிசித் திட்டமானது நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், பயறுவகைகளுக்கான திட்டமானது 2009–2010 வரை திருவள்ளூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, 2010–2011 முதல் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

✶ 2007–2008 மற்றும் 2008–2009ஆம் ஆண்டில், இத்திட்டமானது முறையே 1.42 கோடி மற்றும் ரூ.29.58 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 2009–2010ஆம் ஆண்டில் ரூ.36.59 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்விளக்கங்கள், தரமான சான்று விதைகள், நுண்ணூட்ட உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் போன்றவை தேசிய உணவுப் பாதுகாப்பு அரிசி மற்றும் பயறுவகைத் திட்டத்தின் கீழ் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**விதை மற்றும் உர விநியோகம்**

✶ கடந்த 2006 முதல், பிப்ரவரி 2010 வரை இத்திட்டத்தில் ரூ.106.25 கோடி செலவில் 70,175 மெ.டன் நெல் விதைகள் மற்றும் 1,493 மெ.டன் சிறுதானிய விதைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், எண்ணெய்வித்துக்கள் 11,362 மெ.டன்கள் ஐசோபாம் திட்டத்தில் ரூ.11.4 கோடி செலவிலும், பயறுவிதைகள் 6,629 மெ.டன்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

**குழு முறையிலான அணுகுமுறை**

✶ 2006–2007 முதல் 2009–2010 வரை 2,852 விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் ரூ.3.36 கோடி ஒதுக்கீட்டில் 42,780 விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டன.

✶ 2006–2007ஆம் ஆண்டில் 7,366 குழுக்களுக்கு சிறுதொழில் தொடங்குவது தொடர்பான பயிற்சி வழங்கி, தொழில் தொடங்க, ஒரு குழுவிற்கு ரூ.3,500 வீதம் நிதி உதவி வழங்கப்பட்டது. 2007–2008ஆம் ஆண்டில் நிதியுதவி ஒரு குழுவிற்கு ரூ.10,000 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு 725 குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

✶ 2008–2009ஆம் ஆண்டில் 2,025 குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.10,000 அல்லது தொழில் முதலீட்டில் 50 சதவீத மானியம் இதில் எது குறைவானதோ அதனை மானியமாகவும், உதவித்தொகையாகவும், பயிற்சியும் சேர்த்து மொத்தமாக ரூ.218.95 இலட்சம் தொழில் தொடங்க நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும் 223 பண்ணை மகளிர் குழுக்கள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் பயன்பெற அக்குழுக்களுக்கு 25 சதவீத மானியத்தில் பண்ணைக் கருவிகள் ரூ.99.45 இலட்சம் ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

✶ 2009–2010ஆம் ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 221.725 இலட்சம் செலவில் 3,510 குழுக்களுக்கு கோனோவீடர் மற்றும் மார்க்கர் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**புதிய கட்டடங்கள்**

✶ திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலக வளாகக் கட்டடம் கட்ட தலா ரூ.150 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

**தோட்டக்கலை பயிர் சாகுபடி**

✶ தமிழ்நாட்டில் நிலவும் ஏழு வகையான தட்பவெப்ப சூழ்நிலைகள் மற்றும் மண்வளம் ஆகியவை காய்கறிகள், பழங்கள், மலர்கள், வாசனை திரவியங்கள், மலைத் தோட்டக்கலைப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள் ஆகிய தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்ய ஏற்றதாக உள்ளது. மலர்கள் உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. ஆண்டுதோறும் சுமார் 10.06 இலட்சம் எக்டர் பரப்பளவில் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு மொத்தம் 175.77 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**உயர் தொழில்நுட்ப உத்திகள்**

✶ தோட்டக்கலை பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பெறுவதற்கு உயர் தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவது அத்தியாவசியமாகும். உயர் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி துல்லியப் பண்ணையம் மூலம் தக்காளி, கத்தரி, தர்பூசணிப் மிளகாய், வாழை போன்ற பயிர்களில் உற்பத்தி திறன் உயர்த்தப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்கள் 90 சதவீதத்திற்கும் மேல் முதல்தர விளைபொருட்களாகவும் மற்றும் 30 சதவீதத்திற்கு மேல் சந்தைவிலையும் பெறப் பட்டுள்ளது.

✶ தமிழகத்தில் சாகுபடி செய்யப்பட்டு வரும் மா போன்ற பயிர்களின் உற்பத்தித் திறன் தற்போது எக்டருக்கு 4.55 டன் அளவில் உள்ளது. இதனை எக்டருக்கு 9 டன் அளவிற்கு உயர்த்துவதற்கு அடர்நடவு மற்றும் கிளை மேலாண்மை உயர்சாகுபடி தொழில்நுட்பங்களைப் பின்பற்றி உற்பத்தித் திறனை எக்டருக்கு 9 டன் அளவிற்கு உயர்த்தும்

வகையில் அடர்நடவு திட்டம் ரூ.288 இலட்சம் திட்டமதிப்பீட்டில் தேசியத் தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் செயல்படுத்தப்படும்.

* திருந்திய சாகுபடி முறை, நுண்ணீர்ப் பாசனம், பயிர் எண்ணிக்கை சரியான அளவில் பராமரித்தல் நோய்தாக்காத நடவுச்செடிகளைப் பயன்படுத்துதல், அடர்நடவு, ஆகிய உயர் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து தக்காளி, கத்தரி, மிளகாய், வாழை, முந்திரி, வெற்றிலை, மல்லிகை, கனகாம்பரம் போன்ற காய்கறி பயிர்கள், பழப்பயிர்கள், மலர்பயிர்கள், வாசனைத் திரவிய பயிர்கள் மற்றும் மலைத் தோட்டப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உயர் தொழில்நுட்ப உயர்விளைச்சல் திட்டம் 13,333 எக்டர் பரப்பளவில் ரூ. 1,000.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* பழைய தென்னந்தோப்புகளில் பெறப்படும் வருவாயை உயர்த்திட கோகோ ஊடுபயிர் சாகுபடி ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. உயர்தர கோக்கோ நாற்றுக்களை விவசாயிகளுக்கு வழங்கி அவர்கள் உற்பத்தி செய்யும் கோக்கோ விதைகளை சந்தை விலைக்கு பெற்றுக் கொள்ளும் வகையில் “காட்பரி இந்தியா” நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2006இல் மேற்கொண்டு இதுவரை 7,317 எக்டர் பரப்பளவிற்கு ரூ.404.852 இலட்சம் நிதியில் கோகோ நாற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளது.

* தக்காளி, குடமிளகாய், ஜெர்பரா, கார்னேஷன் போன்ற தோட்டக்கலைப் பயிர்களை கட்டுப்படுத்தப் பட்ட சூழ்நிலையில் பயிர்சாகுபடி செய்து விவசாயிகள் அதிக வருவாய் பெற்றிட தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 13.44 எக்டர் பரப்பளவில் விவசாயிகளின் நிலங்களில் பசுமை குடில்கள் அமைக்கப்பட்டு ரூ.3,518.59 இலட்சம் செலவிடப் பட்டுள்ளன.

* நுண்ணீர்ப் பாசனம் 19,368 எக்டர் பரப்பளவில் ரூ.4,247.85 இலட்சம் மானியத்தில் செயல்படுத்தப் பட்டுள்ளன.

* பயிரில் உள்ள சத்துக்களை அறிய ரூ.40 இலட்சம் செலவில் 3 திசு ஆய்வகங்களும், தரமான உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யும் ஆய்வகங்கள் நான்கு ரூ.320 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

**விவசாயிகளுக்கான சிறப்பு செயல்பாடுகள்**

* விவசாயிகள் விரும்பி நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழக அரசின் மானிய பங்கு 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது. இதன்படி தற்போது மத்திய அரசு மானியத்தையும் சேர்த்து நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு 65 சதவீதம் மானியம் வழங்கப் படுகிறது.

* விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் நவீனத் தொழில்நுட்பங்களை அறிந்து அவர்களின் சாகுபடி நிலங்களில் அதனைப் பின்பற்றி உயர்விளைச்சல் பெறுவதற்கு ஏதுவாக ஆண்டுதோறும் 6,100 விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள் மூலம் உயர் தொழில்நுட்பப் பயிர் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

## வேளாண்மைப் பொறியியல் துறை

**நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள்**

* இத்திட்டத்தின் கீழ், 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில், தென் பெண்ணையார் மற்றும் மேட்டூர் நதி பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.4,751.47 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் 38,386 எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டு 6,252 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 18,421 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**களர் நிலச் சீர்திருத்தத் திட்டம்**

* 2006–07 மற்றும் 2007–08 ஆம் ஆண்டுகளில் விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, சேலம், வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 19.45 இலட்சம் செலவில் 1,039 எக்டர் பரப்பில் களர் நிலங்கள் சீர்திருத்தப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இத்திட்டத்தின் கீழ் 3,117 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் 2007–08ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது.

**வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 840 டிராக்டர்கள், 5,521 பவர்டில்லர்கள், 1,846 வேளாண் கருவிகள் வாங்கிட விவசாயிகளுக்கு ரூ.2,438.37 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 7,710 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 92,709 எக்டர் பரப்பில் ரூ.19,491.83 இலட்சம் செலவில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 75,792 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**நாகப்பட்டினம் வேதாரண்யம் பகுதிகளில் கடலோர மணல் மேடிட்ட நிலங்கள் மற்றும் உவர் நில சீரமைப்புக்கான முன்னோடித் திட்டம்**

* 2006–07ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 78 எக்டர் பரப்பில் ரூ.8.17 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டு திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 597 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் செயல் விளக்கங்கள் மேற்கொள்ள ரூ.98.74 இலட்சம் செலவில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கப்பட்டு 4,062 செயல் விளக்கங்கள் ரூ.87.78 இலட்சம் செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 54,807 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**வேளாண்மை இயந்திரங்களைக் கையாள்வதில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளைக் கையாள்வதில் விவசாயிகள் மற்றும் கிராமப்புர இளைஞர்களுக்கு 450 பயிற்சிகள் ரூ. 113.69 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 8,475 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**மழைநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மைத் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் ரூ. 5,435.03 இலட்சம் மொத்த செலவில், 10,135 மழை நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 45,269 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட ஏழு மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் நிலங்களில் 3,387 எக்டர் பரப்பில் ரூ. 574.07 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 3,642 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் எட்டு மாவட்டங்களில் ரூ.2,775.12 இலட்சம் செலவில் 4,642 எக்டர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 7,515 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 11,160 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ரூ.1,645.67 இலட்சம் மொத்த செலவில் 712 எக்டர் பரப்பில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிலச்சரிவு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2,382 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 12,280 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 62,772 பழைய பம்பு செட்டுகளுக்குப் பதில் புதிய பம்பு செட்டுகள் வாங்க ரூ.3,957.12 இலட்சம் மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 62,772 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**சிறுபாசனத் திட்டம்**

* இத்திட்டத்தின் கீழ், துறையின் சிறுபாசன இயந்திரங்கள் அரசினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 10,689 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**நில மேம்பாட்டுத் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2010 வரையிலான நான்கு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் துறையில் உள்ள புல்டோசர்கள், டிராக்டர்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் முறையே 3,66,326 மணிகள், 4,97,216 மணிகள் மற்றும் 30,666 மணிகள் பணிபுரிந்து சாதனை அடைந்துள்ளன.

**நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் மழைநீர் சேகரிப்புத் திட்டம்**

* 13.05.2006 முதல் 31.03.2009 வரையிலான மூன்று ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட 19 மாவட்டங்களில் ரூ.2,952.49 இலட்சம் செலவில் பண்ணைக் குட்டைகள், கிணறுகளைச் சீரமைத்தல், கசிவு நீர்க் குட்டைகள், தடுப்பணைகள் போன்ற 5,405 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 37,060 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் மார்ச் 2009இல் முடிக்கப்பட்டது.

**செயற்கை முறையில் நிலத்தடி நீர் சேகரிக்கும் திட்டம்**

* 01.04.2008 முதல் 31.03.2010 வரையிலான இரண்டு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் ரூ. 4,991.93 இலட்சம் மொத்த செலவில், 6,589 நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 50,955 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

## வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

**உழவர் சந்தை**

* விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு உரிய விலை கிடைக்கவும், இடைத்தரகர் குறுக்கீடின்றி அதனை நியாயமான விலையில் நுகர்வோர் வாங்கிப்

பயன்பெறவும் "உழவர் சந்தைத் திட்டம்" உருவாக்கப்பட்டது.

* 2006–07 ஆம் ஆண்டில் 103 உழவர் சந்தைகள் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன.

* 2007–08 ஆம் ஆண்டில் ரூ. 11.25 கோடி செலவில் மேலும் 50 புதிய உழவர் சந்தைகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அதில் இதுவரை 48 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன.

* தற்போது தமிழகம் முழுவதும் 151 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன.

* 2008–09ஆம் ஆண்டில் 22 உழவர் சந்தைகளில் காய்கறிகள் மற்றும் பழங்களைப் பாதுகாக்க 2 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன அறைகள் ரூ.133.10 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

* உழவர் சந்தையில் நிலவும் அன்றாட விலை விவரங்கள் HYPERLINK "http://www.tnsamb.com" என்ற வலைத்தளம் மூலம் அறிய வசதி செய்யப்பட்டுள்ளது.

* உழவர் சந்தைகளில் காய்கறி வரத்து 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.955.10 கோடி மதிப்பிலான 7.4 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும் விவசாயிகள் வருகை 30.45 இலட்சமாகவும் மற்றும் நுகர்வோர் எண்ணிக்கை 1,214.5 இலட்சமாகவும் இருந்தது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்**

* ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்யும் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு அதிகபட்ச விலை பெற்றுத் தரப்படுகிறது. மேலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு இலவச தரம் பிரிக்கும் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**உலர்களங்கள்**

* தானிய விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்கும் வகையில் கிராமங்களில் 2006–2007 முதல் 2009–10 வரை ரூ.4.80 கோடி செலவில் 200 உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**வேளாண் ஏற்றுமதி மண்டலம்**

* முந்திரிக்கென கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் ரூ.16.54 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் திருவாளர்.சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தால் 2006–2007இல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மூலம் ரூ. 1.28 கோடி மதிப்புள்ள முந்திரி வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

**மலர் ஏல மையம்**

* மலர் விவசாயிகளின் நலனுக்கென திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறில் ரூ.163.40 இலட்சம் செலவில் மலர் ஏல மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2009–2010ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு ரூ.85,756 மதிப்புள்ள 1,500 கிலோ மலர்கள் 124 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத் திட்டம்**

* இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/ குத்தகைதாரர்கள் பெயர் பதிவு செய்யப்பட்டு, விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ / நிரந்தர ஊனமுற்றாலோ அல்லது நச்சுப்பாம்புக் கடியின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அவர்களுக்கு ரூ.1,00,000 வரை உதவித்தொகை வழங்கப்படும்.

* விபத்தின் காரணமாக இரண்டு கைகள் அல்லது கால்கள் அல்லது கண்கள் இழக்க நேரிட்டால் ரூ.75,000 உதவித்தொகை வழங்கப்படும்.

* விபத்தின் காரணமாக ஒரு கை அல்லது கால் அல்லது கண் இழக்க நேரிட்டால் அல்லது இடுப்பு நிரந்தரமாக ஊனமுற்றால் ரூ.50,000 உதவித்தொகையும், தகுதியுடைய விவசாயிகள்/ குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படும்.

* இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற உறுப்பினர் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை.

* 2006–07 முதல் 2009–10 வரை 17,871 விவசாயிகள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

## தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

**நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலங்களை இலவசமாக வழங்கும் திட்டம்**

* மகத்தான இத்திட்டம் 2006–07ஆம் ஆண்டு அரசால் அறிவிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 10 கட்டங்களாக தரிசு நிலங்கள் வருவாய் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 2,11,507 ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை 1,77,356 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகுப்பு நில மேம்பாடு**

* இத்திட்டத்தில் 143 தொகுப்பு நிலங்களில் உள்ள 2656.92 ஏக்கரில், 120 தொகுப்பு நிலங்களில் 2253.78 ஏக்கர் மேம்படுத்தப்பட்டு பழ மரக்கன்றுகள் நடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய தொகுப்பு நிலங்களில் மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் தொகுப்பாக உள்ள தனியார் பட்டா தரிசு/ புஞ்சை நில மேம்பாடு**

* இத்திட்டத்தின் கீழ் 47 தொகுப்பு நிலங்களில் உள்ள 2,627.23 ஏக்கர் ரூ.623.97 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 10 தொகுப்பு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதர 37 தொகுப்பு நிலங்களில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

**கல்வி**

* உலகளவில் மாற்றம் அடைந்து வரும் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 10 இளநிலைப் பட்டப்படிப்பு, 29 முதுநிலைப் பட்டப்படிப்பு, 23 முனைவர் பட்டப்படிப்பு ஆகியவற்றின் பாடத்திட்டத்தை மாற்றியமைத்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இளம் தொழில்நுட்பவியல் (உயிர் தகவலியல்), இளம் தொழில் நுட்பவியல் (வேளாண் வணிக மேலாண்மை) மற்றும் அங்கக வேளாண்மை மற்றும் பொருட்கள் மற்றும் மூலதனச் சந்தைகள் என்ற முதுநிலைப் பட்டயப்படிப்பு ஆகிய புதிய படிப்புகளைத் துவங்கியுள்ளது. தொலைதூரக் கல்வித் திட்டத்தின் கீழ் 2007ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி மற்றும் தொழில்நுட்பங்கள் என்ற முதுநிலைப் பட்டயப்படிப்பும், 2006–07ஆம் ஆண்டில் 6 சான்றிதழ் பாடங்களும், 2007–08ஆம் ஆண்டில் 9 சான்றிதழ் பாடங்களும், 2008–09ஆம் ஆண்டில் 10 சான்றிதழ் பாடங்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. மென்கல்வி பயிலும் முறையைப் புகுத்த இணையதளத்தில் பாடங்களை நிறுவி, இப் பல்கலைக்கழகம் அனைத்து மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. நமது மாணவர்கள் பல்வேறு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு ஏதுவாக 2008–09ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட அனைத்து இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான தேர்வுகள் அனைத்தையும் இணைய வழி (online examination) தேர்வு முறையில் நடத்தும் புதுமைத்திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகப் புகுத்தப் பட்டுள்ளது. மேலும் அமெரிக்காவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 2009–10ஆம் ஆண்டு முதல் இரட்டை முதுநிலைப் பட்டப் படிப்பினை துவங்கியுள்ளது. 2009–10 ஆம் ஆண்டில் வேளாண் வணிகம் மற்றும் மேம்பாடு மேலாண்மை என்ற புதிய முனைவர் பட்டப்படிப்பு துவங்கப்பட்டுள்ளது.

* கடந்த 2007–08ஆம் ஆண்டில் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையம் ஆகிய இடங்களிலும், 2008–09ஆம் ஆண்டில் கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையம் மற்றும் பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திலும் ஈராண்டு வேளாண் பட்டயப்படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன.

**ஆராய்ச்சி**

* கடந்த மே 2006 முதல் மார்ச் 2009 இடையிலான காலத்தில், நான்கு புதிய ஆராய்ச்சி நிலையங்கள் துவங்கப்பட்டன. அவை திண்டுக்கல் மாவட்டத்தில் வாகரையில் அமைந்துள்ள மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம், பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையில் அமைந்துள்ள பருத்தி ஆராய்ச்சி நிலையம், சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் அமைந்துள்ள மானாவாரி நில வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையில் அமைந்துள்ள மலரியல் ஆராய்ச்சி நிலையமும் ஆகும். கடந்த 2006–07ஆம் ஆண்டில் 14 புதிய பயிர் இரகங்கள், 7 பண்ணைக் கருவிகள், 7 மேலாண்மை தொழில்நுட்பங்களும், 2007–08ஆம் ஆண்டில் 10 புதிய பயிர் இரகங்கள், 3 பண்ணைக் கருவிகள் மற்றும் 7 மேலாண்மை தொழில்நுட்பங்களும், 2008–09ஆம் ஆண்டில் 8 புதிய பயிர் இரகங்கள், 4 பண்ணைக் கருவிகள் மற்றும் 5 மேலாண்மை தொழில்நுட்பங்களும், 2009–10 ஆம் ஆண்டில் 11 புதிய பயிர்இரகங்கள் மற்றும் 4 பண்ணைக் கருவிகளும் வெளியிடப் பட்டன.

**விரிவாக்கம்**

* வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்று அடையும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு துல்லியப் பண்ணையத் திட்டத்தினை தமிழக அரசின் நிதியுதவியுடன் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 400 எக்டர் நிலப்பரப்பில், ரூ.720 இலட்சம் செலவில் செயல்படுத்தியது. விவசாயிகளிடம் விழிப் புணர்ச்சி ஏற்படுத்தவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பத் தகவல்களை பரவச்செய்யவும், வேளாண் தொழில்நுட்பத் தகவல் மையத்தின் வெளியீடுகள் "இந்தியா மார்ட்" டின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைத் தகவல் மையத்தின் மூலம் முக்கியப் பயிர்களுக்கு 43 சந்தை விலை நிலவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை இலாபகரமாக விற்பதற்கு இயன்றது.

**தானியங்கி வானிலை நிலையங்கள் மற்றும் வேளாண் இணையதளம்**

* தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களில் முதல் கட்டமாக 224 வட்டாரங்களில் ரூ.16,34.54 இலட்சம் செலவில் தானியங்கி வானிலை நிலையங்கள் நிறுவப்பட்டன. பல்கலைக்கழகத்தால் வேளாண் தொழில் நுட்பங்களையும், வானிலைத் தகவல்களையும் விலை விவரங்களையும் உடனுக்குடன் விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, 'வேளாண் இணையதளம்', ரூ.496 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வடிவமைக்கப்பட்டு 2,00,000 பக்கங்களில் விரிவான தொழில் நுட்பங்கள் 2009–10இல் இணையதளத்துடன் இணைக்கப்பட்டது.

**சர்க்கரைத் துறை**

* தமிழக அரசு கரும்பிற்கான மாநில அரசின் 2009–2010 அரவைப் பருவத்திற்கான கரும்பு விலை, போக்குவரத்து வாகன வாடகை மற்றும் கூடுதல் சர்க்கரை கட்டுமானத்திற்கான ஊக்கத் தொகையை உள்ளடக்கி டன் ஒன்றுக்கு 1,650 என

அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த விலை மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையைவிட ரூ. 351.60 கூடுதல் ஆகும். மேலும் வரும் அரவைப் பருவத்திற்கு (2010–2011) போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகை சேர்த்து, டன் ஒன்றுக்கு 2,000 ரூபாயாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

* தண்ணீரின் உபயோகத்தை சேமிக்கவும் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கவும் சொட்டு நீர்ப் பாசன முறையை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கரும்பு விவசாயிகள் சொட்டு நீர்ப் பாசன முறையைக் கையாள ஊக்குவிக்கும் பொருட்டு அரசு 65 சதவிகித மானியம் வழங்கி வருகிறது. இதன் மூலம் சுமார் 3,000 கரும்பு விவசாயிகள் பயன்பெறுவார்கள். கரும்பு வெட்டு ஆட்கள் பற்றாக்குறை காரணமாகவும், கரும்பு வெட்டுக் கூலி அதிகமாக உள்ளதாலும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு அறுவடை இயந்திரங்கள் வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**விதைச்சான்றளிப்புத்துறை**

* அங்ககச் சான்றளிப்புக்கென்று தனியே ஒரு துறை அமைக்கப்பட்டு, தற்பொழுதுள்ள விதைச்சான்றுத்துறை., விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்பு துறை எனப் பெயரிடப்பட்டுள்ளது.

* கோவை, விதைச்சான்று இயக்குநரகத்தில் புதிதாக டி.என்.ஏ. (பிங்கர் பிரிண்ட்) ஆய்வகம் ரூ.58.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இது நம் நாட்டில் பொதுத் துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள முதல் DNA (Finger Print) ஆய்வகம் ஆகும். இந்த ஆய்வகத்தின் மூலம் பயிர் இரகங்களின் இனத்தூய்மையினை மிக குறுகிய காலத்தில் ஆய்வு செய்து, உறுதி செய்ய இயலும். இதனால் உழவர் பெருமக்களுக்கு உரிய காலத்தில் தரமான விதைகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

* தற்பொழுது, கோவை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையம் (ISTA) பன்னாட்டு விதைப் பரிசோதனை நிறுவனத்தின் உறுப்பினராக இருந்து வருகிறது. மேற்படி நிறுவனத்தின் அங்கீகாரம் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

* தற்பொழுது விதைப் பரிசோதனை நிலையங்கள் இல்லாத 18 மாவட்டங்களிலும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விதைப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் விதைப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படும்.

* அங்ககச்சான்றளிப்புத்துறை மத்திய அரசின் வணிக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் 'அபீடா' (Agriculture and Processed Food Products Exports Development Authority) நிறுவனத்தின் மதிப்பேற்றல் பெற்றுள்ளது.

* அங்ககப் பயிர் உற்பத்திக்குச் சான்று வழங்க துவக்கப்பட்ட அங்ககச்சான்றளிப்புத்துறை தற்சமயம் கால்நடைப் பராமரிப்பு, தேனீ வளர்ப்பு, வனப்பொருட்கள் சேகரிப்பு, உணவு பதப்படுத்துதல், அங்கக இடுபொருட்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், வணிகம் மற்றும் ஏற்றுமதிக்கும் சான்றுகள் வழங்க நடைமுறைகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்படுத்தி வருகின்றது.

* கடந்த நான்காண்டுகளில் வேளாண்மைத் துறையில் 7,767 பேர் பணி நியமனம் பெற்றுள்ளனர். இவர்களில் தலைமைச்செயலகத்தில் 59 பேர், வேளாண்மை ஆணையரகத்தில் 2,741 பேர், தோட்டக்கலைத் துறையில் 1,486 பேர், வேளாண் வணிகத்துறையில் 234 பேர், வேளாண் பொறியியல்துறையில் 150 பேர், வேளாண் பல்கலைக்கழகத்தில் 3,097 பேர்.

* * *



# சட்ட மேற்படிப்பில் புதிய பாடங்கள்

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. துரைமுருகன் அவர்கள்

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் செங்கல்பட்டு சட்டக் கல்லூரி அரசு சட்டக் கல்லூரியாக மாற்றப்பட்டுள்ளது.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) சட்டக் கல்வி வகுப்பு, மாணவர்களுடன் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது.

★ ரூ. 1.30 கோடியில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் வகுப்பறைகள், ஓய்வறைகள், மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடம் ஆகியவை கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நூலகத்திற்கு தளவாடங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்க ரூ. 24 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப் பள்ளியில் முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டுத் துறைகளுக்குப் புத்தகங்கள், அறைகலன்கள், கணினி மற்றும் இதர இணைப்புகள் வாங்கிட ரூ.19 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு பணியமர்த்து மையம் 12.04.2007 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் ஒரு சில மாதங்களிலேயே சீர்மிகு சட்டப் பள்ளியில் பயின்ற பெரும்பாலான மாணவர்கள், பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் பணிகள் பெற்றுள்ளனர்.

★ 2007–2008ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும், முதன்முதலாக நுழைவுத் தேர்வற்ற சட்டப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை வெற்றிகரமாக நடைபெற்றது. இதன்மூலம் நகர்ப்புர மற்றும் கிராமப்புர மாணவர்களிடையே நிலவிவந்த இடைவெளியும் இன்னலும் நீக்கப்பட்டு, மேல்நிலைக் கல்வியில் பெற்ற மதிப்பெண்களை மட்டுமே மையமாக வைத்து மாணவர் சேர்க்கை சிரமமின்றி நடந்தது.

★ அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டைப் பன்னாட்டு அளவில் மேலும் விரிவாக்க புகழ்பெற்ற சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஒக்லஹாமா பல்கலைக்கழகம், லண்டன் மெட்ரோபாலிடன் பல்கலைக்கழகம் மற்றும் கொரியாவைச் சார்ந்த யங்சான் பல்கலைக்கழகம் ஆகியவற்றோடு புரிந்துணர்வு உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் உள்ள மூன்றாண்டு சட்டப் படிப்பில் முதலாண்டு சேர்க்கைக்கான இடங்கள் 80இலிருந்து 321 ஆகவும், ஐந்தாண்டு சட்டப் படிப்பில் முதலாண்டு சேர்க்கைக்கான இடத்தை 80 இலிருந்து 241 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கடந்த 2008 ஜுன் மாதத்தில் ஏற்படுத்தி அதன் மூலமாக தொலைநிலை வாயிலாக ஆறு மாதகாலம் பயிலக் கூடிய முதுநிலை பட்டயக் கணினிச் சட்டப் படிப்பினை 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் வழங்கி வருகிறது.

★ நுகர்வோர் சட்டக் கல்வி என்ற புதிய முதுநிலை பட்டய வகுப்பினை மாலைநேர வகுப்பில் பயிலும் வகையில் 2008–09இல் பல்கலைக்கழகத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

★ இப்பல்கலைக்கழகம் அகமதாபாத்தில் உள்ள இன்பிலிப்நெட் மையத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி 2 Mbps இன்டர்நெட் இணைப்பை தனது நூலகத்திற்கு வழங்கி உள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகத்தின் நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்கிட ரூ. 5 இலட்சம் மற்றும் பல்கலைக்கழக அலுவலர்கள் உணவக அறை கட்டடம் கட்ட ரூ.15 இலட்சம் 2008–09ஆம் கல்வியாண்டில் ஒப்பளிக்கப் பட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியைச் சார்ந்த ஐந்து மாணவர்கள் 2010ஆம் ஆண்டில் 17ஆவது ஆண்டு வில்லியம் சிவிஸ் பன்னாட்டளவில் உள்ள வணிகவியல் இசைவு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், மேலும் சீனாவில் உள்ள ஹாங்காங் நகரில் 7ஆவது ஆண்டு வில்லியம் சிவிஸ் பன்னாட்டளவிலான வணிகவியல் இசைவு மாதிரி போட்டிகளில் கலந்து கொள்ளவும் ரூ.3.75 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 3 வருட சட்டப் படிப்பிற்கும் மற்றும் ஏற்கெனவே

உள்ள பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறைக்கும் தேவையான புத்தகங்கள் வாங்க ரூ.10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகமானது சட்டப் பல்கலைக்கழகத்தின் சட்ட மேற்படிப்புத் துறைகளில் வழங்கப்படும் சட்ட பட்டமேற்படிப்புப் (M.L. Degree Course) பிரிவுகளில் 2009–2010ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு, விருப்பசார் விழைவுப்புள்ளி முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. சட்ட பட்டமேற்படிப்புத் துறைகளில் தற்போது உள்ள ஆறு பிரிவுகள் தவிர "பங்குச் சந்தை" என்பதான புதிய பிரிவு ஒன்று 2009–2010ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ பல்கலைக்கழக மானியக் குழுவானது 11ஆவது திட்டத்தின் கீழ் 2009–2010ஆம் ஆண்டில் பொது வளர்ச்சி உதவித் திட்டத்தின் கீழ் புத்தகங்கள் மற்றும் உபகரணங்களுக்காகச் செலவிட ரூ.2 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தாம்பரம் வட்டத்தில் 4,393 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தினையும் மற்றும் பெருங்குடி கொட்டிவாக்கம் கிராமத்தில் 15 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினையும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவியர் களுக்காக விடுதிக் கட்டடம் கட்டப்பட்டு அது 25.9.2009 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

★ சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் 107 தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த மாணவர் களுக்கு ரூ.26.75 இலட்சம் கல்விக் கட்டணமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 3 ஆண்டு (ஹானர்ஸ்) சட்டப் படிப்பு பயிலும் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த மாணவர் களுக்குக் கல்விக் கட்டணமாக ரூ.4,03,000 திருப்பியளிக்க ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகளில் முதலாம் ஆண்டில் தமிழ் வழியில் கல்வி கற்பிக்க தனியாக ஒரு பிரிவு தொடங்கிடவும், தமிழ்வழி பயிலும் மாணவர்களுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.400 ஊக்கத் தொகை வழங்கிடவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ 2006–2007ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு திருநெல்வேலியிலுள்ள அரசு சட்டக் கல்லூரியில் எம்.எல். படிப்பு தொடங்கிடவும், அதில் 15 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ 2007–ஆம் ஆண்டில் வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச வழக்குவாத போட்டிகளில் கலந்து கொள்ள 8 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.5,25,000 நிதியுதவியும் அளிக்கப் பட்டுள்ளது.

★ 2008–ஆம் ஆண்டில் மேற்கண்ட நாடுகளில் நடைபெற்ற வழக்குவாத போட்டிகளில் கலந்துகொள்ளும் பொருட்டு 7 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.5,25,000 நிதியுதவி வழங்கப்பட்டது.

★ ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போன் நகரில் நடைபெற்ற சர்வதேச வழக்குவாதப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக 2007ஆம் ஆண்டில் நான்கு மாணவர்களுக்கு மொத்தம் ரூ.3 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

★ 2006–2007ஆம் ஆண்டில் ரூ.25.83 இலட்சம் செலவில் சட்டக் கல்வி இயக்ககத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அனுமதியும், 2006–2007ஆம் ஆண்டில் ரூ.124.37 இலட்சம் செலவில் கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவியர் களுக்கு விடுதிக் கட்டடம் கட்ட அனுமதியும், 2006–2007ஆம் ஆண்டில் கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் ரூ.22.37 இலட்சம் செலவில் கூடுதல் அறைகள் கட்டுவதற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

★ 2007–2008ஆம் ஆண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் நூலக புத்தகங்கள் வாங்கிட ரூ.12 இலட்சமும்; திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.84 இலட்சமும்; திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்கு அறை கலன்கள் வாங்க ரூ.2 இலட்சமும்; திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு அரசால் ரூ.84 இலட்சமும்; சட்டக் கல்வி இயக்ககத்திற்கென கட்டப்பட்டு வருகின்ற சொந்தக் கட்டடத்தில் முதல் தளம் கட்டிட ரூ.30 இலட்சமும் அனுமதிக்கப் பட்டுள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் வாங்கிட அரசால் ரூ.12 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு அரசால் ரூ.80 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. சட்டத் துறைக்கு கணினி, அச்சுப்பொறி மற்றும் துணைப் பாகங்கள் வாங்க ரூபாய் நான்கு இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

★ 2009–2010ஆம் ஆண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்கும் புத்தகங்கள் வாங்கிட ரூ.14 இலட்சமும், மதுரை அரசு சட்டக் கல்லூரியில் கழிப்பறைகள் வசதியுடன் 4 கூடுதல் வகுப்பறைகள் கட்டிட ரூ.76 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

★ 2009ஆம் ஆண்டில் வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெறும் சர்வதேச வழக்குவாத போட்டிகளில் கலந்துகொள்ள 7 மாணவர்களுக்கு ரூ.5,25,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 7 மாணவர்களுக்கு 2010 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங்

மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்து கொண்டதற்கு தலா ரூ.75,000 வீதம் மொத்தம் ரூ.5.25 இலட்சங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டது.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதி பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ரூ.87.92 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தற்போது பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

★ அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற வேளாண் தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்விச் செலவிற்கு நிதியுதவி வழங்கிட ஏதுவாக, அரசால் ரூ.50 இலட்சங்கள் அரசால் ஒதுக்கீடு செய்வதற்கு ஒப்பளிக்கப்பட்டது.

★ சட்டக் கல்வித் துறையில் 19 தற்காலிக ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்களை மீண்டும் தோற்றுவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த 15 விரிவுரையாளர்களின் (முதுநிலை) பணிகளை வரன்முறைப்படுத்தி 22.07.2008 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ 2008–2009 ஆம் கல்வியாண்டு முதல் வேலூரில் புதிய அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு, அக்கல்லூரிக்கு ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ அரசு சட்டக் கல்லூரிகளில் பணியாற்றி வரும் பகுதிநேர விரிவுரையாளர்களின் தொகுப்பூதியத்தினை ரூ.5,500லிருந்து ரூ.10,000மாகவும் மற்றும் கௌரவ விரிவுரையாளர்களின் மதிப்பூதியத்தினை மாதம் ரூ.4,000லிருந்து ரூ.10,000மாகவும் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ அரசு சட்டக் கல்லூரிகளில் காலியாக இருந்து விரிவுரையாளர் (முதுநிலை) பணியிடங்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 10 நபர்களை அரசு சட்டக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# தொழிற்கல்வியில் சேரும் கிராமப்புர மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்

முனைவர் **க.பொன்முடி** அவர்கள்

★ 2007–2008ஆம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக்கட்டணம் இரத்து செய்யப்பட்டு, இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் 2009–2010ஆம் ஆண்டில் 3,74,676 மாணவர்கள் பயனடைந் துள்ளனர்.

★ 2008–2009ஆம் ஆண்டு முதல் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2009–2010ஆம் ஆண்டில் 19,786 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

★ 2006–2007ஆம் கல்வியாண்டு முதல் அரசுப் பொறியியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் ரூ.12,550இல் இருந்து ரூ.7,550ஆகக் குறைக்கப்பட்டது.

★ ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு ஏதுவாக, அரசுப் பொறியியல் மற்றும் கலைக்கல்லூரிகளில் நடத்தப்பட்டு வந்த சுயநிதிப் பாடப்பிரிவுகள் அனைத்தும் பொதுப்பாடப் பிரிவுகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி முறை 2006–2007 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 2009–2010 ஆம் ஆண்டில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சிமுறை அறிமுகம் செய்யப்பட்டது.

★ பொறியியற் கல்லூரிகளில் சேருவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் 2007–2008ஆம் ஆண்டு முதல் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், கிராமப்புர மாணவர்கள் அதிக அளவில் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ 2007– 2008ஆம் ஆண்டு முதல், தொழிற்கல்விப் படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வினை இரத்து செய்ததன் விளைவாக, அதிக அளவு கிராமப்புர மாணவர்கள் தொழிற்கல்வியில் சேர்ந்து பயனடைந்துள்ளனர். 2006–2007ஆம் ஆண்டில் 24,670 கிராமப்புர மாணவர்கள் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 2009–2010ஆம் ஆண்டில் 54,073 ஆக உயர்ந்துள்ளது.

★ 2007–2008ஆம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பயணப்பேருந்து அட்டை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 2009–2010ஆம் ஆண்டில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 19,786 மாணவர்களும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 1,47,618 மாணவர்களும் பயனடைந்தனர்.

★ 2007–2008ஆம் கல்வியாண்டு முதல் ஆண்டுதோறும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்கான பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது.

★ மாணவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதற் காகவும், வேலைவாய்ப்பு சந்தையின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப மாணவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளுவதற்கு உரிய ஆலோசனைகளை அவர்களுக்கு வழங்குவதற் காகவும் கல்லூரிக்கல்வி இயக்குநரகத்தில் வேலை வாய்ப்பு ஆலோசனைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தேர்ச்சிபெறும் மாணவர்கள் பணியில் சேருவதற்கு தேவையான பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக நிறைவுப் பள்ளிகள் (Finishing Schools) துவக்கப்பட்டுள்ளன.

★ அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு 50 பாடப்பிரிவுகளில் தொழில்நுட்பப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2009–2010ஆம் ஆண்டில் மொத்தம் 3,313 மாணாக்கர்கள் 6 மாத மற்றும் 1 வருட பயிற்சி வகுப்பில் சேர பதிவு செய்துள்ளனர்.

★ தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில், 2007–2008ஆம் கல்வியாண்டு முதல், பி.எட். மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை அரசால் அறிமுகப்படுத்தப் பட்டது.

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர் சேர்க்கையிலும், 2007–2008 ஆம் ஆண்டு முதல்.

கல்லூரியை அலகாகக் கொண்டு ஒற்றைச் சாளர கலந்தாய்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ மேட்டூர், வால்பாறை, பெரம்பலூர், ஒரத்தநாடு மற்றும் லால்குடி ஆகிய ஊர்களில் 5 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், சுரண்டை மற்றும் குளித்தலை ஆகிய ஊர்களில் 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் துவக்கப்பட்டுள்ளன.

★ 2008–2009 ஆம் ஆண்டில் ஆறு புதிய பொறியியல் கல்லூரிகளும், 2009–2010ஆம் ஆண்டில் ஐந்து பொறியியல் கல்லூரிகளும், ஆக மொத்தம் 11 பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாகத் துவக்கப்பட்டன.

★ திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒரு அண்ணா பல்கலைக்கழகமும் சென்னையில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகமும் துவக்கப்பட்டன.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இடைவிடா முயற்சியின் காரணமாக திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகமும், திருச்சியில் இந்திய மேலாண்மை நிறுவனமும் துவக்கப்பட்டன

★ மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அம்பலக்காரன்பட்டியில் அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

★ தருமபுரி, கரூர், பெரம்பலூர், தேனி, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மைய அரசின் நிதி உதவியுடன் 2010–2011 ஆம் கல்வியாண்டில் ஏழு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

★ அண்ணா பல்கலைக்கழகங்கள், மதுரை மற்றும் சென்னையில் தொடங்குவதற்கு சட்ட முன்வடிவு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர் களுக்கு, இந்தியாவிலேயே முதன்முறையாக, கற்பித்தல் முறைகளில் ஒருமாதப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ கல்வியின் தரத்தினை உயர்த்த, விருப்பார்ந்த தகுநிறை கல்வித் திட்டம், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் ரூ.1.15 கோடி செலவில் ஒலி, ஒளி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ 63 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மொழி ஆய்வகங்கள் ஏற்படுத்தும் பொருட்டு ரூ.409 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த வசதிகள் மூலம் அதிக எண்ணிக்கையிலான கிராமப்புர மாணவர்கள் பயனடைவர்.

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 57 கூடுதல் அறிவியல் ஆய்வகங்கள் ரூ.11.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

★ அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 21 மொழி ஆய்வகங்களும், அரசுப் பொறியியல் கல்லூரிகளில் 5 மின்னணு நூலகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.64.58 கோடி செலவில் 1,142 கூடுதல் வகுப்பறைகளை இந்த அரசு கட்டியுள்ளது.

★ அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் கட்டுவதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.2.90 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் போதிய தண்ணீர் வசதியுடன் கழிப்பறைகளை மேம்படுத்துவதற்காக ரூ.8.64 கோடி செலவில் 188 கழிப்பறை தொகுப்புகள் கட்டப்பட்டுள்ளன.

★ கல்லூரிகளுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றுவதற்காக 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ.1.03 கோடி செலவில் சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

★ 12ஆவது நிதிக் குழு மானியத்தின்கீழ் சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள பழமை வாய்ந்த கட்டடங்களைப் புதுப்பொலிவு பெறச்செய்வதற்காக ரூ.3.23 கோடியும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தினைப் புதுப்பிப்பதற்காக ரூ.7.71 கோடியும் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

★ பல்கலைக்கழக மானியக் குழுவின் திருத்திய ஊதிய விகிதங்களை கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு 01.01.2006 முதல் அமல்படுத்திய மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும்.

★ அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் அரசு / அரசு உதவி பெறும் பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கு 01.01.2006 முதல் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் திருத்திய ஊதிய விகிதங்கள் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

★ உயர்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டையொட்டி “அண்ணா இருக்கை” உருவாக்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# மாசற்ற நவீன வசதிப் பேருந்துகள் அதிகரிப்பு

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

**திரு. கே.என்.நேரு அவர்கள்**

- ★ கடந்த நான்கு ஆண்டுகளில் 15,000க்கு மேல் புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பேருந்துகளின் சராசரி வயது மார்ச் 2006இல் இருந்த 6.18 ஆண்டு என்பது தற்போது 4.52 ஆக குறைந்து உள்ளது.
- ★ அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,000க்கு மேல் என உயர்ந்து உள்ளது.
- ★ போக்குவரத்துக் கழகங்களில் மூன்று புதிய மண்டல அலுவலகங்களும் பதினொன்று புதிய பணிமனைகளும் துவக்கப்பட்டுள்ளன.
- ★ 1,628 புதிய வழித் தடங்கள் துவக்கப்பட்டுள்ளன மற்றும் 2,975 தடங்களில் தடநீட்டிப்புகளும் செய்யப்பட்டுள்ளன.
- ★ 2001இல் இருந்த பேருந்து கட்டணத்திலேயே தொடர்ந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- ★ அதி நவீன மாசற்ற பேருந்துகளான தானியங்கிக் கதவுகளுடன் கூடிய தாழ்தள சொகுசுப் பேருந்துகளும், வால்வோ ஏ.சி பேருந்துகளும் தொடர் பேருந்துகளும் மற்றும் அதிநவீன சொகுசுப் பேருந்துகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- ★ ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு, பேருந்துகளின் நகர்வைக் கண்காணிக்கும் முறையை மாநகர் போக்குவரத்துக் கழகமும், தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகமும் நடைமுறைப்படுத்தியுள்ளன.
- ★ ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்னை மாநகரப் பேருந்துகளின் உள்ளே, அடுத்து வரும் பேருந்து நிறுத்தத்தை முன்னரே அறிவிக்கும் திட்டம் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.
- ★ 55 மையங்களில், எந்த இடத்திலிருந்தும் எந்த இடத்திற்கும் செல்வதற்கான பயணச்சீட்டை உடனடி தளவழி முன் பதிவு செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- ★ ஆட்டோ மற்றும் இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்தும் பொதுமக்கள், பொது போக்குவரத்தை பயன்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. இதனால் 2005–06–இல் 170 இலட்சமாக பயணிகளின் எண்ணிக்கை 2009–10 ஆம் ஆண்டில் 205 இலட்சமாக உயர்ந்துள்ளது.
- ★ விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு ஒட்டுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒத்தத்தன்மையுடைய பேருந்து ஓட்டும் பயிற்சிக் கருவி நான்கு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.
- ★ விபத்தின்றிப் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு ஊக்கம் அளிக்க ''மாண்புமிகு முதலமைச்சர் விருது'' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ★ மின்னணு பயணச்சீட்டுக் கருவி மூலம் புறப்படும் மற்றும் செல்லும் இடங்களின் பெயர்களைத் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட பயணச்சீட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.
- ★ அரசுக் கலைக் கல்லூரி, அறிவியல் கல்லூரி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிலகங்களில் பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அடையாள அட்டை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ★ போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு சம்பள ஒப்பந்தகாலம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற நிலையிலிருந்து மூன்று ஆண்டு காலம் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
- ★ சென்ற ஒப்பந்தம் 1.9.2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறைந்த பட்சம் மாதாந்திர உயர்வு ரூ.1,000 என்ற அளவில் 12 சதவிகிதம் சம்பள உயர்வு அளிக்கப்பட்டது
- ★ நிருவாக மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வை யாளர்களுக்கு அரசு ஊழியருக்கு இணையான சம்பளம் 1.1.2008 முதல் வழங்கப்பட்டுள்ளது.
- ★ அலுவலர்கள் மற்றும் நிருவாக தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு ஆறாவது சம்பளக் குழுவின் பரிந்துரையின் பேரில் அரசு அறிவித்துள்ள சம்பள விகிதம் வழங்கப்பட்டுள்ளது. அலுவலர் களுக்கும் பணியாளர்களுக்கும் குறித்த காலத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.
- ★ கடந்த நான்கு ஆண்டுகளில் 43,282 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது
- ★ ஒய்வு பெற்ற பணியாளர்களுக்குரிய ஒய்வு ஒப்படைப்பு நிலுவைத் தொகை ரூ.115 கோடியும், விடுப்பு ஒப்படைப்புத் தொகை ரூ.10 கோடியும் அரசு நிதி உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.
- ★ கடந்த நான்கு ஆண்டுகளாக 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- ★ ஓட்டுநர், நடத்துநர்களுக்கும் 2008–09 முதல் போனஸ் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# மக்கள் நலன் பேணும் மகத்தான திட்டங்கள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள்

★ கடந்த நான்காண்டுகளில் வேலைவாய்ப்பகம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், காலமுறை ஊதிய விகிதத்தில், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 6,300 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மருத்துவர்கள் தவிர 7,242 செவிலியர்களும், 1,282 கிராம சுகாதார செவிலியர்களும், மருத்துவம் சார்ந்த ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 1,249 மருத்துவர்கள் மற்றும் 4,696 செவிலியர்கள் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் 213 மருத்துவர்கள், 75 மருந்து ஆய்வாளர்கள், 24 இளநிலை பகுப்பாய்வாளர்கள், 25 இயன்முறை சிகிச்சைப் பணியாளர்கள், 669 மருந்தாளுநர்கள், 1,000 செவிலியர்கள், 463 ஆய்வக நுட்பனர்கள் நிலை–II, 129 ஆய்வக நுட்பனர்கள் நிலை– III, 948 செவிலியர் உதவியாளர்கள் மற்றும் 595 கிராம சுகாதார செவிலியர்கள் வேலைவாய்ப்பகம் மூலம் பணிமூப்பு அடிப்படையில் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

★ தமிழகத்தில் செயல்படும் 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணிநேர பிரசவ சேவைத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மூன்று செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினி ரூ.5.74 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது. இணையதளம் வாயிலான தகவல்கள் தினந்தோறும் பெறப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள் கண்காணிக்கப்படுகிறது. கிராம சுகாதார செவிலியர்கள் அனைவருக்கும் செல்போன்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2005–06ஆம் ஆண்டில் நடந்த பிரசவங்களின் எண்ணிக்கை 82,532 ஆகும். இந்த எண்ணிக்கை 2009–10ஆம் ஆண்டில் 2,98,253 ஆக உயர்ந்துள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிசேரியன் அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. 2009–10ஆம் ஆண்டில் 2,453 சிசேரியன் அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 7,93,659 பிரசவங்களும், 5,179 சிசேரியன் சிகிச்சைகளும் நடந்துள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக அளவில் பிரசவங்களும், சிசேரியன் அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன.

★ இரத்த சேமிப்பு நிலையங்கள் 250 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளது. 148 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச சத்துணவு வழங்கப்படுகிறது. பிரசவத்திற்காக சேரும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண்களுக்கும் தினமும் மூன்று வேளை உணவு மூன்று நாட்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. 15.09.2008–இல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 9,30,794 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

★ ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ளவும், கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6,000 நிதி உதவி இரண்டு தவணைகளில் வழங்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 20,11,517 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.1,052.83 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ கிராமப்பகுதிகள் மற்றும் நகரப்பகுதிகளில், மக்களின் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 14,894 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் சுமார் 141.37 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த முகாம்களில் மருத்துவ மேல் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

★ நான்காண்டு காலத்தில் 117 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.43.97 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. 125 ஆரம்ப சுகாதார

நிலையங்கள் முப்பது படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக ரூ.80.30 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டது மட்டுமல்லாது, நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 52 அரசு வட்ட மருத்துவமனைகளில் புதிய பல் பிரிவுகள் தொடங்கப்பட்டு பல் டாக்டர்கள், பல் டெக்னீசியன்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்; மேலும் புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த சிறார்கள் மற்றும் பள்ளி மாணவர்களை இதய நோய்களிலிருந்து காத்திட 'இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சை திட்டம்' 'பள்ளிச்சிறார் இருதய அறுவை சிகிச்சை திட்டம்' என்னும் இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு திட்டங்களின் கீழ் புகழ்பெற்ற 28 தனியார் மருத்துவமனைகளில் இதுவரை 3,264 ஏழைக் குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு 17.10 கோடி ரூபாய் தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கி உள்ளது. சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் கடந்த ஓராண்டில் மட்டும் 500 குழந்தைகளுக்கு இலவசமாக இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

★ வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நோயாளிகள் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் உயிர் காக்கும் அறுவை சிகிச்சையை செய்து கொள்ள கடந்த நான்கு ஆண்டுகளில் 8,678 நோயாளிகளுக்கு ரூ.23.38 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளால் பாதிக்கப்படுவோருக்கு உடனடி சிகிச்சை அளிக்க ஏதுவாக விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை அரசு உருவாக்கி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனை, சேலம், வேலூர் மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், திண்டுக்கல், கோவில்பட்டி மற்றும் கரூர் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மதுரை இராஜாஜி மருத்துவமனை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் அமைக்கப்பட்டு வருகிறது.

★ கிராமப்புர ஏழை மக்களுக்கு அவசர காலங்களில் உடனடி மருத்துவ வசதி கிடைக்கச் செய்திட வேண்டும் என்ற முனைப்பில் அவசர கால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம், இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் 385 ஊர்திகளுடன் செயல்படுத்தப்படுகிறது. அவசர காலம் மற்றும் விபத்து நேரத்தில் தொலைபேசி எண் 108ஐ தொடர்பு கொண்டால் ஆம்புலன்ஸ் உடனடியாக வந்து அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவமனையில் அவர்களை அனுமதித்து அவசர சிகிச்சை உடனடியாக அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 15.09.2008–இல் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் இதுவரை 4,01,352 நோயாளிகள் அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆபத்தான நிலையிலிருந்த 20,184 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் ரூபாய் 519.40 கோடி செலவில் நவீன மருத்துவக் கருவிகள் அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள், 64 கூறுகள் சி.டி.ஸ்கேன்கள், லித்தோஸ்ட்ராப்ஸி, கலர் டாப்லர், செமி ஆட்டோ அனலைசர், கோபால்ட் தெரபி, லினியர் ஆக்ஸலலேட்டர், பி.சி.ஆர். கருவி, டயாலிசிஸ் கருவிகள் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. நான்கு ஆண்டுகளில் ரூ.1,046 கோடி மதிப்பிலான மருந்துகள் வாங்கி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரசு மருத்துவமனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வரும் நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

★ ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவக் குழு என்ற அளவில் 385 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ரூபாய் 37.18 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மருத்துவக் குழுவிற்கு ஒரு ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மருத்துவக் குழுவிலும் மருத்துவர், செவிலியர், உடனாளர் மற்றும் ஓட்டுநர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இக்குழு தொலைதூர கிராமங்களுக்கு சென்று, அங்கு வாழும் மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறது. பரிந்துரை மையங்களாகச் செயல்படும் வட்ட மருத்துவமனை மற்றும் வட்டம் சாரா மருத்துவ மனைகளின் உள்கட்டமைப்பு வசதிகள் தேசிய சுகாதார நலவாழ்வு இயக்க நிதி ரூ.75 கோடியில் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

★ 213 ஆரம்ப சுகாதார நிலையங்களின் பழுதுபார்ப்புப் பணிகளுக்காகவும், கர்ப்பிணிகள், பிரசவித்த தாய்மார்கள் தங்கி சிகிச்சை பெறும் வார்டுகள், பிரசவ அறைகள், அறுவை அரங்குகள் ஆகியவைகளைப் புதுப்பிப்பதற்கும் விரிவுபடுத்து வதற்கும் ரூ.16.8 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ ஆரம்ப சுகாதார நிலையங்களின் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டுமானப் பணிகளுக்காக ரூ.18.60 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடங்கள் இல்லாத 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.4 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ இளம் சிசு மரணம் அதிகம் நிகழும் 15 மாவட்டங்களில், ரூ.11.48 கோடி செலவில் இளம்சிசு தீவிர கவனிப்பு மையங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. இம்மையங்களில் கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க அறிவிப்பு வெளியிடப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி கடந்த 2008–09–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. விழுப்புரம் மற்றும் திருவாரூர் மருத்துவக் கல்லூரிகள் நடப்பு ஆண்டில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிவகங்கை மற்றும் பெரம்பார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கு தேவையான கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. புதிய மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டும் ரூ.380 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் திருவண்ணாமலையில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

★ “உயிர்சாக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்” கீழ் 1.35 கோடி குடும்பங்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிறப்புச் சிகிச்சை அளிக்க இந்த திட்டம் வழிவகை செய்கிறது. முழு காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் 6.5.2010 வரை 88,025 நோயாளிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பெரிய அளவிலான உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.249.10 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு காப்பீட்டுத் தொகை செலுத்துவதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் மாவட்ட ஆட்சியர்கள், சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.

★ அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் பட்டப்படிப்பு பயிலும் பயிற்சி மாணவர்களுக்கும் அரசுப் பணி சாரா மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 1.7.2009 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. பட்டப்படிப்பு பயிலும் பயிற்சி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.7,000மும், முதலாம் ஆண்டு அரசுப் பணி சாரா மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.15,000மும், இரண்டாம் ஆண்டு அரசுப் பணி சாரா மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.16,000மும், மூன்றாம் ஆண்டு அரசுப் பணி சாரா மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.17,000மும், முதலாம் ஆண்டு உயர் சிறப்பு முதுகலை மருத்துவ மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.18,000மும், இரண்டாம் ஆண்டு உயர் சிறப்பு முதுகலை மருத்துவ மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.19,000மும், மூன்றாம் ஆண்டு உயர் சிறப்பு முதுகலை மருத்துவ மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.20,000மும், நான்காம் ஆண்டு எம்.சி.எச். நரம்பியல் அறுவைப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.18,000மும், ஐந்தாம் ஆண்டு எம்.சி.எச். நரம்பியல் அறுவைப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.19,000மும் தற்போது வழங்கப்படுகிறது. மேலும், பயிற்சி மாணவர்களுக்கு ரூ.300 வீதமும் பட்ட மேற்படிப்பு மற்றும் சிறப்பு முதுகலை மருத்துவ மாணவர்களுக்கு ரூ.600 வீதமும் ஆண்டொன்றுக்கு கூடுதலாக உயர்த்தி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

★ சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தரத்தை பல சிறப்புப் பிரிவுகள் கொண்ட மருத்துவமனையாக ரூபாய் 150 கோடி செலவில் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மைய அரசு ரூபாய் 100 கோடியும், மாநில அரசு ரூபாய் 50 கோடியும் இதற்காக நிதி வழங்கி உள்ளது.

★ மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையை பல சிறப்புப் பிரிவுகள் கொண்ட மருத்துவமனையாக மைய அரசின் நிதி உதவியுடன் ரூபாய் 150 கோடி செலவில் தரம் உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்த மருத்துவமனையில் உள்ள மயக்க மருந்தியல் துறை, இந்தியாவில் உள்ள மிகப் பெரிய மயக்கவியல் துறையில் ஒன்றாகும். நடப்பு நிதி ஆண்டில் இத்துறை ரூ.2.6 கோடி செலவில் உயர் மையமாக தரம் உயர்த்தப்பட உள்ளது.

★ ஸ்டான்லி மருத்துவமனை ரூ.100 கோடி செலவில் மேம்படுத்தப்படுகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, செங்கல்பட்டு அரசு மருத்துவமனை, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, சென்னை அரசு பல் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை மற்றும் எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் சுமார் 373 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன.

★ தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தில் 29 மாவட்டங்களில் 225 மருத்துவமனைகள் ரூ.270 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.95.39 கோடி செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 41 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 230 அரசு மருத்துவமனைகள் மற்றும் 130 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8 தொழிலாளர் ஈட்டுறுதி அரசு மருத்துவமனைகளில் மருத்துவக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்தியது தமிழ்நாடு மட்டும்தான். இதனால், உலக வங்கி மேலும் 3 வருடங்களுக்கு ரூ.627 கோடி நிதி உதவியில் இத்திட்டத்தை நீட்டிக்க இசைவு தெரிவித்துள்ளது.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிநவீன பச்சிளங் குழந்தைப் பராமரிப்புக் கருவிகள் ரூ.1.15 கோடி செலவில் யூனிசெப் நிறுவன உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது. நாகை, கடலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு ரூ.90 இலட்சம் செலவில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ மஞ்சள் காமாலை நோயைத் தடுக்கும் பொருட்டு ஒரு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் ரூ.7.2 கோடி செலவில் ஹெப்படைட்டிஸ்–பி தடுப்பூசி மருந்து வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 06.01.2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டு. அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டொண்டிற்கு 11.5 இலட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள்.

★ 125 அரசு மருத்துவமனைகள் 24 மணிநேரமும் செயல்படும் அவசர தாய் சேய் சிகிச்சை மையமாக இயங்கி வருகிறது. இங்கு குழந்தை மருத்துவர், மகப்பேறு மருத்துவர், மயக்கவியல் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நவீன கருவிகள் மற்றும் தளவாடங்கள் இந்த மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 264 அரசு மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகள், 14 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிலையங்களில் மருத்துவப் பயனாளிகள் நலச்சங்கங்கள் அமைக்கப்பட்டு இதுவரை ரூ.63.85 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இப்பயனாளிகள் நலச்சங்கங்களின் மூலம் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை செவ்வனே பழுதுபார்த்துக் கொள்ளவும், கருவிகள், உபகரணங்களை வாங்கிக்கொள்ளவும், தரமான மருத்துவ சேவை அளிக்கவும் முடிகிறது. மேலும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுப் பராமரிப்பு நிதியாக இதுவரை ரூ.52.91 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

★ 12,616 கிராம ஊராட்சிகளில் கிராம சுகாதாரம் மற்றும் குடிநீர் துப்புரவுக் குழுக்களும், 561 நகர பஞ்சாயத்துகளில் 2,540 கிராம சுகாதார மற்றும் குடிநீர் துப்புரவுக் குழுக்களும் அமைக்கப்பட்டு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒவ்வொரு குழுவிற்கும் ஆண்டிற்கு ரூ.10,000 நிதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.58.09 கோடி நிதி இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகளுக்கு சுத்தமான சலவை செய்யும் துணிகள் வழங்க ஏதுவாக ரூ.9.66 கோடி செலவில் சலவை இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

★ 2001ஆம் ஆண்டில் தமிழகம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் அதிகம் உள்ள மாநிலமாக வகைப்படுத்தப்பட்டு, எய்ட்ஸ் நோயின் தாக்கம் 1.13 சதவீதமாக காணப்பட்டது. அரசு எடுத்த விழிப்புணர்வு மற்றும் தடுப்புப்பணிகளால் இது தற்போது 0.25 சதவீதமாகக் குறைந்துள்ளது. எச்.ஐ.வி. பாதித்தோரின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து சீராக நிலைநிறுத்தப்பட்டிருப்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் மேலும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி 2012ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதியதாக எச்.ஐ.வி/ எய்ட்ஸால் பாதிக்கப்பட்டோர் எவரும் இல்லை என்ற நிலையை உருவாக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

★ ரூ.5 கோடி செலவில். தமிழ்நாடு எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான அறக்கட்டளை 6.4.2009 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 2009–10ஆம் நிதி ஆண்டில் 1,549 பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.44.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவி ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

★ தமிழகத்தில் மட்டும் தான், அனைத்து எச்.ஐ.வி/ எய்ட்ஸுடன் வாழும் 39,459 நபர்களுக்கு ஜூன் 2007 முதல் கூட்டு மருத்துவ சிகிச்சையும், மருந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

★ கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வு சேவைகளை அவர்களது வாழ்விடத்திற்கே கொண்டு செல்ல 10 நடமாடும் வாகனங்கள் ரூ.46 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கு சிறப்புமிகு மருத்துவ சேவைகளைச் செய்வதற்காக சென்னை, எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ.32 இலட்சம் செலவில் ஒரு மையம் தொடங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கத்தால் 95 பால்வினை நோய் சிகிச்சை மையங்களும்,

சென்னை மாநகர எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தால் 11 பால்வினை நோய் சிகிச்சை மையங்களும் அமைக்கப்பட்டு 106 மையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. பால்வினை நோய் சிகிச்சை சேவையை மேம்படுத்த, மேலும் 50 பால்வினை நோய் சிகிச்சை சேவை மையங்கள் மாவட்ட மருத்துவமனை, வட்ட மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.45 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் அமைக்கப்படும்.

★ பள்ளி செல்லா இளைஞர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நாமக்கல், கரூர், தேனி, மதுரை ஆகிய 4 மாவட்டங்களில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் விழிப்புணர்வுத் திட்டங்கள் 2009–10–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் திருவண்ணாமலை, இராமநாதபுரம், வேலூர், விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, விழுப்புரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், கடலூர் ஆகிய 10 மாவட்டங்களில் விழிப்புணர்வுத் திட்டங்கள் ரூ.75 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாட்டில் 783 ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை நிலையங்களை எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் நடத்தி வருகிறது.

★ தேசிய கூட்டு மருத்துவத் திட்டத்தின் மூலமாக முதன் முறையாக ஏப்ரல் 2004–இல் தாம்பரத்தில் முதல் கூட்டு மருத்துவ மையம் தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் 37 கூட்டு மருத்துவ மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் 1,33,538 நபர்கள் பதிவு செய்யப்பட்டு, 39,459 பேர் கூட்டு மருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். 32 சி.டீ. 4 பரிசோதனைக் கருவிகள் (CD4 Machines) தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கத்தால் வழங்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது.

★ தமிழ்நாடு முழுவதும் எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நலவாழ்வு மையங்கள் தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கி வருகின்றன. சில மாவட்டங்களில் நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் இரண்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது தமிழ்நாடு முழுவதும் 39 மையங்கள் உள்ளன. இதில் 5 மையங்கள் பெண்களுக்கான சிறப்பு மையங்களாகும். இந்த நலவாழ்வு மையங்கள் அனைத்தும் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களால் நடத்தப்படும் பதிவு செய்யப்பட்ட நலச் சங்கங்களின் மூலம் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் சமூக நல மையங்கள் நியமிக்கப்பட்டுள்ளது. தற்போது 40 பெரியவர்களுக்கான மையங்களும், 5 குழந்தைகளுக்கான சிறப்பு மையங்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகின்றன.

★ 1971ஆம் ஆண்டு 1,000 மக்கள் தொகைக்கு 31.4ஆக இருந்த தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம், 2008ஆம் ஆண்டில் 16.0ஆக குறைந்து, இந்தியாவிலேயே பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் இரண்டாவது மிகப் பெரிய மாநிலமாகத் திகழ்கிறது. 1971ஆம் ஆண்டு 3.9ஆக இருந்த மொத்த கருவள விகிதம் 2007ஆம் ஆண்டு 1.6ஆக தமிழ்நாட்டில் குறைந்துள்ளது. மொத்தப் பிறப்புகளில் இரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகள் உடைய தாய்மார்களின் விழுக்காடு 1985ஆம் ஆண்டு 37.8 விழுக்காட்டில் இருந்து, 2008இல் 12.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது. 1971ஆம் ஆண்டில் 1,000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு 113ஆக இருந்த தமிழ்நாட்டின் சிசு மரண விகிதம், 2008இல் 31ஆக குறைந்து இந்தியாவிலேயே சிசு மரண விகிதத்தைக் குறைப்பதில் இரண்டாவது பெரிய மாநிலமாகத் திகழ்கிறது. தாய்மார்களின் பேறுகால இறப்பு விகிதம் 2008ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பேறுகால தாய்மார்களுக்கு 79ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த சுகாதாரக் குறியீடுகள் தற்போது மேலும் குறைந்துள்ளது. குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சைக்குப்பின் மரணம் ஏற்பட்டால், அக்குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க 2006–07ஆம் ஆண்டு முதல் குடும்ப நல காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

★ அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் பிறப்பு இறப்பு பதிவு மையங்களாக அறிவிக்கப்பட்டு, அங்கு பிறக்கும் குழந்தைகளுக்கு அப்பொழுதே பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ் சுகாதார ஆய்வாளர்களால் அவரது இல்லங்களிலேயே வழங்கப்படுகிறது.

★ ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில், தனியாரின் பங்களிப்பை இந்த அரசு ஊக்குவிக்கிறது. 'கேடலிஸ்ட் டிரஸ்ட்' என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன், மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.2 கோடி செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மதுரை வடமலையான் மருத்துவமனை, மேலக்கால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.12 இலட்சம் செலவில் ஒரு மகப்பேறு வார்டை கட்டிக் கொடுத்துள்ளது. நந்திவரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எழில்மிகு பூங்காவும், பிரசவ நாற்காலியும் ரூ.5 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் ரூ.4 இலட்சம் செலவில் இயந்திர சலவையகம் அமைக்கப்பட்டுள்ளது. பாணாவரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு விப்ரோ ஜி எல்த்கேர் என்ற கம்பெனி ரூ.40 இலட்சம் செலவில் மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது. டைம்ஸ் பவுன்டேசன் என்னும் நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம் செம்மஞ்சேரியில் 30 படுக்கைகள்

கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும், திருவெற்றியூரில் 50 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையையும், ரூ.10 கோடி செலவில் நிறுவி வருகிறது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் 325 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மைய அரசிடமிருந்து ரூ.46.66 கோடி நிதி பெறப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 175 பிரிவுகள் தொடங்கப்பட உள்ளன. சென்னை அரசு யோகா மற்றும் இயற்கைக் கல்லூரி ரூ.90 இலட்சம் செலவிலும், சென்னை அரசு யுனானி மருத்துவக் கல்லூரி ரூ.92.50 இலட்சம் செலவிலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நர்ஸிங் தெரபி என்ற பட்டப்படிப்பு ரூ.1 கோடி செலவிலும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் நர்ஸிங் தெரபி மற்றும் மருந்தாளுநர் பட்டயப் படிப்புகள் தலா ரூ.1 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன.

★ தேசிய கண்பார்வை இழப்பு தடுப்புத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 19.90 இலட்சம் நபர்கள் கண்புரை அறுவை சிகிச்சை பெற்றுள்ளனர். 84.54 இலட்சம் பள்ளிச் சிறார்களுக்கு கண்பார்வைப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 3.88 இலட்சம் நபர்கள் கண்பார்வைக் குறைபாடு என கண்டறியப்பட்டு, 1.39 இலட்சம் நபர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. 35,103 கண்கள் தானமாகப் பெறப்பட்டுள்ளது.

★ மருந்துக் கட்டுப்பாடுத் துறை, சமீபத்தில் 'ரிநர்வ்' என்ற போலி மருந்தையும், 'பென்னாட்ரல் காப் பார்முலா' என்ற பெயரால் போலி கலப்பட இருமல் மருந்தையும் திடீர் ஆய்வு செய்தபோது, காலாவதியான மருந்துகள் மீண்டும் விற்பனைக்கு அனுப்பப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மருந்துக் கட்டுப்பாடுத் துறையும் காவல் துறையும் இணைந்து, இத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களைக் கைது செய்து வருகிறது. மேலும் போலி மருந்து மற்றும் காலாவதி மருந்துகளைக் கண்டுபிடித்து அவைகளைப் பறிமுதல் செய்து மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுவரை சுமார் 22 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொதுமக்களுக்கு மருந்துகளின் தன்மை, பயன்படுத்தும் முறை, அளவு, ஒவ்வாமை போன்ற விவரங்கள் தெரிவிக்கும் வகையில் மருந்தியல் விழிப்புணர்வு மையம் 07.12.2007 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் இத்தகைய் மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ தமிழகத்தில் தான் சுகாதார வசதிகள் மக்களுக்கு சிறப்பாக வழங்கப்படுகிறது. அமெரிக்கத் தூதரக அதிகாரி திரு. ஆன்ட்ரியூ டி. சிம்கின், 01.08.2009 அன்று காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பார்வையிட்டு, தமிழ்நாடு அரசு, கிராமப்புர மக்களுக்கு, சிறந்த மருத்துவ சிகிச்சைகளை அளித்து வருகிறது என்று பாராட்டியுள்ளார். தமிழ்நாட்டில் வழங்கப்படும் சுகாதார வசதிகளை அமெரிக்க அரசிடம் தெரிவித்து அங்குள்ள கிராமப் பகுதி மக்களுக்கு இங்குள்ளதுபோல் சுகாதார வசதிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

★ மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அளவில் சிறப்பாகச் செயல்படும் மாநிலம் என்ற அடிப்படையில் சுகாதாரத் துறையில் தமிழக அரசு செய்து வரும் பல்வேறு சீர்திருத்தங் களுக்காகவும், உன்னதமான பல புதிய திட்டங்களை நிறைவேற்றி வருவதற்காகவும், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அரசு கூட்டு முயற்சியில் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காகவும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் (FICCI) 2009ஆம் ஆண்டிற்கான முதல் பரிசை பெற்றுள்ளது. 2009ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்காக, அறிவியல் மேம்பாடு மற்றும் ஊடகக் கல்வி மையம் வழங்கும் "ஈ இந்தியா 2009" என்ற விருதினையும் பெற்றுள்ளது. பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்வதில் தமிழகம் இரண்டாவது விருதினைப் பெற்றுள்ளது.

★ மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள், சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முன்மாதிரியாக விளங்குகிறது என பல நேரங்களில் பாராட்டியுள்ளார். தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசு தமிழ்நாட்டை முதல் மாநிலமாக தேர்ந்தெடுத்துள்ளது. அதற்கான விருதினை மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் 12.04.2010 அன்று புதுடெல்லியில் நடந்த விழாவில் மேதகு இந்திய துணைக் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் பெற்று வந்துள்ளார்.

★ ★ ★



# தொழில் முனைவோருக்கு பல்வேறு சலுகைகள்

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள்

★ பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2006–07 மற்றும் 2007–08 ஆம் ஆண்டுகளில் 52,779 நபர்களுக்கு ரூ. 239.38 கோடி கடன் வழங்கப்பட்டது.

★ இத்திட்டத்திற்கு பதில் 15.08.2008 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 2,176 நபர்களுக்கு ரூ. 33.36 கோடி விளிம்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ அரசு அறிவித்துள்ள ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் தொழில்முனைவோரை எளிதாகச் சென்றடையும் வகையில் எளிமையான செயல்முறைகள் கையாளப்பட்டதால் 2006–07 முதல் 2009–10 வரை 5,744 தொழில் நிறுவனங்கள் ரூ. 76.71 கோடி முதலீட்டு மானியம் பெற்று பயனடைந்தன.

★ மேலும் 1,435 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.27 கோடி குறைந்தழுத்த மின் மானியமும், 385 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.378.59 இலட்சம் மின்னாக்கி மானியமும், 30 குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.33.69 இலட்சம் மதிப்புக் கூட்டுவரி மானியமும் 3,846 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.3.59 கோடி பின்முனை வட்டி மானியமும் வழங்கப்பட்டுள்ளன.

★ தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி–I இணையதளம் மூலம் பதிவு செய்யும் முறை 08.08.2008 அன்று மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்பு துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

★ அதேபோல் தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி–IIயும் இணையதளத்தின் மூலமாகப் பதிவு செய்யும் முறை மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் 10.11.2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

★ இதன் மூலம் 31.03.2010 வரை 76,572 தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி–Iம் 40,533 தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி– II ம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

★ தாய்கோ வங்கியில், 2006–07 இல் ரூ.26,239.86 இலட்சமாகவும் இருந்த வைப்புத்தொகை 2007–08 இல் ரூ.31,363.34 இலட்சமாக உயர்ந்து, கடந்த 2009–10 இல் ரூ.47,461.61 இலட்சமாகப் பெருகியுள்ளது. மேலும், 2006–07இல் ரூ.45.35 இலட்சமாக இருந்த நிகர லாபத் தொகை 2007–08இல் ரூ. 78.10 இலட்சமாகவும், 2008–09இல் ரூ.207.21 இலட்சமாக, கடந்த 2009–10 ஆம் ஆண்டில் ரூ.291.24 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. புதியதாக 16 கிளைகள் திறக்கப்பட்டு, இவ்வங்கி தற்போது 43 கிளைகளுடன் இயங்கி வருகிறது.

★ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் ஆட்டோ வாங்கி வழங்கும் திட்டத்தின் கீழ், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த, 15 ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, 2006–2007இல் 20 பயனாளிகளுக்கு ரூ.16.91 இலட்சமும், 2007–2008இல் 219 பயனாளிகளுக்கு ரூ.231.28 இலட்சமும், கடந்த 2009–10 ஆம் ஆண்டில் 273 பயனாளிகளுக்கு ரூ.308.27 இலட்சமும் கடனாக தாய்கோ வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

★ தாய்கோ வங்கியின் தலைமை அலுவலகம் சென்னை மந்தைவெளிப்பாக்கம், இராஜா அண்ணாமலைபுரம், சவுத்பாங்க் கெனால் ரோட்டில் கட்டப்பட்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களால் 15.04.2010 அன்று திறந்து வைக்கப்பட்டது.

★ குறு மற்றும் சிறு தொழில்களுக்கான வசதியாக்க மன்றங்கள் மூலம் காலதாமதமாகப் பெறப்பட்ட தொகை தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட 223 வழக்குகளில் ரூ.690.76 இலட்சம் நிலுவைத் தொகை, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கித் தீர்வு காணப்பட்டது.

★ தொழில் வணிக ஆணையரகத்தின், கட்டுப் பாட்டிலுள்ள அலுவலகங்களில், இணை இயக்குநர், துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் ஆகிய பதவிகளில் 100 பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளன.

★ 2007–2010 ஆம் நிதியாண்டில் கருணை அடிப்படையில் 6 இளநிலை உதவியாளர்கள், இரு தட்டச்சர்கள், 10 தொழில் கூட்டுறவுக் கண்காணிப் பாளர்களும், 16 அலுவலக உதவியாளர்களும் ஒரு பதிவறை எழுத்தரும், மேலும், 2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 11 உதவியாளர்களும், பணி நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

### தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI)

★ அரசு டான்சிக்கு கொள்முதல் முன்னுரிமை வழங்கியுள்ளதால், 2008–09 இல் டான்சி ரூ.18.51 கோடியை நியமனக் கட்டணமாக அரசுக்கு செலுத்தியது. இவ்வாண்டும் ரூ. 24.75 கோடியை நியமனக் கட்டணமாக அரசுக்கு செலுத்தவுள்ளது.

★ தமிழக அரசின் சீரிய முயற்சியினால் 2009–10ஆம் ஆண்டில், டான்சி மிகவும் அதிக அளவாக ரூ.168 கோடிக்கு விற்பனை செய்துள்ளது.

★ திருச்சி மற்றும் மதுரையில் டான்சியின் காட்சியகங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO)**

★ சிட்கோ நிறுவனம் 1970ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டு, தமிழக அரசு உருவாக்கிய 35 தொழிற்பேட்டைகளை நிருவகிக்கும் பணி முகமை அடிப்படையில், 1974ஆம் ஆண்டு சிட்கோவிடம் கொடுத்தது.

★ பல்வேறு தொழிற்பேட்டைகளில் 2006–2007 ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரை குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.327.31 இலட்சம் மதிப்புள்ள 45 தொழிற்கூடங்களும், ரூ. 9,363.01 இலட்சம் மதிப்புள்ள 1,073 மேம்படுத்தப் பட்ட தொழில் மனைகளும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

★ தமிழக அரசின் பகுதி–II திட்டத்தின் கீழ் 2006–2007ஆம் ஆண்டில் கோ.புதூர் (மதுரை), சேலம், ஈரோடு ஆகிய 3 தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் ரூ.101 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

★ தமிழக அரசின் பகுதி–II திட்டத்தின் கீழ் 2007–08ஆம் ஆண்டு அரியமங்கலம் (திருச்சி), தேனி, தருமபுரி தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் ரூ.114 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

★ 2008–2009ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.120 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

★ குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் குழுமத் திட்டத்தின் கீழ் 2007–2008 ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரை 5 தொழிற் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.522.04 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ 2007–09 ஆம் ஆண்டு வரை சிட்கோ நிறுவனம் தமிழகத்தில் 14 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கியுள்ளது.

★ ஏற்கெனவே உள்ள 92 தொழிற்பேட்டைகளைத் தவிர்த்து, மேலும் 16 இடங்களில் சுமார் 1,091.45 ஏக்கர் பரப்பளவில் நிலம் கையகப்படுத்த / நில மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன.

★ குறுந்தொழில்களுக்கென அடுக்குமாடித் தொழிற்கூடங்கள் கிண்டி, திருமழிசை, மாதவரம், பெருங்குடி மற்றும் அம்பத்தூர் ஆகிய 5 இடங்களில் அமைக்க 2007–2008 இல் திட்டமிடப்பட்டு பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ மத்திய அரசின் கூடுதல் மத்திய உதவித் திட்டத்தின் கீழ் கப்பலூர் (பகுதி–II) (மதுரை), பேட்டை (திருநெல்வேலி), ராணிப்பேட்டை (வேலூர்) ஆகிய தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப்பணிகள் ரூ.244 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னை தானியங்கி துணைத் தொழில்கள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (CAAIIUC) மூலம் அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளில் திருத்தி அமைக்கப்பட்ட திட்டச் செலவு ரூ.61.10 கோடி மதிப்பில், மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ. 45.09 கோடிக்கான பணிகள் இதுவரை முடிக்கப்பட்டு மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ அம்பத்தூர், கோவை, மதுரை, திருச்சி, ஒசூர், சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய 7 இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகள் மற்றும் ஈரோடு, சேலம், தஞ்சாவூர், வேலூர், கிருஷ்ணகிரி, திருச்சி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, சென்னை ஆகிய 10 கிளை அலுவலகங்களின் வழியாக இரும்பு மற்றும் எஃகு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் காகிதம் மூலப்பொருட்கள் விநியோகிக்கப் படுகின்றன.

★ 2006 முதல் 2010 வரை உள்ள நான்காண்டு காலத்தில் சிட்கோவில் உதவிப் பொறியாளர் 2 நபர்களும், உதவி வளர்ச்சி அலுவலராக 15 நபர்களும், வணிகக் கணக்கராக 6 நபர்களும், தொழில்நுட்ப உதவியாளராக 1 நபரும், இளநிலை உதவியாளராக 48 நபர்களும் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் புதியதாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தட்டச்சர் பதவியில் கருணை அடிப்படையில் 6 நபர்களும் மற்ற வகையில் 1 நபரும் புதியதாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ 49 தினக்கூலிப் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது.

★ மூலப்பொருளான பொட்டாசியம் குளோரேட்டுக்கு ஜூலை 2009 முதல் கடும் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு சிட்கோ மூலமாக பொட்டாசியம் குளோரேட்டின் தட்டுப்பாட்டை நீக்க பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ், தீக்குச்சி தொழில் முனைவோர் சங்கத்துடன் இணைந்து சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி, விருதுநகர், கழுகுமலை மற்றும் குடியாத்தம் ஆகிய இடங்களில் பொட்டாசியம் குளோரேட் இறக்குமதி செய்ய சிறப்பு நோக்கு நிறுவனங்களை உருவாக்கி, ஒவ்வொரு குழுமத்திற்கும் ரூ.15 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.90 இலட்சம் மதிப்புள்ள பொட்டாசியம் குளோரேட் இறக்குமதி செய்ய உதவி புரிந்தது.

★ அரசு நிறுவனம் நடத்தும் ஒப்பந்தப் புள்ளிகளில் சிட்கோவில் பதிவு செய்த குறு, சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாகக் கலந்து கொண்டு வழங்கல் ஆணையைப் பெற்று, குறு, சிறு தொழில் நிறுவனங்கள் நிறைவேற்றுவதற்காகப் பிரித்தளிக்கிறது.

★ சிட்கோவின் தலைமை அலுவலகக் கட்டடம் கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் சுமார் 1.47 ஏக்கர் (சிட்கோ நிலம் 0.83 ஏக்கர், தொழில் வணிக துறை நிலம் 0.64 ஏக்கர்) நிலப்பரப்பில் ரூ.44.40 கோடி மதிப்பீட்டில் 9 மாடிகள் கொண்ட அடுக்குமாடிக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டடப்பணி தொடங்க உள்ளது.

★



# கால்நடைகளை வளர்ப்போருக்கு பல்வேறு உதவிகள்

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. **பொங்கலூர் நா.பழனிசாமி** அவர்கள்

★ கால்நடைப் பராமரிப்பு பண்டைக் காலம் தொட்டே கிராமப்புரங்களில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் துணை வருவாய் அளிக்கிறது. மாநிலத்தில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளின் நலனுக்கு இத்துறை பெரும் பங்காற்றி வருகிறது.

**கால்நடை மருத்துவப் பணிகள்**

★ கடந்த நான்கு ஆண்டுகளில், 785.55 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை, 142.23 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், 905.47 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், 27.53 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் மற்றும் 2,028.03 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ துறை நிருவாகத்தை மேம்படுத்திட, தமிழ்நாடு அரசுப் தேர்வாணை பணியாளர்க் குழு மூலம் 495 கால்நடை உதவி மருத்துவர்கள் (மாற்றுத் திறனாளிகள் 7 நபர்கள்), 412 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள், 386 கால்நடை ஆய்வாளர்கள், இதில் 110 நபர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 959 கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்கள் இதில் 111 நபர்கள் நிரந்தரம் செய்யப்பட்ட தினக்கூலிப் பணியாளர்கள், 30 ஆய்வுக்கூட உதவியாளர்கள், 10 ஊர்தி ஓட்டுநர்கள், இதில் 10 நபர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 166 இளநிலை உதவியாளர்கள் இதில் 42 நபர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 68 சுருக்கெழுத்தர் மற்றும் தட்டச்சர்கள் இதில், 14 நபர்கள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் 48 நபர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் 2,526 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ ரூ.825.68 இலட்சம் செலவில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தில் 44.38 இலட்சம் பயனாளிகளும், ரூ.1,026 இலட்சம் செலவில் நீர்வள நிலவளத் திட்டத்தில் 4 இலட்சம் பயனாளிகளும், ரூ.2,089 இலட்சம் செலவில், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தில் 0.067 இலட்சம் பயனாளிகளும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ பல்வேறு வகையான தீவன விதைகள் அடங்கிய 99,590 சிறு பைகள் (Mini Kits) விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

★ மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.75.88 இலட்சம் செலவில், 1,474 ஏக்கர் நிலம் பசுந்தீவன உற்பத்திக்குக் கொண்டு வரப்படுகிறது.

★ உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு தீவன வங்கிகள் கடலோர மாவட்டங்களான காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ பகுதி–II திட்டங்களின் கீழ், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் 50 ஏக்கர் நிலம் ரூ.19.45 இலட்சம் செலவில் மேய்ச்சல் நிலமாகச் சீரமைக்கப்பட்டது.

★ ஒசூர் மற்றும் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பசுந்தீவனத்தை சேமித்து வைக்க தலா 5 சைலோ உரக்குழிகள் ரூ.20.55 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மற்றும், ரூ.37.59 இலட்சம் செலவில் ஒரத்தநாடு மற்றும் அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், தெளிப்புநீர்ப் பாசனக் கருவிகள் நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 2006–2007 முதல் 2009–2010 வரை ரூ.834.66 இலட்சம் மதிப்பீட்டில், கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, ரூ.235.9 இலட்சம் கால்நடைகளும் 44.3 இலட்சம் விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.

**கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

★ 5.37 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன.

★ 57 தொகுப்பு உப வடிநில கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தி கால்நடைகளுக்கு மருத்துவ மற்றும் இனப்பெருக்க சேவை விவசாயிகளுக்கு அருகிலேயே கிடைக்க வழிவகை செய்யப் பட்டுள்ளது.

★ இலவசமாகப் பசுந்தீவன உள்ளீடுகளான கோ3 985 எக்டருக்கும், சோளம் 2,343 எக்டருக்கும், மக்காச்சோளம் 1,423 எக்டருக்கும், கொளுக்கட்டை 423 எக்டருக்கும், ஸ்டைலோ 20 எக்டருக்கும் உள்ளடக்கி மொத்தம் 5,206 எக்டேர் தனியார் நிலங்கள் பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன.

★ 100 அசோலா வளர்ப்பு செயல்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டு, 1,000 விவசாயிகளுக்கு அசோலா, உள்ளீடுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

★ 2,160 மலடு நீக்க சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ 2,005 விவசாயிகள் கலந்துரையாடல்/இரவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ 13,500 கால்நடைகளுக்கு, தாது கலவை இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

★ 9.11 இலட்சம் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ 16,025 விவசாயிகளுக்கு 3 நாட்கள் கால்நடைப் பராமரிப்பு குறித்த பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டுள்ளது.

★ 250 கால்நடை மருத்துவர்களுக்கு, 10 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி, கால்நடை மருத்துவக் கல்லூரியில் அளிக்கப்பட்டுள்ளது.

**தேசிய வேளாண் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு) 10–ஆவது ஊரக உள்ளிருப்பு வசதி நிதி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டம்**

★ கால்நடை மருந்தகங்கள், சிகிச்சைக் கூடங்கள், உள்நோயாளிப் பிரிவு மற்றும் நுண்கதிர் பிரிவு என 371 கட்டடங்கள் ரூ.43.80 கோடியில் கட்டப்பட்டுள்ளன. ரூ.15.98 கோடியில் அறையணிகள் மற்றும் உபகரணங்கள் கால்நடை நிலையங்களுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.344.40 இலட்சம் செலவில் ஈச்சங்கோட்டை, ஒசூர், உதகமண்டலம் ஆகிய கால்நடைப் பண்ணைகளில் பொலிகாளைக் கொட்டகைகளும், ஒசூர், உதகமண்டலம் கால்நடைப் பண்ணைகளில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடங்களும் கட்ட நிதி ஒதுக்கப்பட்டதில், ஒசூர் மற்றும் உதகமண்டலம் கால்நடைப் பண்ணைகளில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூட கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மூன்று இடங்களிலும் பொலிகாளை கொட்டகைகளுக்கு கட்டடப்பணி நடைபெற்று வருகின்றன.

★ உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத்திட்டத்தின் கீழ், ரூ. 880.292 இலட்சம் செலவில், 113 கால்நடை நிலையங்களும், விரிவாக்க நிலையங்களும் கட்டப்பட்டு வருகின்றன. மேற்படி நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்களும், அறையணிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள 82 இளைஞர்களுக்கு, முதலுதவி, குடற்புழு நீக்கம், தடுப்பூசி மற்றும் இனப்பெருக்கம் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 10,000 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**பகுதி–II திட்டங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள்**

★ 55 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளுக்கு புதிய உபகரணங்கள் ரூ.15.40 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.88.76 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், கரூர், விருதுநகர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 5 புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன.

★ தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத கால்நடை நிலையங்களுக்கு, ரூ.28.55 இலட்சம் செலவில் 515 கைப்பேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.20 இலட்சம் செலவில் 200 கால்நடை கிளை நிலையங்களுக்கு, பழைய உபகரணங்களை மாற்றி, புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.38 இலட்சம் செலவில் இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோழி நோய் ஆய்வுக் கூட பிரிவிற்கான இயந்திரங்களும், உபகரணங்களும் வழங்கப் பட்டுள்ளன.

★ 51 புதிய கால்நடை மருந்தகங்கள், 30 கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் 55 பார்வை கிளை நிலையங்கள் ரூ.218.24 இலட்சம் செலவில் துவக்கப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் 888 கால்நடை கிளை நிலையங்கள், தரம் உயர்த்தப்பட்ட கால்நடை நிலையங்களாக மாற்றி, அதனில், கால்நடை ஆய்வாளர் நிலை–1க்குப் பதிலாக மருத்துவப் பட்டம் பெற்ற இளநிலை கால்நடை உதவி மருத்துவரை நியமனம் செய்யும் பொருட்டு அரசாணை பெறப்பட்டு, அதனில் முதல் கட்டமாக 444 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்களாக்க அரசாணை பெறப்பட்டு, 412 நபர்கள் பணிநியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

★ திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதியிலிருந்து தக்கலையை மையமாகக் கொண்டு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவுக்கு (Veterinary Mobile Unit) முதற்கட்டமாக வாகனம் பெறப்பட்டு இயங்கி வருகிறது.

★ அடையாறில், செல்லப் பிராணிகளுக்கு மருத்துவப் பிரிவு துவக்கப்பட்டு, ரூ.20 இலட்சம் செலவில் உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ ஒரத்தநாடு மற்றும் ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உள்ள கால்நடை ஆய்வாளர் பயிற்சி நிலையங்களுக்கு ரூ.10.68 இலட்சம் செலவில் அறையணிகள் மற்றும் கணினி வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ நாமக்கல் மாவட்டத்தில், மண்டல இணை இயக்குநர் அலுவலகம் மீண்டும் துவக்கப்பட்டுள்ளது.

★ 25 புதிய வாகனங்கள், ரூ.123.99 இலட்சத்தில் வாங்கப்பட்டுள்ளன.

★ சிறு பிராணிகளுக்கான நுழைவுக் கட்டணம் மற்றும் சிகிச்சை கட்டணம், 9.1.2007 முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

★ மேலும், 60 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, புல் வெட்டும் கருவிகள் வழங்கியும், வெள்ளாடுகளின் தரத்தை மரபுவழி உயர்த்திட, செயற்கை முறைக் கருவூட்டல் முன்னோடித் திட்டத்தை செயல்படுத்திடவும், சிறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட, செம்மறி ஆடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கும் மற்றும் புறக்கடை கோழி வளர்ப்பிற்கும், ஆடுகளில் ஏற்படும் நீலநாக்கு நோயை பரப்பும் நோய் நுண்ம பரப்பியை கட்டுப்படுத்திடவும் மற்றும் 16 நோய் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் தொடர்பிற்கும், மாவட்ட கால்நடை பண்ணைகளின், அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், ரூ.134.16 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

★ 1.5.2010 முதல், செயற்கை முறைக் கருவூட்டல் கட்டணம், ரூ.15லிருந்து ரூ.10 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

★ ஜல்லிக்கட்டு முறைப்படுத்துவதற்காக, 21.7.2009 அன்று, தமிழக சட்டமன்றத்தில் சட்டவரைவு கொண்டு வரப்பட்டு, 26.8.2009 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

★ பறவைக் காய்ச்சல் நோய் ஆய்வு செய்ய ஏதுவாக, ஈரோடு மற்றும் நாமக்கல் (ஆண்டலூர்கேட்) கோழி நோய் ஆய்வுக் கூடங்களை உலகத்தரத்திற்கு உயர்த்த (BSL-II) ரூ.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ பறவைக் காய்ச்சல் நோய் ஆய்வு செய்ய ஏதுவாக உலகத்தரம் வாய்ந்த BSL IV ஆய்வுக்கூடம் ரூ.50 கோடி செலவில், சென்னைக்கு அருகே படப்பையில் நிறுவ, மைய அரசுக்கு 30 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ திருப்பூர் மாவட்டத்தில், புதியதாக மண்டல இணை இயக்குநர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது.

★ 2007–08ஆம் ஆண்டிலிருந்து, 2009–2010 வரை, புதிய கால்நடை மருந்தகங்கள் மற்றும் பார்வை கிளை நிலையங்கள் துவக்கப்பட்டு, ரூ.617.65 இலட்சத்தில், பொது மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வாங்கி கால்நடைகளின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப் பட்டன.

★ பல்வேறு திட்டங்களை செம்மையாக செயல் படுத்தியதின் பலனாகவும், கால்நடைகளுக்கு முழு மருத்துவ உதவி மற்றும் பாதுகாப்பு அளித்ததின் பயனாக தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தி 2006–07இல் 8,044 மில்லியனாகவும், 2007–08இல் 8,394 மில்லியனாகவும், 2008–09இல் 6,810 மில்லியனாகவும், 2009–10இல் 10,848 மில்லியனாகவும் உயர்ந்துள்ளது.

★ பால் உற்பத்தி 2006–07இல் 55.60 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2007–08இல் 55.86 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2008–09இல் 56.74 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2009–10இல் 57.78 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் உயர்ந்துள்ளது.

★ அதேபோன்று ஒரு நபருக்கு, ஒரு நாளைக்கு கிடைக்கக்கூடிய பாலின் அளவு, 2006–07இல் 232 கிராம் ஆகவும், 2007–08இல் 233 கிராம் ஆகவும், 2008–09இல் 235 கிராம் ஆகவும், 2009–10இல் 236 கிராம் ஆகவும் உயர்ந்துள்ளது.

★ ஒரு ஆண்டுக்கு ஒரு நபருக்கு கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 2006–07இல் 123 ஆகவும், 2007–08இல் 128 ஆகவும், 2008–09இல் 133 ஆகவும், 2009–10இல் 162 ஆகவும் உயர்ந்துள்ளது.

★ ★ ★



# ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் - ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு. இ.பெரியசாமி அவர்கள்

★ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரையில் ஐந்து கட்டங்களாக மொத்தம் 1 கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு 1 கோடியே 12 இலட்சத்து 37 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் இவ்வாண்டு இறுதிக்குள் வழங்கப்படும்.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள், அரூர், தாம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய மூன்று புதிய வருவாய்க் கோட்டங்கள், தண்டராம்பட்டு, ஆத்தூர், பொன்னமராவதி, கரம்பக்குடி, சூலூர், திருவெறும்பூர், குத்தாலம், குறிஞ்சிப்பாடி, கடவூர், மாதவரம், மடத்துக்குளம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் மற்றும் ஆம்பூர் ஆகிய பதினான்கு புதிய வட்டங்கள் அய்யம்பாளையம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பம்மல், பல்லாவரம், சோழிங்கநல்லூர் மற்றும் மேடவாக்கம் ஆகிய ஏழு புதிய குறுவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டு காலத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிருவாக அலுவலர்கள் ஆகியோர் அலுவலகங்களுக்கு 103 கட்டடங்களும் 19 கூடுதல் கட்டடங்களும் ரூபாய் 60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

★ 73 கோட்டாட்சியர்கள், 206 வட்டாட்சியர்கள், 370 மண்டல துணை வட்டாட்சியர்கள், 1,120 குறுவட்ட வருவாய் ஆய்வாளர்கள் ஆகியவர்களுக்கு செல்லிட தொலைப்பேசி இணைப்பு வசதி (சிம் கார்டு) அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்டங்களில் உள்ள மாவட்ட வரவேற்பு வட்டாட்சியர் மற்றும் வரவேற்பு துணை வட்டாட்சியர் ஆகியோருக்கும் சிம் கார்டு அளிக்கப்பட்டுள்ளது.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள். சென்னை–சிந்தாதிரிப்பேட்டை தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் பொங்கலை முன்னிட்டு தமிழக அரசின் இலவச வேட்டி, சேலைகள் வழங்கி திட்டத்தினை தொடங்கிவைத்தார். உடன் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர். (01.01.2010)

★ வருவாய்த்துறை அலுவலர்களுக்கு 2006–2010 வரையிலான காலத்தில் 408 புதிய வாகனங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ மாநிலம் முழுவதிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பள்ளிப் படிப்பு முடிந்து செல்லும்போது பள்ளிகள் மூலமாக இனம், இருப்பிடம் மற்றும் வருமானம் குறித்த சான்றுகள் பள்ளியிலேயே வழங்கப்படும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

★ நிலவரி வசூலிப்பதை எளிமையாக்கும் வகையில் நிலவரியாக தற்போது நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.50 என்று இருந்ததை ரூ.5 எனவும் புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 என்று இருந்ததை ரூ.2 எனவும் வசூல் செய்யப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது.

★ சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் கூடுதலாக 7,64,999 பேர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு தற்போது மொத்தம் 19,61,750 பேர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர்.

★ இலவச சேலைகள் / வேட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 635.08 இலட்சம் சேலைகள், 633.22 இலட்சம் வேட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

★ இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் பேரிடர்ப்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு பேரிடர் நிவாரண நிதி (Calamity Relief Fund) என்ற நிதியம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. பேரிடர் நிவாரண நிதியின்கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.1,944.84 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக சேதமடைந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உடனடியாக சீரமைக்கும் பணிக்காக ரூ.25.70 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 2009ஆம் ஆண்டில் வறட்சியால் ஏற்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட 11 மாவட்டங்களுக்கு பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.24.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ 2010 ஆண்டில் வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, விருதுநகர், சேலம், திண்டுக்கல், நாமக்கல், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க ரூபாய் 18 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவநிலை காலத்தில் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், நிலவரி மற்றும் அதனுடன் சேர்த்து தண்ணீர்த்தீர்வை, தலவரி, தலமேல்வரி போன்ற இனங்களுக்கான மொத்தவரி ரூ.21.34 கோடியைத் தள்ளுபடி செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் 1961 (தமிழ்நாடு சட்டம் 58/61) தொடங்கப்பட்டது முதல் 2,08,423 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டு மொத்தம் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 491 ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரத்து எழுபத்தி மூன்று ஏக்கர் மிகை நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டது. மேலும் 10,185 ஏக்கர் நிலம் பொதுப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

★ தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006ம் கீழ் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு திருமணம், மகப்பேறு, கல்வி, இயற்கை மரணம், விபத்து மரணம்/காயம், ஈமச்சடங்கு மற்றும் முதியோர் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2006 முதல் 28.02.2010 வரை 5,10,504 பேருக்கு ரூ.415 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ சுனாமி நிவாரணத் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 53,660 குடியிருப்புகள் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில் இதுவரை 44,647 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 9,013 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்டமாக எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய கடலோரப் பகுதிகளில் பேரிடர் தாங்கும் அமைப்புகளைக்கொண்ட 41,192 குடியிருப்புகள் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்காக பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.5,257.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.3,174.84 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

**நில நிருவாகம்**

★ அரசுப் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு, பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த ஒரு முறை சிறப்புத் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் குடியிருப்புத் தகுதிக்கான காலத்தை தற்போது மூன்று ஆண்டுகளாகக் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 30.9.2010 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

★ இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ், 1.1.2007 முதல் 31.3.2010 வரை 2,22,692 வீட்டுமனைப் பட்டாக்களும், நடைமுறையில் உள்ள வழக்கமான திட்டத்தின் கீழ் 1.4.2006 முதல் 31.3.2010 வரை 5,01,635 வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இத்திட்டங்களின் கீழ் 7,24,327 குடும்பங்கள்

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்றுப் பயனடைந்துள்ளன.

★ கடந்த 2006ஆம் ஆண்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு விவசாயத்திற்காக தலா 2 ஏக்கர் தரிசு நிலம் சீர்படுத்தி வழங்கும் சிறப்பு திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 31.3.2010 வரையில் 2,12,164 ஏக்கர் நிலங்கள் 1,78,198 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ முந்தைய ஆட்சியில் பணி நியமனங்களுக்கு விதிக்கப்பட்ட தடை விலக்கப்பட்டபின் வருவாய்த் துறையில் உதவியாளார்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் மற்றும் இதர பணியாளர்கள் உட்பட 8,165 காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்ப ஆணையிடப்பட்டு அதில் 4,971 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது.

★ 2007–2010ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 1,576 கிராம நிருவாக அலுவலர்களின் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, 525 கிராம நிருவாக அலுவலர்கள் கருணை அடிப்படை மூலம் நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், தற்போது காலியாகவுள்ள 2,174 கிராம உதவியாளர்களின் பணியிடங்களை (மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம்) நிரப்பிடவும் ஆணையிட்டுள்ளது.

★ நில ஆவணங்களைக் கணினிமயமாக்குவதற்காக, "தமிழ்நிலம்" (Tamil Nadu Info System on Land Administration and Management) எனப்படும் தமிழ்நாடு நில நிருவாகம் மற்றும் மேலாண்மைத் திட்டத்தினை, தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை செயல்படுத்தியுள்ளது. தமிழ்நிலம் எனும் இத்திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப்புர வட்டங் களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நில ஆவணங்கள் குறித்த பரிவர்த்தனை அனைத்தும் கணினி மூலம் மேற்கொள்ளப் படுகின்றன.

★ மாநிலத்தில் 215 வட்டங்களில் உள்ள கிராமப்புரப் பகுதிகளில் (சென்னை நீங்கலாக) 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டு கணினி மூலம் நிலஆவண நகல்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

★ "எங்கிருந்தும், எந்நேரத்திலும் இணைய வழிச் சேவை" என்னும் சேவையை மின்னணு சேவையின் கீழ் (e-governance) 15.05.2008 அன்று தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது. www.eservices.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் பட்டா, சிட்டா விவரங்கள் மற்றும் 'அ' பதிவேட்டின் விவரங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளலாம்.

★ 48.80 ச.கி.மீ. பரப்பளவிற்கு நகராட்சிகளில் நகர அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம், ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் வட்டங்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர் மற்றும் மாதவரம் வட்டங்கள் ஆகியவற்றில் நத்தம் நிலஅளவைப் பணி 68 கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கிராமங்களில் இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

★ நவீன நிலஅளவைக் கருவிகளான ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் கருவிகளைக் கொண்டு 5 நகரங்களில் நகர அளவைப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ அனைத்து கிராம வரைபடங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

★ 27 மாவட்டங்களில் தலா 20 கணினிகள் வீதம் கணினி மையங்கள் உருவாக்கப்பட்டு, நிலஅளவைப் புலப்படங்களைக் கணினிமயமாக்கும் பணி அம்மையங்களில் நடைபெற்று வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 3.66 இலட்சம் புலப்படங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

★ நத்தம் நிலவரித்திட்டம் (கிராமங்கள்) மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்திலும் 2006 முதல் 31.03.2010 வரையான காலங்களில் 17,586 நத்தம் மனைப்பட்டாக்கள் 19,823 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகர நிலவரித்திட்டப்பணி, நகர நிலவரித்திட்ட வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலம் 31.03.2010 வரை 26,613 பட்டாக்கள் 31,721 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

# தமிழரசு

## சந்தாதாரர் ஆகுங்கள்

தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வெளியிடப்படும் தமிழரசு இதழில் அரசு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய உரைத் தொகுப்புகள், அரசின் முக்கிய ஆணைகள், கதை, கவிதை, கட்டுரைகள் என ஏராளமான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

**படிக்க**
**பயன்பெற**
**பாதுகாக்க**

**தமிழரசு (தமிழ்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.10/- |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.120/- |
| ஆயுள் சந்தா | : | ரூ.1,000/- (10 ஆண்டுகள்) |

**தமிழரசு (ஆங்கிலம்) காலாண்டு இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.15/- |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | : | ரூ.500/- (10 ஆண்டுகள்) |

தமிழரசு சந்தாத் தொகையினை
வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
தமிழரசு அலுவலகம்,
110, அண்ணா சாலை,
(எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை
ஆணையரக அலுவலக வளாகம்)
சென்னை - 600 002.

என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இன்றே தமிழரசு சந்தாதாரர் ஆகுங்கள்**

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு
# தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

வெளியீட்டு ஆணை எண். 1445/வரைகலை/விளம்பரம்/2009

R.N.I. No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11

கரம் இணைப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்



ஒன்று சேர்ந்து விளையாடுவது



கை குலுக்குவது மற்றும் கட்டி அணைப்பது போன்ற சாதாரண பழக்க வழக்கத்தினால் எய்ட்ஸ் பரவாது.



எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு நபரின் இருமல் மற்றும் தும்மலின் மூலம் மற்றவருக்குப் பரவாது.



எச்.ஐ.வி. உள்ள நபர் பயன்படுத்திய கழிவறையைப் பயன்படுத்துவது அல்லது பொருட்களை மாற்றிக் கொள்வதால் பரவாது.



கொசுக்கடி மூலம் எய்ட்ஸ் பரவாது.

எய்ட்ஸை ஒழிப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?



பாதுகாப்பற்ற முறையில் பலருடன் உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு பரவும்.



பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி. கிருமி உள்ள இரத்தம் மூலம் மற்றவருக்குப் பரவும்.



எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும் குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.



கிருமி தொற்றுள்ள சுத்தம் செய்யப்பட்டாத பிளேடுகளை, ஊசிகளை பகிர்ந்துகொள்வதால் பரவும்.



**ஒரு துளி இரத்தம் போதுமே**
**உங்கள் உடல் நலனை அறிய**
திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம் ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்




மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களை (ICTC) அணுகவும்

வாழ்வை காப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?



திருமணத்திற்கு முன் உடலுறவை தவிர்த்தல்.

திருமணத்திற்கு பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.



பாதுகாப்பான உடலுறவிற்கு ஆணுறையைப் பயன்படுத்துதல்.



பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே பயன்படுத்துதல். இரத்த தானம் செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம் எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால் பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி செய்தல் வேண்டும்.



எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால் உரிய சிகிச்சை மேற்கொண்டால் தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு பரவாமல் தடுக்கலாம்.



இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற உபகரணங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி அழித்து விட வேண்டும். இந்த உபகரணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

**சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்**
82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.
**இலவச தொலைபேசி : 1913**

CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம்/ 2010